# சரித்திர தீபம்

[முதற் பாகம்]



மங்கள நூலகம்
நுங்கம்பாக்கம் :: சென்னை

# சரித்திர தீபம்

(முதல் பாகம்)

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

எழுதியது.

ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், M. A., M. L. A.

அவர்களின் சிறப்புரையுடன்



*

மங்கள நூலகம்
நுங்கம்பாக்கம், சென்னை

 [விலை ரூ. 1-4-0

முதல் பதிப்பு, 1941

சக்தி பிரஸ் லிமிடெட், சாந்தி பிரஸ், சென்னை

# சிறப்புரை

சுதந்திரத்துடன் தேசமக்களே ஆட்சிபுரியும் தேசங்களி லெல்லாம் மக்களனைவருக்கும் தேசபக்தியும் தன் மதிப் பும் புகட்டுதல் கல்வித் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம். ஏகபோக ஆட்சி வாய்ந்த தேசங்களில் அந்த அம்சமே பிரதானமாம். அப் போதத்தையும் இளம் பிராயத்திலேயே புகட்டவேண்டு மென்பதே இந்நாளில் நடக்கும் புதிய பிர சாரத்தின் முக்கிய கொள்கை.

நம் இந்தியாவிலே கல்வித் திட்ட முறையை லார்டு மெக்காலே நன்னோக்குடன் வகுத்தாரேனும், முதலாவதாக இங்கே பிரிட்டிஷாரின் வர்த்தக நலன்களை வளர்க்கும் வகையிலும், அடுத்தபடியாக இங்கே பிரிட்டிஷ் ஆட்சிக்குத் துணைபுரியும் சிப்பந்திகளைத் தயாரிக்கும் பான்மையிலும், சமீபகாலம் வரையில் அக்கல்வி முறை அமைந்துகிடந்தது. இந்நிலையில் அக் கல்வி முறையிலே தேசீய மதிப்புக் குரிய போதத்தை எதிர்பார்த்தல் எங்ஙனம்?

பிரிட்டிஷ் ஆட்சியின் பெருமையையும் அதனால் இத் தேசம் அடைந்த நலன்களையும் நாளும் எடுத்துரைக்கும் முறையில் நமது கல்விச் சாலைகளிலே இந்திய சரித்திரம் இருபது வருஷத்துக்கு முன் வரையில் போதிக்கப்பட்டு வந்தது. இளம்பிராய முதலே இக்கல்வி முறை ஏற்பட்ட தின் காரணமாகவே நாட்டில் அடிமைப்பான்மை வளர்ந்து விட்டதென நவீன மானத நூலார் கூறுவர். ஈதிங்ஙன மிருக்க;

அன்னியரில் சிலர் இத்தேசத்திலேயே குடியேறி நம்மவ ரிடம் அபிமானங் கொண்டனர்; மற்றுஞ் சிலர் இத்தேச

மெங்கும் சுற்றிப்பார்த்து, இந்தியாவின் சுயார்ஜிதமான பழம் பெருமைகளை அறியலாயினர். அன்னார் தாமறிந்தது மல்லாது, அப்பெருமையினை இளைஞருக்கும் புகட்டுதல் வேண்டுமென்று அரும்பாடு பட்டனர். அன்னாரது தொண்டு நாம் அனைவரும் போற்றற்குரியது.

அத்தகைய அன்னியர் நமது புராதனப் பெருமையினை வியந்தும் புகழ்ந்தும் கூறியிருத்தலையே முதல் அதிகாரமாகக் கொண்டு இந்நூல் விளங்குதல் சாலப் பொருத்தமாகும். புராதன இந்திய காவியங்களில் நம்மவருக்குப் பற்றும் மதிப்பும் உதித்தோங்கும் வண்ணம் **மாக்ஸ் முல்லர், பால் டியூஸன்** போன்ற மேதாவிகள் புரிந்த ஊழியம் கொஞ்சநஞ்சமன்று.

ஆயினும், நம்மவரிடையே—அதிலும் சிறப்பாக நம் இளைஞரிடையே — தேசீய மதிப்புத் தோன்றும் வண்ணம் **அன்னி பெஸண்டம்மை** புரிந்த ஊழியம் மிகவும் மெச்சத்தக்கது. சிறப்பு வாய்ந்த இத்தேசத்திலே முன்னம் பிறந்த வீரபுருஷரும் வீராங்கனைகளும் இன்னின்னார் எனவும், நம் தேச நாகரிக உயர்வினுக்கும் புகழினுக்கும் அன்னார் ஆற்றிய சேவை இவை எனவும் உரைக்கும் நூல்கள் பல வெளிவரவும், அந்த அம்மை (தற்போது ஹிந்து சர்வகலாசாலையாக வடிவு கொண்டுள்ள) காசி ஸெண்டிரல் ஹிந்து கலாசாலையின் மூலம் செய்துள்ள சிறந்த தொண்டினையும் நாம் போற்றிப் புகழ்தல் வேண்டும்.

பாரத பூமியின் பழங்கால வீரபுருஷரின் வாழ்க்கை வரலாறுகளை விளக்கி, அதன் மூலம் தேச சரித்திரத்தை நம் கல்விச் சாலைகளிலே இளைஞருக்குப் புகட்டுதல் வேண்டுமென இந்தியாவின் நண்பர்களும் இந்திய தேசாபிமானிகளும் வற்புறுத்திப் பாடுபட்டு வந்துள்ள போதிலும் இத்துறையிலே சரியான முன்னேற்றம் ஏற்பட்டிலது.

இத்தேசத்தின் எல்லாக் காரியங்களிலும் உண்மையான தேசீயமதிப்பு துலங்க வேண்டுமென வங்காளப்

பிரிவினையின் காலத்திலே ஒரு புத்துணர்ச்சி உதித்தோங்க, அது நாளடைவில் வளர்ந்து **மகாத்மாகாந்தியின்** ஒத்துழையா இயக்க சமயத்திலே உச்சநிலை கொண்டது. அதன் விளைவாகப் பல நூல்கள் வெளிவரலாயின. அவை நமது பழங் காலநிலை இன்னது, தற்காலநிலை இன்னது, பழைமையைத் தழுவிப் புதுமையைக் கருதி வருங்கால நிலையை வகுத்துக் கொள்ளும் வகை இது, ஆதி காலத்திலும் இடைக்காலத்திலும் பெரும் புகழ்ச்சிக்குரிய நாகரிகம் நாம் நனிமிகப் படைத்திருந்தோம், கல்விச் சாலைகளிலே நாம் படித்துப் போற்றும் ஐரோப்பிய மேதைகளையும் பெருமக்களையும் விஞ்சக்கூடிய பல வீராதி வீரரும் வீராங்கனைகளும் நம் தேசத்திலும் திகழ்ந்திருந்தனர் என்றெல்லாம் இளைஞருக்கு எடுத்துக் காட்டி விளக்கின.

அத்தகைய நூல்கள் பல வெளிவந்தும், தக்க ஆதரவு கிட்டவில்லை. எத்தகைய நூலாயினும் சரி, டெக்ஸ்ட் புக் கமிட்டியின் அங்கீகாரம் பெற்றாலன்றி, நல்லாதரவும் பூரண பலனும் கிட்டுவதற்கில்லை. சிறிதும் பிரிட்டிஷ் ஆட்சியைக் குறை கூறாமல், பாரத நாட்டின் பழம் பெருமையினை எடுத்துக்கூறும் குற்றமற்ற நூல்களின்மீதும் அதன் கருணை நோக்கம் வீசாது போயிற்று.

'மனிதரும் அவர்தம் கருமங்களும்' எனும் நூலில் **ஸ்பென்டர்** எனும் அறிஞர், ஐரோப்பாவிலே பற்பலரும் தத்தமது நோக்கத்தினுக்கு இணங்கவே தேச சரித்திரத்தைத் திரிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருவதாக எழுதியுள்ளார்.

அத்தகைய கேவலமான பிரசார நோக்குடன் இச் **சரித்திர தீபம்** தோன்றவில்லை யென்பது திண்ணம். இதன் நோக்கம் மிகமிக உயரியதாம். சரித்திரத்தைத் தங்களது சுயநலங் கருதிக் கையாளும் சில ஐரோப்பியரைப் போலல்லாமல், மானிட வர்க்கத்தின் மகத்துவத்தை வற்புறுத்தி விளக்குதலே இந்நூலாசிரியரின் நன்னோக்கமாம்.

நம் தேசத்துப் புராதனப் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளை எளிய இனிய நடையில் சீராக எடுத்துரைக்கும் இயல்பு வாய்ந்தது இந்நூல். தேசத்தின் பழம்பெருமையை உணர்த்தி, பற்றும் மதிப்பும் வளர்த்து, பழைமையேபோல் இனியும் மேன்மை எய்தலாம் எனும் நம்பிக்கையை இளைஞருக்கு ஊட்டுதலே இதன் ஆசிரியரின் கருத்து.

பரந்த மானிட சமூகத்தின் நல்வாழ்வைக் கருதும் உயர்ந்த லட்சியமும் அத்தகைய லட்சிய புருஷருமின்றியே பாருலகம் பரிதபிக்கும் இக்காலத்திலே, ஆதிமுதல் அத்தகைய லட்சியமே கொண்டுள்ளது நமது பாரத பூமியென இளைஞருக்குப் புகட்டும் அரிய கடமையினை இதன் ஆசிரியர் போன்றோர் மேற்கொண்டுளர். அக்கடமையினை **ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரும்** பிறரும் நன்கு ஆற்றுவதற்குரிய ஊக்கம் மேன்மேலும் வளர்ந்தோங்கும் வண்ணம் இம்முயற்சி தக்க பலனளிக்குமாக!

*சென்னை,*
4-4-31. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், M. A., M. L. A.

# முன்னுரை

உலகமே ஒரு வீடு. தேசமெலாம் அறைகள். மக்கள் அனைவரும் ஒரே குடும்பம். யாதும் ஊரே, யாவரும் கேளிர் எனவும், எல்லாரும் இன்புற்றிருக்கவே நினைப்பேன் எனவும், சர்வே ஜனா: சுகினோ பவந்து எனவும் நமது முன்னோர் மொழிந்துளர்.

அவ்வுயரிய கொள்கை உலகில் ஓங்கின், எங்கும் தர்மம் செழிக்கும், அதர்மம் சாயும், நேசமே நிகழும், சகோதரத்துவம் சிறக்கும், மண்ணுலகம் விண்ணுலகமாக மாறும். இக் குறியே கொண்டு உழைத்தான் அசோக மகாராஜன்.

அக் கொள்கை நழுவின், பேதமும் பகையும் போரும் பெருகும்; தத்தம் தேசமே பிரதானம் எனும் வெறி மிகும்; ஜன நெருக்க நியாயம், உடல் வர்ண நியாயம், நாகரிக போத நியாயம் எனும் போலி நியாயங்கள் கிளம்பும். இன்றைய உலக நிலையே இதற்குச் சான்று.

சரியான முறையில் சரிதம் அமைக்காத காரணத்தினால்தான், உலகிலே பகையும் போரும் தாண்டவம் ஆடுகின்றன என்பர் மூதறிஞர். மானிட கோடிகளின் மகத்துவத்தையும் சமத்துவத்தையும் சுகவாழ்வையும் வற்புறுத்தி, ஒற்றுமையை வளர்ப்பதே பாரத பூமியின் பரம்பரை லட்சியம்; பிரதான போதமுமாம்.

அன்று போல் இன்றும் கவியரசர் தாகூர், தத்துவ ஞானி ராதாகிருஷ்ணன், அஹிம்ஸா விரதி மகாத்மா காந்தி, ஆத்மஞானி அரவிந்த கோஷ், உலக சரித நிபுணர் ஜவஹர்லால் முதலியோர் பரந்த உலக பக்தியே கொண்டு, நன்னெறி காட்டி வருகின்றனர். இந்த உண்மையினை அனைவரும் அறிதல் வேண்டும் என்பது நமது அவா.

ஞாலத்தினுக்கு ஞான தீபம் ஏற்றிவைத்த நமது தேசத்தின் சரிதத்தை ஓரளவேனும் உணர்த்துவதே இச் சரித்திர தீபத்தின் நோக்கு. முன்னம் கட்டுரையாக நம் தினமணியில் வெளி வந்தனவே இப்போது இந்நூல் வடிவு கொண்டுள. இத் துறையில் ஊக்கம் ஊட்டி, உதவியும் புரிந்த அதன் ஆசிரியருக்கு நமது வந்தனம் உரித்தாகும்.

**எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்**

ஆசிரியர்

# பொருளடக்கம்

ஸ்ரீ

# சரித்திர தீபம்

## 1. மேனுட்டாரின் புகழ்மாலை

பூமகளும் நாமகளும் பொருந்தி வாழின், புவிமாது புகழ் பெறுவாள். அவ்விதம், புகழ் படைத்தது நமது பாரத பூமி. இதனை அன்னியர் அறிந்து, வியந்து பேசுதல் விசேஷம். ஆதலின், மேனுட்டார் புகழ் மாலை சூட்டியிருப்பதை மொழிவோம்.

"ஆரிய புத்திர புத்திரிகாள்! நமது பாரத பூமியின் பழங் கீர்த்தியை எடுத்துரைக்க எண்ணு கின்றேன். பழம்பெருமையை எண்ணிக்கிடப்பதில் யாது பயன்? வருங்கால விழுமிய வாழ்வினுக்கு வகை தேடுதல் வேண்டும் என்பது மெய்யே! எனி னும், பண்டைக்காலப் பெருமையை மனத்துள் கொண்டே, வகை தேடுதல் அவசியம்.

"ஆதலின், அன்பர்காள்! பழம் பெருமையை மனம் போனமட்டும் பாருங்கள்; அக்கீர்த்திக்குரிய அரிய மார்க்கத்தையும் ஆலோசனை செய்யுங்கள்; நமது மூதாதையர் பெருங்கீர்த்தி வாய்ந்தோராக விளங்கினர்! இதனை நாம் நினைவில் இருத்திக் கொள்ளுதல் முக்கியமாம்.

"நமது உடலிலே எத்தகைய இரத்தம் ஓடுகின் றது? நம் பரம்பரையின் சிறப்பு யாது? இவற்றை நாம் அனைவரும் உணர்தல் வேண்டும். நாமும் இணை யிலா மேன்மை கொள்ளலாம் எனும் நம்பிக்கை கொள்ளுதல் மிகவும் அவசியம். அந் நம்பிக்கை

கொண்டு, முனைந்து முயன்று, முன்னையினும் பன் மடங்கு மொய்ம்பும் மாண்பும், உணர்வும் தகவும், ஆண்மையும் திண்மையும், நமது பாரதபூமி எய்தும் வண்ணம் நாம் அனைவரும் வழிகோலுவோமாக!"

இது சுவாமி விவேகாநந்தரின் திருவாக்கு. பழம் பெருமையை எண்ணி வாளா கிடத்தல் ஒண்ணாது; மற்று, கிளம்பி எழுந்து, கீர்த்தி பெறவே முயலுதல் வேண்டும். மிருகங்களில் மிகப் பெரியது யானை. அதன் ஆற்றலோ அபாரம். ஆயினும், மாவுத்தனைக் கண்டு அக்குஞ்சரம் மறுகும்; மண்டியிட்டுச் சலாம் செய்யும்; பாகனது முழக் கம்பு கண்டு மாழ்கும்; ஏவின வேலையெல்லாம் செய்யும். தனது வலிமை அதற்குத் தெரியாது. தெரியின் அஃது அஞ்சி நிற்குமோ? அல்லல்தான் படுமோ?

இனி, அஞ்சனை மைந்தன் அநுமான் அவதரித்த வுடனே ஆகாயவீதியில் கிளம்பினன்; கதிரவனைக் கனியெனக் கருதினன்; சூரிய கோளத்தை வாரி எடுக்கவும் முயலா நின்றான். அதுகண்டு, அமரர் அனைவரும் அஞ்சி அழிந்து, அவன்மீது போருக்கு எழுந்தனர். அநுமானே அனைவரையும் புறங்கண்டு வெற்றிகொண்டு ஆர்ப்பரித்தான். உடனே அமரர் வேறு வகையின்றி, அவனுக்குச் சாபம் இட்டனர்.

பின்னொளிலே வாயுமைந்தன் இராமதூதனாகி, இலங்கைசெல்ல எண்ணினன். கருங்கடல் குறுக்கிட்டது. எங்ஙனம் தாண்டிச்செல்வதென அவன் ஏங்கினன். ஜாம்பவான் அதுகண்டு, "ஆஞ்சனேயா! உனது ஆற்றலை மறந்தனை போலும்! பிறந்தவுடனே வானவீதியில் பறந்தாய்; பகலவனைப் பழமெனக் கருதிப் பறிக்க முயன்றாய்; தினகரன் முன்னே திரிந்து சென்று, கலையனைத்துங் கற்றுக் கரைகண்டாய்; இத்தகைய நீ, குறுமுனி குடித்த கருங்கடலைக் கடத்தல் கஷ்டமோ?" என்று நினைவு

ஊட்டினன். உடனே அநுமான் கிளம்பி, கணப் பொழுதில் பெருங்கடலைத் தாவி, இலங்கைத் தீவு சேர்ந்து, ஈடிலா வெற்றிச் சிறப்பு எய்தினன்.

தேவர் இட்ட சாபத்தால், வாயு புத்திரன் தனது வீறு மறந்து தயங்கி நின்றான். அங்ஙனமே பாரத புத்திரரும் மேனாட்டு நாகரிகம், கல்விமுறை, நடை யுடை முதலியன கண்டு மாழ்கிவிட்டனர். ஆதலின் பற்பல துறையிலும் நம் பாரததேசம் உலகினுக்கே ஒரு தாயகமாய், ஞான நாயகமாய், செல்வக் களஞ் சியமாய், சீரின் விளைநிலமாய் விளங்கி நின்றதை நம்மவருக்கு அறிவுறுத்தல் அவசியம்.

"ஜம்பூத்துவீபம் அல்லது ஆசியாக் கண்டம் பல தீர்க்கதரிசிகளின் பிறப்பிடம்; புத்த பகவான், ஏசுநாதர், நபிகள் நாயகம் முதலிய மகான்கள் அவதரித்த அருந் தலம். இத்தலத்தினிலே ஆயுத பலம் அதிகமாக இல்லையென்பது மெய்யே. ஆயி னும் உலகத்தின் போக்கையே மாற்றக் கூடிய ஆன்மபலம் இங்கே நிரம்பி யுள்ளது. கோடானு கோடி மக்கள் இங்கிருக்கின்றனர். அம்மக்களில் பலரும் மகா மேதைகள்; அன்னார் அடங்கியொடுங் கிக் கிடக்கின்றனர் என்று ஒருவரும் இலேசாக எண்ணவேண்டாம்.

"ஆசியாக் கண்டமோ சண்டமாருதத்துக்குப் பேர்போனதாம். முன்னம், அச் சண்டமாருதம் ஐரோப்பா எங்கும் பரவியது; ஆண்மை செலுத் தியது. மீண்டும், அச் சண்டமாருதம் கிளம்பும் அறி குறிகள் காணப்படுகின்றன. இம்முறை கிளம்பிச் செல்லுகையில், மாய மயமான மேனாட்டு அஸ்திர சஸ்திர பலத்தையும், திரவிய பலத்தையும் அது தவிடுபொடி பண்ணிவிடும் என்பது திண்ணம். முன் போல் தரணியிலே நம்பூமி தலைசிறந்து விளங்கும் என்பதும் சத்தியம். இதனை அனைவரும் கருத்தில்

இருத்திக் கொள்வாராக!" என்று ஜப்பானிய மேதாவி யொருவர் டாக்டர் யுகிரோ மியகே (Dr. Yugiro Miyake) 1908-ஆம் எழுதியுள்ளார்.

நாம் வசிக்கும் இப்பூமி பாரத வருஷம், பரதக் கண்டம் எனப்படும். நமது புராண இதிகாசங்கள் கூறும் வண்ணம், ஆதிமநுவின் பெயர் சுவயம்பு. அவர் புதல்வன் பிரியவிரதன். அப்பிரியவிரதன் இப்பூமண்டலத்தை ஏழு துவீபங்களாக வகுத்தான். அவை ஜம்பூ, இலட்ச, புஷ்கர, கிரௌஞ்ச, சாக, சான்மலி, குசத் துவீபங்கள் ஆகும். இக்காலத்தில் அத்துவீபங்கள் முறையே ஆசியா, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, ஓஷியானியா என வழங்கும்.

அம்மநுவின் வழியிலே, நாலாவது தலைமுறையில் திகழ்ந்தவன் இருஷபன். இருஷபனுக்கு நூறு புதல்வர். அந்நூற்றுவரில் மூத்தவன் பரதன். ஜம்பூத்துவீபத்திலே இமயமலைக்குத் தெற்கில் உள்ள பூமிக்கு அப்பரதன் பார்த்திபன் ஆனான். பரதனது வமிசத்தார் இம்பூமியிலே மிகவும் பெருகிப் பரந்தனர். அன்னவர் பரதர் அல்லது பாரதர் எனப் பெயர் பெற்றனர். அப்பரதன் அருந் திறனும் பெருந்திருவும் உயர் வீரமும் படைத்தவன். அவன் அரசு செலுத்திய பூமி பாரதவருஷம், பரதக் கண்டம் என்றாயிற்று. அதன் மக்களும் பாரதர் எனப் பெயர் பெற்றனர்.

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என வேதங்கள் நான்கு. அவற்றில் முதன்மையானது இருக்கு வேதம். இருக்கு வேதத்தில் பரதனும் பாரதரும் பேசப்படுவர். பின்னாளிலே, சந்திர வமிசத்தில் பரதன் என்றொரு பேரரசன் இருந்தான். இவன் துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்தவன். இவனும் பெருங் கீர்த்திமான். இவனது

பெயரால் இப்பூமி வழங்கி வருகிறது என்பர். அக் கூற்று பொருந்தாது. இவனது வழிமுறையில் வந்த பாண்டவரும் கௌரவரும், பூமிகாரணமாகப் புரிந்த போரே பாரத யுத்தமாம். அப் போரினை எடுத்துரைக்கும் நூல் மாபாரதம் எனப்படும்.

நமது பூமியை இந்நாளிலே இந்தியா என்பர். நம்மவருக்கும் அது காரணமாக இந்தியர் என்னும் பெயரே பிரபலம். அறியாமல் அன்னியர் இட்ட பெயர் அது. நம்மவரும் அறியாமையால் அப் பெயரினை ஏற்றுக்கொண்டுளர். பல்லாண்டுகளுக்கு முன்னம், கிரேக்கரும் பாரசீகரும் வடமேற்கு எல்லைவழியே நமது பூமியில் புகுந்தனர். அங்கே சிந்து மகாநதி ஓடுகின்றது.

அந்நதியின் பெயரைக் கொண்டு பூமியை 'ஹிண்டு', 'இண்டு' என்று அன்னவர் அழைத்தனர்; நாளடைவில் "ஹிந்துஸ்தானம்", "இந்துஸ்தானம்" என்றும் சொல்லினர்; மக்களையும் ஹிந்துக்கள், அல்லது இந்துக்கள் என்று பேசினர். அப்பால் இந்தியா, இந்தியர் என்னும் பெயர்கள் பிறந்து பிரபலமாயின. உலகும் நம்மை இந்தியர் என அழைத்து வருகின்றது.

பாரத வருஷம், பரதக்கண்டம் எனும் பெயர்களுடன், ஆரிய பூமி, ஆரியாவர்த்தம் என்பனவும் பழம் பெயர்களாம். "பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, ஆசியாவின் மத்திய பாகத்திலிருந்து ஆரியர் எனும் ஜாதியினர் இந்தியாவில் வந்து குடியேறினர்; ஆதியிலே பஞ்சநதிப் பிரதேசத்தில் பரவி, வேதங்களையும் சாஸ்திரங்களையும் பரப்பினர்; பூர்வீகக்குடிகளை அடக்கி ஒடுக்கி ஓங்குபுகழ்கொண்டனர்; நாளடைவில் இங்கே எங்கும் பரவினர். ஆதலின் பூமி, ஆரியாவர்த்தம் எனப்படும்." மேனாட்டினர்கள் அங்ஙனம் உரைப்பதை, நம்

மவரிலே பலரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆரியர் என்போர் ஆசியாவின் மத்திய பாகத்திலிருந்து இங்கே வந்து குடியேறியவர்கள் அல்லர். இங்கிருந்த பண்டை மக்களை அன்னார் அடக்கவுமில்லை; ஒடுக்கவும் இல்லை. இதுவும் விவேகாநந்தரின் திருவாக்கு. அவரது கொள்கை இது :—

"பாரத வருஷ வாசிகள் மிகப் பெரிய அறிவாளிகள். ஆதலின் ஆரியர் என்னும் காரணப் பெயர் பிறந்தது. பின்னளில், அப்பெயர் பிரசித்தமாயிற்று. பூமியும் ஆரியாவர்த்தம் என்று வழங்கலாயிற்று. ஆதலினல், வடக்கே இமயத்திலிருந்து தெற்கே குமரிவரையில் உள்ள நம்மவர் அனைவரும் பாரதர் அல்லது ஆரியர் ஆவர்."

"பூவுலகிலே வாசத்துக்கு மிகவும் வாசியான தேசம் பாரத தேசமே. காசினியில் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, பேரின்பம் தரத்தக்கதும் அதுவேயாம். ஆரிய பூமியின் தூசியோ காற்றினும் தூய்மை கொண்டது. அப்பூமியின் காற்றோ மகா பரிசுத்தமானது. மனேகரமான அதன் சமவெளிகள் போகபூமியின் பூங்காவை நிகர்க்கும். போக பூமி என்பது இந்தியாவிலேயே உளது என்றால், அதில் ஆச்சரியம் இல்லை. ஏனெனில் போக பூமியும் இந்தியாவுக்கு இடாகாது." இஃது அப்துல்லா வகாப் எனும் சரித்திர ஆசிரியரின் கருத்து. அவர் பதினன்காம் நூற்றாண்டில் இருந்தவர்.

இந்தியாவின் காவியங்களை ஆவலுடன் படித்த ஐரோப்பியர் பலருளர். அவர்களில் சிறந்தவர் மாக்ஸ் முல்லர் என்னும் மேதாவி. அவர் பின்வருமாறு பேசியுள்ளார் :—"இயற்கையாகவே ஏராளமான செல்வம், இணையிலாத சக்தி, ஈடில்லா வனப்பு வாய்ந்ததேசம், சுருங்கச் சொல்லின் போக பூமி எது எனில், இந்தியா என்பேன். மனவிரிவு

கொண்டு, மகா சிந்தனைசெய்து, வாழ்வின் சிக்கல்களை அறுத்தகற்றி, உயிர்த் தொகுதிகள் நலமும் பலமும், வளமும் வலியும் பெறுமாறு வழிகாட்டிய பூமி, மேனுட்டுத் தத்துவ ஞானியருக்கு ஞானத் தாயகமான பூமி யாதெனில் பாரதபூமி என்றே மீண்டும் மனமாரப் பகர்வேன். ஆன்ம பரிபக்குவம் கொண்டு, இகம் பரம் இரண்டிலும் ஏற்றம் பெறும் வண்ணம் மானிடகோடிகளுக்கு மதிபுகட்டும் மகிமைத்தலம் யாதென்ருல், அதற்கும் இந்தியா தேசம் என்றே இசைப்பேன்."

இனி, "மகிமை, சீர்மை ஆகிய இரண்டினுக்கும் இருப்பிடம் இந்தியாவே. மணியும் பொன்னும், மணமும் குணமும் அங்கே கொழித்துக் கிடக்கும். பாரத பூமியின் அதி அற்புதமான இயற்கை வனப்பும் செயற்கைச் சிறப்பும் எங்கும் காணக்கிடையா," என ஶ்ரீரே எனும் பேராசிரியர் கூறியுள்ளார். ஆதி காலம் முதல் பூமகளின் திலகமாய்த் திகழ்வது பாரத வருஷமே என ஒருவர் புகழ்ந்திருக்கிருர்.

"ஏனைய தேசங்கள் நாகரிகம் என்ருல் என்ன என்று உணராமல் இருந்த காலத்திற்கு முன்பே, நாகரிகத்தில் நனிசிறந்து நின்றேர் ஆரியரே" என்று "கல்கத்தா ஜர்னல்" எனும் பழம் பத்திரிகை யொன்றும் பேசும். மற்ெருரு பத்திரிகை பேசியிருப்பது ஈதாகும்:—

"தற்சமயம் இந்தியர் நலிந்தும் மெலிந்தும் கிடப்பதாகத் தோன்றலாம். ஒரு காலத்திலே அன்னவர் கலைஞான உணர்ச்சியிலும், போர்ப் பயிற்சியிலும் சிறந்து, இனிய அரசியல் கொண்டு, சட்டதிட்டங்களில் சமர்த்துக் காட்டி, அறிவு வளர்ச்சியில் ஈடும் எடுப்பும் இன்றி, எங்கும் அறக்கொடி நாட்டிப் புகழ்மாலை எய்தினர் என்பதில் இம்மியும் ஐயமில்லை."

பிரான்ஸ் தேசத்துப் பெரியார்களில் ஒருவர் **பியரி லோட்டி** (Pierre Loti) பேசுகிறார் :—

"பழமையும் பண்பும் நிறைந்த பாரத பூமியே! கலைஞானத்தினுக்கும் தத்துவ உணர்ச்சியினுக்கும் உற்ற தலமான ஓங்கு புகழ்கொண்ட ஆரிய தேசமே! உன்னை மனமொழி மெய்களால் வணங்குகின்றேன். மேம்பாடு கொண்ட மேனாட்டினர் என்போர் மேன்மை இழந்து, நாடோறும் நலிந்து, ஒருவரை யொருவர் வெட்டிக் குவித்து, ஆண்டவனையும் குனிய வைத்துக் கால்கொண்டு இடறி, ஆன்மகோடிகளை அடக்கி ஒடுக்கி வரினும், உனது புராதன மகிமை கண்டு அன்னவர் உன்னை வணங்கா நிற்பர். முன்னமே போல் மிகு மொய்ம்புபெற நீ விழிப்புக் கொண்டு கிளம்பி நிற்பதைக் கூர்ந்து நோக்கி, அம்மேனாடுகள் வியப்பும் உவப்பும் கொண்டு உன்னைப் போற்றிப் புகழும்."

இந்தியாவிலே முன்னம் ராஜப் பிரதிநிதியாக இருந்த லார்டு கர்ஸன், "ஆங்கிலேயராகிய நம் முன்னோர் உடலெங்கும் அரிதாரம் பூசிக்கொண்டு, இலை தழைகளை ஆடையாகத் தரித்து, வனங்களிலே விலங்குகள்போல் திரியாநின்ற காலத்தில், இந்தியாவிலே இணையிலா வல்லரசுகளும் பேரரசுகளும் பெருமை கொண்டு விளங்கி யிருந்தன," என்று மனமாரப் போற்றி யிருக்கிறார்!



## 2. ஏழாயிரவரின் வீராவேசம்

பூமியில் பிறந்தால், புகழோடு தோன்ற வேண்டும்; புவிக்கு நல்லவனாக விளங்கவேண்டும்; அல்லது மெய்ஞ்ஞானி யென மேன்மை பெறல் வேண்டும்; இன்றேல் இரணசூர வீரனென எண்திசையும் மெச்சுதல் வேண்டும்; அல்லது, வரையா தளிக்கும் வள்ளலாதல் வேண்டும்; இல்லையானால், பல நூல் கற்ற புலவனாகத் திகழவேண்டும்; அதுவுமின்றேல் அறிவுமிகு துரைமகனாதல் வேண்டும். அவ்விதமானால் உச்சிமீதுகொண்டு ஜகதலம் மெச்சும்.

அத்தகைய ஜகதலப்பிரதாபர் பலர் உண்டு. அன்னவரிலே ஒருவன் அலெக்சாந்தர். பிரதாபங் கருதியே அவனை மகா அலெக்சாந்தர் என்பர். அவன் ஐரோப்பாவில் உள்ள கிரீஸ் தேசத்தில் பிறந்தவன்; ஏறக்குறைய மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னம் இருந்தவன்; மாஸிடோனியா என்னும் நாட்டின் மன்னவனாக விளங்கியவன்.

நட்பு, தயை, கொடை இவை பிறவிக்குணம் என்பர். வீர தீரமும் அப்படியே. அந் நாட்டிலே ஐந்து வயதுக் குழந்தைகளுக்கு ஓட்டப் பந்தயம் நடந்தது. அலெக்சாந்தரையும் அப் பந்தயத்தில் சேரச் சொன்னார் அவன் தந்தை. "சரிசமமான ராஜகுமாரர், அல்லது வீரபுருஷரின் புதல்வர், இவர்களுடன் தான் போட்டி போடுவேன்; ஏனையோருடன் நான் பந்தயம் போடேன்," என்றான் குழந்தை அலெக்சாந்தர்.

இள வயதிலேயே அவ்வீரமைந்தன் அரியணை ஏறினன். உடனே உலகனைத்தையும் ஒருங்கே வென்று ஆள, அவனுக்கு ஆவல் பிறந்தது. அக் காலத்தில் பாரசீக தேசமே பெருமிதம் வாய்ந்து

நின்ற வல்லரசாம். போர்முனையில் அவ்வல்லரசை அடிமைப்படுத்தினன் அலெக்சாந்தர்.

இப்பாருலகிலே ஆதி நகரம் "பாக்" என்பர். அதனையும் அவன் ஜயித்தான்; ஆக்ஸஸ் நதியைக் கடந்தான்; கீவா, பொகாரா நகரங்களையும் பிடித்தான்; எகிப்து தேசத்தையும் வசஞ் செய்தான்; மேற்கு ஆசியாவெங்கும் மேன்மை பரப்பினன்.

நமது பாரதபூமியின் செல்வநலம், ஞான நலம் இரண்டும் அன்று உலகப் பிரசித்தம். அது கேட்டதும், புறப்பட்டான் அலெக்சாந்தர் ஒரு பெரும் படையுடன். அப்போது அவனுக்கு வயது இருபத்தெட்டு. 'கல்லுளி மங்கன் போன வழி, காடுமேடெல்லாம் தவிடுபொடி' என்பர். அலெக்சாந்தருக்கு நாசம் புரிவது கருத்தன்று. கொள்ளை கொள்ளவும், கோரம் காணவும் அவன் விரும்பவில்லை. மற்று, திக் விஜயன், தெய்வப் பிறவி எனும் பெயர் பெறவே விரும்பி நின்றான் என்பர்.

அந்நாளிலே, பஞ்சாபின் எல்லையில் சிந்து மாநதி. அந்நதிக்கு அப்பாலுள்ள காபூல் நாடும் இந்தியாவைச் சேர்ந்தது. அக் காபூல் நாட்டிலே, சிறு சிறு தனியரசுகள் இருந்தன. அவற்றில் ஒன்று மசகம் (Massuga). மசகமக்கள் பிறவியிலேயே பெருவீரர்; நாடு மலைப்பிரதேச மாதலின், சமவெளியில் வந்து பகைவனை எதிர்ப்பர்; அஃது இயலாதாயின், மலைக் கோட்டைகளில் தங்கிநின்று மூர்க்கமுடன் போர் புரிவர்; வெற்றி கிட்டாவிடின், நகரங்களை நிர்மூலம் ஆக்கிவிட்டு வீரசுவர்க்கம் புகுந்து புகழ்பெறுவர்.

அவ்வீர மக்களின் தலைமை பூண்ட அரசியின் பெயர் கிளியோபிஸ் (Kleophis). அலெக்சாந்தரின் படையெடுப்பு அவ்வரசிக்கு எட்டியது. உடனே அவள் ஒரு சேனை திரட்டினள். இருபதாயிரம் பரி

வீரர், முப்பதாயிரம் காலாளர், மூந்நூறு யானை வீரர் எழுந்தனர் மிகவும் எடுப்பாக.

மசக நகர் இயற்கை யரண் வாய்ந்தது. நகரின் கிழக்கே பெரிய மலையருவி; கிடுகிடு பள்ளமான கரை. தெற்கிலும் மேற்கிலும் செங்குத்தான குன்று வரிசைகள். அக் குன்றுகளுக்கு இடையே அஜ கஜாந்திரமான பள்ளத்தாக்குகள். இடையிடையே சதுப்பு நிலங்களும் மிகுதி. சேற்றிலே யானையும் மூழ்கிவிடும். மேலும், தலை நகரைச் சுற்றிலும் கல் கோட்டை. கோட்டையின் சுற்றளவு நான்கு மைல். நகரைச் சூழ்ந்து ஆழ்ந்த அகழியும் உண்டு.

மசகத்தை ஜயித்தால், மற்றதையும் இலகுவில் ஜயிக்கலாம் என்று கருதினன் அலெக்சாந்தர். நகரின் நிலை, அரண்களின் தன்மை இரண்டையும் அவன் ஆராய்ந்து பார்த்தான். மதில்சுவரிலிருந்து அம்பொன்று விரைந்து வந்தது. மண்டையில் அடி யுண்டு விழுந்தான் அப் பெருவீரன். பட்டகாயமோ பிரமாதமே. ஆயினும் அதனை மதியாது அவன் அணி வகுத்தான். அது பார்த்தனர் மசக வீரர். அவர்களிலே ஓர் ஏழாயிரவர், பஞ்சாபிலிருந்து வந்திருந்த உயர் வீரர். நகருக்கு வெளியிலேயே அலெக்சாந்தரை மடக்க, அந்த ஏழாயிரவரும் எண் ணினர். அவ்வளவுதான் தாமதம்.

ஏழாயிரவரும் கிளம்பினர் அக் கோட்டையை விட்டு. நல்லபகை கிடைத்ததென அலெக்சாந்தரும் நினைத்தான். அவர்களை எதிர்த்து நிற்க அவனால் ஆகவில்லை. தந்திரமாக அவன் பின்வாங்கினன்; முன்னேறி வரும் வீரரை வெகுதூரம் பின்னுக்கு இழுத்து,அப்பால் அவர்களை வளைத்துக் கொள்வதே அவன் நோக்கம். ஏழாயிரவருக்கும் பகைவனது சூழ்ச்சி புலப்பட்டது. ஆதலின், சூழ்ச்சி வலையில் சிக்காமல், பகைவனைப் பரிபவப்படுத்தி வந்து

சேர்ந்தனர் கோட்டைக்குள். மகா அலெக்சாந்தர் மனந்தளராமல் முனைந்துநின்றான் முற்றுகையில்.

ஒன்பது நாள் ஓயாமல் ஒழியாமல் முற்றுகை நடந்தது. கோட்டை மீதிருந்த வீரர் அம்புமழை பெய்தனர். அலெக்சாந்தரின் வீரரோ யந்திர சாதனங் கொண்டு, பலவகை ஆயுதங்களை வீசினர். இரு பக்கத்திலும் கனத்த உயிர்ச்சேதம். அலெக்சாந்தருக்கும் மறுபடி ஒரு காயம். ஆயினும் அவன் சளைக்கவில்லை; போர் முகத்தின் முன்னின்றே போரை நடத்தினான். அவன் வீரருக்கு அது கண்டு ஊக்கம் மிகுந்தது. பத்தாநாள் பொழுது புலரவே, அகழை ஒரு பக்கம் தூர்த்தனர் கிரேக்க வீரர். அதன் வழியே யந்திரங்களைக் கொணர்ந்து, கோட்டையைக் குறுகினான் கிரேக்க வேந்தன்.

உடனே கை கலந்த சண்டை மூண்டது. பல இடங்களில் பிணங்கள் குவிந்தன. கோட்டையின் காவலன் குற்றுயிராய் விழுந்தான். மசக வீரர் சற்றே மனம் தளர்ந்தனர். அதுவே சமயமென எழும்பினான் அலெக்சாந்தர். மசக வீரரில் பலரும் மார்பகத்தே காயங் கொண்டு மண்ணில் சாய்ந்தனர். சாய்ந்தும், எஞ்சிநின்ற மசக வீரரின் முனைப்புக் கண்டு கிரேக்க வேந்தன் பிரமித்தான். எனினும் வெற்றி அவன் பக்கம் நின்றது. மசக வீரரில் சிலரும் ஏழாயிரவரில் பலரும் போர் நூலின் முறைக் கேற்பப் பின்வாங்கிச் சென்றனர்.

மசக நாடு அலெக்சாந்தரின் வசமாயிற்று. ஏழாயிரவரின் வீரங்கண்டு உள்ளூர மகிழ்ந்தான் அலெக்சாந்தர். அவர்களை விட்டுவிட அவனுக்கு மனமில்லை; அவர்களைக் கொன்று போடவும் துணிவில்லை. அவர்களின் துணையிருப்பின், வெற்றிமேல் வெற்றி பெறலாம் என்பதே அவன் கருத்து. ஆதலின், "என் சேனையில் சேருங்கள்; உயிர்ப்பிச்சை

கிடைக்கும்; உயர்வு பெறலாம்; ஊதியம் கிட்டும்; எனக்கும் நல்வெற்றி சித்திக்கும்," என்றான்.

நெடுநாள் சண்டைபோட்ட களைப்பு, எதிரியின் வெற்றிகண்டு திகைப்பு, மனைவிமக்கள் உடனிருக்கும் பொறுப்பு, இவை எல்லாம் கூடிக்கொண்டன. அத்துடன் கிரேக்க சேனையும் சூழ்ந்து நின்று வழிமறித்தது. ஆலோசித்து முடிவு கூறுவதாக அவ்வீரர் பதில் உரைத்தனர். இரவிலே மந்திராலோசனை நடந்தது.

"பிழைப்பை நாடி, மசகம் சென்று, சேனையில் சேவித்தது மெய்யே. ஆயினும் மசகம் நமது பாரத பூமியில் அடங்கியது. அலெக்சாந்தரோ அன்னியன்; மேலும் மண்ணாசை கொண்டவன். அவன் சேனையில் சேர்வதோ? சேரின், சொந்த தேசத்தினருக்கு விரோதமாகப் போர் புரிய வேண்டுமே. தேச சுதந்திரம் என்னாவது? மானம் என்னாவது? கோடரிக் காம்புகளாகத் துலங்குவதோ?" என்று ஏழாயிரவரும் எண்ணினர்.

தேசத்துரோகம் புரிய அவர்களில் எவருக்கும் மனமில்லை; மானத்தை விற்று வயிறு வளர்க்கவும் விருப்பமில்லை. எனினும் மனைவி மக்களின் பாசம் வந்து குறுக்கே நின்றது. அஃதறிந்த மனைவியர் அனைவரும், "மானமே பெரிது. கூலிக்குப் போர் புரிய வந்தது மெய்யே. ஆயினும் தேச நலமே மதித்தோம். கிரேக்கரின் சேனையில் சேருவதாயின், குலத்துக்கே பழி நேரும். வேண்டாம் ஈனவாழ்வு," என்று ஒரு முகமாகக் கூறினர். குழந்தைகளோ, "ஆம், ஆம். அதுவே சரி," என்றனர். எல்லாம் கண்டு, "அழகு அழகு" என்றனர் ஆடவர்.

நள்ளிரவில் எல்லாரும் உறங்கலாயினர். வேவுகாரின் மூலம் ஏழாயிரவரின் கருத்தை உணர்ந்தான் அலெக்சாந்தர்; உடனே தனது வீரரை

அன்னார் மீது ஏவினன். கிரேக்கர் கிளம்பி, ஏழா யிரவரையும் நாற்புறமும் வளைத்துக்கொண்டு தாக்கினர். உறங்கும் வீரரில் பலருக்கும் உயிர் போயிற்று. "தூங்கும்போது தாக்குவோன் யாவன்? சுத்த வீரனா அவன்?" என்று கொதித்து எழுந்தனர் ஏழாயிரவரும். மனைவியரும் மக்களும் கண் விழித்துச் சிங்கநாதஞ் செய்தனர். மாதரையும் பாலரையும் நடுவே நிறுத்தி, மண்டல வியூகம் வகுத்தனர் இந்திய வீரர்.

நடு நிசியில் கடும்போர் நிகழ்ந்தது; பொழுது புலரும் வரையில் ஓயவில்லை. நடுவே நின்ற மாதரும் முடிவிலே போரில் புகுந்தனர். பாலரும் அச்சமரில் பங்கு கொண்டனர். அலெக்சாந்தரே தலைமை பூண்டு போரை நடத்தினன்; இந்தியரின் வீராவேசம் கண்டான்; தியாக வெறியும் நோக்கினன்; வேசாறி நின்றான். தண்டிலே போனல், இரண்டில் ஒன்றுதானே. வெற்றிமாலை, அல்லது வீர சுவர்க்கம்! இரு திறத்தாருக்கும் அதுவே கருத்து. கிழக்கு வெளுக்கும் நேரம் கிரேக்கர் களைத்துப் போயினர்.

பார்த்தான் அலெக்சாந்தர். உடனே பதைப்புக் கொண்டான்; கொண்ட கருத்து மண்ணாகுமென மதித்தான்; துணைத்துருப்புகள் பெறலானன். இந்தியர் ஒரு மடங்கு என்றால், கிரேக்கர் ஐந்து மடங்கு! ஒரு சிலர் வெகு பலரை எத்துணை நேரம் சமாளிக்க முடியும்? வெற்றிமாலை கிட்டாதெனக் கண்ட இந்திய வீரர் வீறுகொண்டு கர்ஜனை புரிந்தனர்; பகைவரை வீச்சுக்கு நாலைந்தாக வெட்டி வீழ்த்தினர்; தாமும் மடிந்தனர்.

சுருங்கச் சொல்லின், ஏழாயிரவரிலே ஒருவர் கூட உயிருடன் இருக்கவில்லை. மானமழிந்து வாழ்வதினும், மானமுடன் மாண்டு மடிதலே மேன்மையல்லவா! வீராதி வீரரான அனைவரும் மாய்ந்த

பின்னரே, கிரேக்க வேந்தன் பதைப்பு நீங்கி ஆறுதல் அடைந்தான்; பரமானந்தமும் கொண்டான். மாதரிலும் பாலரிலும் ஒரு சிலரே மிஞ்சினர். அவர்களைக் கொல்ல அவன் துணியவில்லை.

கி. மு. 327-ஆம் ஆண்டு நிகழ்ந்தது இது. அப்பால் சிந்து நதியைக் கடந்தான் கிரேக்க வேந்தன்; கிழக்கே புகுந்தான்; சிற்சில இடங்களில் ஜயங் கொண்டான்; பாரத பூமியின்மீது அவன் படை கொண்டுவந்து திரும்ப, மூன்று வருஷம் பிடித்தது. அதில் 19 மாதம் இப் பூமியில் இருந்தான் அப் பார்த்திபன். சொந்த ஊரைவிட்டு எத்தனை நாள் வெளியே இருக்க இயலும்? கிரேக்க வீரர் மனம் புழுங்கினர். உடனே, வந்தவழியே நோக்கினன் அவ் வேந்தன். பிடித்த நகரங்களில் அவன் பிரதிநிதிகள் அமர்த்தப் பெற்றனர்.

ஊருக்குத் திரும்பியதும், வழியிலே அலெக்சாந்தருக்கு நோய் கண்டது. அது காரணமாகவே, கண்மூடினன் அக் காவலன். இரண்டு மூன்று ஆண்டுகள் கழிந்தன. அன்னியரின் ஆதிக்கம் கண்டு, பாரதமக்கள் ஆத்திரம் கொண்டனர். காவல் புரிந்து நின்ற கிரேக்க வீரர், ஆட்சி புரிந்து நின்ற கிரேக்கப் பெருமக்கள் ஆகிய அனைவரும் கொலையுண்டனர். இதற்கு இடையில் சந்திரகுப்தன் என்னும் பாரத வீரன் தோன்றினன்; சாணக்கியன் என்னும் வேதியனது உதவி கொண்டான்; சிந்து நதிப் பிரதேசம், பஞ்சாப், மகதம் முதலிய அனைத்தையும் பிடித்தான்; இப் பூமியிலே ஏக சக்கராதிபதி ஆனன். கிரேக்கப் படை வெள்ளம் இருந்த இடம் தெரியவில்லை. மீண்டும் வந்த கிரேக்கரும் சந்திரகுப்தனுக்கு மண்டியிட்டனர்.

## 3. நவ நந்த—சந்திரர்

ஆதியிலே பாரத பூமியில் ஐம்பத்தாறு தேசங்கள். அவை அங்க, வங்க, கலிங்க, குலிங்க, மச்சம், மராடம் முதலியன. ஒவ்வொன்றும் ஒரொரு சமயத்தில் ஓங்கு புகழே வாய்ந்திருந்தது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் மொய்புகழ் கொண்டு விளங்கிய தேசம் மகத தேசமே. அத்தேச மக்கள் மாகதர் எனப்படுவர். பிராக்ஞர் எனவும் அவர்களுக்கு ஒரு பெயருண்டு. அன்னவர் மகிமை மிகுந்த புருஷர். இதற்கு, "என்ன! மகாப் பிராக்ஞனே!" என்னும் பழமொழியே சான்று.

மகத ராஜ்யத்தை ஆதியில் கண்டவன் பிருகத்திரதன்; அவனே, பாரதப் போரில் துரியோதனனுக்குத் துணைபோனவன்; ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தவன்; மகா பராக்கிரமசாலி. அவன் வமிசத்தார் ஆயிரம் வருஷம் அங்கிருந்து அரசு செலுத்தினர். அப்பால் நூற்றைம்பது ஆண்டு பாரை ஆண்டுவந்தனர் பிரத்தியோதய வமிசத்தினர். அதன்பின்பு, சிசுநாக வமிசத்தார் சிறந்து நின்றனர் முன்னூற்று அறுபது வருஷம்.

சிசுநாகரில் ஒருவன் உதயணன். இவன் நிருமித்த ராஜதானி புஷ்பபுரம் அல்லது குஸுமபுரம். தற்காலம் இதுவே பாட்னு அல்லது பாடலிபுரம் என்று வழங்கும். பாட்னு நகரோ இப்பொழுது பேகார் மாகாணத்தின் தலைநகரமாம். அச்சிசுநாகரில் கடைசி யரசன் மகாநந்தன். அவன் மகன் மகாபத்மன். இவனுக்கு அரசாளும் ஆசை தலைமிஞ்சியது. உடனே எழுந்தான் துணைவருடன்; புரிந்தான் பெருஞ் சூழ்ச்சி; கொன்றான் தந்தையை; மகா பத்மநந்தன் என்று ஏறினன் சிம்மாசனம்.

ஊர்வாயை மூட, உலைமூடி தானுண்டோ? "ஸ்ரீ ராமபிரான் பிறந்த பூமி இது. மகாபத்ம நந்தன் தோன்றியது பாவம், பாவம்! அப்பனைக் கொன்று அரியணை ஏறுவது? இந்தப் பாவியை அவனி பொறுக்குமோ? இவனா இறைவன்? இவன் கீழ் நாம் வாழ்வதோ?" என்று ஊரார் வெறுத்தனர்; உலகமும் பழித்தது. எங்கும், "அப்பனைக் கொன்ற பாவி" என்றே பேச்சு. என்ன செய்வான் மகாபத்மன்? உன்மத்தமே கொண்டான்; உலகை அடக்க வேண்டும், ஒரு குடைக் கீழ் ஆள வேண்டும் என்று துணிந்தான்.

பிறவியிலேயே மகா பத்மநந்தன் பெருவீரன். வாள் வலியிலும் வல்லவன்; தோள் வலியிலும் தோலாதவன். துணைவலிக்கோ மைந்தரும் எண்மர்; வீரரும் பதினாயிரக் கணக்கு; காலாளர் இருநூறு ஆயிரம்; பரிவீரர் எண்பதாயிரம்; தேராளர் எண்ணாயிரம்; கரிவீரர் ஆறாயிரம். முன்னம், பரசுராமன் க்ஷத்திரிய குலத்தை வேரறுத்தான் என்று புராணங்கள் புகலும். அப் பரசுராமனைப் பின் பற்றினான் மகா பத்ம நந்தன்.

நான்கு திக்கிலும் அத் தேர்வேந்தன் சீறிச் சென்றான்; போர்க் குலத்தாரைப் போருக்கு இழுத்தான். கௌரவர், காலகர், சூரசேனர், மிதிலர் முதலிய ராஜ வமிசத்தார் மடிந்தனர். சுயவரசு, தனியரசு, குடியரசு என்று பற்பல வகையான அரசியல் கொண்டு நின்ற நாடுகள் பலவும் தலை வணங்கின. எங்கும் நிர்த்தூளி, செந்தூளி பறந்தது. போன விடமெல்லாம் வெற்றிமாலை கிட்டியது. பாரத பூமியின் பெரும்பாகமும் அவன் அடிப்பட்டது. ஈடில்லா ஏக சக்கராதிபதி யானான். மகத ராஜ்யம் மகத சாம்ராஜ்ய மாயிற்று.

ஏகாதிபத்தியம் கண்ட எடுப்பு, இணையிலாப்

படைவகுப்பு, எதிரிலா வீறுப்பு, யார் நிகர் எனும் தருக்கு, இவை எல்லாம் கூடிக்கொண்டன. வாள் வேந்தரோ வீழ்ந்து போயினர், வர்த்தக வேந்தரை யும் வதைக்க வேண்டும் என்று அப் பத்மன் கங் கணம் பூண்டான். உடனே வரிவகைகள் விரிந்தன; பகுதிப்பணம் பெருகியது; வைசிய குலத்தார் வாடத் தொடங்கினர். பசுவின் மடியை அறுத்துப் பால் கொள்வதோ என்று தம் மனத்தகத்தே புழுங்கி நின்றனர் அனைவரும். இறைவனிடம் மலைபோன்ற செல்வம் திரண்டது. தனநந்தன் எனவும் வஞ்சப் புகழ்ச்சி விஞ்சியது.

வாள் வேந்தர், வர்த்தக வேந்தர் இவர்களுடன் சனியன் நிற்கவில்லை; நான்மறையும் ஆறங்கமும் உணர்ந்த வேதியரின் மீதும் தாவியது. அன்னார் மீதும் துவசங் கட்டினான் தனநந்தன். மன்னனது முறைகேடு கண்டு, பூசுரர் மனம் பொறுமினர்; உடனே அரசவையை அலங்கரிக்க மறுத்தனர்; இறைவனை உதறித்தள்ளி ஒதுங்கியும் நின்றனர்.

"வேல் மட்டும் வெற்றி தராது; செங்கோலே ஜீவாதாரம்; அக்கோல் கோடின், வாழ்வுபோம், வையம் போம்," என்று மதியமைச்சர் இடித்துக் கூறினர். தனநந்தன் செவி சாய்க்கவில்லை. 'கேடு வரும் பின்னே, மதிகெட்டு வரும் முன்னே' என் பது பொய்யா மொழி. கொடுங்கோல் வீழ்ந் தொழி யும் நாள் என்னுளோ என்று ஏங்கித் துடியாதார் கிடையாது. நீறு பூத்த நெருப்பேபோல் நின்றது தேச மகாஜனங்களின் மனக்கொதிப்பு. இங்கிலையில் நேர்ந்தனர் சிலர்; செய்தனர் சதி; வகுத்தனர் வகை துறை அரசை அடியோடு கவிழ்க்க.

சதிகாரரின் தலைவன் சந்திரகுப்தன். அவன் நந்த வமிசத்தான். சேற்றிலும் தாமரை தோன்று மன்றோ? தேச நலம், வமிசப் பற்று, ஊழிய

உணர்வு மூன்றும் அவனைத் தூண்டின. வஞ்சனை வழியில் இறங்க அவனுக்கு மனமில்லை. ஜனக் கலகத்தைக் கிளப்பிப் போரை மூட்டிப் பார்த்தி பனைப் பழிவாங்குவதே அவன் கோட்பாடு. கலகத் திணுக்கு முகூர்த்த நாளும் குறித்தாயிற்று. போர் முரசு கொட்ட வேண்டியதே பாக்கி. துரோகிகள் தோன்றிவிட்டார்கள். தனநந்தனுக்கு எட்டியது செய்தி. உடனே சதிகாரரில் சிலர் கொலை யுண்டனர்; சிலர் வீடுவாசல் இழந்தனர்.

சந்திரகுப்தன் மட்டும் தப்பிச் சென்றான். வில்வளைவதும் வேங்கை பின்வாங்குவதும் வெகு வேகமாக முன்னேறிப்பாய அன்றோ? சந்திர குப்தனது ஓட்டமும் உயிருக்கு அஞ்சி அன்று. பாடலிபுரத்தை விட்டுச்சென்ற சந்திரகுப் தன் வட நாடெங்கும் சுற்றினான்; ஆங்காங் குள்ள நிலையை உணர்ந்தான்; பெருமக்கள் பலரின் உறவுபூண்டான்; ஊக்கமும் கொண்டான்.

கலக யாத்திரையில் சந்திரன் கடைசியாகச் சென்ற தேசம் சிந்துநதிப் பிரதேசம். அப்போது தான், கிரேக்க வேந்தனும் மகா அலெக்சாந்தர் மண்ணாசை பிடித்து, அங்கே தோன்றி ஆர்ப் பரித்து நின்றான். காந்தாரர், தட்சசீலர், கேகயர், மத்திரர், திரிகர்த்தர் முதலிய போர்வீர வகுப்பினர் வாளா இருக்கவில்லை; வாளுருவி எழுந்தனர் வேற்றரசனை வீழ்த்த. கிரேக்கப் படை வெள்ளம் பொங்கிவந்தது. அதுகண்டு போர்வீர வகுப்பினர் பின்னிட்டனர். அதனால் பற்பல குறுநாடுகள் கிரேக்க வீரரின் வசமாயின. அக்கோலத்தையும் கோரத்தையும் கண்டான் சந்திரகுப்தன்; கதிகலங் கினான்; மதியும் பிசகலானான்.

அந்நாளில் தட்சசீலம் நமது பாரத பூமியின் கலைஞான பீடம். ஆங்கிருந்த மாணவரும், பேரா

சிரியரும், வேதியரும் பதினயிரக் கணக்கு. தெய்வம், தேசம், தர்மம் மூன்றையும் காக்கும் கருத்து அன்னருக்கு மிகுதி. தேசத்தின் நிலைமையையும் அன்னியரது அட்டகாசத்தையும் பார்த்தனர் அவ்வேதியர்; பழம் பாரதபூமி பங்கம் அடைவது கண்டு பரிதபித்தனர்; மகத சாம்ராஜ்யம் சோம்பிக் கிடப்பதுகண்டு சீற்றம் மிகுந்தனர்; சாம்ராஜ்யத்தின் சிற்றரசுகள் கிரேக்கரின் முன்னே சீரழிவது கண்டு தாபம் பூண்டனர்.

அவ்வேதியரில் ஒருவன் விஷ்ணு குப்தன்; சாணக்கியன் என்னும் மறு பெயர் வாய்ந்தவன்; அரசியலிலும் அர்த்த சாஸ்திரத்திலும் அதிவல்லவன். அவ் வேதிய வித்தகன் வீர சந்திரகுப்தனை அழைத்தான்; "மைந்த! பேதைமதி கொண்டதேன்? நந்த வமிசத்தில் வந்த மாசே போதும்! மகத சாம்ராஜ்யத்தை வீழ்த்தும் நோக்கம் நன்றே. அது சோம்பிக் கிடந்ததனல் மறுபுல மன்னவன், மகா அலெக்சாந்தர் மமதை கொள்ளலானன். மகதத்தை மாய்க்க அம்மாற்றானை நாடுவதோ? மகத மன்னவன், மாற்றான் ஆகிய இருவரையும் ஒருசேர மாய்க்கவேண்டும் அன்றோ? தட்ச சீல நாட்டின் அதிபனை அம்பி தேசத் துரோகி யானது போதாதோ?" என்று போதம் புகட்டினன்.

பாரத பூமியைச் சிலர் கர்மபூமி என்பர். சிலர் தர்ம பூமி என்பர். கர்மமே தர்மம், தர்மமே கர்மம்; தர்மம் தலையெடுக்க வேண்டின், தேசம் செழிக்க வேண்டும். தேசம் செழிக்க வேண்டின் சுயவரசு வேண்டும். மறு புலத்தாரின் ஆட்சி ஏற்படின், தர்மம், தேசம் இரண்டும் தவிக்கும். அந்த இரண்டும் தவிப்பின், தெய்வ நினைப்பு, தெய்வ பக்தி மாறும். அவ்விபத்தைத் தடுத்தல் விப்பிரர் கடமை. கடமையைக் கைவிடுவோன் வேதியன் ஆகான்.

ஆதலின், அன்னிய கிரேக்கரை ஓட்டவும் மகத மன்னவனை மாய்க்கவும், தட்ச சீலத்திலே வேதிய ரிடையில் மந்திராலோசனை நிகழ்ந்தது.

கதி கலங்கிய சந்திரகுப்தன் மதிகொண்டான்; வேதிய சாணக்கியனையே துணையாகவும் கொண் டான். தட்சசீல மாநகரின் வேதியரும் பிறரும் பக்க பலமாக நின்றனர்; "மாற்றானை மாய்க்க வகையில்லையே! மகத சாம்ராஜ்யம் சோம்பிக் கிடக்கின்றதே!" என்று சிந்துப்பிரதேச வாசிகள் ஏங்கி நின்ற சமயமே சந்திரகுப்தன், சாணக்கி யன் இருவரும் கிளம்பினர்; அப்பிரதேச மெங்கும் போயினர்; போர்வீர மக்கள், பெருமக்கள், மற்றை யோர் ஆகிய அனைவரையும் தட்டி யெழுப்பினர். தாகத் தவிப்புக்கு இனிய பானகம் கிடைத்தால் எப்படியோ, அப்படியே மக்கள் மகிழ்ச்சி கொண் டனர். பெருஞ்சேனை திரண்டது. போரும் மூண்டது. சந்திரகுப்தன் தலைமை தாங்கி நின்றான்.

பாரத மக்களின் கொதிப்பு கொழுந்து விடலா யிற்று. கிரேக்கர் அனைவரும் ஒன்று வாளுக்கு இரை யாயினர்; அல்லது உயிர்ப்பிச்சை நாடி ஓட்டம் பிடித்தனர். ஓராண்டினுக்குள் சிந்து நதிப் பிரதேச மனைத்தையும் மீட்டான் சந்திரகுப்தன். அப்போது அவனுக்கு வயது இருபத்து மூன்று. 'அன்னிய ஆதிக்கம் தொலைந்தது; சுயவரசு தலை தூக்கியது' என்று பஞ்ச நத வாசிகள் ஆனந்தம் அடைந்தனர்.

தேசப்பகை தீர்ந்த பின்பு, குலப்பகையில் சந்திரகுப்தன் கவனம் சென்றது. சந்திரகுப் தனைக் காணோமே என்று மகத மக்கள் ஏங்கி நின்றகாலையிலே பஞ்சநதத்தில் அவன் அடைந்த வெற்றி பாடலிபுரத்துக்கு எட்டிற்று. மகத மக்கள் மனம் பூரித்து, அவன் வருகையை எதிர்நோக்கி

இருந்தனர். இதற்கிடையில் தனநந்தன் ராஜ்ய பாரம் துறந்தான்; தன் மைந்தருக்கு முடி சூட்டினான். அவன் மைந்தர் எண்மர். ஆக ஒன்பதின்மருக்கும் **நவநந்தர்** என்னும் பெயரே பிரபலம். தந்தையும் தநயருமாக மகத சாம்ராஜ்யத்தை ஆண்டு நின்றகாலம் ஒரு நூறு வருஷம்.

சந்திரகுப்தனும் சாணக்கியனும் மகதம் போகுமுன்னம் ஒற்றர் சென்றனர்; அங்கே உளவு எல்லாம் உணர்ந்தனர்; ஊர்த் தலைவரையும் திரட்டி வைத்தனர். காலங் கருதி அவ் விருவரும் பயணமாயினர் பாடலிபுரம். உடன்வந்த சேனை கறுவிக்கொண்டே வந்தது. "மாற்றான் தோன்றிய சமயம் மகத மன்னவன் கிளம்பி வரவில்லையே. ஆதலின் அவனைப் பழிவாங்குவோம்," என்பதே அச் சேனையின் கடுஞ்சினத்துக்குக் காரணம். சந்திரகுப்தனது வரவு கேட்டதும், நவநந்தர் சேனை திரட்டினர்.


மகதத்தின் சேனை பெருமிதமாகத் திரண்டது மெய்யே. ஆயினும் அச்சேனையின் ஆர்வமெல்லாம் சந்திரகுப்தனிடமே; இறைவன்மீது இம்மியும் பற்றில்லை. இருதிறத்துச் சேனைகளும் இரணகளத்தில் சந்தித்தன. போர்முரசு கொட்டியதும், நவநந்தர் சேனையின் பெரும்பாகம் சந்திரகுப்தன் பக்கம் சேர்ந்து கொண்டது. நவநந்தரிடம் எஞ்சி நின்ற சேனைப் பகுதியும் விதியின்றியே செய்தது சண்டை. மகத மக்களும் சந்திரகுப்தனைச் சார்ந்து நின்று நவநந்தரைக் கைவிட்டனர். நந்தர் முடிவுவரையில் மொய்யமர் முறுக்கினர். பல சொல்லி என்ன? அவர்களுக்கு வீரசுவர்க்கமே கிட்டியது.

அப்போர் கி. மு. 321-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. சந்திரகுப்தன் வெற்றிமாலை தரித்து, மகத சாம்ராஜ்யத்தின் மன்னர்மன்னனாக முடிசூடினான். அதுசமயம் அவனுக்கு வயது இருபத்தைந்து. அர

சின்மீது ஆசை கொண்டு அப்பனைக் கொன்றான் நந்தன்; முறை பிறழ்ந்து நெறிதவறிப் பலரையும் வாட்டி வதைத்தான். அதுகண்டு, மனஞ் சகியா மக்கள் கொதிப்புக்கொண்டு சதிசெய்தனர். அதில் பங்கு கொண்டான் சந்திரகுப்தன். காரணம் சுயநலமன்று; சமூக, தேச நலங்களே!

நவநந்தர் குலத்தோடு மடிந்தனர். இனத்தார் என்றும் பாராமல் அன்னவரைக் கொன்று குவித்தான் சந்திரகுப்தன்; தேசத்தையே முதன்மையாக மதித்தான். மனக் கொதிப்புக்கொண்ட மக்களும் நவநந்தரைக் கைவிட்டனர் சமர பூமியில். மக்களின் ஆதரவின்றேல் மன்னவரின் வாழ்வு மண்ணாவது திண்ணமன்றோ? கர்ம, தர்ம பாரத பூமியின் குணாதிசயம் இஃதேயாம்!

ஆள்வினையின் உதாரபுருஷன் சந்திரகுப்தன். இருபத்தைந்து வயதிற்குள் மன்னர்மன்னவன் ஆனான்; அப்பால் இருபத்தைந்து வருஷம் அதிநேர்மையாக ஆட்சி புரிந்தான்; இடையில் கிரேக்கர் வந்து பழிவாங்கப் பார்த்தனர்; முடிவில் மகளைத் தந்து, அச் சந்திரகுப்தனை மருமகனாகக் கொண்டு மகிழ்ந்தனர். எட்டுத்திக்கும் அவன் புகழ் பரந்தது; இன்றும் நின்று நிலவுகின்றது. இவ்வளவுக்கும் காரணம் தெய்வம், தேசம், தர்மம் இவற்றில் வைத்த பற்று; இணையிலா வீரம்; ஈடிலா மதி யமைச்சு.



# 4. புஷ்ப மித்திரன்

ராஜ பக்தி அல்லது ராஜவிசுவாசம் இருவகை. ராஜனிடம் ஜனங்கள் விசுவாசம் கொள்ளுதல் ஒன்று. மக்களிடம் ராஜன் விசுவாசம் காட்டுதல் மற்றொன்று. ஜனங்களின் விசுவாசத்திற்கு மூல காரணமாவது செங்கோல். செங்கோல் சிறந்தால், தேசம் சிறக்கும், மக்களும் இன்புறுவர்; அக் கோல் கோடின், தேசம் சீரழியும்; மக்கள் மறுகு வர்; மன்னரும் மங்கி மடிவர்.

முடி சூடுகையில், அரசனும் குடிகளுக்கு விசு வாசப் பிரமாணம்செய்து கொடுப்பான். குடியரசி லும் தலைவராவோர் சபதம் செய்து கொடுப்பர். சர்வாதிகார புருஷரும் அப்படித்தான். விசுவாசப் பிரமாணத்தின் சாரம் இது:—"மகா ஜனங்களே! எனது உயிர் உள்ளளவும் உங்களுக்கு நலமே புரி வேன். தீமை செய்யின், எனது உயிர், எனது சந்ததி, எனது இக பர வாழ்வு எல்லாவற்றையும் நீங்கள் பறித்து விடலாம்."

இன்னொரு வகையான சபதம்:—"தேசத் தையே தெய்வமாக எண்ணுவேன். ராஜ தர்மத்தி னின்று இம்மியளவும் தவறேன். என் இஷ்டம் என்று ஒன்று இராது. மகாஜனங்களின் இஷ்டமே எனது இஷ்டம். ஆகாயவாணியும் பூமாதேவியும் அறியச் சொல்லுவேன். தேசநலமே எனது நலம். தேசமக்களின் மன மகிழ்ச்சியே எனது மகிழ்ச்சி. தேச மகாஜனங்களின் வாக்கே வேதவாக்கு! தெய்வ வாக்கு! திருவாக்கு!"

இனி, ஜனங்கள் விசுவாசம் கொள்ளாவிடின், ராஜ ஆக்ஞை சீறிவரும்; கடுந்தண்டனை கிட்டும்; சட்டதிட்டம், நீதிமன்றம், படைவகுப்பு இவை ராஜ னுக்கு உதவிபுரியும். ஜனங்களிடம் அரசன் விசு

வாசம் கொள்ளாவிட்டால், ஜனங்களுக்கு உதவி யாது? வெகு ஜனவாக்கு அல்லது மகாஜன ஒற்றுமையே. வெகுஜனவாக்கை மீறி நடப்பின் அரசன் முடி இழப்பான். சிரமும் இழப்பான். அவனது வமிசமும் வாழ்வற்றுப் போம். புராணங்களில் இதற்கு எத்தனையோ உதாரணங்கள் உள. சரித்திர உதாரணம் ஒன்று காட்டுவோம்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம், கிரேக்க வேந்தன்—மகா அலெக்சாந்தர்—பாரத பூமியின் மீது படைகொண்டு வந்தான்; பஞ்சநதப் பிரதேசத்தை வசஞ் செய்தான். சந்திரகுப்தனும் சாணக்கியனும் அதுகண்டு சகியாது கிளம்பி, மக்களைத் தட்டி யெழுப்பவே, கிரேக்கப்படை பதறி ஓடியது. தேசக் காவல் புரியாத நவநந்தனர் பூண்டற்றுப் போயினர். மகத தேசாதிபதி யானான் சந்திரகுப்தன். அப்பால் மகதராஜ்யம் மகத சாம்ராஜ்ய மாயிற்று.

சந்திரகுப்தன் மௌரிய குலத்தான். அவனுக்குப் பின்னும் மௌரிய குலத்தார் வல்லரசராக விளங்கினர் இருநூறு வருஷகாலம். அக்குலத்தில் அவதரித்தவனே அசோக மகாராஜன். இவன் புகழ் அவனியெங்கும் பரவியது. இவனுக்குப்பின் வந்தோரிடம் பேராண்மை யில்லை; மதிவன்மையும் இல்லை. "புத்தபோதமே பாரினைக் காக்கும்; படைகொண்டுவரும் பிற தேசத்தவரையும் தடுக்கும்," என்று எண்ணிவிட்டனர் போலும்!

மௌரிய குலத்தில் கடைசிவேந்தன் பிருகத்திரதன். இவனிடம் வல்லரசுக்குரிய தகுதியொன்றும் இருக்கவில்லை. ஆதலின், பகை மலிந்தது; தேசம் மெலிந்தது; பசி ஓங்கியது; பிணி பரவியது; ஆப்கானிஸ்தானம், பஞ்சநதப் பிரதேசம் முதலியன கைதவறின. சிற்றரசர் சீறிக் கிளம்பினர்;

தனியரசுங் கொண்டனர். சாம்ராஜ்யம் சிதறலாயிற்று. அப்போது மகத சேனாதிபதியாகத் திகழ்ந்தவன் புஷ்பமித்திரன். "வல்லரசு வீழ்கின்றதே, தேசவாழ்வு குன்றுகின்றதே," என்று சிந்தாகுலம் கொண்டான் அச்சேனாதிபதி.

"மகதம் மங்குவதோ? தேசபங்கம் போக்கும் பார்த்திபன் இல்லையோ?" என்று மதி மந்திரிகள், தந்திரிகள், பிரபுக்கள், பெருமக்கள், மகாஜனங்கள் முதலிய அனைவரும் மறுகினர். முடிவில் அனைவரும் அடங்கிய மகாசபையொன்று கூடியது. சேனாபதியும் வந்தான். எல்லாரும் ஆலோசனை செய்தனர். "ராஜவிசுவாசப் பிரமாணம் தவறிய பார்த்திபனை ஒழித்துவிடவேண்டும்; பலவானும் தர்மவானுமான வேந்தனைத் தேடவேண்டும்," என்று தீர்மானம் பிறந்தது. அப்போது புஷ்பமித்திரனே ஏற்றவனைத் தென்பட்டான். மகாஜனங்கள் அவனுக்கு ஆணை தந்தனர்.

புஷ்பமித்திரன் நால்வகைச் சேனையும் திரட்டினான்; அணிவகுப்பைப் பார்வையிட அரசனை அழைத்தான். மக்களனைவரும் பார்க்க வந்தனர். அணிவகுப்பு மைதானத்தில் அப்பிருகத்திரதன் தோன்றியதுதான் தாமதம். "பிரதிக்ஞை தவறினான் பிருகத்திரதன்; தேசக்காவலுக்குத் தகுதி கிடையாது. துர்ப்பல வேந்தன் தொலையவேண்டும்; புஷ்ப மித்திரனே அரியாசனமேறுதல் அவசியம்," எனும் கோஷம் பிறந்தது.

கனவோ அல்லது நினைவோ என்று கலங்கினான் பிருகத்திரதன். கணப்பொழுதில் அக்கொற்றவன் சிரம் தரையில் உருண்டுவிட்டது. உடனே புஷ்பமித்திரன் பூபதியானான். ஆயினும் அவன் உடனே முடிதரிக்கவில்லை; மன்னவன் என்ற பெயரும் கொள்ளவில்லை; சேனாதிபதி என்னும் பட்டமே

கொண்டு நின்றான். "மங்கிநிற்கும் மகதம் பொங்க வேண்டும்; மக்களுக்கு மகிழ்ச்சி பிறக்கவேண்டும்; பின்னரே முடிசூடுதல் பொருந்தும்," என்பதே அப் பூபதியின் விருப்பம். அவ்வாறே அரசியலை அவன் நேர்மையாக நடத்த முயன்றான்.

அந்நாளிலே பாரத பூமியின் மேற்கே பாக்டிரியா எனும் பிரதேசம் இருந்தது. அதன் அரசன் பெயர் மினந்தர்; மிளிந்தன் எனும் பெயரே பிரபலம். அவனும் கிரேக்க தேசத்தான். மகா அலெக்சாந்தரைப் பின்பற்றி அவன் காபூல் நாட்டைக் கைப் பற்றினான்; பஞ்சநதப் பிரதேசத்தையும் வசஞ்செய்தான்; நமது தேசத்தின் மேல்கரையில் உள்ள சூர ராஷ்டிரம் என்னும் நாட்டையும் அடிப்படுத்தினான்; மத்தியபதி நாட்டின்மீதும் கண்வைத்தான்; மகதத்தின்மீதும் தண்டுகொண்டு வரத்துணிந்தான்.

அன்னிய ஆதிக்கம் ஓங்குவது கண்டு, பொங்கி எழுந்தான் புஷ்பமித்திரன்; மகதராஜ சேனையும் எழுந்தது. இருதிறத்துப் படைகளும் இரண களத்தில் சந்தித்தன. மண்ணாசை பிடித்த மிளிந்தன் மூர்க்கத்துடன் போர் புரிந்தான். மகத வீரரும் சிங்கநாதஞ் செய்து சமர் முறுக்கினர். பாக்டிரிய வேந்தன் வீரந் தளர்ந்தான். அவன் படைகளும் திணறின. முடிவில் உயிருக் கஞ்சி ஓட்டம் எடுத்தான் மிளிந்தன். புஷ்பமித்திரன் வெற்றிமாலையுடன் பாடலிபுரம் சேர்ந்தான். மாந்தர் அனைவரும் பூமாரி பொழிந்து அவனை வரவேற்றனர். அது பற்றியே புஷ்பமித்திரன் எனும் பெயர் பிறந்தது போலும்!

புஷ்பமித்திரன் மகன் அக்கினிமித்திரன். மகத சாம்ராஜ்யத்தின் தென் பாகத்தினுக்கு இவனே ராஜப் பிரதிநிதி. இவன் ராஜதானி விதிசா நகரம். அந் நகருக்கு அப்பால் விதர்ப்ப நாடு. இது இப்

போது பேரார் என வழங்கும். விதர்ப்ப வேந்தன் வீறுகொண்டு எழுந்தான் அக்கினி மித்திரன்மீது. உடனே கடும்போர் நடந்தது. விதர்ப்பன் முறி யுண்டான்; தனது அரசில் பாதியையும் இழந்தான். மகத சாம்ராஜ்யம் விசாலமாயிற்று.

ஆதியில் கலிங்க ராஜ்யம் மகத சாம்ராஜ்யத் தின் ஒரு பாகமாக இருந்தது. அப்பால் அது தனி ராஜ்யமாயிற்று. புஷ்ப மித்திரனது பெருமிதங் கண்டு கலிங்க வேந்தன் அசூயை கொண்டான்; படை திரட்டிப் போருக்கும் எழுந்தான். 'குளிக்கப் போய், சேற்றைப் பூசிக் கொள்வதா?' என்பர். கலிங்க வேந்தனது கதி அங்ஙனமே முடிந்தது. அவனது தனியரசுந் தவறியது. மகதத்துக்குப் கப்பம் கட்டி அவன் வாழலானான்.

அரசியலை அறவியலாக்கியது ஒரு புறம்; அன்னிய வரசனை வெருட்டி யடித்தது ஒரு புறம்; விதர்ப்ப வேந்தனை வென்றது ஒரு புறம்; கலிங்கத் தினிடம் கப்பம் கொண்டது ஒரு புறம்; புஷ்ப மித்திரன் புகழ் எங்கும் வீசியது. பாரத பூமியின் பெரும் பாகத்தில் பரந்தது அவன் செங்கோல். அன்றளவும் (அதாவது முப்பதாண் டளவும்) அவன் மன்னவனென முடி தரிக்க வில்லை; அப்பால், மன்னர் மன்னனென முடி சூடவும், மகத ராஜ்யத்தின் கீர்த்தியை நிலை நாட்டவும், அசுவமேத யாகம் புரிந்தான்.

அசுவமேத யாக விவரம் இது:—"பேரெழி லும் நல்சுழியும் வாய்ந்த பரிமா ஒன்றினுக்குச் சர்வாலங்காரமும் செய்வர். நான்கு திக்கிலும் தன் இஷ்டப்படி அக்குதிரை செல்லும். வீராதி வீர ரான நூறு பேர் அதனைத் தொடர்ந்து போவர். அரசன் சேனையும் அதன் பின்னே செல்லும். யாரேனும் ஓர் அரசன் அப்பரியை வழிமறிப்பின்,

உடன்வரும் சேனை அவனைப் புறங்காண வேண்டும். இல்லையேல் அசுவமேதம் புரிய ஒண்ணுது. பரியைக் கண்டும் வழி மறிக்காத வேந்தர் பாடலிபுரம் வந்து, உடனிருந்து வேள்வியில் உதவிபுரிய வேண்டும். ஒரு வருஷம் அவ்விதம் தேசமெங்கும் அசுவம் சுற்றி வரும்.

"இதற்கு இடையில் வேந்தர் வேந்தன் தனது ராஜதானியிலே வேதவிதிப்படி பற்பல சடங்குகள் செய்வான்; கலைவல்லார்க்கும் ஏழை எளியவர்க்கும் தனது பொருளை யெல்லாம் வழங்குவான். அசுவம் திரும்பி வந்ததும், அதை வேறு மூன்று குதிரைகளுடன் தங்கத் தேரில் பூட்டுவர். அப்பால் பல கிரியைகள் நடக்கும். தேச வேந்தர் அனைவரும் உடனிருந்து உதவி புரிவர். முடிவில், அப்பரிகள் தேவர்க்கு அர்ப்பணமாகும். அசுவமேதம் புரியும் வேந்தனை ஏக சக்கராதிபதி, இராஜாதிராஜன் என்று எல்லோரும் போற்றிப் புகழ்வர்."

அத்தகைய அசுவமேதம் புரிந்தான் புஷ்பமித்திரன். பரியின் பின்னே போனவன் அவன் பேரன் வசுமித்திரன். வட இந்தியா எங்கும் அப்பரிமாவை யாரும் மறிக்கவில்லை. ராஜபுதனத்திற்கு மேற்கில் யவனர் (கிரேக்கர்) என்போர் வழி மறித்தனர். அவ்வளவில் யவனர் அனைவரும் வசுமித்திரனது வாளுக்கு இரை யாயினர். பரிமா பெருமையுடன் திரும்பி வந்தது. யோக சூத்திர ஆசிரியரான பதஞ்சலி முதலிய மகா பண்டிதர்கள் அவ்வேள்வியில் பிரசன்னமா யிருந்தனர். வேத விதிப்படி வேள்வி நடந்தேறியது. அதன் அருமை, பெருமையைப் பலரும் புகழ்ந்து பேசினர். பின்னளில் காளிதாஸ மகாகவியும் மாளவிகாக்கினி மித்திரம் எனும் நூலில் சிறப்பாகப் பேசியுள்ளான்.

அம்மகா கவி கூறியுள்ள வண்ணம் அக்கினி

மித்திரனுக்கு அவன் தந்தை விடுத்த ஓலையின் வாசக சாரம் இது:—"மைந்த! விதிசா நகர பாலக! தந்தையும் சேனாதிபதியுமான புஷ்பமித்திரன் விடுக்கும் ஓலை இது. உனக்கு நலமும் பலமும் நாள்தோறும் ஓங்கி உயருமாக! அசுவமேதத்திற்கு ஆயத்தஞ் செய்தேன். வேள்விப் பரியைப் பேரன் வசுமித்திரனது காவலில் விடுத்தேன். ஒரு நூறு துணைவரும் உடன் சென்றனர். யாகப்பரி சிந்து நதிக்கரை சேர்ந்தது. யவனர் என்போர் அதனை வழி மறித்தனர். அத்தனை பெயரையும் வில்கொண்டு குமைத்தான் வசுமித்திரன். ஆதியிலே சகர சக்கரவர்த்திக்கு அவன் பேரன் அஞ்சுமான் உதவி புரிந்தான். அங்ஙனமே என் பேரனும் எனக்கு இன்னுதவி புரிந்தனன். மைந்த! என் மருமகளிரையும் அழைத்துக்கொள்; விரைந்து வா வேள்வி காண".

புஷ்பமித்திரன் முப்பத்தைந்து ஆண்டு ஆட்சி புரிந்தான். முதல் முப்பது வருஷம் சேனாதிபதி எனும் பட்டமே கொண்டனன்; அரசியலைச் சீர் செய்து, அன்னியரைப் புறங்கண்டு, சிற்றரசரையும் சிதைத்த பின்னரே, சிம்மாசனம் ஏறினன். அவன் காலத்தில் மகத சாம்ராஜ்யம் மீண்டும் மேன்மை கொண்டது. மக்கள் மனம் பூரித்தனர்.

அசுவமேதம் புரிதல் எளிதன்று. பேராண்மை படைத்த பார்த்திபனே அது புரிய முடியும். அத்தகைய பார்த்திபனாகத் திகழ்ந்தான் புஷ்ப மித்திரன். அன்னிய அரசர் ஓட்டம் பிடிக்க, ஏனைய சிற்றரசர் கப்பங் கட்டி நின்றனர். "இந்தியாவிலே ஏக சக்கராதிபதிகள் ஏது?" எனும் பொய்யுரைக்கு அவன் சரிதம் தக்க மறுப்பாம். அவன் காலம் கி. மு. 184 முதல் கி. மு. 148 வரை.

"அரசன் இட்டதே சட்டம். அதிகாரி சொன்னதே தீர்ப்பு. தட்டிப் பேசுவார் ஏது? சுதந்திர

மும் ஜனநாயகமும் பாரத பூமி கண்டறியாத வஸ்துக்கள். கைகட்டி வாய் புதைத்து நிற்பதே மக்கள் கடமை," என்று ஐரோப்பியர் பேசுவர். பிருகத்திரதன் கொலையுண்டதும், மக்கள் மகாசபை கூடியதும், சேனாதிபதி சக்கராதிபதி ஆனதுமே அப்பேச்சுக்கு ஏற்ற பதில்.

[illegible] சக்தி பலவகை; பணச் சக்தி, படைச் சக்தி, சரீரசக்தி, மனோசக்தி. எல்லாவற்றிலும் சிறந்தது மனோசக்தியே. வெகுஜனவாக்கு அல்லது மகாஜன ஒற்றுமையின்மூலம் மனோசக்தி பரிமளிக்கும். மனோ சக்தியின் முன்னே எச்சக்தியும் மாய்ந்துபோம். மனோசக்தி திரண்டது தேசத்தின் சீரழிவு கண்டு. நெறி தவறிய அரசு சாய்ந்தது. மதிபிசகிய மன்னவனும் மடிந்தான். புஷ்பமித்திரன் முனைந்து, பங்கம் போக்கி, மகிமை ஊட்டினன். பாரத பூமியின் பெருமையே பெருமை! மனோசக்தியின் பரிமளிப்பை இன்றும் மகா சபையிலே காணலாம்!



# 5. குப்த குல திலகம்

பார் புகழும் பாரதபூமி ஒரு பெரிய கண்டம். முன்னம் இங்கே முடியரசுகளும் குடியரசுகளும் வல்லரசுகளும் அனந்தம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, வல்லரசராக விளங்கினர் மௌரியர். அக்குல முதல்வன் சந்திரகுப்தன். அவன் பேரன் அசோகன். இருவரும் ஏக சக்கராதிபதிகள். அப்பால் புஷ்பமித்திரன் ஏகாதிபத்தியம் கொண்டான்; அன்னியரை முறியடித்து அசுவமேதமும் புரிந்தான்.

பின்பு குஷான் வமிசத்தினர் பேரரசு கொண்டனர். தெற்கிலோ, பேரரசு கண்டனர் ஆந்திரர். கிறிஸ்தவ சகாப்த ஆரம்பத்தில், இங்கே வல்லரசர் தோன்றவில்லை. சிறுசிறு அரசுகளே திகழ்ந்தன. அச்சிற்றரசரும் சரி, ராஜகுலத்தாரும் சரி, பேரரசு கொள்ளக் கருதவில்லை; தத்தம் நாட்டு மக்களின் நலத்தில் மட்டும் நாட்டஞ் செலுத்தி வந்தனர். பரந்த பாரத பூமியின் பெருமையை நிலைநாட்ட எவரும் முயலவில்லை. அதுவே சமயமென அயலகத்தார் கருதி, நம் பாரத பூமியின் வட மேற்குப் பிரதேசங்களில் புகுந்து ஆர்ப்பரித்தனர்; அத்துடன் ஆங்காங்கே அரசும் கொண்டனர். கொள்ளவே, தேசம் அல்லோல கல்லோலம் அடைந்தது. கிறிஸ்தவ சகாப்தம் 320-ஆம் ஆண்டு வரையில் அத்தகைய தந்தலை யாட்டந்தான்.

முன்னுளில் வகுத்த வண்ணம், வேதியரின் பட்டப் பெயர் சர்மா; க்ஷத்திரியரின் பட்டப் பெயர் வர்மா; வைசியரின் பட்டப் பெயர் குப்தா. அக்காலத்திலே குப்தரில் சிலர் வாணிபத்தை மதிக்கவில்லை; வாள் வரிசையையே பெரிதும் போற்றினர். அன்று

ருக்கு ஆந்திர வல்லரசில் சேனுபத்தியம் கிட்டியது. ஆந்திரரில் கடைசி அரசன் புலோமன். இவனிடம் சேனுபதியாக இருந்தவன் சந்திரகுப்தன். இவன் வேறு; மௌரியகுல சந்திரகுப்தன் வேறு.

அக்காலத்திலே லிச்சாவியர் என்போர் ஒரு குலத்தினர்; அன்னூர் போர்க்குணத்தில் மிக்கவர்; பேராண்மையும் படைத்தவர். அக்குல மாதரோ கட்டழகியர். ஆனதுபற்றி, இராஜ வமிசத்தினர் அம்மாதரை மகிஷியராகக் கொள்வது வழக்கம். புலோமனது மகிஷி அக்குலமாது. சந்திரகுப்தன் தேவியும் அக்குலத்தவள். இரு தேவியரும் ஒரு தாய் வயிற்றுப் பிறந்த சோதரிகள்.

ஆந்திரரின் இராஜதானி ஸ்ரீகாகுளம். பாடலி புர நகரமும் அவர்களின் வசமிருந்தது. பாடலி புரத்தை மீண்டும் இராஜதானியாக்க லிச்சாவியர் காலங் கருதி நின்றனர். புலோமன் காலம் ஆந்திர வல்லரசு நசிக்கும் சமயம்; அன்னியர் பலர் அட்ட காசஞ் செய்து நின்ற சமயமுமாம். புதிய வல்லரசு காண, அச்சோதரிகளுக்கு ஆவல் மிகுந்தது.

பெயரளவில்தான் புலோமன் அரசன். உண் மையில் அரசை நடத்தியவன் சேனுபதியான சந்திர குப்தனே. சேனுபதிக்கும் வல்லரசு காண்பதில் சிந்தை மிகுதி. இரு சகோதரிகளும் துணைபுரிந்த னர். லிச்சாவிய ஆடவரும் பக்கபல மாயினர். சுருங்கச் சொல்லின், புலோமன் ஒருநாள் திடீரென மறைந்தான். சந்திரகுப்தனே அரியணையில் அமர்ந் தான்; உடனே பாடலிபுர நகரம் கி. பி. 320-ம் ஆண்டில் இராஜதானி ஆயிற்று. மங்கிய ராஜ தானி பொங்குமென மக்கள் மனம் பூரித்தனர். குப்த குலத்தின் உதய வரலாறு இது.

சிம்மாசனம் ஏறியதும், சந்திரகுப்தன் போர்க் கோலம் பூண்டான்; கங்கைநதிப் பிரதேசங்களை

எல்லாம் வசஞ் செய்தான். செய்யவே, பாடலிபுர ராஜ்யம் பெருகியது. பத்தாண்டுகள் கழிந்தன. பரகதி சென்றான் அச்சந்திரகுப்தன். அவனுக்கு மனைவியர் இருவர். மூத்தாள் லிச்சாவி வம்சம். அவள் மைந்தன் பெயர் கடோத்கஜன். இளையாள் பெயர் குமாரிதேவி. இவள் புதல்வன் ஸமுத்திரகுப்தன். இவனுக்கே அரசுக்குரிய ஆண்மையும் திண்மையும் மிகுதி. ஆதலின் இவனையே அரசனாக்க அனைவரும் விரும்பினர். சந்திரகுப்தனோ மூத்த மைந்தனையே மன்னவனாக்க வரம் வேண்டிப் போனான்.

அஃதறிந்த ஸமுத்திர குப்தன் ஐந்தாண்டு விலகியே நின்றான் அரசை விரும்பாமல். ஆண்டு பார்த்தான் கடோத்கஜன். தனது தகவின்மை அவனுக்கே புலப்பட்டது. தட்சணமே தம்பியை அழைத்து அரசை ஒப்படைத்தான். சமுத்திரகுப்தன் சிம்மாசனம் ஏறியதுதான் தாமதம்; தேசத்தின் நிலையைக் கூர்ந்து நோக்கினான். பாரத மக்களுக்கு இகவாழ்வினுக்கும் தக்க வகையில்லை. அன்னியரின் ஆதிக்கமே ஓங்கி நின்றது. ஆதலின் வல்லரசு காணவேண்டுமென அவன் கங்கணம் பூண்டான். மக்களனைவரும் மனமொப்பி மார் தட்டித் திரண்டெழுந்தனர்.

முதன் முதலாக அன்னியர்மீது பாய்ந்தான் ஸமுத்திரகுப்தன். அப்போது, பாரதபூமியின் வடமேற்கிலும் மேற்குத் திசையிலும் கிரேக்கர், பார்த்தியர், சாகர் என்போர் தனியரசு கொண்டிருந்தனர். அன்னார் அனைவரும் அன்னியர்; பாரத பூமியின் புத்திரர் அல்லர். ஸமுத்திரகுப்தனது எழுச்சி கண்டு, அவர்கள் அனைவரும் ஒருங்கே சேர்ந்து எதிர்த்தனர். மிக உக்கிரமான போர் மூண்டது. வெற்றி பெறாவிடின், வாழ்வு போய்விடுமே யென அன்னார் அனைவரும் ஆவேசமாகப் போர் செய்த

னர். பாரத பூமியில் அன்னியர் அரசு கொள்வதா என்று சீறியே சமர் புரிந்தான் ஸமுத்திரகுப்தன்.

இருபக்கத்திலும் மிகுந்த உயிர்ச் சேதம் நேர்ந்தது. ஒரு பக்கம் தேசாபிமானமும், ஒரு பக்கம் சுயநல மண்ணாசையும் மல்லுக்கு நின்றன. தனது படைஞரில் பலர் வீரசுவர்க்கம் புகவே, ஸமுத்திர குப்தனுக்குக் கோபம் பொங்கியது. உடனே அவனும் அவன் துணைவரும் வேங்கை போல் பாய்ந்தனர்; பகைவர் அனைவரையும் வெட்டிச் சாய்த்தனர்; வெற்றி மாலையும் சூடினர். அன்னியர் ஆண்ட பிரதேசங்களெல்லாம் ஸமுத்திரகுப்தன் வசமாயின. அன்னியரோ அழிந்து போயினர்.

அப்பால், ஏனைய திக்குகளில் சென்றான் வீர குப்தன். பஞ்ச நதப் பிரதேசம், இராஜபுதனம், மாளவம் இந்த நாடுகளில் அன்று முடியரசு இல்லை; எங்கும் சிறுசிறு குடியரசுகளே செழித்து நின்றன. ஸமுத்திரகுப்தனது படைகள் வருமுன்பே, அவனது வாள்வலியும் தோள்வலியும் தூது சென்றன. அக்குடியரசுகள் அது கண்டு, வாளமரில் விருப்பம் வைக்கவில்லை; மற்று, அப்பேரரசனிடம் நேசங் கொள்ளவே ஆவலுடன் காத்துநின்றன. ஸமுத்திரகுப்தன் தன் படைகளுடன் வந்ததும், அவ்வரசுகளோ காணிக்கையுடன் எதிர்கொண்டன: ஏற்றின ஸமுத்திரகுப்தனை; இறைஞ்சின முடிவணங்கி. தேச மக்களாதலின், அவர்களின்மீது ஸமுத்திரகுப்தன் வைரங் கொள்ளவில்லை; அவர்களின் நட்புக்கு அறிகுறியான காணிக்கையை ஏற்றுக்கொண்டான். அவ்வரசுகளுக்கு நிம்மதி பிறந்தது.

இனி கங்காநதிக்கும் இமயமலைக்கும் நடுவே, பதின்மர் தனியரசராகத் தருக்கி நின்றனர். அன்னவர் அனைவரும் பாரத புத்திரர். அவர்களை வேரறுக்க நம் குப்தகுல திலகம் விரும்பவில்லை

"போர் வேண்டாம்; கப்பங்கட்டி வாழ்வதே மேல். வல்லரசு காண்பதே என் கருத்து. இதற்கு உதவி புரிக. இன்றேல் போருக்கு எழுக," என்று தூது விடுத்தான். வீரவேந்தர் அதற்கு ஒருப்படவில்லை. அக்கணமே போர் மூண்டது. பதின்மரும் தோல்வியுண்டனர். பின், என் செய்வர்? ஆண்டுதோறும் கப்பங்கட்டி வாழ இசைந்தனர். இசையவே, அவர்களுக்கு உயிர்ப் பிச்சை கிடைத்தது.

பின்பு அத்திலகன் தெற்கு நோக்கினான். அங்கே பதினொரு அரசர் பெருமிதமாக இருந்து வந்தனர். ஸமுத்திர குப்தனது பராக்கிரமத்தை அன்னவர் எண்ணிப் பார்க்கவில்லை. ஆதலின் அவனுடன் ஒவ்வொருவராகப் போருக்கு வந்தனர். ஆயினும் என்ன? விஜயலட்சுமி குப்தகுல திலகத்தையே கடைக்கணித்தனள். எதிர்த்த அரசர் அனைவருக்கும் சிறைவீடே கிட்டியது.

அது சமயம், தென் கோடியில் தார்வேந்தனாக விளங்கியவன் காஞ்சிமாநகரின் காவலன் **விஷ்ணு கோபன்.** இவனுக்கும் சிறைவாசமே கதியாயிற்று. இங்ஙனம் சிறையானோர் பலராவர். சிறை வேந்தர் அனைவரும் இறை செலுத்த இசைந்தனர். அவர்களுக்கு உடனே அரசுரிமையும் விடுதலையும் கிட்டின.

தண்டகாரணியத்திலே, தார்வேந்தர் இருவர் கொடுங்கோலராகவே துலங்கினர். அன்னாரின் பெயர் **அச்சுதன், நாகசேனன்.** அந்நாட்டு மக்களின் மனப் புழுக்கம் கண்டான் மன்னர் மன்னனான ஸமுத்திரகுப்தன்; அவ்வளவில், இருவரையும் ஆவி வாங்கினான்; மக்களுக்கு ஆறுதல் அளித்தான்; மநுமுறைப்படி அரசாள முன்வந்த வேறு இருவரை அரியணையில் அமர்த்தினான்; இவ்விதம் சென்றவிடமெல்லாம் சிறப்பே எய்தினான்.

திக்கு விஜயம், திக்கு விஜயம், என்று புரா

ணங்கள் கூறும். அவனைப்போல் திக்குவிஜயம் கொண்டார் மிகவும் அருமை. இமயம் முதல் ஏறக் குறைய குமரி வரையில், அவன் வீரப் பிரதாபம் பரந்தோங்கியது. புகழோ பாரத பூமியின் நான் கெல்லையினையும் தாண்டிச் சென்றது. ஏகசக்கராதி பதியென அவனும் அசுவமேத யாகம் புரிந்தான். மன்னர் மன்னவனென முடி சூடிக்கொண்டான்.

ஆசியாவின் மேல் கோடியிலுள்ள **ஆக்ஸஸ்** நதிப் பிரதேசத்தில் ஆண்மை செலுத்தி நின்ற அன்னிய அரசர் முதல், தெற்கே இலங்கையில் எடுப்புடன் இருந்த இறைவன் வரையில் அனைவரும் அசுவமேத யாகத்தினுக்குக் காணிக்கை அனுப்பி னர். இம்மட்டோ? பாரசீகர், பாக்டிரியர், துஷாரர் முதலிய அன்னியரும் ஸமுத்திரகுப்தன் சபைக்குத் தூதரை யனுப்பி நட்புரிமை வேண்டினர். அவனை 'இந்திய நெப்போலியன்' என்று புகழ்வர் நமது தேச சரித்திரம் எழுதிய மேனாட்டு ஆசிரியர்.

குப்தகுல வேந்தரின் பேரெழுச்சி காரணமாக இங்கே புத்தமதம் சிதைவுண்டது; ஆரிய வேத மார்க்கம் மீண்டும் தலைதூக்கியது என்பர் சிலர். ஸமுத்திரகுப்தனோ சமய சமரஸி. புத்த மதத்துக்கு அவன் நன்மை பல புரிந்தவன். இதற்கு ஆதார மாக ஓர் உதாரணம் கூறுவோம். அக்காலத்தில் இலங்கை வேந்தனாக விளங்கியவன் **மேகவர்ணன்.**

அத்தீவு வாசிகளில் இருவர் கயாவுக்கு ஒரு சமயம் யாத்திரையாக வந்தனர். அங்கே புத்த மதத்தாருக்குத் தனியே சத்திரமோ மடாலயமோ இல்லை. இருவரும் இலங்கை சென்று இறைவனிடம் குறை கூறினர். மேகவர்ணன் உடனே முத்தும் பவழமும் இரத்தினமும் சேகரித்தான்; பாடலிபுரம் போகத் தூதுவரைத் திட்டஞ் செய்தான். தூதுவர் வந்து, ஸமுத்திரகுப்தனிடம் குறை யிரந்தனர்;

பௌத்த மடாலயங்கள் வேண்டும் என்று கோரி னர். ஸமுத்திர குப்தன் சரி என்றான். புண்ணிய கயாநகரில் உடனே பெரிய புத்தஆலயம் எழும்பி யது. தவிர, அம்மதத் துறவியரும் பெரியாரும் தங்கி யிருக்க மூன்றடுக்கு மாளிகைகளும், ஆறு பெரிய மண்டபங்களும், மூக் கோபுரம் கொண்ட மடாலயங் களும் கிளம்பின. ஆலயம், மடம் இரண்டையும் சுற்றி அழகிய மதில் சுவர்களும் அமைந்தன. சுவ ரெங்கும் சிறப்பான ஓவியங்கள் துலங்கின. நவ ரத்தினமும் வைத்திழைக்கப்பெற்ற புத்தவிக்கிரகம் பிரகாசித்தது; மூர்த்தியைப் பார்த்த அனைவரும் பிரமித்தனர். ஆயிரக்கணக்கில் புத்தமதத் துறவி யர் வந்து தங்கினர்; புத்தமதக் கலைகள் வளர்ந் தன. அவை அனைத்தையும் கண்டு களித்தான் ஸமுத்திரகுப்தன். மக்களும் மன்னவனது சமரஸங் கண்டு சாலவும் மெச்சினர்.

மேலும் குப்தரின் காலத்திலே பாரத பூமி யெங்கும் தேசீய உணர்ச்சியும் ஊக்கமும் ஓங்கி உயர்ந்தன. பலவகையான கலைகள் வளர்ந்தன; கைத்தொழில்கள் பல செழித்தன. வர்த்தகம் உல கெங்கும் பரவியது. மக்கள் சுகமே வாழ்ந்தனர். அன்னியரின் படையெடுப்போ, அன்னியரின் ஆதிக்கமோ மருந்தினுக்கும் இல்லை. இவ்விதம் ஐம்பது வருஷகாலம் அவனியைக் காத்துவந்தான் குப்தகுல திலகமான ஸமுத்திரகுப்தன். கி. பி. 375-ம் ஆண்டில் அவனுக்குப் பரகதி கிட்டியது.

அலகாபாத் நகரிலே உயர்சிலை யொன்றுளது. அதில் ஸமுத்திரகுப்தன் குணாதிசயங்க ளெல்லாம் வரையப்பட்டுள. அவற்றை வகுத்தும் தொகுத் தும் விளக்கியவன் ஹரிசேனன் எனும் ஆஸ்தான கவிஞன். அச்சிலாசாஸனம் சொல்லும் வண்ணம், வாளமரில் மட்டுமே ஸமுத்திரகுப்தன் வல்லவன்

என்பதில்லை ; கானத்திலும் கவிதையிலும் சாலச் சிறந்தவன்; யாழ் எனும் ஒரு வகை வீணை வாசிப்பதிலும் மிகத் தேர்ந்தவன். ஸமுத்திரகுப்தன் பெரிய கல்விமான். ராஜ காரியம் ஓய்ந்ததும், கவிஞருடனும் கற்றோருடனும் கூடி, அளவளாவி ஆனந்தம் கொள்வான். காட்சிக்கு எளியனாய், இனிய சொல்லனாய், மக்களின் மனக்கோயிலில் குடிகொண்டவன் அக் கொற்றவன்.

அசுவமேத யாகம் புரிந்ததன் அடையாளமாக ஸமுத்திரகுப்தன் அழகிய தங்க நாணயங்கள் அச்சடித்தான். லண்டன் மாநகரிலுள்ள கண்காட்சிச் சாலையில் அந்நாணயம் இன்றும் உளது. அந்த யாகத்தில் அர்ப்பணமான அசுவத்தைப் போல் விசித்திர வேலைப்பாடமைந்த சிலை யொன்றை இலட்சுமணபுரி எனும் நகரிலுள்ள கண்காட்சிச் சாலையில் இன்றும் கண்டு களிக்கலாம்.

பாரத புத்திர புத்திரிகள் வசிக்கும் இடமும் பேசும் பாஷையும் வெவ்வேறாக இருக்கலாம். மதக் கோட்பாடும் கொள்கையுமோ ஒன்றாம். பாரதம், ராமாயணம், பாகவதம் இவை பற்பல பாஷைகளில் உள. ஆனால் கதையும் கருத்தும் ஒன்றே; வேறில்லை. இவ்விதம் பாரத பூமி எங்கும் ஒரே நோக்கும் போக்கும், உணர்ச்சியும் ஊக்கமும், உண்டுபண்ணிய பெருமை ஸமுத்திரகுப்தனைச் சேரும். விக்கிரமாதித்தன் கதை, முப்பத்திரண்டு பதுமை கதை இவற்றில் பேசப்படும் அரசன் ஸமுத்திரகுப்தனது மைந்தனே.

# 6. விக்கிரமார்க்கன்

இமயம் முதல் குமரி வரையில், எல்லாரும் ஓர் இனம் என்று சமீபத்தில் பாடினர் பாரதியார். ஆதியிலே காரியத்தில் அங்ஙனம் குப்தகுல வேந்தர் சாதித்துக் காட்டினர். குவலயம் மெச்சும் ஸமுத்திர குப்தன் அக்குலத்தின் திலகன். அவன் சரித்திரம் புராணங்களில் பொதிந்து கிடக்கின்றது. ஆயினும் புராணத்தை மதிப்பார் எத்தனை பேர்?

பாரத தேச "சரித்திரப் புலிகள்" என்போர் ஆங்கில மேதாவியராம். புராணம் என்றால், அவர்களுக்கு அவ்வளவாக மதிப்பில்லை; அநேகமாக இளப்பந்தான். ஸமுத்திரகுப்தனைக் குறித்து அப் புராணங்கள் பேசியுமென்ன? அம்மேதாவிகள் பல நாள்வரை ஒப்புக்கொள்ளவில்லை.

அலஹாபாத் நகரிலே உயர்சிலை யொன்று நெடுநாளாக உண்டு. அதன்மீது மணிப்பிரவாள நடையில் வரைந்துள்ள கவியுமுளது நெடுநாளாக. சின்னாட்களுக்கு முன்வரையில், அக்கவி தென்படவில்லை அவர்கள் கண்ணுக்கு. முடிவில் தென்பட்ட பின்பே, ஸமுத்திரகுப்தன் இருந்ததாக ஜகமும் ஒப்புக்கொண்டது.

சுரங்கங்களை ஆழத்தோண்டி வைரம் எடுப்பர்; தங்கமும் சேர்ப்பர்; கடலில் குளித்து முத்தை வாருவர்; பவழத்தையும் குவிப்பர். அங்ஙனமே, இத்தேச மண்ணைத் தோண்டின், மகிமை வாய்ந்த பழைய நகரங்களைப் பார்க்கலாம்; மனித சஞ்சாரமே இல்லாத பெருவனங்களில் புகுந்தால், விசித்திரமான மாளிகைகளைக் காணலாம்; தேசத்திலே ஆங்காங்கு ஓங்கி உயர்ந்து நிற்கும் சிலைகளை நோக்கினால், முன்னமிருந்த சீரிய வேந்தரின் சிறப்பை அறியலாம்; ஆலயங்களின் மதில்சுவர்

களை ஏறிட்டுப் பார்த்தால், மாட்சிமை தங்கிய மன்னர்களின் சாஸனங்களைக் கண்டானந்திக்கலாம். இங்ஙனம் புதைந்தும் மறைந்தும் கிடக்கின்றது நமது பூமியின் புராதன சரித்திரம்!

இங்கே அன்னியர் வந்து புகல் என்ன நீதி என்று பாரதியார் ஆர்ப்பரித்தார். இங்கே அரசு கொள்ளும் அன்னியரை வேரறுக்கவே முனைந்தான் ஸமுத்திரகுப்தன்; செயலிலும் முக்கால்வாசி சாதித்தான். எஞ்சியதையும் ஈடேற்றியவன் விக்கிரமார்க்கன் எனும் மன்னவன்.

இவனை அவன் மைந்தனே என்பர் பலர்; மைந்தனது மைந்தன் என்பர் வேறு சிலர். பாட்டன் பெயரைப் பேரன் சூட்டிக்கொள்வது மரபு. அவ்விதம் இவன், இரண்டாம் சந்திரகுப்தன் என்று சிம்மாஸனம் ஏறினான். எனினும், விக்கிரமார்க்கன் எனும் பெயரே பிரபலம். இது காரண சிறப்புப் பெயராம்.

விக்கிரமார்க்கன் வேந்தனாகும் முன்னம், சிம்மாசனத்தில் சிறந்து நின்றவன் இராம குப்தன். அப்போது இமயமலையின் அடிவாரப் பிரதேசத்தில் சாகர் எனும் ஜாதியார் தருக்கி நின்றனர். அன்னவர் அன்னியர் ஆதலின், அவர்கள்மீது படை கொண்டு சென்றான் இராமகுப்தன்.

சண்டமாருதம் போல் இரு பக்கத்திலும் வீரர் வந்து குவிந்தனர். போரின் கோரம் பேசுந்தரமன்று. அது சமயத்தில் சற்றே பின்வாங்கினான் இராமகுப்தன். பின்வாங்கி நின்ற இடம் கார்த்திகேய நகரம். அது ஒரு குன்றின் உச்சியிலுள்ளது.

உடனே பகைவர் வந்து அவனை நாற்புறமும் சூழ்ந்து கொண்டனர். துணைக்கு வீரரும் உணவுப் பொருள்களும் கிட்டாமல் இராமகுப்தன் தத்தளித்தான். முடிவில் மாற்றானுக்கு மண்டியிடும் நிலை

நேர்ந்தது. பகைவரோ அதுவே தருணமெனக் கொண்டு இராமகுப்தனுக்கு ஓலை விடுத்தனர்.

ஓலையின் வாசகம் ஈதாம்:—" சந்திரகுப்தன் தேவி மகா ரூபவதி. அவளை அனுப்பித்தரல் வேண்டும் எங்கள் அரசனுக்கு. தவிர, எங்கள் தளகர்த்தரில் ஒவ்வொருவருக்கும் கட்டழகியான ஒவ்வொரு மங்கை வருதல்வேண்டும். அல்லது வீராதிவீரனான சந்திரகுப்தனை எங்கள்பின் அனுப்பிவிடல் வேண்டும். அதுவும் இன்றேல், உங்கள் அனைவரையும் சமர் முனையில் உயிர்வாங்கி விடுவோம்."

அந்த ஓலையின் வாசகங்கண்டு யாது செய்வதென்று இராம குப்தனுக்குத் தோன்றவில்லை. மகளிரை யனுப்பி மானம் இழப்பதா? இன்றேல், சந்திரகுப்தனைக் கைவிடுவதா? தளர்ந்தது மனம், விண்டது வீரம். அவ் வேளையில் சந்திரகுப்தன் தோன்றி, அண்ணனுக்கு ஆறுதல் கூறிப் புறப்பட்டான் பகைவரை நோக்கி.

நூறு மூடு பல்லக்குகள் ஆயத்தமாயின. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாதர். ஒன்று சந்திரகுப்தன் மனையாளது. பார்த்த பலரும், ஈதென்ன விபரீத மென வாய்விட் டலறினர். இரவு நாழிகை பத்திருக்கும். பல்லக்குகள் அனைத்தும் சாகரின் பாசறை சேர்ந்தன.

சந்திரகுப்தனது தேவி வந்துவிட்டாள் என்று அச்சாகவேந்தன் மிக்க களியாட்டங் கொண்டான். தலைக்கு ஒரு மங்கை கிட்டியதெனத் தளகர்த்தரும் ஆனந்தம் எய்தினர். குப்த மங்கையரின் வனப்பு, அலங்காரம், தேன் கசிந்த வார்த்தை இவை யெல்லாம் அச்சாக வீரருக்கு மயக்கம் ஊட்டின. வெற்றிக் களிப்பின் மிகுதியால், சாகவீரர் அனைவரும் தனியிடஞ் சென்று, காமக்கனவில் மூழ்கலாயினர். பணப்புதையலை வாரும் வறிஞனே போல், சந்திர

குப்தனது தேவியை அணைக்க எழுந்தான் சாக வேந்தன். பார்த்தனள் அப் பெண்பால்; சிறிதும் பதறவில்லை; கூச்சங் கொண்டவள்போல் சற்றே ஒதுங்கிக் கொடுத்தாள்; கொண்டையிலிருந்த சுருள் சூரியை உருவினாள்; வேந்தன் வயிற்றில் செருகினாள். அவ்வளவில் சரிந்து விழுந்தது அவன் சரீரம்.

உடனே பெண்ணுடை களைந்து, குழல் எடுத்து ஊதிச் சிங்கநாதஞ் செய்தான் சந்திரகுப்தன். குழலோசை கேட்டதும், தளகர்த்தரைத் தழுவி நின்ற மகளிர் அனைவரும் ஆடவ வீரராகித் தத்தம் கூந்தலிலிருந்த சுருள்சூரியை உருவி, அத்தனை பகைவரையும் கொன்று குவித்தனர்.

நூறு இளைஞரும் அங்ஙனம் வேஷங் களைந்த சமயம், கோட்டையினின்று கிளம்பினான் இராம குப்தன். படைஞரும் புறப்பட்டனர். சாகசேனை யின்மீது குப்தவீரர் சீறி விழுந்தனர். வீரசுவர்க்கஞ் செல்ல மனமில்லாத சாகரோ தம் உயிருக்கஞ்சி எடுத்தனர் ஓட்டம். வேந்தன் கதியையும் படைத் தலைவரின் அழிவையுங் கண்ட சாகசேனை வெள்ளம் இருந்த இடம் தெரியவில்லை.

குலமானத்தைக் காத்த தம்பியிடம் உடனே அரசை ஒப்படைத்தான் இராமகுப்தன். மக்கள் அனைவரும் "விக்கிரமார்க்கன்" என அவ்வீரனுக்குப் பட்டஞ் சூட்டினார். அரியணையில் அமர்ந்த மறு கணமே தனது அரசின் எல்லையை நோக்கினான் விக்கிரமன். அந்நியர் வசிக்கும் பிரதேசங்களையும் ஆராய்ந்தான்; தந்தை ஸமுத்திரகுப்தன் ஜயிக்காமல் விட்டுப்போன நாடுகளையும் நகரங்களையும் கணக்கிட்டுப் பார்த்தான்.

பாரத பூமியின் மேல்புறம் **மாளவம், கூர்ஜரம், கத்தியவார்** முதலிய நாடுகள் உள. அவற்றைச் சில நூற்றாண்டுகளாக அன்னியர் ஆண்டு வந்தனர்.

அன்னவரும் சாக வமிசத்தாரே. "தேச தர்மம், நாகரிகம் இவை அன்னிய ஆட்சியில் நசிக்கும்; ஆதலின் அன்னிய வாசனையே இருத்தலாகாது" என்று துணிந்தான் விக்கிரமார்க்கன்.

குப்த சேனை வெள்ளம் புரண்டது. சகலரும் சமர்க்களம் சேர்ந்தனர். குப்த குலத்தார் தம்மை வாழ விடவில்லையே என்று கொதித்தனர் சாகர். இரு தரப்பினருக்கும் போராவேசம் பொங்கியது. சண்டையின் கடுமை கேட்க வேண்டுமோ? விக்கிர மார்க்கன் அச்சாகரை இலகுவில் வெற்றிகொள்ள இயலவில்லை. ஐந்தாண்டு சண்டை நீடித்தது. முடி வில் சாகர் தோல்வி யுண்டனர். அன்னவரை விக்கிரமன் வேரறுத்து ஆறுதல் பூண்டான்.

அரபிக் கடலோரமுள்ள மாளவம், கூர்ஜரம் முதலிய தேசங்கள் விக்கிரமன் வசமாயின. வச மானபின்னர் நம் தேசத்தின் கப்பல் வியாபாரம் பெருகத் தலைப்பட்டது. எகிப்து, கிரீஸ், ரோமாபுரி முதலிய மேனாடுகளுக்கு நமது தேசச் சரக்குகள் ஏராளமாகப் போகத் தொடங்கின.

வியாபாரம் பெருகவே தொழில்கள் வளர்ந் தன. தொழில்கள் பெருகச் செல்வம் திரண்டது; செல்வம் திரளவே, மக்கள் சுகமே வாழலாயினர். வேதாளக் கதை, முப்பத்திரண்டு பதுமை கதை என்பன எல்லாம் பேசும் விக்கிரமார்க்கன் இவனே என்பது சரித்திர ஆசிரியர் துணிபு.

விக்கிரமார்க்கனது சபையில் நவரத்தினங்கள் போன்ற பண்டிதர் ஒன்பதின்மர் இருந்தனர். அன்னாரில் தலைசிறந்தவன் காளிதாஸ மகாகவி. அவ்வரகவி இயற்றிய **சாகுந்தலம்** எனும் நூலுக்கு இணையாக ஒரு நூலும் இல்லை. பண்டித மணிகள் நிறைந்திருந்தனர் என்றால், பலவாறான கலைகளும் தாண்டவம் ஆடின என்பது வெளிப்படை. பாரத

பூமியில் குப்தரின் ஆட்சிக்காலமே மகோன்னத மான காலம் என்பது வெகுஜன வாக்கு.

குப்தகுல வேந்தர் பலரும் நெடுங்காலம் ஆட்சி புரிந்தனர். அவர்கள் இணையிலா வீரபுருஷர்; அருங்கலை விநோதர்; அரசர்க்கு அரசர். விக்கிர மார்க்கன் கி. பி. 375 முதல் 413 வரை அரசாண் டான். இவன் காலத்தில் **பாஹியான்** என்னும் சீன அறிஞர் ஓர் ஆறு வருடம் (கி. பி. 405-411) பாரத பூமியில் தங்கியிருந்து, நேரில் கண்ட அற் புதம் அனைத்தையும் ஒரு நூலாக எழுதியுள்ளார். அந்நூலில் காணும் வண்ணம் குப்தகுல வேந்தரின் பரிபாலன நேர்மை இது:—

"குப்தரின் காலத்தில் பாடலிபுரம் ராஜதானி அன்று; அயோத்தி நகரேயாம். எனினும், பாடலி புரத்தின் வாழ்வு குன்றவில்லை. பாடலிபுர நகரில் இரண்டு பெரிய கலாசாலைகள். அச்சாலைகளிலே மாணாக்கர் தொகை ஆயிரக்கணக்கு. ஆசிரியரின் தொகையோ நூற்றுக்கணக்கு. இவர்கள் அனை வரும் சர்வகலா வல்லவர். ஆதலின் அயல் தேசங் களிலிருந்து அறிவு வளர்ச்சிக்கும் ஆன்ம வளர்ச் சிக்குமாக வந்துபோகும் இளைஞர் அனந்தம்.

"ராஜ்யத்தின் நகரங்கள் அனைத்தும் மிகவும் பெரியவை; மிக மிக அழகானவை. மாடங்களும், கூடங்களும் கண்ணைக் கவரும். எங்கே பார்த்தா லும் சத்திரங்கள், சாவடிகள், தர்மசாலைகள். ராஜ பாட்டையிலே இரு மருங்கும் பழமரங்கள். மக்கள் இளைப்பாற ஆங்காங்கே நீர்நிலைகள், சோலைகள்.

"தலைநகரிலே மிகவும் பெரிய வைத்தியசாலை. நோயாளிகளுக்கு அது ஒரு சுவர்க்கம் போன்றது. எவ்வகையான கொடுநோய்க்கும் தேர்ந்த மருத்து வர் உண்டு. அவர்களை **அசுவினி** தேவர் என்னலாம். மூலிகைகொண்டு எவ்வகைப் பிணியையும் மருத்

துவர் போக்கிவிடுவர். கொடுநோய் குணமாகும் வரையில் உடையும் உண்டியும் இலவசம். செல்வச் சீமான்களே அச்சாலையை நடத்துவோர். அந் நாளில், உலகிலே வேறு எத்தேசத்திலும் அத்தகைய மருத்துவசாலை இருக்கவில்லை.

"சிந்து மாநதியிலிருந்து வடமதுரை வரையில் ஐந்நூறு மைல் தூரம். எங்கும் பௌத்த மடாலயங்கள். அம் மடங்களிலே நூற்றுக் கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் துறவியர் உண்டு. வட மதுரையில் மட்டும் மடாலயங்கள் இருபது. அவற்றில் மூவாயிரம் துறவிகள். தேசத்தின் வளப்பமும் வனப்பும் நெஞ்சை அள்ளும்."

"மக்களின் நடையும் உடையும் மிக நேர்த்தி. அரசியலின் சீர்மையோ இன்னும் விசேஷம். சீதோஷ்ண நிலையோ வாசத்துக்கு மிகவும் வாசி. கொலை, கொள்ளை முதலிய குற்றங்கள் கிடையா. கொடுக்கல் வாங்கலுக்கு வாய்மொழியே பிரதானம்; சீட்டும் நாட்டும் தேவை இல்லை. நீதி மன்றங்களிலே ஜனங்கள் வழக்காடுதல் மிகவும் அருமை. மரண தண்டனை என்பது துர்லபம்.

"உயிர்க்கொலை என்பது ஏது? மதுபானம் கட்டோடு கிடையாது. பூண்டு, வெங்காயம் இவற்றை மறந்தும் மக்கள் புசியார். பன்றி, கோழி முதலிய பிராணிகளை வளர்ப்பதே இல்லை. தர்மந் தவறி நடப்போர் சண்டாளர் எனப்படுவர். அரசன் ஆரியவேத மார்க்கத்தான்; மகா விஷ்ணுவை வணங்குவோன்; ஆயினும் சமய சமரஸம் மிகுந்தவன்; பௌத்த மடாலயங்களுக்கும் மான்யங்கள் அளிப்பான். மக்களும் பௌத்த துறவியருக்கு வேண்டுவன உதவி, இன்பம் ஊட்டுவர்.

"பாரத தேசமெங்கும் சாந்தமும் ஒழுக்கமுமே நிறைவு. வருஷத்துக்கு ஒருதரம் புத்தர் திருநாள்

நடக்கும். புத்தர் சிலையை அனைவரும் அலங்காரமான தேரில் வைத்து இழுத்துச் செல்வது வழக்கம். தேரின் கோபுரம் 32 அடி உயரம். அக்கோபுரம் ஐந்து அடுக்குக் கொண்டது. புத்த விக்கிரகத்துடன் எல்லாத் தேவர்களின் விக்கிரகங்களும் காணப்படும். ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியே. முன்னே பலவகை வாத்தியங்கள். பக்கத்திலே தூப தீபாராதனை செய்யும் குருமார். பின்னே பிரமாண்டமான ஜனக்கூட்டம்; இரவிலே எங்கும் திவ்ய தீபாலங்காரம்!"

பாடலிபுர நகரில் மூவாண்டு தங்கியிருந்தார் பாஹியான்; இதர இடங்களில் பாக்கி மூவாண்டு கழித்தார்; வடமொழியில் பயிற்சி பெற்று, புத்த மத நுணுக்கத்தையும் கற்றுக் கொண்டார்; அக்காலத்தில் கண்ணால் கண்டதையே அவர் வரைந்து வைத்தார். விக்கிரமனது அரசியலின் உயர்வை அவ்விவரங்களே நன்கு உணர்த்தும். விக்கிரமன் பெருமையை நிலைநாட்ட விக்கிரம சகாப்தம் ஏற்பட்டது. விக்கிரமனும் அசுவமேத யாகம் புரிந்தான்; நாற்பதாண்டு நல்லரசாட்சி நடத்தினான். நானிலம் அவனை மெச்சியது.



# 7. புருஷபுரப் பெருமான்

வாழையடி வாழையாக வல்லரசுகள் விளங்கிய பூமி நமது பாரத பூமி. இணையிலா ஏகாதிபத்தியங்கள் இருந்த இடமுமாம். ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் மௌரிய குலத்தார் வல்லரசராக விளங்கினர்; இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரோ குப்த குலத்தார் பேரரசராகத் துலங்கினர். இக்குலத்தாருக்கு முன்னம், வடபாகத்திலே ஓர் ஏகாதிபத்தியம் கொண்டோர் குஷான் வமிசத்தினர்.

முன்னவர் இருவருக்கும் இராஜதானி பாடலிபுரம். குஷான் வமிசத்தினருக்கோ புருஷபுரம். இதனை இப்போது பிஷாவர் என்பர். அன்றும் சரி, இன்றும் சரி, நமது தேசத்தின் வடமேற்கே ஒரு கோட்டைவாயில்போல் குலவுவது அப்புருஷபுர நகரமே. இன்றும், அப்பிஷாவர் நகரில் இந்தியப் பெருஞ்சேனை காவலாக நிற்கிறது.

அன்று வடஇந்தியா, காஷ்மீரம், பஞ்சாப் இந்த இடங்களில் குஷான் வமிசத்தினரின் ஆட்சி தான். மத்திய ஆசியாவிலே, காஷ்கர், யார்க்கண்டு, கோடான் முதலிய தேசங்களிலும் அவ்வமிசத்தாரின் ஆதிக்கமே. மேலும் பாரசீகம், பெலுசிஸ்தானம், ஆப்கானிஸ்தானம் இந்த நாடுகளிலும் அவர்களின் செங்கோல்தான்.

குஷான் வம்சத்தினரிலே முன்வைத்து எண்ணத்தக்க மன்னர் மன்னவன் கனிஷ்கன். அவனும் அவன் வம்சத்தாரும் பாரத புத்திரர் அல்லர்; மற்று துருக்கிஸ்தான மென்னும் தேசவாசிகள். கௌதம புத்தருக்குப் பின்பு, மத்திய ஆசியா வெங்கும் புத்த மதம் பரவி யிருந்தது. ஆங்குள்ள ஜனங்

களும் அம்மதத்தில் ஈடுபட்டனர்; பாரத பூமியின் பெருமையை உணர்ந்தனர்; இங்குவந்து தங்கிவாழ இச்சையும் கொண்டனர்; பின்னரே மண்ணுசைக்கு ஆளாயினர். இவ்விடம் அன்னியராக வாழின், காலந்தள்ள முடியாதென அன்னாருக்குத் தோன்றியது. உடனே பாரத புத்திரரைப்போல் நடையும் உடையும் நோக்கும் போக்கும் மேற்கொண்டனர்.

கனிஷ்கன் காலத்திலே சீனதேசம் பெருமிதம் வாய்ந்திருந்தது. அதனை வெற்றிகொள்ளக் கருதினுன் கனிஷ்கன். உடனே எழுபதாயிரம் வீரர் போர்க்கோலம் பூண்டனர். இமயமலையைக் கடந்தாலன்றி அச்சீன தேசத்துக்குள் புகமுடியாது. சுலபமான வழியொன்று கண்டான் கனிஷ்கன்.

பதினுயிரம் அடி உயரமுள்ள சிகரமொன்றைத் தாண்டின், அதன் பள்ளத்தாக்கு வழியில் புகலாம். கஷ்ட நஷ்டங்களைக் கருதாமல் தாண்டினர் அத்தனை வீரரும். சமவெளியில் புகுந்ததும், சற்றே இளைப்பாறக்கூட அவர்களுக்கு அவகாசம் கிட்டவில்லை. வந்துவிட்டனர் சீனர் போருக்கு. தொலைதூரம் மலையைக் கடந்துவந்த களைப்பினுல், கனிஷ்கனது வீரர் இயற்கை வீரங்காட்ட இயலவில்லை. ஆதலின் அவர்களுக்குத் தோல்வியே கிட்டியது. காலங் கருதிப் பின்வாங்கினுன் அக் காவலன்.

கனிஷ்கன் சேனையொன்று, சிந்து தேசத்தின் மேல் சீறிச்சென்றது; பஞ்சாபின்மீதும் பாய்ந்தது. இரண்டும் அவன் வசமாயின. காச்மீரம், காந்தாரம் இவற்றை அக்கொற்றவன் கைப்பற்றினுன்; அதன் பின்பு மத்திய ஆசியாவின் பல பாகங்களையும் வசஞ் செய்தான். இங்ஙனம் அவன் பல திக்குகளிலும் சென்று வெற்றிமாலை சூடித் திரும்பினுன்.

அப்பால் கனிஷ்கனுக்கோ சீனரைப் பழிவாங்கும் ஆத்திரம் பிறந்தது. அவன் சேனைகள் சீனப்

போருக்கு ஆயத்த மாயின. தீபெத் தேசத்திற்கு மேற்கே சீன துருக்கிஸ்தானத்தில் புகுந்தது அச் சேனை. மகா பலசாலிகளான சீனர் நீண்டகாலம் கடும்போர் புரிந்தனர். முடிவில் வெற்றி கொண் டான் கனிஷ்கன். காஷ்கர், யார்க்கண்டு, கோடான் இவை அவனுக்கு அடிபணிந்தன.

அச்சமரில் சீன சிற்றரச னொருவன் பெருந் துன்பம் விளைவித்தான். கனிஷ்கனது சேனை அவ் வரசனைச் சிறை செய்தது. விடுதலை வேண்டினான் அச்சீன வேந்தன்; ஏராளமான பணம் தருவதாக வும் வாக்களித்தான். அத்தொகையை உடனே கொடுக்க வகையில்லை; ஆதலின் பெருமக்களில் சிலரைப் பணயமாகக் கொடுத்தான். அவர்கள் அனைவரும் பிறவியிலேயே சீமான்கள்; சுகவாசமே கண்டோர். அன்னாரை நம் கனிஷ்கன் நடத்திய நேர்மையே நேர்மை!

கோடை, மாரி, குளிர் ஆகிய முக்காலங்களுக் கும் ஏற்றவாறு இன்பமயமான வாசஸ்தலம் அவர் களுக்கு அமைத்தான் கனிஷ்கன். அருங்கோடை யிலே அன்னவர் வதிந்த அரண்மனை சரலோகம். அது கபீசம் என்னும் உயரிய குன்றின்மேல் அமைந் தது. அங்கே கோடை என்பதே தெரியாது.

இதர இரண்டு பருவங்களிலும் காந்தாரத்தில் மாளிகை அமைத்தான் அம்மன்னர் மன்னவன். சொந்த நாட்டையும் குடும்பத்தையும் கைவிட்டு, வேற்று நாட்டில் வசிக்கும் குறையொன்றுதான். இதர அம்சங்களிலே அவர்களுக்கு எத்தகைய குறையும் இல்லை. ஏற்றம் வாய்ந்த விருந்தினரைப் போலவே அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

ஆதியிலே கனிஷ்கன் சிவ பக்தனாக விளங் கினான்; யாக, யக்ஞம் பல புரிந்தான். அப்பால் அசுவகோஷர் என்பார் அவனுக்கு ஆச்சாரியனாக

வாய்த்தார். புத்தமத போதம் ஏறியது. பின்னரே பௌத்தமத துரந்தரன் ஆனான் அப்பார்த்திபன்.

ஆயினும் சமயத் துவேஷம் சிறிதும் அவன் காட்டவில்லை. பாரசீக மதத்தார், ஆரிய வேத மார்க்கத்தார், ஜயின சமயத்தார் ஆகிய அனை வரையும் அவன் அணைத்து ஆதரித்தான்; அம் மதங்களின் வளர்ச்சிக்கும் அவன் பக்க பலம் தந்தான்; அன்பின் வடிவாகத் துலங்கினான்; புருஷ புரப்பெருமான் எனும் பெயரும் பெற்றான்.

பௌத்த சமயத்தைத் தழுவியதும், புருஷபுர நகரிலே விசித்திரமான மண்டபமொன்று சமைத் தான் அக் கனிஷ்கன். அம்மண்டபத்தின் உயரம் நானூறு அடி; ஒன்றின்மீது ஒன்றாக 18 அடுக்கு மாளிகைகள். மண்டபம் முழுதும் மரத்தால் ஆனது. மண்டபத்தின் நடுவே, அத்துணை உயரத்திற்கும் ஒரே இரும்பு ஸ்தம்பம். அத்தூண் வானத்தை எட்டிப் பிடிப்பதுபோல் இருக்கும்.

மாளிகையின் சுவர்களிலே சிறப்பான ஓவி யங்கள் கண்ணைக் கவரும். மண்டபத்தின் வேலைப் பாடோ வெகு நேர்த்தி. அது அந்நாளிலே உலக அதிசயங்களில் ஒன்று. மும்முறை அம்மண்டபம் தீக்கு இரையாயிற்று. எனினும் கனிஷ்கனுக்குப் பின்வந்தோர் அதனைப் புதுப்பித்து வந்தனர்.

ஆறும் நூற்றாண்டில், இங்கு வந்த சீன யாத் திரிகர் ஸாங்யன் என்பார் அம்மண்டபத்தின் வனப்பைக் கண்டு, மூக்கில் விரல் வைத்து வியந்து நின்றார். அதனருகே நின்ற பேரழகு வாய்ந்த பெரிய மடாலயமோ நாமகளின் நல் உறைவிடம்; ஆயிரக்கணக்கான மாணவரின் பயிற்சிக் கழகம்; பலகலைகளின் குருபீடம்; பரம போத நிலையம்.

பத்தாம் நூற்றாண்டுவரையில், மண்டபமும் மடா லயமும் அக்குஷான் வமிசத்தினரின் பெருமைக்கு

அடையாளமாக விளங்கின. பதினோராம் நூற்றாண்டிலே **முகம்மது கஜனி** இங்கே பன்முறை படைகொண்டு வந்தானல்லவா? மண்டபம், மடாலயம் இரண்டும் அச்சமயம் இடியுண்டு, இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின.

இனி அக்கனிஷ்கன் பௌத்தமத நூல்களை ஆராயத் தொடங்கினான். அந் நூல்களின் போதங்களோ மாறுபடலாயின. அது கண்டு அவன் சலிப்படையவில்லை; உண்மை உணரும் ஆவலே கொண்டு பெருஞ்சபை ஒன்று கூட்டினான். நானாபாகங்களிலிருந்தும் ஐந்நூறு மேதாவிகள் வந்து புருஷபுரத்தில் கூடினர். **வசுமித்திரர்** என்பார் அம் மகாசபைக்கு அக்கிராசனம் வகித்தார்.

பௌத்தமத போதங்களைக் குறித்து விவாதம் நடந்தது. அதன் பயனாக எழுந்தது **மகா விபாஷா** என்னும் பெரிய நூல். உடனே செப்புத் தகட்டில் அப்பிரபந்தத்தை எழுதி வைத்தார்கள். அதன் பிரதியொன்று இன்றும் சீன பாஷையில் உளது. முன்னம் பௌத்த மதத்தினைப் பாரெங்கும் பரப்பினான் அசோகன். அப்பால் அம்மத போதத்துக்குப் புத்துயிர் அளித்தான் கனிஷ்கன்.

புத்த மதத்தைத் தழுவு முன்னம், அசோகன் கலிங்கத்தின்மீது படைகொண்டு சென்றான். கலிங்கர் வீராவேசத்துடன் போர் புரிந்தனர். முடிவில் அசோகன் வாகை சூடினான். ஆயினும் போரில் நேர்ந்த உயிர்ச் சேதத்தினுக்கு ஒரு கணக்கில்லை. பெரிதும் வருந்தினான் அப் பேரரசன்; அப்பால் புத்த மதத்தில் ஈடுபட்டான்; போரே கூடாதென்றான்; அன்பும் அஹிம்ஸையுமே எங்கும் நிலவச் செய்தான்; உயிர்க்கொலையை அறவே ஒழித்தான்.

கனிஷ்கனது போக்கோ அதற்கு நேர்மாறாகும். அவ்வேந்தன் சுமார் முப்பதாண்டுவரையில் அரசு

செலுத்தினன். மண்ணாசை அவனைப் பிடித்தாட்டியது. ஆயுள் அளவும் அவ்வாசை அவனைவிட்டகலவில்லை. அவன் சேனை சதா போர் முனையிலேயே இருந்த தென்னலாம். பலவந்தமாகவே அவன் படை திரட்டினன்; பற்பல திக்குகளினும் போர் வீரரை அனுப்பிச் சமர் மூறுக்கினன்.

போர்க் குலத்தாரோ ஆண்டுதோறும் வீடு வாயில்களையும் மனைவி மக்களையும் துறந்து, தூர தேசங்களில் வாழநேர்ந்தது. அதனல் அன்னவர் பிணங்கி நின்றனர். ஜனங்களும், "ஈதென்ன? ஒரு பக்கத்திலே அஹிம்ஸா போதம்! ஒருபக்கம் வெட்டுப்பழி குத்துப்பழி?" என்று கொதித்தனர்.

வெகுஜன வாக்கு திரண்டுவிட்டது. யதேச்சாதிகாரம் தலைதூக்க முடியவில்லை. மந்திரிகளும் தந்திரிகளும் மன்னவனுக்குச் சொல்லிப் பார்த்தனர். கனிஷ்கன் செவியில் ஒன்றும் ஏறவில்லை. "ஜன சம்மதத்தை மீறி நடப்பவன் இறைவனுக இருப்பதோ?" எனும் கிளர்ச்சி ஓங்கி உயர்ந்தது. ஆதலின் அரசனைத் தொலைத்துவிட வேண்டுமென அனைவரும் துணிவு கொண்டனர்.

ஒரு சமயம் கனிஷ்கன் கொடுநோய் கொண்டு கிடந்தான். மருத்துவர் வந்து மூலிகை கொடுத்து முயன்றனர். பிரஜைகளோ தக்க மருந்து தருவதாகச் சொல்லி, அவனைப் பஞ்சணையுடன் கட்டிப் போட்டுக் கொன்றுவிட்டனர். ஜனசம்மதமின்றேல், ராஜவாழ்வும் படைபலமும் பறக்குமன்றோ?

கனிஷ்கனுக்குப் பின்பு அவன் வம்சத்தார் ஒருவர்பின் ஒருவராகச் சிறிது காலம் ஆண்டு வந்தனர். குஷான் வம்சத்தினரின் காலத்திலே நம் தேச வியாபாரம் அமோகம். கடல் மார்க்கம், தரைமார்க்கம் இரண்டினுமாக நம்தேசச் சரக்குகள் மேனுடெங்கும் சென்று சிறப்புற்றன.

அக்காலத்திலே ஐரோப்பாவில் ரோம ராஜ்யம் தலைசிறந்து நின்றது. உரோமர் செல்வ வளத்தில் திளைத்து, ஆடம்பரத்திலும் ஆசை கொண்டனர். பாரத பூமியிலிருந்து பலவிதமான பட்டாடைகள், ஜரிகைச் சேலைகள், ரவை சல்லாத் துணிகள் முதலியன அங்குப் போயின. எடைக்கு எடை பொன் கொடுத்து அச்சரக்குகளை வாங்கிக் களித்தனர் உரோமர். ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான பவுனை ஆடம்பரப் பொருள்களில் செலவிடுவதா என்று ரோமாபுரியின் அர்த்த சாஸ்திர நிபுணன் பிளினி என்பான் பிரலாபித்தான்.

கனிஷ்கனது வெற்றிப்பிரதாபங்கள் ரோமாபுரிக்கு எட்டவே, ஆங்கிருந்து ராஜதூதுவர் வந்து, புருஷபுரத்தைக் கண்டு களித்துச் சென்றனர். கனிஷ்கனும் தனது தூதுவரை உரோமாபுரிக்கு அனுப்பிப் பேரானந்தம் அடைந்தான். இந்தியத் தூதுவரோ உரோமருக்கு அதிசயம் விளைக்கும் வேங்கை, சிறுத்தை, யானை, மயில் முதலிய மிருகங்களைக் கொண்டு சென்றனர்.


உரோமாபுரியின் தங்கமெல்லாம் இங்கே வந்து குவிந்தது ஒருபுறம் இருக்கட்டும். ரோம வியாபாரிகளும் இங்கே வந்து தங்கி, வர்த்தகம் நடத்தினர். இங்ஙனம் மேனாட்டினுக்கும் பாரதபூமிக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டும், மேனாட்டு நாகரிகத்தை இப்பூமி ஏற்றுக்கொள்ளவில்லை.

பேரரசுக்குரிய அடையாளங்களில் ஒன்று, நாணயங்களை அச்சிட்டுச் செலாவணி யாக்குதல். கனிஷ்கனும் அவ்வாறே தங்க நாணயங்கள் அச்சடித்து வழங்கினான். ஆதியிலே அவனது நாணயங்களில் கிரேக்க பாஷை பொறிக்கப் பெற்றது; கிரேக்க தெய்வங்களின் உருவங்களும் காணப் பெற்றன. அதன் பின்பு எழுந்த நாணயங்களில்

பாரசீக பாஷையைக் காணலாம். கடைசியில் அச்சான நாணயங்களில் புத்தர் உருவம் தோன்றும்.

கனிஷ்கனும் அசோகனைப் போல் புத்தமதப் பிரசாரகரை உலகெங்கும் அனுப்பினன். சீன தேசத்திலே அவன் காலத்தில்தான் புத்த மதம் பிரபலமாயிற்று என்பர். அவன் பெரிதும் விரும்பி வசித்த இடம் காஷ்மீரம். அங்கே அவன் பற்பல சிலைகள் நாட்டினன்; மடங்கள் அமைத்தான். அவன் பெயரால் ஒரு நகரமும் தோன்றியது. அதன் பெயர் கனிஷ்கபுரம். பின்னளில் அந்நகரம் குன்றியது எனினும் இன்றும் கிராமமாகத் துலங்கி வருகின்றது. தீபெத், சீனு, மங்கோலியா இத்தேசங்களிலே இன்னும் கனிஷ்கனைக் குறித்து ஏராளமான கதைகள் வழங்கி வருகின்றன.

உலக மகா சரித்திரத்தில் ஓர் உண்மை புலப்படும். எங்கும் வல்லரசுகளோ ஏகாதிபத்தியங்களோ இரு நூறு ஆண்டுகளுக்குமேல் நிலைப்பதில்லை; ஒரு நூறு வருஷகாலம் உச்சஸ்தானம் வகிக்கும்; அப்பால் வரவர நசிக்கும்; முடிவிலே மங்கி மடியும். இஃதே இயற்கை. மௌரிய வல்லரசு, (புஷ்பமித்திரன் கண்ட) சுங்க வல்லரசு, குஷான் வல்லரசு எல்லாம் இருநூறு ஆண்டே எடுப்பாக இருந்தன. குஷான் வல்லரசுக்குப் பின்புதான், குப்தகுலப் பேரரசு முளைத்தது. இதுவும் அத்துணை காலமே வாழ்ந்தது. தனி மனிதனுக்கு வாழ்வும் தாழ்வும் நேர்வதேபோல், வல்லரசுகளுக்கும் வாழ்வும் வீழ்வும் நேர்தல் நிச்சயம் போலும்!



# 8. தானேசுவர தீரன்

குரு க்ஷேத்திரம், குரு க்ஷேத்திரம் என்போம். பாரத யுத்தம் நடந்த தலம் அதுவே. பின்னளில், அதன் பெயர் தானேசுவரம். அத்தானேசுவரம் பிரசித்தி பெற்ற இராஜதானியுமாம். ஏழாம் நூற்றாண்டில், அங்கே விளங்கிய வேந்தன் பிரபாகர வர்த்தனன்; அவன் சிறப்புப் பெயர் பிரதாப சீலன். அவனே போர் பல கண்டவன்; வெற்றியே மிகுதியும் கொண்டவன்; உலகைக் கலக்கிய ஹூணர் என் போரை முறியடித்தவன்; மகா ராஜாதி ராஜன் என்னும் பட்டம் பெற்றவன்.

அந்நாளில் வடக்கே மிகச்சிறந்த நாடு கன்னேசி. இதன் காவலன் பெயர் கிருகவர்மன். பிரதாப சீலன் புத்திரி ராஜேசுவரி என்பாளை இவன் மணந் திருந்தான். மாமன், மருமகன் இருவரும் ஒருவருக் கொருவர் உற்ற துணையாக இருந்தனர். பிரதாப சீலனுக்கு வயது முற்றியது; வியாதியும் வந்து சூழ்ந்து கொண்டது. அது சமயத்தில், மீண்டும் ஹூணர் படைகொண்டு வந்தனர். உடனே பிர தாபனது மூத்த மைந்தன், ராஜ்ய வர்த்தனன் என்பான் புறப்பட்டான் போருக்கு. அக்குமார னுக்கு அப்போது வயது பத்தொன்பதே. தாய் நாட்டைக் காத்தலும், ஆற்றலை உணர்த்தலுமே அவன் கருத்து.

" அண்ணன் மட்டுமா ஆண்மை காட்டுவது? தவிர, தமையன் தனியே செல்லுவதோ! உலகைக் கலக்கும் ஹூணரை ஒரு கை பார்க்கவேண்டும்! " என்று தம்பி ஹர்ஷனும் புறப்பட்டான். பதினயிரம் பரிவீரர் துணைபோயினர். அப்போது ஹர்ஷனுக்கு வயது பதினன்கு. இமயமலையின் அடிவாரத்தில் ஹர்ஷனும் துணைவரும் தங்கினர். இதற்கிடையில்,

பிரதாபசீலன் காலகதியடையும் தருணம் கிட்டியது. தூதர் விரைந்து வந்து உரைக்கவே, தானேசுவரம் திரும்பினான் ஹர்ஷன்.

முன்னே சென்ற ராஜ்யன் ஹூணரைச் சந்தித்து அவர்களைச் சின்னபின்னஞ் செய்தான்; வாகையும் சூடித் திரும்பினான். வெற்றி விசேஷத்தைத் தந்தையிடம் தெரிவிக்கும் ஆவல் மிஞ்சியது. ஆதலின், அவன் கடுகிவந்தான் தந்தையைக் காண. பிரதாபசீலனோ அதற்குள் பரலோகம் சென்று விட்டான். இராணி யசோமதி தன் புருஷனது பிரிவை எண்ணி, முன்னதாகவே கண்மூடி விட்டனள். அக்காலத்திய வழக்கப்படி உத்தம பத்தினியரின் இலட்சணம் அதுவே.

தாயும் தந்தையும் இறந்து பட்டமையின், மைந்தனது வெற்றிக் களிப்பு வீணாயது. எனினும் "பகைவரைப் புறங்கண்டோம்; தேசத்தினைக் காத்தோம்" எனும் நினைப்பு ஆறுதல் அளித்தது. பின்னர், மூத்தவன் என்ற முறையில் முடி சூட்டினர் ராஜ்யனுக்கு. தளகர்த்தரிலும் பெருமக்களிலும் சிலரோ ஹர்ஷனுக்கு முடிகவிக்க எண்ணினர். இது இப்படியிருக்க.

பிரதாபசீலன் பரகதி அடைந்ததும், கன்னோசியின்மீது மாளவ மன்னவன் சேனையுடன் சென்றான்; கிருகவர்மனைக் கொன்றான்; ராஜேசுவரியையும் கால் விலங்கிட்டுச் சிறையில் போட்டான். தந்தியும் இருப்புப்பாதையும் இல்லாத காலம் அது. ஆயினும் பரதேசத் தபால் பறந்தது. தன் தங்கைக்கு நேர்ந்த கதியை ராஜ்யன் கேள்வியுற்றான். கண நேரமும் அவன் தாமதிக்கவில்லை; பெரும் படையுடன் சென்றான் பழிவாங்க; மாளவனை வெற்றி கொண்டான். உடனே பெருவஞ்சனை விளைய, ராஜ்யன் படுகொலை யுண்டான்.

கொலைச்செய்தி தானேசுவரத்திற்கு உடனே எட்டிற்று. ராஜ்யனுக்கோ மைந்தர் இல்லை. ஹர்ஷனை வேந்தனாக்க விரும்பினர் பலரும். "மக்கள் அனைவரும் ஒரு மனங்கொண்டு முடி கவிப்பின், ஏற்றுக் கொள்வேன். மகாஜன சம்மதம் இல்லா அரசுரிமை என்ன பயனுடைத்து? இனி, அரசுரிமையை எண்ணி நிற்க இது சமயம் அன்று; தமையனைக் கொன்ற பழி, தங்கையைச் சிறையிட்ட பழி, இரண்டையும் தீர்க்க வேண்டும். பின்னர் எதுவும் பேசிக் கொள்வோம்," என்றான் ஹர்ஷன். தானேசுவர வீரர் உடனே திரண்டனர். முதன் முதல் ராஜேசுவரியை மீட்க, ஹர்ஷன் முற்பட்டான். அப்போது அவனுக்கு வயது பதினாறே.

இதற்குள் தெய்வம் துணை புரிந்தது. ராஜேசுவரி சிறையிலிருந்து விடுதலை பெற்றாள். பெற்றதும், "கணவன் கொலையானான்; நாடோ கை தவறியது; தமையனும் வஞ்சனை வழியில் உயிரிழந்தான்; தாயும் தந்தையரும் பரகதி போயினர். இந்நிலையில் உயிர் வாழ்ந்தென்ன? உலகைத் துறத்தலே மேல்," என்று கருதி, விந்திய மலைச்சாரல் சென்றாள் அக் குமாரி.

அஃதறிந்த ஹர்ஷன், எங்கும் திரிந்து தேடினான் தங்கையை. தூதுவரும் தேடித் துருவினர் நாற்றிசையும். புலன் கிட்டவில்லை. தேம்பி நின்றான் அத்தோன்றல். அதுசமயம் தவசி யொருவர் தென்பட்டு, 'யாரோ பெண்ணொருத்தி, கூப்பிடு தூரத்தில் உன்மத்தங் கொண்டு நிற்கின்றாள்," என்றார். அது கேட்ட ஹர்ஷன், காற்றினும் கடுகி வழிநடந்தான்.

இராஜேசுவரி பெருந்தீமூட்டி அதில் குதிக்கப் போகும் சமயம், கண்டான் ஹர்ஷன்; "தங்காய்! தங்காய்! வேண்டாம்" என்று அலறினான்; தீயில்

விழுபவளை வாரி எடுத்தான்; கண்ணீர் ஆறாய்ப் பெருக்கிக் கலங்கினான்; பின்னர் "என் சோதரி! எனது நிலையைப் பார்; எல்லாரையும் இழந்தேன்! உடன்பிறந்த துணையும் இல்லை. நீயுமா என்னைக் கைவிடப் போகின்றாய்? தேசம் என்னாவது? மக்களின் கதி யாதாகும்? சின்னாள் நாம் இருவரும் உயிருடன் இருப்போம். உலகினுக்கு உழைப்போம். அரசியலை அறவிய லாக்குவோம். அதன் பின்னர், ஆன்ம நலம் நாடி, ஆண்டவனை அடைவோம்," என்று வேண்டிக் கொண்டான். இளங் குமரியும் அதற்கு இணங்கினாள்.

பின்னர் இருவரும் படையுடன் கிளம்பிப் பகையும் பழியும் முடித்துத் தானேசுவரம் திரும்பினர். கன்னோசியை யாவர் ஆளுவதென ஆலோசனை பிறந்தது. அதன் காவலனாக முடிசூடிக் கொள்ள ஹர்ஷன் விரும்பவில்லை; ஆனால் தங்கையின் பெயரால் அதனை ஆண்டுவர ஒப்பினான். தனேசுவரமோ ஒருமனதாக அக் குமாரனையே கொற்றவனாகக் கொள்ளக் கருதியது. முதுமக்கள் அனைவரும் அவனுக்கு முடிசூட்டினர்.

அரியணையில் அமர்ந்ததும், பேரரசு காணும் ஆவல் உதித்தது. உடனே திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டான். அவ்வளவில் ஐயாயிரம் யானை வீரர், ஐம்பதாயிரம் காலாளர், பதினாயிரம் பரிவீரர் கொண்ட சேனா ஸமுத்திரம் கிளம்பிற்று.

ஹர்ஷன் தனது படையுடன் ஸரஸ்வதி நதிக் கரை வந்து தங்கினான். அந்த ஊரின் தலைவன் தங்கக் காசு ஒன்று அடித்து, ஊராருடன் வந்து அதனைக் காணிக்கையாகக் கொடுத்தான் ஹர்ஷனுக்கு. அப் பொன்காசைப் பூரிப்புடன் கைநீட்டி வாங்கினான் அக்காவலன். காசோ கைதவறிக் காசினியில் வீழ்ந்தது. "கையில் கிடைத்த காசு

தவறுகிறதே; திக்கு விஜய ஆரம்பத்தில் இது அபசகுனம் அல்லவோ?" என்று சிலர் சிந்தித்தனர். ஹர்ஷன், "இது சுபசகுனமே! எங்ஙனமெனில், இதோ பாருங்கள்; காசு விழுந்த இடத்தில் முத்திரை பதிந்துளது. பூமியனைத்தும் என் முத்திரைக்குள் அகப்படும் என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ?" என்றான். மந்திரிகள் அது கேட்டு, "அரசன் ஆண்டில் இளைஞனாயினும், அறிவில் முதிர்ந்தவன்; தைரியமே நிரம்பியவன்!" என்று கூறிக் களித்தனர்.

அக்காலத்தில் காமரூப (அஸ்ஸாம்) நாட்டை ஆண்டு வந்தவன் குமாரதேவன். ஹர்ஷனது திக்கு விஜயத்தை அவன் கேள்வியுற்றான். உடனே தூதுவனொருவன் மூலம் காணிக்கையும் பட்டுக் குடையும் அனுப்பினான்; ஆண்டுதோறும் கப்பங் கட்டி வாழவும் ஒருப்பட்டான். இதுவும் சுப சகுனமென்றே நினைத்தான் தானேசுவர தீரன். பின்பு வடஇந்தியாவின் மேற்கிலும் கிழக்கிலும் உள்ள பிரதேசங்களில் புகுந்தான் ஹர்ஷன்; ஆறு வருஷ காலம் அருஞ்சமர் ஆற்றினான். எங்கும் வெற்றிமாலையே தட்டின்றிக் கிட்டியது.

திக்கு விஜய காலத்தில், சிற்றரசரை வேரறுக்கவோ, ஆங்காங்கே உள்ள மக்களைத் துன்புறுத்தவோ, அவன் விரும்பவில்லை. காணிக்கை கொடுக்கவோ கப்பங் கட்டவோ சம்மதித்தோர் மீது அவன் சீற்றம் கொள்ளாமல், நேசமே பூண்டான்; அடிவணங்க மனமில்லை என்று அகங்கரித்தோர் மீதே போருக் கெழுந்தான்; போரிலும் தர்ம விதியினின்று தவறவில்லை; மக்களுக்கு இடையூறான கருமமெதுவும் புரியவில்லை, நாடுகளைக் கட்டிக் கொள்ளவும் நாட்டம் கொள்ளவில்லை; பேரரசன் என்பதைப் பிறர் ஒப்புக்கொண்டால் போதும்

என்றே இருந்தனன்; போர்முனையில் உயிர்க் கொலையை எத்துணை குறைக்க இயலுமோ அத்துணை தூரம் குறைக்கவும் கருதி நின்றான்.


ஆறு வருஷத்தில் வட பாகத்தே திக்குவிஜயம் முடிவுகொண்டது. அவன் கி. பி. 612-ஆம் ஆண்டில் வேந்தர் வேந்தன் என்று பட்டம் சூடினன். அப்போது, அவன் சேனையில் அறுபதாயிரம் யானை வீரர், நூறாயிரம் குதிரை வீரர், கணக்கற்ற காலாளர் முதலியோர் இருந்தனர். அவன் பெயரால் சகாப்தமும் ஏற்பட்டது. பாரத பூமியின் வடபாகம் முழுவதும் அநேகமாக வசமாகியதும், தென்பாகத்திலும் திக்கு விஜயஞ் செய்ய அவன் நினைத்தான். அவன் சேனைகள் கிளம்பின. அக்காலத்தே தெற்கில் பெருவேந்தனாகத் திகழ்ந்தவன் புலிகேசி. இவன் சாளுக்கிய குலத்தினன்.

வட நாட்டு வல்லரசன் ஹர்ஷன் என்றால், தட்சிணத்தில் வல்லரசன் புலிகேசி. இருவர் சேனையும் நருமதை நதிக்கரையில் சந்தித்தன. கடும்போர் மூண்டு நீண்ட நாள் நடந்தது. ஒருவருக்கும் வெற்றியோ தோல்வியோ கிட்டவில்லை. இருவரும் உடனே ஓர் உடன்படிக்கை கொண்டனர். பாரத பூமியின் வடபாகத்திலே ஹர்ஷன் பேரரசுசெலுத்த வேண்டியது; தென் பாகத்திலே புலிகேசி வல்லரசு கொள்ள வேண்டியது. இருவரின் ஏகாதிபத்தியத்துக்கும் நருமதை நதியே எல்லையாகும். இஃதே உடன்படிக்கையின் சாரம். அதன் பின்னர் இருவரும் போரை நிறுத்தித் தத்தம் நாட்டின் நலத்தில் கவனம் செலுத்தினர்.

சுமார் நாற்பது வருஷம் ஹர்ஷன் பேரரசு செலுத்தினன். பரந்த அரசை நிர்வகிக்க ஆங்காங்கே மாகாணத் தலைவர் நியமனமாயினர்; ஸ்தல அதிகாரிகளும் ஏற்பட்டனர். அவர்கள் இட்டதே

சட்டமென ஹர்ஷன் இருந்து விடவில்லை. மாரி காலந்தவிர மற்றைக் காலங்களில் அவன் சுற்றுப் பிரயாணம் செல்லுவான்; ஆட்சியின் தன்மையை நேரில் அறிவான்; மக்களின் நிலையையும் குறைபாடுகளையும் தானே கவனிப்பான். மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதே அவன் கவலை.

சுற்றுப்பிரயாண காலங்களிலே அதிகாரிகளின் அரண்மனையில் அவன் தங்குவதில்லை. இலை தழையினால் அமைந்த கொடிவீட்டிலேயே தங்குவது வழக்கம். அப்போதுதான், மக்கள் தாராளமாக வந்து, குறை கூறிக்கொள்ள இயலும் என்பதே அவன் நம்பிக்கை. அவனது ஆட்சியின் நேர்மையை அடுத்த அதிகாரத்தில் கூறுவோம்.



# 9. ஏழாம் நூற்றாண்டில் எடுப்பு

ஏழாம் நூற்றாண்டில் எங்கும் புகழ் பரப்பியவன் ஸ்ரீ ஹர்ஷன். அவன் காலத்தில் பட்டபாணன் என்பான் ஒரு மகாகவி; ஹர்ஷ மகாராஜனது சரித்திரம் எழுதியவன். அக்கவிஞன் கூறியிருப்பது கிடக்கட்டும். அன்னியரொருவர் அதிசயித்து ஆனந்தம் கொண்டிருப்பதையே கூறுவோம்.

அந்த அன்னியர் பெயர் ஹியூன்த்ஸங். அவர் சீன தேசத்தார்; வடமொழியிலும் பிராகிருதத்திலும் வல்லவர்; பௌத்த மத நுணுக்கங்களை நன்குணர அவர் இங்கே வந்தார்; ஆறு வருஷ காலம் பாரத பூமி யெங்கும் சுற்றிப் பார்த்தார்; பாரபட்சம் இல்லாமல், கண்ணால் கண்டதையே வரைந்து வைத்தார். அவர் சொல்லியிருக்கும் வண்ணம், ஏழாம் நூற்றாண்டிலே பாரத பூமியின் எடுப்பான நிலைமை இது :—

ஸ்ரீ ஹர்ஷன் ஏகாதிபத்தியம் கொண்டான் வட இந்தியாவிலே! ஆட்சி பரவியதும், அதற்கு ஏற்ப அவன் சேனையும் பெருகியது. யானைப்படை அறுபதாயிரம்; குதிரைப்படை நூறாயிரம்; காலாட் படைக்குக் கணக்கேது? முப்பதாண்டு சாந்தி நிலவ, ஆண்டு வந்தான் அவ்வேந்தன். அவனது அரசியல் அறவியலே. நாட்டின் நலத்தில் நாட்டம் செல்கையில், ஊணையும் அவன் கவனியான்; உறக்கத்தையும் எண்ணான்; பகலிலே ஒன்று அரசியலை ஆராய்வான்; அல்லது ஆன்ம விசாரணை செய்வான். களைப்பென்பது அவனிடம் தலை காட்டாது. ஒரு விநாடி நேரங்கூட வீணே போக்கான் அவ்வேந்தர் வேந்தன்.

ஹர்ஷ ராஜ்யத்திலே உயிர்க்கொலை கிடையாது. யாரேனும் ஓர் உயிரைக் கொல்லின்,

உடனே கடுந்தண்டனை கிட்டும். மாமிச போஜன மென்பது மருந்தினுக்கு மில்லை. தேசமெங்கும் ராஜபாட்டைகளிலே யாத்திரீகர் தங்குவதற்குரிய சத்திரஞ் சாவடிகள் அனந்தம்.

தேசத்திலே ஜாதியும் வகுப்பும் பலவாம். அன்றில் பிராமணர் மகா பரிசுத்த புருஷர்; பெரு மதிப்புக்கும் பாத்திரமானோர். எனவே பாரத பூமிக்குப் பிராமண பூமி எனவும் வெளியிடங் களிலே சிறப்புப் பெயருண்டு. பிராமணருக்கு அடுத்தபடி க்ஷத்திரியருக்கே சிறப்பு. இருவரும் அப்பு அழுக்கு அற்றோர்; படாடோபமற்ற எளிய இனிய வாழ்க்கையே கொண்டோர்.

ஆறிலொரு பங்கே அரசிறை. அதிக வரி என்பதில்லை. ராஜ குடும்ப வருவாய், நான்கு வகையில் செலவாகும். ராஜ காரியத்துக்கும் தெய்வ பூஜைக்கும் ஒரு பங்கு; பொதுஜன ஊழியத் தில் பெருமை பெற்றோர்க்குச் சன்மானம் செய்ய ஒரு பங்கு; மகா மேதாவிகளுக்குப் பரிசு வழங்க ஒரு பங்கு; சமய சமரஸத்துடன் பற்பலருக்கும் பரிந்தளிக்க ஒரு பங்கு.

வர்த்தகர் தொலைவில் சென்று, வாணிபம் புரிந்து வருவர். சுங்க வரியும் கம்மியே. அனைவரும் பரம்பரைத் தொழிலைப் பாங்குடன் கவனிப்பர். மக்கள் அனைவரும் மதிவன்மை வாய்ந்தோர்; கல்வி கேள்விகளில் கருத்துள்ளோர்; அன்பும் இரக்கமும் வாய்ந்தோர். யாவருக்கும் கர்மாவில் நம்பிக்கை அதிகம்; கண்ணியமும் யோக்கியதையும் மிகுதி. இன்ப வாழ்வில் எல்லாருக்கும் வெகு விருப்ப முண்டு. எனினும் சமயத்துறையில் சிறப் பெய்தும் சிந்தை அதிகம்.

கல்வி விஷயம் கனவி சேஷம். மடாலயங் களிலே பிராமண ஆசிரியரும் புத்த போதகரும்

கல்வியைப் பரப்புவதில் போட்டி போடுவர். புத்த போதகர் அடிக்கடி சபை கூட்டி, மக்களின் அறிவுத்துறையைப் பெருக்குவர். எவரும் எக்கலையும் கற்று மேம்பாடு அடையலாம்.

ஜனசமூகத்தினிடம் கல்வியைப் பரப்பும் வசதி அனந்தம். பாடதிட்டமோ படிப்படியாக உயரும். எல்லா ஜனங்களுக்கும் ஓரளவு உயர்தரக் கல்வி உண்டு. கல்வியறிவில்லாதாரைக் காண்பது அரிது. குருகுல வாசம் முடிந்ததும், தேச சஞ்சாரம் செய்து மேலும் அறிவு பெறுதல் அனைவர்க்கும் கடமை.

சமய சமரஸத்துக்கு ஓர் உதாரணம். ஏழாம் நூற்றாண்டிலே காமரூப நாட்டின்காவலன் பாஸ்கர வர்மன். இவ் வேந்தன் ஸ்ரீ ஹர்ஷனது சிறந்த சிற்றரசன்; பரம வேதியன்; ஹியூன்ஸங்கின் பெருமையை இவன் கேள்வியுற்றான்; உடனே அப் பௌத்தமத பண்டிதரிடம் அளவளாவ ஆவல் பூண்டான்; உடனே அனுப்பினான் ஓலை. அதற்கிணங்க அவ்வரசனிடம் சேர்ந்தார் சீனத் தூதர். அரசனும் அமைச்சரும் பெருமக்களும் கூடி, அப் பண்டித சிரோமணியை ஆடம்பரமாக வரவேற்றனர். ஒருமாத காலம் காமரூபத்திலே அச்சீனர் தங்கியிருந்து பரிசும் பிருதும் பெற்றார்.

பன்முறை ஸ்ரீ ஹர்ஷன் விரும்பியும் அவன் சபைக்கு ஹியூன்ஸங் செல்லவில்லை. பாஸ்கரவர்மனது விருந்தாளியாக அச்சீனர் வீற்றிருப்பதை ஹர்ஷன் அறிந்தான்; உடனே விடுத்தான் ஓலை அவ்வேந்தனுக்கு. "தலையைத் தரினும் தருவேன். மகா பண்டிதரை அனுப்பித் தாரேன்," என்று பாஸ்கர வர்மன் பதில் கொடுத்தான். "நல்லது! உன் தலையைத் தந்தனுப்புக" என்றான் ஹர்ஷன். வேந்தர் வேந்தனது ஆணையை மீறி அப்பாஸ்கரன் நடப்ப தெப்படி? மகாபண்டிதரும் மன்னவனும்

சென்று, மகா ராஜாதி ராஜனைக் கண்டு வணங்கினர். ஸ்ரீ ஹர்ஷன் பேரானந்தம் எய்தினன்.

ஹர்ஷனது அரசில் கொடுங்குற்றம் செய்வோர் அருமை. சிறைவாசமே சாதாரணமான தண்டனை. கொடுங் குற்றம் புரியின், கைகால் முதலிய அவயவங்களை இழக்கவேண்டு மென்பது சட்டம்; தேசப் பிரஷ்டமும் உண்டு. நீர், நெருப்பு, விஷம் இவற்றை ஆதாரமாகக் கொண்டு சத்திய நெறியை மெய்ப்பித்தல் சகஜம். அதிகாரிகளுக்கு மாதச் சம்பளம் இல்லை; ஆனல் மான்யங்கள் உண்டு. அரசாங்க நடவடிக்கைகள் தவருமல் குறித்து வைக்கப்படும்.

ஹர்ஷனது ஆட்சியில் வரி மிகவும் குறைவு. அவன் செலவும் கம்மி. அவன் பொக்கிஷத்தில் செல்வம் நிரம்பியிருக்கும். அதனை அவன் சேமித்து வைப்பதில்லை; அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுத்து விடுவான். அதன் விவரம் இதுவாம்:—

கங்கையும் யமுனையும் கூடும் இடம் மிகவும் சிறந்த தலமாம். அத்தலத்திலிருந்து தானதர்மம் செய்யின், பன்மடங்கு புண்ணிய முண்டு. ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை ஹர்ஷன் அந்த இடம் செல்வான். முந்தின ஐந்தாண்டுகளில் சேர்ந்த தனதானியமெல்லாம் அங்கே கொண்டுவந்து குவிக்கப்படும். குவிக்கும் இடமோ மிகப் பெரிய சதுர பூமி. பொன், வெள்ளி முதலிய நாணயங்கள் மட்டுமன்றி வேலைப்பாடமைந்த ஆடை அணிகளும் குவிக்கப்படும். ஆயிரம் ஆயிரம் பேர் உட்கார்ந்து சாப்பிடும்படியான நூறு மண்டபங்கள் சமைக்கப்படும்.

பற்பல ஜாதி மத வகுப்பினரும் அழைக்கப் பெறுவர். கல்விமான்களும் சர்வ சமய போதகரும் ஆயிரக்கணக்கில் அங்கு வந்துசேர்வர். பதினெண் சிற்றரசரும் தத்தமது பரிவாரங்களுடன் விஜயம் செய்வர். இலட்சோபலட்சம் ஜனங்கள் கூடுவர்

என்னலாம். முதல் மூன்று தினங்களிலே திரிமூர்த்தி பூஜை நடக்கும். நாலாவது தினத்திலே, தான தர்மம் வழங்கத் தொடங்குவான் ஹர்ஷன். தினம் தினம் பத்தாயிரம் புத்த துறவியருக்கும் பிறருக்கும் அறுசுவை கூடிய உண்டி கிடைக்கும்; அத்துடன் நூறு பொன்காசும் முத்தும் பவழமும் காஷாயமும் வழங்கப்படும்.

அடுத்தபடியாக ஆரிய வேதியர் தானதர்மம் பெறுவர் இருபது நாள்வரையில். ஜயின மதத்தாருக்கும் அங்ஙனமே இருபது தினங்கள் தர்மம் நடக்கும். அப்பால் ஒரு முப்பது நாள் ஏழை எளியவர், தாய் தந்தை யில்லாதார் முதலியோர் தானம் பெறுவர். இவ்விதம் வழங்குவதில் ஹர்ஷனது பொக்கிஷம் வறண்டுபோம். பின்னர் அம் மன்னர்மன்னன் தனக்குரிய ஆடை அணிகளையும் வழங்கத் தொடங்குவான். அதில் ஓர் ஆடை கூட மிஞ்சாது. உடனே தங்கை இராஜேசுவரியிடம் இரந்து ஓர் ஆடை பெறுவான். அரசன் அதனைத் தரித்து நின்று, அனைத்தையும் வழங்கி விட்டதாக ஆனந்தம் அடைவான். தனது ஆட்சிக் காலத்தில் அவ்விதம் ஆறு முறை அவன் தானதர்மம் செய்துள்ளான்.

மன்னவன் அங்ஙனம் தான தர்மம் வழங்க, நாட்டுப் பெருமக்கள் பலரும் துலாபார தானம் செய்வர். துலாபார தானம் எனின், ஒரு பெருமகன் ஏறிச் சவாரி செய்யும் யானை அல்லது குதிரையுடன் அவனை எடைபோட்டு, அந்த எடைக்குச் சமானமான பொன்னை வழங்குவதாம். அரசன் எப்படி அப்படியே மக்கள் அல்லவா? ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை தானதர்மம் செய்வதால் ஒரு சிலரிடமே செல்வம் குவிந்து கிடக்க வகை இராது; சாப்பாட்டுக்கு வகை இல்லையே என்று பலர் வாடி வதங்கவும் சந்

தர்ப்பம் நேராது. "பிறக்கும் பொழுது ஏதும் கொண்டுவரவில்லை; இறக்கும் போதும் உடன் கொண்டு செல்லப் போவதில்லை. இடைநடுவிலே கிடைத்த செல்வம் இது. இதுவும் எல்லாம் வல்ல ஆண்டவன் தந்தது. இதனை எல்லாருக்கும் ஈந்து இன்பம் அடைவோம்," என்னும் சமதர்மக் கொள்கையை எவரும் மேற்கொண்டிருந்தனர்.

தானேசுவரமே ஸ்ரீ ஹர்ஷனது தலைநகரம். தங்கை இராஜேசுவரியின் ராஜதானி கன்னோசி. அக் கன்னோசியிலேயே ஹர்ஷன் நீண்ட நாள் தாமதிப்பான். அவன் சபையில் பண்டிதர்களும், தத்துவ ஞானியரும், தர்க்க நிபுணரும், தயாபரரும், காவிய கர்த்தரும் நிரம்பி யிருப்பர். செவியுணவு பெறுவதில் அவனுக்குச் சிரத்தை மிகுதி. ஆதலின், அம்மேதாவியருடன் சதா அவன் சல்லாபம் செய்வான்; அல்லது அன்னவர் பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்வான். விக்கிரமார்க்கனது சபையேபோல் ஹர்ஷனது சபையும் நாமகளின் நல்லிடமாகத் துலங்கியது. அரசர்க்குரிய தகுதியனைத்தும் அவன் வாய்க்கப் பெற்றிருந்தது ஒரு புறம் இருக்க, கல்வி கேள்வியிலும் அவன் மகா பண்டிதன்; பல பாடல்களைக் கவனஞ் செய்தான்; சில நூல்களும் இயற்றினன். ரத்னாவளி நாடகம் அவன் எழுதியது.

ஹர்ஷன் காலத்திலே புத்த, ஜயின, ஆரிய வேத மார்க்கங்கள் மிகவும் பிரபலம். அவனிடம் சமய சமரஸம் குடிகொண் டிருந்தது. ஆதியில் அவன் ஆரிய வேத மார்க்கத்தைத் தழுவி நின்றான்; அப்பால் புத்த மதத்தில் புகுந்தான். அவன் கட்டிய ஆரிய ஆலயங்களும் புத்த விகாரங்களும் அனந்தம். புத்த மதத்தை முன்போல் பிரபலமாக்கவே அவன் பாடுபட்டான். ஆயினும் சமயச் சழக்கோ, மாச்சரியமோ அவன் கொண்டதில்லை.

ஹர்ஷனது தாயாதி ஒருவன் புஷ்யபூதி. இவன் ஆரிய வேத மார்க்கத்தான். ஹர்ஷனது தந்தையோ சூரியனையே முழுமுதல் கடவுளாகக் கொண்டவன்; தமையனும் தங்கையும் புத்த மத துரந்தரர்; ஹர்ஷனோ சிவபெருமான், சூரியபகவான், புத்தர் பிரான் மூவரையும் வந்தனைசெய்து வந்தவன்.


காமரூப நாட்டிலிருந்து ஹியூன்ஸங் வந்ததும், பண்டித மகாசபை யொன்று கூட்ட ஆசை கொண்டான் ஹர்ஷன். உடனே தேசமெங்கும் தூதுவர் சென்று, ஆங்காங்குள்ள பற்பல மதபோதகரையும் பரிந்தழைத்தனர். மதநூல் மேதாவிகள் ஆயிரக் கணக்கினில் வந்து குவிந்தார்கள். மிகப்பெரிய மண்டபமொன்று சமைக்கப்பட்டது. அதன் நடுவே பொன் மயமான புத்த விக்கிரகமொன்று அமைத்தனர். விக்கிரகம் இருந்த இடத்திலே நூறு அடி உயரமுள்ள கோபுரமொன்று எழுந்தது. சிற்றரசரும் சேனைத்தலைவரும் பெருமக்களும் புடைசூழ, ஸ்ரீ ஹர்ஷன் அம் மண்டபத்தில் வந்து அமர்ந்தான். பற்பல மத போதகரும் பாங்காக வீற்றிருந்தனர். ஹியூன் ஸங் சபாநாயகம் தாங்கி நின்றான். அனைவரும் வாசாமகோசரமாக வாதம் நிகழ்த்தினர்.

தினம் ஊர்வலம் நடக்கும். அழகிய தேரில் விக்கிரகத்தை வைத்து இழுத்துச்செல்வர். ஹர்ஷன் தூய வெண்மையுடை தரித்து, மேல்விதானத்தைத் தாங்கிச் செல்லுவான். அவன் மைத்துனன் இளவரசன் சாமரை இரட்டுவான்; சிற்றரசர் பலரும் பின்னே வருவர் பெருமிதமாக. பலவகை வாத்தியங்களும் முழங்காநிற்கும். ஊர்வலத்தின் முன்னே காசும் பணமும் முத்தும் பவழமும் தூவிச் செல்வர். ராஜவீதி யெங்கும் பவனி வந்த பின்னர், விக்கிரகத்தை மண்டபத்தில் இறக்கி வைத்து, தூப தீப

ஆராதனை செய்வர். ஊர்வலக்காட்சியும் பூஜைக் கிரமமும் நேத்திரானந்தம் விளைக்கும்.

இவ்விதம் சுமார் முப்பது அல்லது நாற்ப தாண்டு ஹர்ஷன் தேசக்காவல் புரிந்து வந்தான். இந்தியாவின் ஆதி சரிதத்தை ஒருவாறு எழுதி யுள்ள ஆங்கிலேயர் பலராவர். அவர்களில் ஒருவர் ஹாவல். அவர் எழுதி வைத்துள்ள நூலின் பெயர் 'இந்தியாவிலே ஆரியரின் ஆட்சி' என்பதாம்.

அவர் சொல்வது:—"உலக சரிதத்தை உற்று நோக்கின், எத்தேசத்தாரின் நாகரிகமும் முழுநிலை யடைந்தது என்று சொல்வதற்கில்லை. என்றாலும் ஏழாம் நூற்றாண்டிலே இந்திய நாகரிகம் ஈடும் எடுப்புமின்றி இருந்தது. முன்னாளிலும் சரி, இந்நாளிலும் சரி, உலகிலே எத்தேசமும் இந்திய நாகரிகத்தைப் போல் அவ்வளவு உச்சஸ்தானம் அடையவில்லை. எவ்வகையிலும், இந்திய நாகரிகத் துக்கே அக்கிரஸ்தானம் உரியது."



# 10. வேதிய வீரத் தகரன்

ஆதிகால தேசங்கள் ஐம்பத்தாறில் ஒன்று சிந்து. அங்கே சிந்து மாநதி பாய்கிறது. ஆதலின் தேசத்தினுக்கும் அப்பெயர் வந்தது. அது இந்தியாவின் வடமேற்கே யுள்ளது. பரசுராமன் தவம் புரிந்த தலம் அதுவே. துரியோதனாதியரின் மருமகன் **ஜயத்திரதன்** ஆண்ட நிலமும் அதுதான்.

கலியுகத்துக்கு முன்னிருந்தே கீர்த்தி வாய்ந்த தேசம் சிந்து. அன்றும் இன்றும் அங்கே போர் வீரர் அதிகம். ஞான வீரரும் அனந்தம். கோதுமை விளைவு மிகுதி. அங்குள்ள சுக்கூர்த் தேக்கம் ஜகப்பிரசித்தம். கராச்சி துறைமுகமும் அப்படியே.

அங்கே ஏழாவது நூற்றாண்டில் அரசு கொண்டோர் அந்தணர். அன்னார் புல்லே ஏந்துவோர் என்பதில்லை; அவசியம் நேரின், வில் ஏந்துவர்; வாள் தரிப்பர்; வீரம் விளைப்பர்; வீறு கொள்வர்; வாகை சூடுவர்; தவிர செங்கோலும் தாங்குவர்; இதற்கு அத்தேச பூபதியான சகசர்மனும் அவன் குலத்தாருமே தக்க சாட்சி.

**சகசர்மன்** சிம்மாசனம் ஏறிய வருஷம் கி. பி. அறுநூற்று ஐம்பதாம் ஆண்டு. அவன் அரசு கட்டில் ஏறியதும், கிட்டியது துணைவலி; கிளர்ந்தது தோள்வலி; கூடியது திக்கு விஜயம். சிந்துவின் வடக்கெல்லையோ காஷ்மீரத்தைத் தொட்டது. தெற்கெல்லை அரபிக் கடலாயிற்று. அரசு பெருகவே, ஆட்சி ஓங்கியது; சீர் நிரம்பியது; செல்வம் திரண்டது; இங்ஙனம் இருபத்தைந்து வருஷம் இனிய அரசு நடத்திவந்தான் அந்நிருபன்.

**அரேபியா** என்பது ஒரு தேசம். அத் தேச மக்களை அரபியர் என்பர். இந்தியாவுக்கு மேற்கே

சிந்துவை யடுத்த தேசம் அக்காலத்திலே அரபியர்களுக்குச் சொந்தம். சிந்துவையும் பிடிக்க அவர்களுக்கு ஆசைதான். ஆனால் சகசர்மன் வெற்றிப் பிரதாபம் குறுக்கே நின்றது. எனவே, அந்த ஆசை கைகூட மார்க்கமில்லை. சமயம் பார்த்து நின்றனர் அரபியர். கி. பி. 679-ம் ஆண்டு அச் சகசர்மன் கண்மூடினன். உடனே அவன் மைந்தன் **தகரன்** தரணிபதி யாயினன்.

தகரனது காலத்திலே சிந்து தேசத்தின் தலைநகரம் **ஆலோரம்**. இப்போது அந்நகரம் மறைந்து விட்டது. அப் பெருநகரம் நிலைநின்ற அறிகுறிகள் மட்டும் ஆங்குள. அதற்கு ஈடான இன்னொரு நகரம் **தேவலம்**. இதுவும் மறைந்து விட்டது. காரணம் எட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஏற்பட்ட பூகம்பமே. அதனால் சிந்து நதியும் இடம் மாற நேர்ந்தது. அப் பூகம்பம் கிடக்கட்டும், ராஜகம்பம் நிகழ்ந்ததை இங்கே கூறுவோம்.

காலங்கருதி நின்ற அரபியருக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அதன் விவரம் ஈதாம் :—

தகரன் காலத்திற்குச் சிறிது முன்புதான் தோன்றியது இஸ்லாமிய மார்க்கம். அம்மார்க்கம் தோன்றிய இடம் அரேபியா. அரபியர் வர்த்தகத்தில் சிறந்தோர். அன்னவர் இலங்கைத் தீவுக்கு வியாபாரம் கருதிச் சென்று, அங்கே தங்கள் சமயத்தையும் மக்களிடையே பரப்பினர்.

இலங்கை இஸ்லாமியர் அரேபியா செல்வது வழக்கம். காரணம் மத யாத்திரை. **மக்கம், மதினம்** என்னும் இஸ்லாமிய புண்ணிய க்ஷேத்திரங்கள் இரண்டும் அந்த அரேபியாவில் உள. ஒரு சமயம் அரேபியஅரசருக்கு இலங்கையிலிருந்து காணிக்கை போயிற்று. அப்போது கடல் காற்று கனமிகுதி; கடலின் கொந்தளிப்பு மிக ஜாஸ்தி; காணிக்கை

கொண்டுசென்ற கப்பலோ தள்ளாடித் தள்ளாடி ஒருவாறு தேவல நகரின் துறைமுகம் சேர்ந்தது.

அத்துறைமுக நகரினைச் சுற்றிலும் சதுப்பு நிலங்கள். அவை கடல் கொள்ளைக்காரரின் வாச ஸ்தலம். காணிக்கைக் கப்பலை அவர்கள் கொள்ளை கொண்டு, கப்பலில் வந்த மக்களையும் சிறை செய்தனர். துறைமுக அதிகாரிகளுக்கு அது செய்தி தெரியாது. தெரிந்தும் என்ன? கள்ளன் பெரியவனோ, காப்பான் பெரியவனோ? அச்சம்பவத்தை வியாஜமாகக் கொண்டனர் அரபியர்.

சிந்துவுக்கு அயலகம் பெலுச்சிஸ்தானம். முன்னம் இது அரேபியாவுக்கு உட்பட்டிருந்தது. இதன் தலைவன் பெயர் ஹஜ்ஜாஜ். அரேபியாவின் அரசனுக்கு எழுதினன் அத்தலைவன் ஓர் ஓலை. உடனே சிந்து தேசத்தின்மீது தண்டுகொண்டு செல்ல வேண்டுமென்று தண்டோரா எழுந்தது. படையெடுப்பு என்றதும், வந்து குவிந்தனர் இஸ்லாமிய வாலிபர். **முகம்மது காசிம்** என்பான் படைத் தலைமை பூண்டான். நிலப்படையும் நீர்ப்படையும் புறப்பட்டன. திடீரென்று தேவல நகரைச் சூழ்ந்து கொண்டான் அக் காசிம்.

அந்நாளில் சிந்துவிலே புத்த மதத்தார் மிக அதிகம். தேவல நகரின் அதிபன் **புதன்** என்பவன். இவனும் புத்த மதத்தான். மக்களிலும் பெரும்பாலார் பௌத்தர். பகைப்படையைக் கண்டதும், புதன் ஓட்டமே பிடித்தான். அதனல் காசிமின் வசமாயிற்று அந் நகரம். உடனே நகர ஆடவர் வாளுக்கு இரையாயினர். பெண்டிரோ அடிமைகளாகி, அரேபியா தேசம் போயினர். நகரோ கொள்ளைக்கு ஆளாயிற்று.

பின்பு அக்காசிம் நோக்கிச் சென்ற இடம் பிராமணபதம். இதன் தலைவனும் புத்த மதத்தான்.

இதன் மக்களோ மாற்றானுக்கு இடங்கொடுக்கக் கூடாதென முனைந்தனர். அவ்வதிபன் சம்மதிக்க வில்லை. அவன் நேரே காசிமிடம் சென்று, அடி பணிந்து உயிர்ப்பிச்சையே வேண்டினான். மக்கள் யாது செய்வர்? பகைவன் கையில் சிக்குண்டது அந்நகரம். கொள்ளையும் கொலையும் நேராவிடினும் ஆலயம் இடியுண்டது. அந்த இடத்தில் உடனே ஒரு மசூதி தோன்றியது

அப்பால் **சிபிஸ்தான**த்தை நோக்கிச் சென்றான் காசிம். அந்நகரத் தலைவன் பெயர் **வத்ஸராஜன்.** இவன் தகர வேந்தனது தம்பி மைந்தன். மாற்றானுடன் இவன் மல்லுக்கு நின்றான். நகர மாந்தரில் பலரும் பௌத்த சமயிகள். அன்னார் தம் தலைவனை அணுகி, "அரசே! நாங்கள் பௌத்தர். எங்களது கொள்கையோ அஹிம்சை. போரென்றால் உயிர்க் கொலைதானே. இதற்கு நாங்கள் ஒருப்படோம். அரபியருடன் ஏன் சண்டை? சமாதானம் செய்து கொள்வோம்," என்றனர்.

வீர வத்ஸ ராஜன் அக்கோழைச் செயலுக்கு ஒப்பவில்லை; வருவது வருக என்றே போர் புரிந்தான். இரு பக்கத்திலும் மிகுந்த உயிர்ச் சேதம் உண்டாயிற்று. பார்த்தனர் பௌத்தர்; வைரிக்கு விடுத்தனர் ஓலை; கூறினர் உளவு. உயிர்நிலையான இடங்கள் காசிமின் கையில் சிக்குண்டன. துரோகம் நேர்ந்தும் வத்ஸராஜன் சிறிதும் கலங்கவில்லை; துணைவலி பெறவும், வைரியை வேறிடத்தில் எதிர்க்கவும், தந்திரமாகப் பின்வாங்கினான்.

உடனே பௌத்தசமயிகள் அக் கோட்டைக் கதவுகளைத் திறந்து, காசிமை வரவேற்றார்கள் கைகூப்பி நின்று. அதனால் புத்த சமயத்தாரின் வீடுகள் மட்டும் தப்பின. மற்றையோரின் மனைகள் மண்ணோடு மண்ணாயின. பின்பு கிட்டிய கொள்ளைப்

பொருள்கள் ஐந்து கூறுக்கப்பட்டன. ஒரு பாகம் அரேபிய அரசனுக்குப் போயிற்று. மற்றவை காசிமுக்கும் அவன் வீரருக்கும் சிக்கின.

பின்வாங்கிச் சென்ற வத்ஸராஜன் வாளா இருக்கவில்லை; படையுடன் வந்து பூதியா நகரில் காசிமை எதிர்த்தான். அங்கே பெருஞ்சமர் மூண்டது. அதில் பலர் மடிந்தனர். பாரதபுத்திரரின் வீரச் செயல் அங்கே புலப்பட்டது. முகம்மது காசிம் மனங்கலங்கி மதியும் தளர்ந்தான்; முடிவு யாதாகுமோ என்றும் நடுங்கினான். தகரனது புறப்பகை பொன்றுஞ் சமயம், உட்பகை உதித்துவிட்டது.

இது தேசத்தின் சாபத்தீடு போலும்! பூதியா நகரில் வாழ்ந்த பௌத்தர் வத்ஸராஜனைக் கை விட்டுக் காசிமின் பக்கம் சேர்ந்துகொண்டனர். அப் போதும் வத்ஸராஜன் மனந் தளராமல், முன்னையி லும் மும்மடங்கு மொய்ம்புடன் போர் முறுக்கினான். அரபியரில் பலர் அந்தகனுலகு போயினர். வத்ஸ ராஜனுக்கு உடம்பெங்கும் காயம். ஆவிபோகும் வரையில் அவன் வாளாயுதம் பலரைப் பலி கொண் டது. வெட்டுண்டு வீழ்கையிலும், அவன் உடை வாள் இருவரை ஒரே வீச்சில் வீழ்த்தியது. முடிவில் முகம்மது காசிம் வாகை சூடி, நகரினுள்ளே புகுந் தான். முன்னைய நகரங்களின் கதியே பூதியாவுக்கும் நேர்ந்ததெனல்வேண்டும்.

சிந்துமாநதி அங்கே தென்வடலாக ஓடுகின் றது. அதன் மேற்கேயுள்ள நகரம் யாவும் அரபி யரின் வசமாயின. கிழக்கே வரவேண்டுமாயின், நதியைக் கடத்தல் வேண்டும். அந்நதியோ மிகவும் விசாலம்; ஒரு மைல் அகல மிருக்கும். நதியைக் கடக்க முகம்மதுகாசிம் சிந்தனை செய்து நின்றான். வேதிய வீரத்தகரனோ நதியின் கீழ்ப்புறம் படைகளை அணிவகுத்து, வலதுபக்கம் தன் மைந்தன் ஜயசீலனை

அமர்த்தினன்; சமர் தொடுக்கவும் சமயம் பார்த்தான். தகரனிடம் பாரவில்லொன்று உண்டு. அதனை யசைக்க ஒருவராலும் ஆகாது. அதனை நாணேற்றி அக்கரையில் இருந்த ஒரு பகைவீரன்மீது பாணம் தொடுத்தான் தகரன். உடனே அவ்வீரன் சிரம் அறுப்புண்டு தரையில் விழுந்து புரண்டது. கவந்தமோ உடனே எழுந்து கூத்தாடியது. அதுகண்ட காசிம், "ஈதென்ன விந்தை! நதியோ ஒரு மைல் அகலம். இத்துணை தூரம் குறி பார்த்து எய்யும் வீரன் யாவன்?" என்று மனங்குலைந்தான். தகரனது தீரத்தையும் பலர் அக்காசிமுக்கு எடுத்துச் சொல்லினர். அது கேட்டதும் திகைப்பு மிகுந்து, தெய்வமே கதி என்று நின்றான் அக்காசிம்.

அந்நிலையில், **மோகவசியன்** என்னும் துரோகி யொருவன் தோன்றினன். அவன் தகரனது அதிகாரிகளில் ஒருவன். அவன் காசிமை யடைந்து, ஆற்றினைக் கடக்கப் படகுகள் தேடிக்கொடுத்தான்; இலகுவில் ஆற்றைத் தாண்டக்கூடிய இடத்தையும் சுட்டிக் காட்டினன். மோகவசியனது துரோகம் ஒற்றர் மூலம் தகரனுக்குத் தெரியவந்தது. ஆதி முதல் துரோகம் நிகழ்வது கண்டு தகரன் பெரிதும் வருந்தினன்; ஆயினும் அஞ்சினனில்லை.

அரபியரோ ஆற்றைக் கடக்கத் தலைப்பட்டனர். அங்கே காவல் புரிந்து நின்றவன் **ஜயசீலன்**. அரபியரின்மீது அவன் ஓயா அம்புமழை தொடுத்தான்; தனக்குரிய வீரமெல்லாங் காட்டி அவர்களை வழிமறித்தான். பக்கபலமாக நின்றோர் பகைவன் பக்கம் போய்விட்டனர். என்றாலும் ஜயசீலன் தளராது சமர் செய்து நின்றான்; புறங்காட்டி ஓட ஒருப்படாமல் சுவர்க்கம் புகவே முனைந்தான்.

இளவரசனது ஆபத்தை உணர்ந்தான் மாவுத்தன். ராஜகுமாரனது முடிவைக் காண அவனுக்கு

மனமில்லை; உடனே தனது குஞ்சரத்தை வினவுவான்போல், "தப்பிப்போகச் சித்தம் உண்டோ?" என்றனன். அதுகேட்டதும், ஜயசீலன் "அது எங்ஙனம்?" என்றான். அரசிளஞ் சிங்கத்தை இழக்க அவனுக்குச் சகிக்கவில்லை. உடனே அங்குசங்கொண்டு யானையைக் குத்தினான் பாகன். அந்த மிருகமோ வீறிட்டு ஓடத் தலைப்பட்டது. அது சமயம், தந்திரமாக யானையைத் திருப்பித் தகரனிடம் மைந்தனைச் சேர்த்தான் மாவுத்தன்.


பின்பு இரு பக்கத்துப் படைகளும் சந்தித்தன. தகரன் சேனையோ தீரமுடன் நின்றது. ஆயிரம் யானை வீரர், ஐயாயிரம் பரி வீரர், இருபதாயிரம் வில் வீரர், எண்ணிறந்த காலாளர் இவர்கள் தகர வேந்தனுடன் நின்று, "ஒன்று வெற்றிமாலை சூடுதல், இன்றேல் வீரசுவர்க்கம் புகுதல்" எனும் முடிவு கொண்டனர். அணிவரிசையின் முன்னிலையிலே நின்று தகரன் சமர் மூறுக்கினன். கொடும்போரில் உயிர்ச் சேதமோ சொல்லி முடியாது. குஞ்சரத்தின் மீதமர்ந்து மிக ஆவேசமாகப் போர்புரியும் தகர வேந்தனைக் கண்டு தளர்ந்து போனான் அம் முகம்மது காசிம்.

தகரன் வீசும் சரம் ஒவ்வொன்றும் அரபியரில் அநேகரை உயிர் குடித்தது. "மோகவசியனைப் போன்ற பல துரோகிகளின் பக்கபலம் பெற்றும் பலிக்க வில்லையே! ஆழந் தெரியாமல் காலிட்டுக் கொண்டோமே! கிடைத்த வெற்றியும் கைதவறும் போலுளதே! வந்த வழி நோக்கிப் போய்விடுதலே மேலாம்" என்று பலவாறாக முகம்மது காசிம் கருதலானான். அதுசமயம் புதிய துரோகி தோன்றி அக்கினிமுக பாணமொன்று விடுத்தான்.

அந்த அம்பு வந்து, தகரனது யானையின் மீது தீ மூட்டிவிட்டது. தன்மீதிருந்த அம்பாரி பற்றிக்

கொள்ளவே, குஞ்சரம் கலங்கிவிட்டது. தீயின் வெம்மையை அது தாங்க முடியவில்லை. அருகே யிருந்த நீர்நிலையில் அது விழலாயிற்று. தகரன் தரையில் விழுந்தும் தளராமல் உடைவாளை உருவிக்கொண்டு உருத்து எழுந்தான்; தன்னைக் கொல்ல வந்த அரபியரை எல்லாம் வாளுக்கு இரை யாக்கினன்; முகம்மது காசிமை நோக்கிப் பாயலா னன். விதியோ வேறுவிதம் எண்ணியது. இந்நிலை யிலும் துரோகமே நிகழலாயிற்று.

அத் துரோகத்தின் விளைவையும், தகரனது தேவி சவியாப் போர் புரிந்ததையும், தகரன் மகளிர் பழிக்குப்பழி வாங்கியதையும், மாதர் பலர் தீக்குளித் ததையும், அடுத்த அதிகாரத்தில் படிக்கலாம்.



# 11. தேவியரின் விருப்பு

**சிந்து பூபதி வேதிய வீரத்தகரன் வீரனாகவே வாழ்ந்தான்;** வீரனாகவே போர்க்களத்தில் வீழ்ந்தான். அத் தார் வேந்தன் வீர சுவர்க்கம் நோக்கியதும், எண்ணிறந்த பொருள்களை அரபிய வீரர் கொள்ளை கொண்டனர். பரி, கரி, ஆடை, அணி, ஆடு, மாடு இவற்றிற்கு ஒரு கணக்கில்லை. இம்மட்டோ?

தகர வேந்தனது சிரம், தளகர்த்தரின் சிரம் இவையும் கொள்ளைப் பொருள்க ளாயின. அந் நாளைய வழக்கம் வெகு விபரீதம். பகைவரில் ஆடவரையும் பெண்டிரையும் சிறை செய்தல் தவிர, அடிமையாகவும் பிடித்துச் செல்லுவதுண்டு. அவ் விதமே தகரன் மனைவி, குமாரிகள், சிற்றரசரின் தேவியர் ஆகிய இவர்கள் சிறையானார்கள். அரபிய அரசனது அந்தப்புரத்துக்கும் அவர்கள் சென்று அங்கே வாழ நேர்ந்தது.

அரபியர் படைகொண்டு வந்த சமயம், தகரன் சேனையில் ஐந்நூறு அரபியர் சேவித்து நின்றனர். போர் மூண்டதும், அன்னவரின் மத உணர்ச்சியும் மூண்டது. அனைவரும் வேந்தன் சமூகம் சேர்ந்து, "அரசே! தங்களிடம் நாங்கள் அடைந்த அன்பும் ஆதரவும் அபரிமிதம். அவற்றை என்றும் மறவோம். ஆனால் மதக்கோட்பாடு குறுக்கே வந்து நிற்கிறது. எனவே எங்கள் மதத்தினருக்கு எதிராகப் போர் புரியோம். அன்னை போன்ற தங்களுக்கு மாறாக வும் சமர் செய்யோம். தர்ம சங்கட நிலை எங்களது; மன்னிக்க வேண்டும். விடை தாருங்கள். வேற்று நாடு செல்கிறோம்," என்று பேசினர்.

தகரவேந்தன் அதுகேட்டு, "வீரர்காள்! உங்களது கருத்தை உணர்ந்தேன்; சமயக் கோட்பாட்டை

யும் அறிந்தேன். சந்தோஷம்! உங்கள் இஷ்டம். எதிரியின் பக்கம் சேர்ந்து கொள்ளினும், உங்கள் நேர்மையை நினைப்பேன். வேண்டுமிடம் செல்க. சுகமே வாழ்க!" என்று விடை கொடுத்தான். ஐந் நூற்றுவரும் உடனே வேற்று நாடு போயினர். சண்டையிலே எந்தப் பக்கமும் அவர்கள் சேர வில்லை. அரபிய வீரரின் மன நிலை இது. மோக வசியன் போன்றோரோ உண்டவீட்டிற்கும் இனத் தாருக்கும் இரண்டகம் நினைத்தனர்!

அருஞ்சமரில் வீரத்தகரன் ஆருயிர் நீத்ததும், ஜயசீலன் கங்கணம் பூண்டான் போரை நடத்த. தேசம் அன்னியர் வசம் ஆகாமல் காப்பதே அவன் கருத்து. போர்நூலின் உபாயத்தை மதித்து, இரவிபுரம் சேர்ந்தான் அம்மைந்தன். அந்நகரின் கோட்டை கொத்தளங்கள் பழுதுண்டு கிடந்தன. ஆதலின் அங்கிருந்து பகையை எதிர்க்க இயல வில்லை. அதற்கு வெகு தொலைவிலுள்ள பிராமண பதம் என்னும் பெருநகரம் பலவகை அரண் பலம் வாய்ந்தது. ஆதலின் பிராமணபதம் சேர்ந்து எதிரி யின் வரவை எதிர்நோக்கி நிற்கலானான்.

வீரத்தகரன் தேவியரில் ஒருத்தி **தேவிபாய்.** அவள் மானமே பூஷணமாகக் கொண்டவள். இரவி புரத்தை விட்டுச் செல்ல, அவள் விரும்பவில்லை; "கணவன் உயிரைக் கவர்ந்த பகைவனைப்பழிவாங்க வேண்டும். இன்றேல் ஒரே இரணகளத்தில் உயிர் துறக்கவேண்டும்" என்று துணிவு கொண்டாள். அரசியின் உறுதி கண்டு, ஐயாயிரம் வீரர் துணை நின்றனர். காசிம் தனது படையுடன் வந்து, அந் நகரைச் சூழ்ந்துகொண்டான். நெடுநாள் இரவு பகல் ஓயாமல் கனத்த சண்டை நிகழ்ந்தது. தேவியரின் உயிர்த்துணைவர் உருத்து நின்றனர். உயிர்ச்சேதம் அதிகம். தேவியின் சேனை வரவரக்

குறைந்துகொண்டே வந்தது. எதிரியின் சேனையோ பெருத்து வந்தது. தேவியின் வீரர் பலரும் மாய்ந்து போயினர். எஞ்சி நின்றோர் ஒரு சிலரேயாம். இந் நிலையிலும் எஞ்சிய துணைவருக்கு முன்னே நின்று, இயன்றவரையில் போரை நடத்தினாள் அத்தீர மாது. முடிவிலே வேறு வகையில்லை; பகைவன் கையில் சிக்கவும் மனமில்லை; மாதரின் மானத்தைக் காக்கும் கவலை மிஞ்சியது; ஆதலின், நகரில் இருந்த மாதர் அனைவரையும் அழைத்தாள்; மாளிகை யொன்றில் அடைத்தாள்; தானும் புகுந்தாள்; வீர னொருவனை விளித்து அம்மாளிகைக்குத் தீயிடச் சொன்னாள்.

"உயிரினும் சிறந்த கற்பைக் கைவிடுவதோ? நகரம் பாழடைவதைக் கண்கொண்டு காண்பதோ? தீக் கடவுளைச் சரண் புகுதலே மேலாம்," என்று துணிந்தனர் அத்தனை மாதரும். அரசியின் ஆணை சீறி நிற்கவே, தீ வைத்தான் வீரன் விதியின்றி. அனைவரும் வெந்து சாம்பலாயினர். பின்னரே, முகம்மது காசிம் அந்நகரினுள் புகுந்து வழக்கம் போல் கொள்ளைகொண்டு ஆடவரை வாளுக்கு இரை யாக்கினான்; தப்பி நின்ற பெண்டிரை அடிமை கொண்டு பிராமணபதம் நோக்கலானான்.

காசிமின் வருகை கண்ட ஜயசீலன் அந் நகரைத் தக்க காவலில் வைத்து வேற்றிடம் சென் றான். ஆயிரக்கணக்கான வீரர் ஆண் சிங்கமே போல் நின்று, அன்னியனை எதிர்த்தனர். ஆறு மாதகாலம் சண்டை நடந்தது. ஜயசீலன் தன் துணைவருடன் கூடிப் பின்பக்கமிருந்து காசிமைத் தாக்கிவந்தான். முன்பக்கம் பிராமணபத வீரரின் வீச்சு! பின் பக்கமோ ஜயசீலனது தாக்கு! முகம்மது காசிம் வேசாறிப் போனான்.

அச்சமயம், மோகவசியன் என்னும் துரோகி தலைகொடுக்க வந்து, காசிமுக்கு உளவுகள் கூறி,

உயிர் நிலையான இடம் காட்டினான். உடனே ஜய சீலன் முறியுண்டான். பிராமணபத நகரும் பணிந்தது. புகுந்தான் காசிம் நகரினுள்ளே; கொண்டான் கொள்ளை; கொளுத்தினான் கொடுமை; குலைத்தான் வீரரை; சிறையிட்டான் மாதரை. அம் மாதரில் இருவர் தகரன் மகளிர்; கன்னிகழியாக் காரிகையர்; அழகின் வடிவம். இருவரும் அரபிய அரசனுக்குக் காணிக்கையாக அனுப்பப்பட்டனர்.

பிராமணபதமே சிந்து தேசத்தில் முக்கிய நகரம். அது வசமானதும், சிந்து தேசமே வசமாய் விட்டதென்னலாம். அந்நகரில் காசிம் நெடுநாள் தங்கி, அரசியலை ஒழுங்குபடுத்தினான். அந்நாளில் அரசிலே பதவி வகித்த பலரும் அந்தணரே. அவர்களை வருவித்து வினவினான் காசிம். அவர்களோ "வீர! எங்கள் இனத்தாரில் பலர் பார்த்திபனது பரகதி கண்டு, தாமும் பரகதியே போயினர். எஞ்சியிருப்போர் நாங்களே. நாங்களும் நினது புதிய அரசின் போக்கை நோக்கி, வாழ்வதா வீழ்வதா என்று முடிவு கட்ட உத்தேசம்" என்றனர்.

காசிம் அது கேட்டு, "அந்தணர்காள்! உங்கள் இனத்தாரின் இராஜபக்தியும் தேசபக்தியும் மெச்சத்தக்கன. உங்களில் பலர் உயிர் விட்டது கேட்டு வருந்துகின்றேன். எஞ்சியுள்ள உங்கள் உதவி தேவை. முன்போலவே அரசியல் நடக்கும். இம்மியும் மாற்றம் இராது. மனக்கலக்கம் வேண்டாம். விசுவாசத்துடன் தேச ஊழியம் புரியுங்கள்," என்று வேண்டிக் கொண்டான்.

அவன் சொல்லிய வண்ணமே அரசு நடந்து வந்தது. பழைய ஒழுங்கை அவன் மாற்றவில்லை; மத விஷயத்திலும் தலையிடவில்லை. போர் புரிகையில் அவன் கொடுமை இழைத்தனன்; ஆயினும் பின்னரோ அமைதியே பூண்டான்; ஆனால், போர்

வீர வகுப்பினரை மட்டும் அடக்கியே வைத்தான். அன்னோர் பின்னர் வைரமே கொண்டு கிளம்புவர் என்னும் அச்சம் போலும்!

அதன் பின்பே, காசிம் என்பான் மூலஸ்தான நகரை நோக்கினன். இடை நடுவே ஆலம் என்று ஒரு நகரம் உண்டு. இங்கே தகரன் மைந்தன் ஒருவன் இருந்தனன். இருவருக்கும் போர் மூண்டு, சின்னாள் நீடித்தும் நடந்தது. பௌத்த சமயிகளோ உயிரே பெரிதென எண்ணி, மோகவசியனைப் பின் பற்றி, அன்னியனிடம் சரண் புகுந்தனர். தகரன் மைந்தனோ கலங்காமல் நின்று போர் புரிந்தான். அவனும் துணைவரும் இறந்துபட்ட பின்னரே, அந் நகரம் காசிமின் வசமாயிற்று.

பின்பு அரபித் துருப்புகள் மூலஸ்தானத்தை நோக்கிப் போயின. அங்கே தகரன் தம்பி மைந்தர் இருவர் இருந்தனர். ஒருவன் புகுந்தராவ். மற்றவன் வத்ஸராஜன். இருவரும் ஆவேசமாகச் சமர் செய்தனர். இரண்டு மாத காலம் சண்டை நடந்தது. அங்கும் மோகவசியன் தோன்றினன். அதனால் அரபியர் கைமேலாகி விட்டனர். ஆயினும் போர் வீர வகுப்பினர் ஒருவர் தவறாமல் வெட்டுண்டு வீழும் வரையில், நகரினுள்ளே காசிம் புகமுடியவில்லை.

சிந்து தேசம் அனைத்தும் அவ்விதம் அன்னியர் வசமாகி விட்டது. வெற்றிமேல் வெற்றிபெற்ற காசிம் அயலகமான கன்னோசி நாட்டின் மீதும் கண் வைத்தான்; "ஆருயிரை மதித்து, அடிபணிந்திடுக. சிந்து தேசத்தின் கதி பார்," என்றும் கன்னோசிக் காவலனுக்கு ஓலை போக்கினன். அக் காவலனோ, "வீர! வாயால் பேசி என்ன பயன்! வாள்முனையில் நாம் பேசிக்கொள்வோம். இதுவே வீரருக்கு அழகு," என்று பதில் விடுத்தான். வீரக் காசிமுக்கு ஆவேசம் பிறந்தது. கன்னோசியையும்

கைவசஞ் செய்யலாம் என்று ஆயத்தம் பலவும் செய்தான். இதற்கு இடையில் காசிமுக்கு நேர்ந்தது முடிவு. அதன் விவரம் வருமாறு :—

தகரனது மகளிர் இருவர் அரபிய அரசனது அந்தப்புரத்துக்கு அனுப்பப்பட்டனர் அல்லவா? இருவருக்கும் பழி வாங்கும் எண்ணம் மிகுந்தது. ஆரிய அரச மங்கையரின் அழகின் நலம் பருக வந்தான் அரபிய அரசன். அது சமயம், மங்கையர் இருவரும் முகமலர்ச்சியின்றி வாடிக் கிடந்தனர். தந்தையை இழந்த துயரம் ஒரு புறம் ; பகைவனிடம் சிறைப்பட்டது ஒரு புறம் ; பிறனுக்குப் பெண்டாக நேர்வது ஒரு புறம் ; பழி வாங்கும் கவலை ஒருபுறம்.


அது கண்ட அரசன், "ஆருத் துயரமேன்?" என்று வினவினன். "அரசே! அரசனை அடைவதில் ஆனந்தமே. ஆனல் ஒன்று. ஆண்டவனுக்கு உரிய மலரை மனிதர் முகர்வதோ? அரசனுக்கு உரிய பொருளில் அதிகாரி மனம் வைப்பதோ? அப்பழியைத் தீர்த்த பின்னரே, இன்பம் துய்க்க இசையும் எங்கள் மனம்" என்று சொல்லினர் இரு மகளிரும். அவ்வளவுதான் தாமதம்! பெருஞ் சினம் பூத்தது பார்த்திபனுக்கு. "காசிமைப் பேழையில் வைத்துப் பூட்டிக் கொணர்க" என்று அவன் கட்டளையிட்டான்.

அது சுக்ரீவ ஆக்ஞைதான்! உடனே தூதுவன் விரைந்தான் காசிமிடம். கன்னோசி நோக்கிக் காசிம் புறப்படும் சமயம், வந்தது அத் தாக்கீது. அது கண்டு காசிம் தயங்கவில்லை ; கன்னோசியைப் பிடிக்கவில்லையே என்றுதான் கவன்றான். ஓலையில் கண்ட வண்ணமே பேழையில் புகுந்தான் அப் பெருவீரன். சிந்து தேசத்திலிருந்து பாக்தாத் நகரம் செல்ல நாட்கள் பல பிடித்தன. பாக்தாத் நகரில் பேழையைத் திறந்துபார்க்கையில், அப் பெருவீரன்

பிணமாய்க் கிடந்தான். பார்த்தனர் இரு மகளி ரும் ; பழி ஆறினர்; உடனே பெருமூச்சு விட்டனர்; பறந்துவிட்டது உயிர். இருவரும் பிணமாய் நிலத் தில் விழுந்தனர். பிரமித்தான் பார்த்திபன்.

சிந்து தேசத்தை அரபியர் முழுதும் ஜயித்த வருஷம் கி. பி. 712. அப்பால் மூன்று நூற்றாண்டு வரையில் அங்கே அவர்களின் ஆட்சிதான். அப் பால் கஜனி முகம்மது என்பான் 1025-ஆம் ஆண்டு அதனைக் கைக்கொண்டான். ஏழாம் நூற்றாண்டின் இறுதியில்தான் இங்கே முதன் முதலாக இஸ்லா மியர் தோன்றினர். தோன்றிய இடம் சிந்து தேசம். அதுமுதல், சிந்துவிலே இஸ்லாம் தலைதூக்கத் தலைப்பட்டு நாளடைவில் பெருகியது.

அங்ஙனம் ராஜகம்பம் நேர்ந்தது ஒருபுறம் இருக்கட்டும். எட்டாம் நூற்றாண்டில் பூகம்பமும் தோன்றியது. பல புராதன நகரங்கள் மறைந் தன. சிந்துமாநதியின் போக்கும் திரிந்தது. மக்க ளிலே சிலரின் துரோக சிந்தை கண்டு, பூதேவியின் வயிறு வெடித்தது போலும்! அல்லது பின்னால் இப் பூமிக்கு நேரப்போகும் நிலை கண்டு பெருமூச்சு விட் டனள் போலும்!



## 12. கார்க்கோடக முக்தாபீடன்

இந்தியாவின் தேசங்களோ பலவாம். அவற்றில் ஒன்று காஷ்மீரம். குங்குமப்பூ அங்கே மிகுதி. திராட்சைப் பழமும் ஏராளம். வேலைப்பாடான சால்வைகளும் விசேஷம். காஷ்மீர சால்வை காசினி யெங்கும் பிரசித்தம். காஷ்மீரம் என்றால், வடமொழியில் குங்குமப்பூ என்றே பொருள்.

காஷ்மீரதேசம் இந்தியாவின் வடமேல் கோடியில் உள்ளது; இரு பெரிய குன்றுகளின் இடையே ஒரு பள்ளத்தாக்கில் அமைந்தது; இயற்கை வனப்பு மிகுந்தது; ஈசுவர சிருஷ்டியின் விநோதம் வாய்ந்தது; உலகிலே மிகவும் மேலான கோடை வாசஸ்தலம். அங்கே ஒரு சிறு மலை பேடமலை. அதுவே கங்காநதியின் உற்பத்தி ஸ்தானம். விதஸ்தை எனும் நதி அத்தேசத்தை வளம்படுத்தும்.

அத்தேசம் பல பண்டிதர்களின் பிறப்பிடம். பண்டித ஜவஹர்லாலின் மூதாதையர் வாழ்ந்த இடம். அங்குள்ள அந்தணர் பலரும் பண்டிதர். மக்களோ மிக்க வனப்பு வாய்ந்தோர்; மகா பலிஷ்டருமாவர். குனட்டிய வமிசத்தார் பல்லாண்டு பல்லாண்டாக அங்கே ஆண்டு வந்தனர். எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலே கார்க்கோடக வமிசத்தார் தோன்றி அங்கே அரசாளத் தொடங்கினர்.

கார்க்கோடகரில் மிகவும் சிறந்தவன் முக்தாபீடன். அவனது மறு பெயர் இலலிதாதித்தன். கி. பி. எழுநூறும் ஆண்டிலே அவன் அரியணை ஏறினான். பரந்த அரசின்றேல், பார்தனில் புகழேது? சந்திர குப்தன், சமுத்திர குப்தன் இவர்களின் எடுப்பை மனக்கண்கொண்டு நோக்கினான் முக்தாபீடன். உடனே அவன் சேனசமுத்திரம் பொங்கி

எழுந்தது. நாற்றிசையிலும் திக்விஜயம் செய்ய அவன் புறப்பட்டான். **ராஜதரங்கிணி** என்பது காஷ்மீர வேந்தரின் சரித்திர நூல். அதன் ஆசிரியன் **பில்ஹணன்** எனும் கவிஞன். அவன் திக்விஜயத்தை அந்நூல் விரித்துக் கூறும்.

மூக்தாபீடன் முதன்முதல் கன்யகுப்ஜத்தின் மீது கண்வைத்தான். அக் கன்யகுப்ஜத்தின் மறு பெயர் கன்னேசி. அதன் காவலன் **யசோவர்மன்.** இவன் மகா பலவான்; பெரு வீரன்; திரண்ட சேனை படைத்தவன். இருவரும் சீறிப் புகுந்தனர் ரணரங்கத்தில். நிகழ்ந்தது மிகக் கொடிய யுத்தம்; நடந்தது நீண்டநாள்; உருண்டன தலைகள்; ஓடியது இரத்தம்; எழுந்தன கவந்தம்; வந்தன கழுகினங்கள்; சிதறின நிணங்கள்.

அந்நிலை பார்த்தான் யசோவர்மன். பயமே கொண்டு ஓடினன் முதுகுகாட்டி. தோற்றோடிய வேந்தனை மூக்தாபீடன் துரத்தவில்லை; நாட்டையும் பறிக்கவில்லை; பொறுத்து நின்றான். ஒரு தினம் யசோவர்மனது சமஸ்தான வித்துவான்கள் இருவர், மூக்தாபீட மன்னவனை அணுகிக் காணிக்கை செலுத்தி, ஏத்தித்தொழுதனர். யசோவர்மனும் வந்து பணிந்து, கப்பங்கட்டி வாழ ஒருப்பட்டான்.

மூக்தாபீடனது சேனைத் தலைவன் பெயர் **மித்திரசர்மன்.** வீர வெற்றிமாலைக்கு இவனே மூல புருஷன். முதல்போரிலேயே வாகை கொண்டது கண்டு களித்தான் அக்காவலன்; உடனே சேனாபதிக்கு ராஜா எனும் பட்டம் ஈந்தான்; பஞ்ச வாத்தியங்களுடன் பவனி வரும் உரிமையும் அளித்தான்; வேறு ஐந்து தளகர்த்தருக்கும் விருதுகள் பல வழங்கினன்; சம்மானமும் செய்தான்.

பின்பு **கௌட** தேசத்தின் வேந்தன்மீது காஷ்மீரச் சேனை சென்றது. கௌடதேசம் வங்காளம்

எனப்படும். கௌட வேந்தனும் எடுப்பான வீரன். பகைப்படையின் பெருக்கங்கண்டு கௌடன் பேதுறாமல், வருவது வருக என்று போரில் புகுந்தான். கௌடவீரரும் கலங்காமல் போர்புரிந்தனர். காஷ்மீர வீரரை அவன் வெற்றிகொள்ள முடியவில்லை. கௌடவேந்தன் உடனே சமாதானம் வேண்டினன். சரி என்றான் முக்தாபீடன். வங்கவேந்தனது யானைப் படை அனைத்தும் முக்தா பீடனுக்குக் காணிக்கையாகக் கிட்டியது.

அப்பால் காஷ்மீர வீரர் கலிங்க நாட்டின்மீது பாய்ந்தனர். கலிங்க வேந்தனும் கப்பங்கட்டி வாழ இசைந்தான். பிறகு கர்னாடகம், காஞ்சி, கொங்கணம், சௌராஷ்டிரம், துவாரகை, அவந்தி, மாளவம் முதலிய பல நாடுகளை நோக்கினன் அந்நரபதி. அந் நாடுகள் ஒன்று தவறாமல் அடிபணிந்தன. விஜயலட்சுமி அம்மன்னவன் பக்க மிருந்தனள். அவன் புகழ்க்கொடி எங்கும் பரந்தது.

சிந்து தேசத்தின்மீது அவன் படைகள் சென்றதுதான் தாமதம். சிந்துபூபதியான தகரவேந்தன் சண்டைக்கு எழவில்லை. முக்தாபீடனது வெற்றியைக் கேள்வியுற்றதும், எதிர்கொள்ள வந்து, இறைப் பணம் கொணர்ந்து, இனிய உரை பகர்ந்து, உடன்பாடு வேண்டினன். முக்தாபீடனுக்கு மனம் பூரித்தது; உடனே அவன் தகர வேந்தனைத் தழுவி யணைத்துக்கொண்டான்.

மூன்று திசைகளில் திக்குவிஜயம் தீர்ந்தது. வடக்கு நோக்கினன் அந்த வீர வேந்தன். காஷ்மீரத்தினுக்கு வடக்கேயுள்ள தேசங்கள் திபேத், துருக்கிஸ்தானம் இரண்டுமாம். திபேத் வாசிகளான தார்த்தரார், காம்போஜர் இருவரும் முறிபட்டுப் பொன்னும் மணியுங் கொடுத்து நட்புப் பூண்டனர். அப்பால் துருக்கிஸ்தானத்தில் பாய்ந்

தான் முக்தாபீடன். அதன் மறு பெயர் **துரான்**. அதன் அரசனே **மும்முனி** என்பவன்.

மும்முனி பெருவலி படைத்தவன்; ஆதலின் கடுமையான போர் நிகழ்ந்தது. முடிவில் தோற்றுப் போனான் துரானிய வேந்தன்; எனினும் திரும்பி வந்தான் துணைப்படை கொண்டு. மீண்டும் தோல்வியே கிட்டியது. இங்ஙனம் பன்முறை வந்துவந்து தோற்றுத் தோற்று ஓடினான் மும்முனி. முடிவில் முக்தாபீடன் அவனைத் தொடர்ந்து துரத்தினன். அவனோ சீன தேசத்திலுள்ள **கோபி** பாலைவனத்தில் புகுந்து கொள்ளலானான். அதுவரையில் முக்தா பீடவேந்தன் சென்று, முடிவான வெற்றிகொண்ட பின்பே திரும்பினன். காமரூபம், **கடாரம்** ஆகிய நாடுகளும் காஷ்மீர வேந்தனுக்கு அடிபணிந்தன. **உத்தரகுருக்கள்** என்போர் புராதனமான பாரத குலத்தினர். அன்னவரும் அடிவணங்கினர்.

முக்தாபீடன் காலத்தில் சிந்து தேசாதிபதி தகரன். இவன்மீது அரபிய தளகர்த்தன் தண்டு கொண்டுவந்தான். அத்தளகர்த்தன் பெயர் முகம் மது காசிம். அவனுக்குத் தகரன் விடுத்த கடித விரம் இது :—"காஷ்மீரக் காவலன் முக்தாபீடன். அவன் முற்றத்திலே இந்துஸ்தான் அரசர் அனை வரும் இறை செலுத்தி நிற்பர். எங்கும் அவன் ஆணையே செல்லாநிற்கும். மகதன், துரான் ஆகிய இரண்டு தேசங்களையும் அவன் அடிப்படுத்தியவன். அனைவரும் அவனுக்கு மண்டியிட்டுச் சலாம் செய் வர். அவனைப் போர்முனையில் எதிர்த்து நிற்பார் யாவர்? அந்தோ அவ்வேந்தன் இல்லையே இப் போது. இருப்பின் அவனை உன்முன் அனுப்பி யிருப்பேன்." காஷ்மீரக் கொற்றவனது திக்கு விஜயத்துக்கு வேறு சான்று வேண்டுமோ?

முக்தாபீடன் சேனையிலே குதிரைப் படையே

அதிகம். விரைந்து சென்று வைரியை வாட்டப் பரி வீரர் பெரிதும் பயன்படுவர். மேலும் அந்நாளில் பரிப்படையே பிரபலம். யானை வீரரும் அவன் சேனையில் இருந்தனர். கௌடவேந்தனது கரிப் படை காணிக்கையாக வந்தபின், குஞ்சரப்படையும் பெருகி நின்றது. படைபலமும் பிறவும் அம்மன்ன வனுக்குத் துணை புரிந்தன.

நான்கு பக்கத்திலும் திக்கு விஜயம். பல பாகங்களிலிருந்தும் திறைப் பணம். நிலவளமும் நிறைவு. அரசியலும் அதி நேர்மை. தேசம் செழித்தது; செல்வம் குவிந்தது. போக போக்கியங்களில் அவன் மூழ்கவில்லை; ஜனங்களின் நலத்திலேயே மனம் வைத்தான். தேசநலங் கருதி அவன் செய்த திருத்தங்கள் பலப் பல.

உதாரணமாக, இராஜபாட்டை எங்கும் சத்திரங்கள் சமைத்தான்; சாவடிகள் நிருமித்தான்; நீர் நிலைகள் அமைத்தான்; சோலைகள் வைத்தான்; நந்தவனங்கள் வளர்த்தான்; ஏழை எளியவர்க்கு எங்கும் உணவு கிடைக்க வகை செய்தான்; வாடை தாங்கும் ஆடை கிடைக்க விதி செய்தான்.

அவன் மகா பக்தன்; சிவ பூஜையில் சிறந்தவன்; ஆங்குள்ள சிவன் கோயிலைப் புதுக்கினன்; அதற்கு இலட்சக்கணக்கிலே தங்கக் காசு கொடுத்தான்; மார்த்தாண்ட ஆலயமொன்று கட்டினன்; அதன் நாற்புறமும் பெரிய மதிள்சுவர் எழுப்பினன். ஆலய சிற்ப வேலை அதி நேர்த்தி. இப்போது மார்த்தாண்டன் கோயில் பழுதுபட்டுக் காணும்; ஆயினும், அதன் பண்டை நிலையையும், அன்றைய அழகையும் காணலாம் கூர்ந்து நோக்கின்.

அன்றும் காஷ்மீரத்தின் தலைநகரம் ஸ்ரீநகரம். அந்நகருக்கு அருகே **பரிஹாசபுரம்** என்னும் புதிய நகரம் அவன் நிருமித்தான். பெயருக்கு ஏற்ப,

இதர நகரங்களைப் பரிகசிக்கும் அழகு வாய்ந்தது அந்நகரம். சிவபக்தனுயினும், அவன் துவேஷம் அற்றவன். அந்நகரிலே பெருமாள் கோயிலொன்றும் கட்டினன். அதன் பெருமிதமே பெருமிதம்! ஆண்டவன் திருநாமம் பரிகாச கேசவன்.

அப்பெருமானது கருடவாகனம் ஐம்பத்து நாலு முழநீளம்; ஒரே கல்லில் ஆனது. ஆலயங்களிலே பற்பல சிலைகள் அவன் அடித்து வைத்தான். அவை அனைத்தும் அரதனத்தினல் அல்லது வெள்ளியினல் ஆனவை. பரிகாச கேசவப் பெருமாளின் சிலை, கெட்டி வெள்ளியில் அமைக்கப் பெற்றது. ஆண்டவனுக்குரிய ஆபரணங்களோ அபரிமிதம். அவை நவரத்தினங்கள் வைத்து இழைக்கப் பெற்றவை. செல்வமெல்லாம் ஆண்டவன் தந்தது என்று எண்ணி, அவன் தந்தனை அவனுக்கே அலங்கரித்துப் பார்த்து ஆனந்தம் அடைந்தான் அப் பார்த்திபன். "உன்னை அலங்கரித்து உன் அழகைப்பாராது என்னை அலங்கரித்து என் அழகைக் காண்பதோ?" என்றார் ஒரு பெரியார்.

ஆலயத்துக்கு அவன் எழுதி வைத்த சொத்துக்களோ அளவற்றவை. அரசன் மட்டுமன்று, அரசியரும் ஆலயத் திருப்பணி செய்து, ஆனந்த பரவசமாயினர். துரான் தேச அமைச்சன் பெயர் சங்குணன். இவன் இரண்டு வயிரக் கற்கள் காணிக்கையாக அனுப்பி மகிழ்ந்தான். அவ் விரண்டினுக்கும் ஈடாகப் புத்த விக்கிரகம் ஒன்றைத் துரான் தேசத்துக்கு அனுப்பி வைத்தான் முக்தாபீடன். அந்நாளிலே துருக்கிஸ்தானத்தில் புத்த மதமே பிரபலம். ஆதலின் அமைச்சன் சங்குணன் தன் நாட்டில் புத்த விகாரம் நிருமித்துப் பூரித்தான்.

தாய்நாடு என்றும் சார்பு நாடு என்றும் முக்தாபீடனுக்கு வேற்றுமை கிடையாது. மகதன், துரான்

இரண்டிலும் நீர் நிலைகள் மிகவும் குறைவு; குடி நீருக்கும் கஷ்டந்தான். ஆதலின் அந்நாடுகளிலும் ஏரி குளங்களும் கிணறுகளும் வெட்டி வைத்தான் அவ்வேந்தன். சுருங்கச்சொல்லின், அவ் வேந்தன் ராஜ்யம் தர்மராஜ்யமாகவே விளங்கியது. அஃதறிந்த சீனவேந்தன் தனது தூதரை யனுப்பி முக்தா பீடனுடன் நட்புக் கொண்டனன்.

முக்தா பீடன் ஓர் ஆச்சரியமான புருஷன். அவனது திக்குவிஜய விவரமும் ஆட்சியின் நேர்மையும் ஆலய அமைப்புமே சான்றுகள். அவன் முடிவும் ஆச்சரியந்தான். எங்ஙனம், எங்கே அக்காவலன் காலகதியானான் என்று புலப்படவில்லை. காஷ்மீரதேசத்திலே அவன் கண்மூடவில்லை. வடக்கே மீண்டும் அவன் தண்டுகொண்டு சென்று, முரட்டு ஜாதியாருடன் மல்லுக்கு நின்றான். கடைநாளிலே அங்கிருந்து தூதுவர் வந்து, "மன்னவன் வாரான், மைந்தனுக்கு முடி கவியுங்கள்" என்று மொழிந்தனர். முப்பத்தாறு வருஷம் முக்தாபீடன் மணிமுடி தரித்து மாண்புற வாழ்ந்தனன்.

எட்டாம் நூற்றாண்டிலே ஆரியரின் உயர்வும் பாரத பூமியின் சிறப்பும் தீபம் போல் பிரகாசியா நின்றன. பஞ்சாபை ஆரியரின் அருந்தலம் என்னலாம். காஷ்மீரமோ ஆரியரும் பிறரும் பரிவுடன் வாழ்ந்த தலமாம்.



# 13. பிருதிவி ராஜன்

தற்போது நம் இந்தியாவின் தலைநகரம் டில்லி. ஆதியிலே அதன் பெயர் இந்திரப்பிரஸ்தம். முன்னாளில் பஞ்ச பாண்டவர் ஆங்கிருந்தே அரசு செலுத்தினர். முடிவில், அங்கே விளங்கிய கடைசி ஹிந்து சக்கரவர்த்தி பிருதிவி ராஜன். அவன் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியாம். அவனுக்குப் பின்புதான் அன்னிய அரசு அங்கே முளைத்தது.

இன்றளவும் டில்லியில் தோன்றித் திகழ்ந்த அரசுகளோ பல. அவற்றில் பலவும் வல்லரசுகள்; ஏகாதிபத்தியங்களும் ஆகும். அவை எல்லாம் இப்போது எங்கே? அம் மாநகரின் விசேஷம் வியப்புக்கு இடமாம். எங்ஙனம் என்றால், வல்லரசுகளை விழுங்கிய இடம் அது. ஏகாதிபத்தியங்களை ஏப்பமிட்ட தலமும் அதுவே. பலவாறான எட்டு ஏகாதிபத்தியங்களின் கல்லறைகளை அங்கே காணலாம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலே டில்லி வீழ்ந்த வரலாறு, பிருதிவி ராஜன் விளைத்த வீரம், மத்தியபதி மன்னவன் பூண்ட சபதம், இவற்றை ஆராய்வோம். அந் நூற்றாண்டில் ஆரியாவர்த்தத்திலே பிரசித்தி பெற்ற ராஜ்யங்கள் நான்கு. அவை டில்லி, கன்னோசி, அனகலபட்டணம், மத்தியபதி என்பன. அவற்றை ஆண்டுவந்த அரசர் அனைவரும் ராஜபுத்திரர். அவர்கள் க்ஷத்திரிய பரம்பரை.

அந் நான்கு ராஜ்யங்களிலும் தனி சிறந்தது கன்னோசியே. அதன் மறு பெயர் குஸுமபுரம். ராஜதானியின் சுற்றளவு முப்பது மைல். எங்கும் வனப்பு வாய்ந்த மாடமாளிகைகள்; சிங்கார மண்டபங்கள்; உல்லாசமான பூங்கா வனங்கள். வேந்தன் சேனையிலே இருப்புக்கவசம் பூண்ட வீரர் எண்பதா

யிரவர்; பரிவீரர் முப்பதாயிரவர்; காலாளர் மூந் நூற்று ஆயிரவர்; யானை வீரர் ஐம்பதாயிரவர்.

அந்நூற்றாண்டினிலே **முகம்மதுகோரி** என்னும் ஒரு வீரன் கிளம்பிவந்து, இப்பாரத பூமியில் புகுந்து கொள்ளையும் கொலையும் கண்டான். அவனோ அயலகத்தான். கன்னோசியின் காவலனான ஜயசந்தன் சும்மா இராமல், பெருஞ் சேனைகொண்டு சீறி அக்கோரியை எதிர்த்தான். நீல நதிக் கரையில் (யமுனையின் மறுபெயர் நீல நதி) கோரியின் சேனை முழுதும் வெட்டுண்டது. இரத்தவெள்ளம் பெருக் கெடுக்கவே, நீல நதி சிவப்புநதியாக மாறிற்று. அதன்பின், கோரிமுகம்மது ஓட்டம் பிடிக்க, ஜய சந்தன் வெற்றி எங்கும் பரந்தது. அரசர் அனை வரும் அவனைப் புகழ்ந்தனர்.

இந்நிலையில், ஜயசந்தன் அசுவமேத யாகம் புரிந்தான். எல்லா அரசருக்கும் ஓலை போயிற்று. அனைவரும் வந்து காணிக்கைசெலுத்தினர். பிருதிவி ராஜன் மட்டும் வரவில்லை. ஜயசந்தனும் பிருதிவி யும் தாயாதியர். ஆதலின், தாயாதிக் காய்ச்சல் தலையெடுத்தது. இருவரிலே எவன் பெரியவன் என்னும் இறுமாப்பு வளர்ந்தது. பிருதிவி ராஜன் வாராமை கண்டு, ஜயசந்தனுக்கு மூண்டது வைரம். ஆதலின் பிருதிவியை அவமானங் காண ஓர் உபா யம் செய்தான் ஜயசந்தன்.

ஜயசந்தன் மகள் பெயர் **ஸம்யுக்தை**. யாக முடிவில் அவளுக்குச் சுயம்வரம். அவள் அழகின் கனி; அறிவின் நிலயம்; அடக்கத்தின் ஆலயம். பிருதிவி ராஜன்மீதே அவளுக்குக் காதல். அவன் வீரப் பிரதாபங்களை அந்நல்லாள் காதால் கேட்ட தோஷந்தான். சுயம்வர மண்டபத்தில் கூடி யிருந்த அரசிளங் குமரரில் ஒருவருக்கும் அவள் மாலையிட வில்லை. அம் மண்டபத்தின் வாயிலிலே

பிருதிவியின் பிம்ப மொன்று விகார வர்ணத்துடன் நின்றது. எல்லாம் ஜயசந்தன் வேலை. அச்சிலைக்கே மாலையிட்டாள் அம்மங்கை.

எரிகிற நெய்யில், எண்ணெய் ஊற்றினால் எப்படி? அப்படியே ஜயசந்தனுக்குக் கோபம் பொங்கியது. அருமை மகளென்றும் அவன் ஆலோசிக்கவில்லை; சிறையில் போட்டு அவளைப் பூட்டி விட்டான். பிருதிவிக்கு அச்செய்தி எட்டியது. வந்தான் அவ்வீரன் தன் துணைவருடன்; மீட்டான் சிறை; கொண்டு சென்றான் காதலியை. ஜயசந்தன் வழிமறித்தான். பிருதிவிராஜன் வீரர் சீறினர்; உயிருக்கு உலை நேருமெனக் கண்டு ஓடி ஒளிந்தான் ஜயசந்தன். ஆனாலும் ஜயசந்தனுக்குப் புத்தி பிறக்கவில்லை. பழிவாங்கும் ஆவலே ஓங்கி நின்றது. ஆதலின் முகம்மது கோரியை அழைத்தான் படை கொண்டு வரும்படி.

கோரி முகம்மதும் பெரும் படையுடன் வந்தான் பெருமிதமாக. ஜயசந்தனும் துணையாக எழுந்தான். அவ்விருவரின் வரவு டில்லிக்கு எட்டியது. அதுகேட்ட பிருதிவி ராஜன் சிங்கநாதஞ் செய்ய, அவன் வீரர் அனைவரும் திரண்டனர்; ஏனைய அரசரும் துணையாக வந்து குவிந்தனர். கோரியும் ஜயசந்தனும் ஒரு பக்கம். பிருதிவியும் பிற அரசரும் ஒரு பக்கம். மலையும் மலையும் மோதினல் எப்படி? அப்படியே இரு பக்கத்துச் சேனைகளும் தாக்கப் புகுந்தன. அப்போரிலே, ஜயசந்தன் முதுகு காட்டினன். முகம்மது கோரியோ சிறைப் பட்டான். பெருந்தன்மை வாய்ந்த பிருதிவியோ அக்கோரியை விடுவித்தனன்.

அப்பால், நாட்கள் பல சென்றன. கோரியின் மனப்புண் ஆறவில்லை. மீண்டும் அவன் டில்லி மீது வந்தான் படையுடன். விடுதலை கொடுத்தது

விபரீதமென்று பிருதிவியின் துணைவர் பொறுமி, வீராவேசத்துடன் கோரியின்மீது பாய்ந்தனர். பழி தீர்க்க வேண்டுமென்று முனைந்து நின்றான் கோரி. அவன் வீரரும் கொடும்போர் செய்தனர். ஒன்றும் பலிக்கவில்லை. முடிவிலே காயமுண்டு படுகளத்தில் சாய்ந்தான் அம்முகம்மது. அது பார்த்தான் பிருதிவி ; பகைவனை வாரி எடுத்தான் ; மருத்துவரைக் கொண்டு, புண்களை ஆற்றுவித்தான் ; பின்பு இனி டில்லியை எட்டிப் பாராதே என்று இடித்துச் சொல்லி அனுப்பினான்.

பிருதிவியின் துணைவருக்கு அது கண்டு மனம் தாங்கவில்லை. "என்ன இது! படைமுகத்திலும் பெருந்தன்மை வேண்டியதுதான். பாம்புக்குப் பால் வார்ப்பதோ? வார்ப்பினும், விஷத்தையே கக்குமே அது! சிறைப்பட்ட கோரியை ஒரு முறை விடுவித்தோம். மீண்டும் அவன் வந்தான் மண்ணைக் கொண்டு. இப்போதோ அவன் பட்ட புண்களை ஆற்றி அனுப்புகிறோம். மறுபடியும் வந்தால் என்ன செய்வது? எத்தனை வீரரைப் பலி கொடுப்பது? அளவுக்கு மிஞ்சிக் கருணை காட்டுவதோ? அனர்த்தம் விளையுமே. தேசப்பகைவனை முடித்துவிடலாம்," என்று பேசினர். அவ்வளவுக்கும் செவி சாய்த்த பின்பு, "கருணைக்கு அழிவுண்டோ?" என்றான் காவலன் பிருதிவி.

பிருதிவியின் பிரதாபம் பெருகப் பெருக, அவன்மீது ஜயசந்தன் கொண்ட வைரமும் வளர்ந்துகொண்டே வந்தது. பலவித உபாயங்களையும் கையாண்டு பார்த்தான் அக் கொடியோன் ; பிருதிவியின் துணைவர் பலரையும் வேறுபடுத்தினான். பிருதிவியின் மிதமிஞ்சிய கருணை கண்டு துணைவரில் சிலர் மனங் கோணினர். இங்ஙனம் பிருதிவியின் பக்க பலமெல்லாம் சிதறியது. அதுவே

சமயமெனக் கொண்ட ஜயசந்தன் தனது சூழ்ச்சி யனைத்தையும் கோரிக்கு அறிவித்தான்; மூன்று முறையாக அந்த அன்னியனை அழைத்தான். கஞ்சி வரதப்பா என்றால், எங்கு வரதப்பா என்றபடி மூகம்மது கோரியும் வந்தான். கோரியின் சேனை யிலே குதிரை வீரர் மட்டும் ஒரு லட்சத்து இருபதா யிரவர். மூலபலமாக ஜயசந்தனும் நிற்கலானான்.

மீண்டும் வைரிகளின் வருகை கண்டு பிருதிவி பதறவில்லை; துணைவலியின் குறைவு கண்டும் தளர வில்லை; தங்கை மணாளனும் மத்தியபதி மன்னவன் சமரசிம்மனுக்குத் தூது போக்கினான். அங்ஙனமே டில்லி வந்து, சேனைத்தலைமை பூண்டான் அச் சமர சிம்மன். ஸரஸ்வதி நதிக்கரையில் இரு சேனைகளும் சந்தித்தன. அடுத்த தினம் பொழுது புலர்ந்ததும் போர் தொடங்குதல் வேண்டும். அதனைக் குறித்து அனைவரும் ஆலோசனை செய்தனர். "முன்னம் முதுகு கொடுத்து ஓடியும், உயிர்ப்பிச்சை பெற்றும் போன மூகம்மதை இப்போரில் முடிக்க வேண்டும்; இன்றேல் நாம் முடியவேண்டும்," என்று டில்லி வீரர் சபதம் பூண்டனர்.

அன்றைய இரவிலே ஜயசந்தனது பாசறை சேர்ந்தான் வாலிப னொருவன்; மன்னவனுடன் மறைமொழி பேசவேண்டும் என்றான். அதற்கு ஜயசந்தனும் சரி என்றான். இளவீரனை நோக்க நோக்க, ஜயசந்தனுக்கு ஒரு பக்கம் துக்கம், ஒரு பக்கம் அச்சம், ஒரு பக்கம் பரவசம். முடிவில் "யார் நீ? வந்த வினை யாது? விரைவில் உரை," என்றான் அவன். வாலிபன் விளம்புவான்:—

"அரசே! அமரிக்கையுடன் கேட்டருள்க! நீர் அரியணை ஏறியபின் ஆண்டுகள் பல பறந்துபோயின. காலன் வருங்காலமும் குறுகியுள்ளது. நும் அந்திய காலத்தில் ஆற்றும் கருமம் யாது? தேசம், தெய்

வம், தர்மம் மூன்றினுக்கும் மாற்றான் அம் முகம்மது. மூன்ருவது முறையாக அவனை நீர் அழைத்த காரணம் யாது? தாயாதியான டில்லி வேந்தனை வீழ்த்துவதுதானே? நல்லது! பிருதிவி ராஜனைப் போல் எத்தனையோ பிருதிவியை நம் பாரதத்தாய் ஈன்றெடுத் திருக்கிருள், இனியும் ஈன்றெடுப்பாள். பிருதிவி மறைவதைப் பற்றிக் கவலையில்லை.

"கோரி வாகை சூடின், நமது தேசம் என்னுகும்? நமது சோதர சோதரிகளும் என்னுவர்? முன்னம் அவ்வன்னியன் வந்தான்; ஆடவரை உயிர் கொண்டான்; பெண்டிரை அடிமை ஆக்கினன்; ஆலயங்களை இடித்துத் தள்ளினன்; நகரங்களைத் தரை மட்டம் ஆக்கினன். மீண்டும் நமது நாடு, தாய்நாடு, பாரதத் திருநாடு படாதபாடு படவேண்டுமோ? முன்னம் முகம்மதுகஜனி வந்து கோரங்கண்டது போதாதா? கோரியும் அடுத்தடுத்துக் கொள்ளை கொள்வதோ? இன்று பிருதிவிக்கு வரும் கொள்ளியே நாளை உம்மையும் நம் மரபையும் பொசுக்குமே! எண்ணிப் பாரும்!"

மூர்க்கனுக்கு மதியேது? ஜயசந்தன் செவியில் ஒன்றும் ஏறவில்லை. அவனே அச்சுந்தரகுமரனது குரலை நோக்கினன்; வடிவையும் கூர்ந்து கவனித்தான்; "யார் நீ?" என்றான். உடனே இளைஞன் ஆணுடை கழன்றது. கண்டான் ஜயசந்தன் தன் குமரியைக் கண்ணெதிரே. உடனே உடைவாளின் அருகே சென்றது அவனது வலக்கரம். ஆயினும் உறையை விட்டு அவ்வாள் வெளிப்படவில்லை. ஒன்றுமே தோன்ருமல் திகைத்தான் அத்துரோகி; சிறிது நேரம் குனிந்த தலை நிமிரவில்லை; பின்பு, "பெண்ணே! நீயோ எனக்கு மதியூட்ட வந்தாய்? மாலைசூட்டினையே அவனுக்கு! நாசத்துக்கு மூல காரணம் நீயே!" என்று கடுகடுத்தான்.

ஸம்யுக்தை சொல்வாள்:—"எந்தாய்! கேடு காலம், மதி கெட்டது. பாரதபூமியும் பர்த்தாவும் என் உயிர். பழம்பூமி பங்கமடையச் சகியேன். ஆவிபோம்வரை அருஞ்சமர் ஆற்றுவேன். அன்னியருக்கு இடங்கொடேன். கண்மூடுமுன், காணவந்தேன் தந்தையை. மீண்டும் மொழிவேன். பரதக் கண்டத்தின் பெருமையை நோக்குங்கள். மரபின் மானத்தை மதியுங்கள். ஏழை எளியவரின் கதியை எண்ணுங்கள். ஆண்டவனையும் ஆலயத்தையும் கருதுங்கள். காலம் போம்! பழியோ நிலைக்கும்!"

ஜயசந்தன்:—பெண்ணே! பூசலோ விளைந்து விட்டது. பொழுது புலர்ந்தவுடனே, வெட்டுப்பழி, குத்துப்பழி நேரும். இனி என்னால் ஆவது யாது? எல்லாம் விதிப்படியே நடக்கும்.

ஸம்யுக்தை:—அந்தோ! நீரோ ஓர் ஆண்மகன்! ராஜபுத்திர வம்சத்தில் பிறந்தீரே. கோடரிக் காம்பாகவா முளைப்பது? நமது மரபும் குலமும் உலகம் உள்ளவரை ஊனம் அடையுமே! அன்னியனுடன் கூடி, அருமைப் பூமியைக் காட்டிக் கொடுப்பதோ? உம்மை என் தந்தையென எங்ஙனம் மதிப்பேன்? உம்மால் பெற்ற இச்சடலத்தை இனிமேல் தாங்கி நிற்கப் போவதில்லை. நாளையே பார்க்கலாம் எனது சவத்தை இந்த இரணகளத்தில்."

அங்ஙனம் பேசிய பின்பு, ஸம்யுக்தை தனது பாசறை திரும்பினாள். தேவி எங்கே என்றான் பிருதிவி. ஸம்யுக்தை முன்னே நின்றாள். "பெண் குலத்தின் விளக்கே! போரில் வெற்றி சூடுதல் எங்ஙனமாயினும், வீர சுவர்க்கம் நிச்சயம். நீல நதியைக் கடந்து வாராமல் பகைவனைத் தடுக்க முயலுவேன். நான் வீரசுவர்க்கம் சேர்ந்துவிடின், ஜயசந்தனும் கோரியும் டில்லி வருவர். வரின் அங்குள்ள நம் குல மங்கையருக்கு ஊறு நேருதல் திண்ணம்

அன்னாருக்கு ஆறுதல் கூறி, வேண்டுவன செய்தல் நினது கடமை," என்று கூறி விடுத்தான்.

மறுதினம் குணதிசையில் கதிரவன் கிளம்பினன். இரு படைகளும் கைகலந்தன. சமரசிம்மன் கையில் சிக்கிய முகம்மதின் சேனைகள் சின்னாபின்னமாயின. அதனைக் கண்டான் கோரி; தன் வீரரைத் தூண்டினன். ராஜபுத்திரரும் ஆவேசம் கொண்டனர். உடனே வீரரின் கரங்கள் அறுந்தன; சிரங்கள் துணிந்தன; குதிரைகள் வீழ்ந்தன; கரிகள் பதறின. தாய்நாட்டை அன்னியர் கைப்பற்றுவதோ என்றே கறுவினர் இராஜபுத்திரர். மூன்றும் முறையேனும பழிவாங்க வேண்டுமென்று கோரியின் வீரர் குமுறினர்.

பிருதிவியோ பகைப் படையின் நடுவே பாய்ந்தான்; சண்டமாருதம்போலவே இங்கும் அங்கும் திரிந்தான்; ஒன்னலரின் உயிரைக் கவர்ந்தான்; உருத்திரனைப்போல் உறுமினன். பகைவனது வாள் வீச்சு வந்து பிருதிவியின் மார்பில் பாயப்போகும் சமயம். அருகே யிருந்த மெய்காவலன் அவ்வாளை இரு துண்டாக்கினன்; அவ்வாளை வீசிய கையையும் கீழே பூமியில் வீழ்த்தினன்.

மற்றொரு சமயம் ஜயசந்தனது யானை வீரனொருவன் பிருதிவிராஜனைக் குறிக்கொண்டான்; வேல்கம்புகொண்டு குத்தவும் முயலா நின்றான். மார்புக்கு மயிரிழை தூரத்தில் வந்து விட்டது வேல் கம்பு. பக்கத்தே நின்ற மெய்காவலனது வேல் கம்போ அக்கரிவீரனைக் குப்புறக் கீழே தள்ளியது; உடைவாளோ குஞ்சரத்தின் துதிக்கையை நறுக்கி வீழ்த்திற்று. அவ்வலி தாங்காமல் மதகளிறு கதறியோடியது கனவேகமாக. அதுகண்ட பிருதிவியோ மனங் களித்து, அம் மெய்காவலனை மார்புறக் கட்டித் தழுவினன்.

அதன்பின்னர் அக்காவலனும் மெய்காவலனும் பகைப்படையின் தளகர்த்தனை நோக்கிப் பாய்ந்தனர். பிருதிவியின் வாளாயுதம் வானத்திலே மின்னியது. அவ்வளவில், தரையில் விழுந்தது தளகர்த்தன் சிரம். அதே சமயம் அத்தளகர்த்தனது வாள்வீச்சு விரைந்து வர, வெட்டுண்டு சிதறியது மெய்காப்பாளனது வலக்கரம். உடனே அம்மெய்காவலன் தனது இடக்கரத்தில் உடைவாளை ஏந்தி வீசினான். அவ்வீச்சின் வேகத்தில் கரமும் சிரமும் அற்று வீழ்ந்த அன்னியர் எண்ணிலர். சிறிது நேரம் சென்றதும், மெய்காவலனது இடக்கரமும் துண்டு பட்டுத் தூர வீழ்ந்தது.

சின்னேரத்திற்கெல்லாம் வேலொன்று வந்து மார்பில் தாக்கவே, அம் மெய்காவலன், "அரசே! ஆருயிரே! காதலி கதியின்றிக் கீழே விழுகின்றாள். விடை தாருங்கள். வானுலகம் சென்று, தங்களை அங்கே எதிர்கொண்டழைக்க ஆயத்தமா யிருப்பாள்," என்று கூறி வாய்மூடினான். ஸம்யுக்தையே மெய்காவலன் என்று கண்டான் பிருதிவி; கண்ணீர் வடித்தான்; உன்னை டில்லிக்கு அல்லவோ அனுப்பினேன் என்றான். இதற்குள் பகைவீரர் வந்து பிருதிவியைச் சூழ்ந்துகொண்டனர். தன் தேவியின் திருவுடலை மார்பில் தாங்கியவண்ணம் போர் தொடுத்தான் பிருதிவி ராஜன்.

பகை வெள்ளத்தின் நடுவே தன்னந்தனியனாக நிற்கிறான் தணியா வீரன். வாளும் தோளுந் தவிர வேறு துணையில்லை. இந்நிலையிலும் வெகு நேரம் வாள்வரிசை காட்டினான் அவ்வீரர் திலகன். சீறும் சிங்கத்தைக் கண்டதும் பின்வாங்கும் வேங்கையே போல் கோரியின் வீரர் பின்வாங்கினர். எத்துணை நேரம் இந்நிலையில் பிருதிவி ராஜன் போர்புரிய இயலும்? முடிவில் அம்முடிமன்னவன் வீரசுவர்க்

கம் புகுந்தான். அவன் வீரரில் அனைவரும் ஒருவர் தவறாமல் சுவர்க்கபூமி சேர்ந்து விட்டனர்.

தளபதி சமரசிம்மனே ஜயசந்தன் தலையை வாங்கவேண்டுமென முனைந்து முயன்று பார்த்தான். அப் படுபாவி அகப்படவில்லை. ஆயினும் பகைவரில் பலரை உயிர்வாங்கியபின் மார்பிலே வேல்கம்பு பட்டுப் பரகதி சேர்ந்தான் சமரசிம்மனும்; சேருமுன்னம் "டில்லியைக் காக்க வந்தோம். இயலவில்லை. புராதன நகரில் அன்னியர் இனிமேல் புகுந்துவிடுவர். மீண்டும் டில்லியை மீட்காது போயின், மத்தியபதி மன்னவர் அம் மாநகரினில் காலடி வைத்தலாகாது. இதுவே என் கருத்து," என்று ஆணையிட்டுப் போயினன். மத்தியபதி மன்னவர் இன்றும் அதனை மீறி நடப்பதில்லை.

பிருதிவி பொன்றினன்; சமரசிம்மன் மடிந்தான் என்னும் செய்தி பரவிற்று. ஜயசந்தன் பரம சந்தோஷம் அடைந்தான். நேசர் இருவரும் டில்லி நோக்கிப் போயினர். நகரினுள்ளே நுழைந்ததும், ஆகாயத்தை அளாவும் அக்கினிக் கொழுந்து தென்பட்டது. அது பெண்ணெனப் பெயர்படைத்த அனைவரும் ஆவிநீத்த அக்கினி குண்டத் தீயே.

டில்லி நகரம் கோரியின் வசமாயிற்று. தேசத் துரோகியும் கோரியின் கையில் சிக்கி மாண்டொழிந்தான். பின்பு அடிமை ஒருவனிடம் அரசைக் கொடுத்து, ஊர் திரும்பினன் கோரி. இந்து வீரரில் சிலர் அக்கோரியைத் தொடர்ந்து சென்று, வழி நடுவில் கொன்றுபோட்டு வஞ்சம் தீர்த்தனர். பின்பு கோரியின் அடிமை குத்புதீன் டில்லியில் அரசாளத் தொடங்கினன். அதுமுதல் இங்கே அன்னிய அரசு!

# 14. அலங்காரன்

சிபி ஒரு சக்கரவர்த்தி; ஒரு நாள் உப்பரிகையின் மீது வீற்றிருந்தான். அவன் மடியில் ஒரு புறா வந்து வீழ்ந்தது. அதனை அச் சக்கரவர்த்தி எடுத்தான்; தடவிக் கொடுத்தான்; அதற்குத் தீனியும் போட்டான். வல்லூறென்று அதனைத் துரத்தி வந்தது; வந்ததும், அரசனை நோக்கி, "இப் புறா என் இரை. தொலைவிலிருந்து நான் துரத்தி வருகிறேன். என் பசியோ மிகுதி. தட்டாது இதனைத் தந்து விடுக" என்று கேட்டது. "அடைக்கலத்தைக் கைவிடுவதோ? அது ஆகாத காரியம். வேறெது வேண்டினும் தருவேன்," என்றான் சிபி.

சுருங்கச் சொல்லின், அச்சக்கரவர்த்தி ஒரு தராசு தருவித்தான்; புறாவை ஒரு தட்டில் இட்டான்; தன் உடலின் சதையை அரிந்து அரிந்து மற்றொரு தட்டில் வைத்தான்; பின்பு "புறாவின் எடைக்குச் சரியாக என் சதையை இரையாகத் தின்று பசி தவிர்," என்றான் வல்லூறை நோக்கி. எடை சரியாக இல்லை. மீண்டும் சதையை அரிந்து அரிந்து வைத்தான் சிபி. முடிவில் தானே தட்டில் ஏறினான். எடை சரியாயது. வல்லூறைத் தின்னச் சொன்னான் சிபி. இது புராண கதை. கதைக்குக் காலுண்டா என்பர். கருத்து உண்டு என்பது உறுதி. சரித்திர உண்மையான ஒரு கதை காட்டுவோம்.

டில்லிமா நகரின் பழமையான பெயர் அத்தினபுரி அல்லது இந்திரப்பிரஸ்தம். வாழையடி வாழையாக அங்கிருந்து ஆண்டுவந்தனர் ஆரியர். கடைசியாக ஆண்டவன் பிருதிவி ராஜன். அவனது தாயாதியான ஜயசந்தன் பொறாமையினால் போருக்கு எழுந்தான். மகோபா எனும் நகரில் மகாயுத்தம் நடந்தது.

தோற்றோடினன் ஜயசந்தன். பின்பு, ஷாபுதீன் (முகம்மது கோரி) என்னும் அன்னியனைப் படை கொண்டுவரச் செய்தான் அவன்.

தலைநகரைச் சுற்றிலும் ஒரே இரண களம்; நால்வகைப் படைகளின் பாசறைகள்; களத்தின் மேலைக் கோடியிலே பிருதிவிராஜனது படைவீடு. ஒரு தினம் நடுநிசி. ராஜபுத்திர திலகம், பாரதப் பெருமகன், ஆரியரின் வாழ்வுக்கு ஆதாரம் கொலு இருக்கிறான். பட்டவர்த்தனர், மகுட வர்த்தனர், மண்டலீகர், மாவீரர் வரிசை வரிசையாக வீற்றிருக்கின்றனர். பட்டாக்கத்திகள் பளபள என மின்னுகின்றன. "இந்த உடைவாளின்மீது ஆணை! தேசத் துரோகியாம் ஜயசந்தனுடன் ஷாபுதீனையும் உயிர் வாங்குவோம்!" என்று வீரர் சபதம் செய்கின்றனர்.

அவ்வீரர் குழுவிலே ஒரு சிறுவன்; பதினைந்து வயதே இருக்கும்; பால் வடியும் வதனம்; வீரம் சொட்டும் பார்வை; வீறு காட்டும் வேல் கம்பு; ஊடுருவும் ஈட்டி; உயிர் கவரும் உடைவாள். அச் சிறுவனது உதடுகள் துடிக்கின்றன; கண்கள் ஜொலிக்கின்றன; பெருமூச்சு கிளம்புகின்றது. பிருதிவியின் முன்னே அப்பாலன் வந்தான்; தடக் கைகூப்பி வணக்கஞ் செய்தான்; 'தேசத்தின் வாழ்வே' என்று துதித்தான்; 'அடியேன் வேண்டுகோள் இது,' என்றான். நல்லது எனத் தலையசைத்தான் பிருதிவி. சொல்லுவான் சிறுவன்:—

"குலத்தலைவ! குலக்கேடன் ஜயசந்தன் எம் மாத்திரம்? அவனுக்குத் துணை வந்துள்ள அந்நியனும் எந்த மூலை? இருவரும் விரைந்து ஓடவேண்டும்; இன்றேல் இருவர் சிரமும் நிலத்தில் உருள வேண்டும். இரண்டில் ஒன்று திண்ணம். இரண்டில் எதுவும் இயலாதாயின், அடியேன் வீறு காட்டுவேன்; வீரம் விளைப்பேன்; ஆவி துறப்பேன்;

வானுலகம் புகுவேன். இவ் வாளின்மீது ஆணை! ஆதலின் எனக்குப் படைத்தலைமை தந்தருள்க. என் பரிபவம் அகலும். ஆறுதலும் பிறக்கும்."

சிறுவனது வீரவாசகம் பிரதாபன் செவிக்கு அமுதாயது; உள்ளம் கிளர்ந்தது. குல திலகன் வியப்புக்கொண்டு வாளா இருந்தான். பார்த்தான் சேனைத்தலைவன்; "இவனோ பால்மணம் மாறாத பாலன். பகைவனோ பலவான், பெருமிதமாக நிற்கிறான். அவன் படைகளும் ஏராளம். இளங்கன்று பயமறியாது; எனவே பலபடப் பேசுகின்றது. அரசன் பிருதிவியின் கருத்து யாதோ? பொறுத்துப் பார்ப்போம். படைத்தலைமை நம்மைவிட்டுத் தவறுமோ? பார்த்திபன் ஒப்புவனோ?" என்று சிந்தித்தான்.

சேனைத் தலைவனது நேசனொருவன் உள்ளூரச் சிரித்தான்; "இப் பச்சைப் பாலன் பதைக்கிறான். சொல்லிய வண்ணம் இவன் வீரம் விளைக்கலாம். சோர்வு நேராது. சிறப்பே நிகழும். ஆயினும் என்ன? அபிமன்யுவின் கதை பிரசித்தம். பாரதப் போரிலே அவன் துரோணரின் வியூகம்பிளந்தான்; உள்ளே புகுந்தான்; எனினும் வெளியே வர இயலவில்லை; வெட்டுண்டு வீழ்ந்தான். இப்பாலன் கதியும் அங்ஙனம் ஆவதோ? படைத்தலைவருக் கன்றோ பழிபாவம் சம்பவிக்கும்! அந்த அபவாதத்தினுக்கு ஆளாக யாரே ஒருப்படுவர்? எனினும் அரசன் கருத்தை அறிவோம்!" என்று எண்ணினான்.

பட்டவர்த்தனன் ஒருவன் பதைத்தது இது :— "என்னே இச்சிறுவனது சிங்காரப்பேச்சு! வெறும் பிள்ளைப் பேச்சே! இப்பாலனுக்கா படைத்தலைமை! அன்னிய ஷாபுதீனிடம் கடல்போன்ற சேனை; தேசத் துரோகியிடமும் அப்படியே. இருவரும் சீறி நிற்கின்றனர் சர்ப்பம்போல். எத்தனை நாள் இப்

போர் நடப்பது? நாளையே முடிவு காணவேண்டும். இஃதே பிருதிவியின் தீர்ப்பு. விஷப்பரீட்சை பார்ப்பதோ? பாலனுக்கா படைத் தலைமை! பெருமான் கருத்து யாதோ? பதறாதிருந்து பார்ப்போம்!"

பிருதிவிராஜன் இரு பக்கமும் நோக்கினன்; படைத்தலைவரின் உள்ளக்கருத்தை உணர்ந்தான். உள்ளத்தின் உளவு முகத்தே தோன்றும் அன்றோ? தனக்குள்ளே, "பேனாக்கத்தி கூரியதுதான்; நன்கு சீவும். பெருமரத்தை அது பிளக்குமோ? பாலனைக் கொண்டு பரீட்சை செய்தல் தகுமோ?" என்று எண்ணினன்; வெளியில், "வீரப் புதல்வ! உன் வீரம் விழுமியதே. பெரும்போர் இது. தேசத்தின் கதி தெரியவேண்டும். கருமம் புரியுமுன், வினைவலி, தன் வலி, மாற்றான் வலி முதலிய அனைத்தையும் பார்த்தல் வேண்டுமே!" என்றான்.

அலங்காரன் அது கேட்டான். அவன் கண்களில் நீர் துளித்தது. புருவம் வில்போல் வளைந்தது. ஒரு கை உடைவாளைத் தொட்டது. ஒரு கை ஈட்டியைத் துழாவியது. "அரசே! என் குலமானம் குன்றுவதோ? எனது பிதாவின் கீர்த்தி பங்கம் ஆவதோ? புலிக்குப் பிறந்தவன் பூனை யாவதோ? கவரிமான் ஒரு மயிரை இழப்பினும், உயிரை உடனே விடுமே! என் தந்தை, தங்கள் தோழர்—அவர் கீர்த்தி —"

அலங்காரன் முடிக்கவில்லை. பிருதிவி பரவசம் ஆனான்; பதை பதைத்தான்; "என் மைந்த! உன் தந்தை — சௌம்ய ராயன் — அவர் கீர்த்திக்கு என்ன குறைவு? உடனே இயம்பு!" என்றான். பாலன் பதைப்புடன் பகர்வான்:—

"அரசே! ஏது சொல்வேன்? என்ன உரைப்பேன்? என் தந்தை மகோபா யுத்தம் சென்றார். அப் போர் தீர்ந்தது. அவர் திரும்பி வரவில்லை.

அவர் உடலமும் அகப்படவில்லை. தேடிப் பார்த்தேன் தீமூட்ட. 'எங்கேயோ ஓடிவிட்டார், முதுகு காட்டிவிட்டார்' என்று இரண்டொருவர் பேசுகின்றனர். அந்த ஏச்சை எங்ஙனம் சகிப்பேன்? அம்மாசைப் போக்க முயலவேண்டும் அன்றோ? புத்திரனது கடமை யாது? பிதாவின் மானங் காத்தல் அல்லவா? குலமானம் நிலைநாட்டல் அல்லவா? தேசநலம் போற்றல் அல்லவா? ஆனது பற்றியே வேண்டுகின்றேன் படைத்தலைமை! வேறில்லை."

அச்சொல் முழுவதுங் கேட்டான் பிருதிவிராஜன்; உடனே உள்ளம் உடைந்தான்; கோபம் கொண்டான்; சோகமும் பூண்டான்; அரியாசனத்தில் எழுந்து நின்றான்; இங்ஙனம் பேசினான் :—
"என் மைந்த! உன் தந்தை வீர விளக்கு; என் தோழன் தியாக சமுத்திரம்; சௌம்ய ராயன் இணையிலா வீரன். அவனை இழிவு பேசும் கயவன் யாவன்? அவன்தன் நாக்கை உடனே அரிவேன்; என் உடைவாளுக்கு முதல் வேலை அது. யாவன் என் தோழனை இலேசாகப் பேசியவன்? உன் பிதாவைப் பரிகசிப்பவன் எங்கே? இப்பாருலகம் அறிய உரைக்கின்றேன்!

"மகோபா யுத்த முடிவிலே கொடிய வாட்போர் நிகழ்ந்தது. உன் தந்தையும் நானும் வாள் வரிசை காட்டினேம். எனது அயலே இருந்து உன் தந்தை தலை கொடுத்தான் எனக்கு; ஆபத்தைப் போக்கினன். இருவரும் சேர்ந்து பகைவரைக் குமைத்தோம்; பிணமலை குவித்தோம்; சிரப்பந்து ஆடினேம். முடிவில் யான் படுகாய மடைந்தேன்; பிரக்ஞையும் தவறினேன்; பூமியிலே சாய்ந்தேன்! எத்துணை நேரம் அங்கே தரையில் கிடந்தேன் என்பது அறியேன். கடைசியில் கண் திறந்தேன். நாற்புறமும் நோக்கினேன். கழுகுகள் ஒரு

புறம், பருந்துகள் ஒருபுறம் வட்டமிட்டுக் கொண்டிருந்தன; இரண்டும் என்னைச் சூழ்ந்துகொண்டன; கொத்தித் தின்னவும் யத்தனித்தன. என்றன் சோர்வோ சொல்லிமுடியாது. எனது அங்கங்களை அசைக்கவும் முடியவில்லை. என்னருகே நோக்கினேன்; உன் தந்தையைக் கண்டேன். இருகாலும் இல்லை அவருக்கு. என்னிடம் நகர்ந்துவர நினைத்தார். இயலவில்லை. தமது உடலிலிருந்து ஒரு கையால் சதையை நறுக்கினார். மற்றொரு கையால் வீசி எறிந்தார் அதனை."

"சதைத்துண்டுகள் விழும்பக்கம் கழுகினங்கள் நகர்ந்தன; என்னை விட்டும் தூர அகன்றன. பார்த்தேன்; பதறினேன்; பரவசம் ஆனேன்; என் நினைவு தப்பியது. என் கண்கள் மூடின. கடவுளைக் கருதினேன்; தேசத்தை நினைத்தேன்; முடிவிலே கண்களைத் திறந்தேன். சுற்றும் முற்றும் பார்த்தேன். இந்திரப்பிரஸ்த அரண்மனையிலே வைத்திய சாலையில் கிடந்தது உணர்ந்தேன். நாற்புறமும் என் படைத்தலைவர் நின்றனர். மருத்துவரும் இருந்தனர். என்னைக் காக்க, என்மூலம் நமது தேசத்தைக் காக்க, அந்த அன்னியனை வெருட்டியோட்ட, அத் தியாகமூர்த்தி சௌம்ய ராயன் தன்னையே பறிகொடுத்தான்!

"சிபியின் கதையைக் கண்ணாரக் கண்டேன்! அவ் வீரதிலகத்தின் தியாகத்தை உணராத உலுத்தன் யாவன்? ஒன்றுந் தெரியாமல் உரைப்பவன் எங்கே? இந்திரப்பிரஸ்தத்திலே, பாரதபூமியிலே, கோழைகள் இருப்பரோ? இராஜபுத்திர மரபு மாசுபடுமோ? சத்திய ராஜபுத்திரன் சதையை நறுக்கி நறுக்கிக் கொடுத்தான். என் மைந்த! வீர இளைஞ! வாட்டம் தவிர்! ஆறுதல் கொள்! படைத்தலைமை தந்தேன்! தந்தேன்!"

அதுகேட்ட சபையோர் திடுக்கிட்டனர்; தியாக விவரம் கேட்டு வியப்பும் கொண்டனர்; வீரத்தை வாழ்த்தினர்; தியாகத்தை மெச்சினர்; தீரத்தைப் போற்றினர்; வீர அலங்காரனுக்கு ஆசி கூறினர்; ஆர்ப்பரித்தனர்; பேரன்பின் சீர் அணிகலமான சௌம்ய ராயனுக்கு வீரச்சிலை அமைத்தனர். வடநாட்டில் இன்றும் சௌம்யராயன் பெருமை மிகவும் பிரசித்தம்.

பழுக்கக் காய்ந்த இரும்புத்துண்டு பளீரென்று ஜலத்தை உறிஞ்சும். சிறாரின் மனமும் அத்தன்மையதே. அன்னியர் அனைவரும் தெய்வப் பிறவி, நம்மவர் அனைவரும் நயவஞ்சகர் என்றால், இளமனம் நம்பிவிடும். இளமனத்தில் பொய்யா புகட்டுவது? சிறுமையா நாட்டுவது? சிவாஜி சிறந்தது எங்ஙனம்? பெரியோரின் மெய்ச் சரிதம் கேட்டான்; மேம்பாடெய்த முனைந்தான்; மொய்புகழ் கொண்டான். ஆதலின் இனியேனும் நம்மவர் அசடர், அன்னியர் சமர்த்தர் என்ற சரிதப்பொய் போதும்! மெய்ச் சரிதமே தேவை!



# 15. நீளாதேவியின் தியாகம்

டில்லிமா நகரம் கண்ட அரசுகள் அனந்தம்; சாம்ராஜ்யங்களும் பலவாம். அந்நகரைச்சுற்றி நாற்புறமும் இடிந்த கோட்டைகள்; சரிந்த மதில்கள்; பாழ்பட்ட மாடமாளிகைகள்; பழுதான கோபுரங்கள். அவை அனைத்தும் நம் கண்ணைப்பறிக்கும்; கருத்தை யள்ளும்; உலையா முயற்சியின் உயர்வைக் காட்டும்; கால சக்கரத்தின் சுழற்சியையும் புலப்படுத்தும்; தற்போதுள்ள புதிய டில்லியைக் கட்டிமுடிக்க ஏறக்குறைய பதினாறு கோடி ரூபா ஆயிற்று. பழைய டில்லி எத்தனை கோடி விழுங்கியதோ?

அந்நகரிலிருந்து ஆட்சி செலுத்திய அன்னிய அரச வமிசத்தார் அநேகராவர். அன்னவரில் ஒரு சாரார் துக்ளக் வமிசத்தார். அத்துக்ளக் வேந்தரில் முதல்வன் கியாசுதீன். இவனுக்கு ஒரு சோதரன் உண்டு. அச்சோதரன் பெயர் சாலர் ரஜாப். இந்து மாதை அவன் மணக்க விரும்பினான்.

அந்நாளில் கட்டழகியர் இராஜபுத்திர மங்கையரே. தீபல புரத்து மன்னவன் மகள் அழகின் வடிவம். அவள் பெயர் நீளாதேவி. "மகளைத் தந்து மகிமை கொள்க," என்று தூது விடுத்தான் கியாசுதீன். மன்னவன் மாலபட்டன் அதற்கு மனமொப்பவில்லை. பின்பு நயந்தும் கேட்டுப் பார்த்தான் துக்ளக் வேந்தன். மரபின் மானமே பெரிது என்றான் மாலபட்டன். முடிவில் தீபலத்தின்மீது எழுந்தது டில்லிச் சேனை; மூண்டது கடுஞ் சண்டை.

அஃது மண் கருதிக் கிளம்பிய போர் அன்று; பெண்ணைக் கருதிக் கிளம்பிய போராம். அன்னியர் அட்டகாசம் கொண்டனர். கிராமங்கள் கொள்ளைக்கு ஆளாயின. கொலைகளும் மலிந்தன. தீயும்

தாண்டவம் ஆடியது. அக்கிராமவாசிகள் தலைவிரி கோலமாக ஓடிச்சென்று மாலபட்டனிடம் முறையிட்டனர். அதுகேட்ட இராஜபுத்திர வேந்தன் சினம்பூத்து சீறிக் கிளம்பினான். பகைவன் சேனையோ பெருவெள்ளம். மாலபட்டன் சேனையோ மிகவும் கொஞ்சம்.

பெருஞ் சேனையை வெற்றிகொள்ள வழி ஏது? வீர சுவர்க்கந்தான் கிட்டும். இந்நிலைமை நேரின், ராஜபுத்திரர் மஞ்சள் உடை தரிப்பர்; மாதேவனைத் தொழுவர்; தம் மனைவிமக்களை வெட்டிக் குவிப்பர். குடும்பபாசம் குறுக்கிடலாகாது என்பதே அவர்தம் கொள்கை. மானம் படவரின் மாண்டு போதலே மேல் என்பதும் அன்னாரின் கோட்பாடு. எல்லைப் புறத்தின் கிராமங்களிலே அன்னியரின் அட்டகாசம் என்றால், தலைநகரிலோ குலவீரரின் கோபாவேசம். காரணம் புலப்படவில்லை நீளாதேவிக்கு!

அக்குமாரி தனது அன்னையிடம் சென்று, அடி பணிந்து, போர்வீரர் பொங்கி எழுவதேன் என்றாள். தாய்க்கோ வாய்திறக்க முடியவில்லை; துக்கம் வந்து நெஞ்சை அடைக்கிறது. கண்களில் நீர்த்துளிகள் சொட்டுகின்றன. நாசியில் பெருமூச்சு கிளம்புகிறது. அது பார்த்த பதினாறு வயது மங்கை பதறினாள்; பதைத்தனள்; பொருமினள். இதற்கு இடையில் தோன்றினாள் தாயின் தாய். "பாட்டி! போரேன்? பூசலேன்?" என்றாள் பேத்தி.

"என் கண்ணே! பணத்தைப் படைத்தான் பிரமன்; மாதரையும் படைத்தான். அழகையுமா அமைக்கவேண்டும்? எல்லாம் அழகுத் தெய்வத்தின் அனர்த்தமே!" என்று கதறினாள் அக்கிழவி. நீளாதேவி ஒரு கணநேரமும் அங்கே தாமதிக்கவில்லை; கடுகிச் சென்றாள் காவலன் கோயிலுக்கு; காலில் விழுந்து குறை இரந்தாள். மாலபட்டனே போர்க்

கோலத்துடன் நிற்கிறான். படைத்தலைவரும் பரி மீதேறப் பாங்குடன் நிற்கின்றனர். ராஜகுமாரியின் கோலங் கண்டதும் அனைவருக்கும் மனம் விண்டது.

அதுகண்டு கூறுவாள் நீளாதேவி:—"எந்தாய்! குலம் விளங்கக் குமாரி வேண்டுவர் குவலயத்தோர். குலம் நசிக்கத் தோன்றினேன் பாவியேன்! நன் மங்கை பிறந்து, நாடும் குடியும் செழிக்க வேண்டும். அங்ஙனமின்றி நலிந்து மெலிதல் நீதியோ? நங்குல மாதரின் சரிதம் அறிவேன். பலரும் ஆருயிர் வழங் கினர்; பெருந் தியாகம் புரிந்தனர். எல்லாம், நாடு நலம்பெற; மரபு மங்காதிருக்க; மானம் மாசுபடா திருக்க! அன்னாருக்கு என் வணக்கம்!

"இன்று பகைப்படையோ இலட்சக்கணக்கு.நம் வீரர் ஆயிரக்கணக்கே. போரோ காதல் கருதியது; வெகு கோரமாகவே இருக்கும். உயிர்க்கொலைக்கு ஒரு கணக்கே இராது. நமது நாட்டின் அழிவோ கேட்க வேண்டியதில்லை. இவ்வளவும் என் பொருட் டன்றோ? பல்லாயிரம் உயிர்களைப் பலிகொடுப்பதி னும், பலர் பரிதவிப்பதினும், என் ஒருயிர் போனால் என்ன? உடல் போனால் என்ன? உயிரை நிறுத்தி, உடலைக் கொடுக்கத் துணிந்துள்ளேன்.

"இங்கே அன்னியரின் அரசு முளைப்பதைத் தடுக்க முயன்றனர் நமது முன்னோர். ஆண்டவன் வேறு விதமாக எண்ணிவிட்டான். இனி வருந்திப் பயனில்லை. அன்னிய அரசே இங்கு நிலைக்கப் போகின்றது. அதனை வேரறுத்தல் இச்சமயம் இய லாத காரியம். இடம், பொருள், ஏவல்கள் எல்லாம் நமக்குப் பிரதிகூலம். எனவே, சிதைக்க முடியாத அரசைச் சீர்திருத்துதலே மேலாம். இனிமேல் வரும் அரசேனும் பேதம் நீங்கிப் போதம் பெறுதல் வேண்டும். குடிகளும் சுகமுறுதல் வேண்டும்.

"சமூக நலங்கருதியே அத்துருக்கரின் வமிசத்

திற்கு மணமகளாகச் செல்லுகின்றேன்; செல்லு கையில், முதலாவதாக நமது தீபலபுத்திரன் கலியக லும்; எனது வயிற்றில் உதிக்கும் மகவின் மூலம், பாரத பூமியின் பரிபவமும் தொலையலாம். தியாகம் வீண்போகாது. பரமன் உள்ளான் பாதுகாக்க. என் மகன் காலத்திலே கருணை ததும்பலாம்! அத் தகைய புண்ணியவதியாகத் துலங்கவே விரும்பியுள் ளேன்! ஆசியும் ஆணையும் தேவை!"

மகளின் வசனம் மாலபட்டனது மனத்தைப் பிளந்தது; படைத்தலைவரின் உள்ளத்தை உடைத் தது. குலத்துக்கு ஈனம் வேண்டாம் என்று எல் லாரும் வேண்டிக்கொண்டனர். மங்கை நீளாதேவி மீண்டும் மனமாரப் பகர்வாள்:—"பெரியோரே! வீரர்க்கு அழகோ வருந்துதல்? மாளிகையிலுள்ள பேரணி ஒன்றைக் கள்வர் கவர்ந்து செல்லின், என் செய்வீர்? நிம்மதி கொள்ளுங்கள். என்தன் தியாகம் இனிய பலன் தரும். கலக்கம் வேண்டாம். விடை தாருங்கள்! விரைந்து செல்லுகிறேன்."

சுருங்கச் சொன்னல், நீளாதேவி அச் சாலர் ரஜாப் என்பானுக்கு வாழ்க்கைத்துணை ஆயினள். நாளடைவிலே அவள் வயிற்றில் நன்மகன் ஒருவன் தோன்றினன். அவன் பெயர் பிரோஸ் ஷா. மகன் பிறந்த ஏழாம் ஆண்டு, தந்தை மரித்தான். தாயும் பெரியப்பனும் மகனைப் பரிவுடன் போஷித்து வந்த னர். பின்பு கியாசுதீனும் மரித்தான். உடனே கியாசுதீன் மைந்தன் முகம்மது துக்ளக் என்பான் மன்னவன் ஆனன். இவனும் இறந்தான் நாளடை வில். முடிவிலே பிரோஸ்ஷா சிம்மாசனம் ஏறினன்.

அக்காலை மங்கோலியர் படைகொண்டு புகுந் தனர் நம் பாரத பூமிக்குள். அன்னவரை வெருட்டி ஓட்டினன் பிரோஸ்ஷா. இது நிற்க, முன்னமிருந்த முகம்மது துக்ளக் பற்பலரிடம் கடன்பட்டிருந்தும்

8

கண்மூடிவிட்டான் பட்டகடனைத் தீர்க்காமலேயே. அந்தக் கடன்காரர் அனைவரையும் வரவழைத்தான் பிரோஸ்ஷா; வட்டியுடன் கடனைக் கொடுத்தான்; கடன் பத்திரங்களை எல்லாம் காது கிள்ளி வாங்கினான்; அவற்றை முகம்மதின் கல்லறை முன்னே வைத்தான்; "என் ஆண்டவா! முகம்மதின் ஆன்மா சாந்தியடைவதாக!" என்று மனமாரத் துதித்தான்.

அப்பால் டில்லிமீது பகை யரச னொருவன் பதைத்து வந்தான். விதியின்றியே அவனுடன் சண்டைக்கு எழுந்தான் பிரோஸ். பகைவனோ பயந்து ஒரு கோட்டைக்குள் பதுங்கிக்கொண்டான். கோட்டையைத் தகர்த்து, அவன் உயிரைக் குடிக்க வேண்டும் என்று கூறினர் தளகர்த்தர். "சண்டை என்றால், எண்ணிறந்த உயிர்கள் மடியும்; நாடும் பாழாகும்; கொள்ளையும் கொலையும் பெருகும். அங்ஙனம் ஆனால், எனக்கும் மங்கோலியருக்கும் என்ன வித்தியாசம்?" என்றான் பிரோஸ் ஷா.

முந்தைய அரசன் காலத்திலே குடிகள் படாத பாடுபட்டனர். அதனால் பணவறட்சி அதிகரித்தது; வேளாண்மை குன்றியது. அதுகண்டதும், பயிர்த் தொழிலைப் பெருக்கவேண்டி, ஏருழவர் பலருக்கும் பிரோஸ்ஷா கடன் கொடுத்தான்; நிலவரி வசூலை நிறுத்தினான்; விவசாயத்தைப் பெருக்கினான்; தேச மக்கள் வாங்கிய கடனைச் செலவில் எழுதிவிட்டான்; இம்மட்டோ? தேசமக்களின் நலம் பெருக, எங்கும் கால்வாய்கள் அமைத்தான்; ஏரிகள் சமைத்தான்; குளங்களும் நிருமித்தான்; யமுனை நதியிலிருந்து இருநூறுமைல் நீளமுள்ள பெரிய கால்வாயொன்றும் வெட்டி வைத்தான்.

டில்லியிலே அவன் கட்டிய மாளிகைகள் பல; வளர்த்த பூஞ்சோலைகளோ இன்னும் பல; பழத் தோட்டங்களும் எண்ணில. பன்னீராயிரம் பழத்

தோட்டங்கள் தழைத்தன என்கிறார் ஓர் ஆசிரியர். ஜான்பூர் எனும் புதிய நகரம் நிருமித்தான் பிரோஸ் ஷா; அதனைக் கலைமகளின் கோயில் ஆக்கினான். பண்டிதருக்கும் கவிஞருக்கும் ஜான்பூர் புகலிடமா யிற்று. ஜ்வாலமுகி என்னும் நகரில் இந்துக்களின் புத்தகாலயம்ஒன்று இருந்தது. அதிலுள்ள வேதாந்த நூல்களைஎல்லாம் பாரசீக பாஷையில் பிரோஸ்ஷா மொழிபெயர்த்தான் பண்டிதரைக் கொண்டு.


வேளாண்மை கருதி அவன் கட்டிய நீர்த்தேக் கங்கள் ஐம்பதாம்; மசூதிகளும் தொழுகை ஸ்தலங் களும் அறுபது; மாடகூட மாளிகைகள் இருபது; நகரங்கள் இருநூறு; வைத்தியசாலைகள் ஒரு நூறு; நீராடும் மண்டபங்கள் நூறு; வாராவதிகள் நூற் றைம்பது; சத்திரஞ் சாவடிகள் இரு நூறு. குடி மக்களிலே முஸ்லிமென்றும் இந்துக்களென்றும் அவன் வேற்றுமை காட்டியதே கிடையாது.

பட்டு பீதாம்பர உடைகளை அவன் உடம்பு கண்டறியவில்லை; ஆபரணாதிகளையும் கண்டது கிடை யாது. ஆடம்பரம் என்றால் அவனுக்குச் சிறிதும் பிடிக்காது. எளிய இனிய வாழ்க்கையே கொண்டு நின்றான் அக்கொற்றவன். நாளடைவில் அவனுக்கு மூப்பு மேலிட்டது. அரிய அரசை அவன் தன் மைந்த னிடம் ஒப்படைத்தான்; முன்னவனை நோக்கி மாளிகையிலேயே தவங்கிடந்தான். அம்மைந்தனோ நாட்டை நினையாமல், நாரியரின் நல்லுறவிலும் சீரிய பானவகையிலுமே நாட்டம் கொண்டனன்.

அதனால் அரசியல் சீர் குலைந்தது; ஜனங்கள் வருந்தினர்; தவிப்பும் துடிப்பும் தலைமிஞ்சின. உடனே ஜனக்கலகம் மூண்டுவிட்டது. அஃதறிந் ததும் தள்ளாத வயதில், பிரோஸ்ஷா தன்னந்தனி யனாக வந்தான்; கொதித்து நிற்கும் கூட்டத்தினி டையே தோன்றினான்; "மக்காள்! எனது மைந்

தன் மதிகெட்டான் ; அவனை நல்வழிப்படுத்த முய லுகின்றேன். கொண்ட கோபம் தணிக, கலகம் தவிர்க,'' என்றான். படமவிந்த நாகமேபோல், மக்கள் அடங்கிக் கிழமன்னனவனை 'வாழ்த்தி இல்லம் ஏகினர் ஆறுதல் கொண்டு.

செம்மனத்தான், தண்ணளியான், செங் கோலான் என்பர் தமிழ்ப் புலவர். அங்ஙனமே மிளிர்ந்தான் பிரோஸ் ஷா. அடிமை அரசரும் கில்ஜி வேந்தரும் படுத்திய பாடெல்லாம் பிரோஸ் ஷாவின் ஆட்சியில் மறைந்தன. மக்கள் ஆறுதல் அடைந்தனர். இத்தகைய நன்னிலையை நாடியே நீளாதேவி தியாகம் செய்தனள் ! தியாகம் வாழ்க !



# 16. சங்கர சிம்மனும் பாபரும்

மத்திய இந்தியாவில் இராஜபுதனம் ஒரு பெரிய தேசம். அதில் மேவார், மார்வார் என்று பற்பல நாடுகள் உண்டு. தலைநகரின் பெயரைக்கொண்டு அவற்றை உதயபுரி, ஜோதிபுரி என்பார்கள். அங்கே வசிக்கும் ஜனங்கள் இராஜபுத்திரர்; தேசசுதந்திரங் கருதி அன்னவர் வாட்போர் புரிவர்; வைரியை வதைப்பர்; இயலாதாயின் வீர சுவர்க்கமே நாடுவர்; படை முகத்திலும் பெருந்தன்மை காட்டுவர். இவை அம் மரபினரின் குண விசேஷங்களாம்.

அந்த நாடுகளில் சிறந்தது உதயபுரி. உதய புரி வேந்தர் சுத்த வீரர்; கடந்த ஆயிரம் ஆண்டு களாக வாழையடி வாழையென வாழ்ந்து வருவோர். எட்டாம் நூற்றாண்டிலே உதயபுரியிலும் அரபியர் தலைநீட்டினர். அன்று அவர்களைப் புறங்கண்டான் உதயபுரி வேந்தன் **பூபசிம்மன்**. அக்பருக்குத் தலை வணங்காமல் கடைநாள் வரையில் வீரம் விளைத்த வனும் அந்நாட்டு வீரவேந்தனான **பிரதாப சிம்மனே**. அவுரங்கசீபுடன் அருஞ்சமர் ஆற்றியவனும் அப் புரியின் காவலன் ராஜசிம்மனும்.

1509-ஆண்டு உதயபுரியின் அரசனாகத் தோன் றியவன் **ராணா சங்கர சிம்மன்**. அவன் மூதாதையரில் ஒருவனே சமர சிம்மன்; கடைசி ஹிந்து சக்கர வர்த்தியான (டில்லி பூபதி) பிருதிவி ராஜனுக்குத் துணைபோனவன்; தானேசுவரத்திலே முகம்மது கோரியுடன் கொடுஞ்சமர் செய்து உயிர் துறந்த வன். பிருதிவியும் மாண்டு போகவே, டில்லியில் அன்னிய அரசு முளைத்தது. அடிமை அரசர், கில்ஜி வம்சத்தார், துக்ளக் மரபினர், லோடியரசர் முதலி யோர் முந்நூறு ஆண்டு ஆண்மை செலுத்தினர்.

ராணா சங்கர சிம்மன் சிம்மாசனம் ஏறிய சமயம், சின்னாபின்னமாகக் கிடந்தது டில்லி யரசு. மேலும் வடஇந்தியாவிலே பற்பல இடங்களிலும் முஸ்லீம் சிற்றரசுகள் முளைத்திருந்தன. உதயபுரிநாட்டிலோ உட்பகையினால் அலங்கோலமும் நிறைந்திருந்தது. அரசுகட்டில் ஏறியவுடனே, அந்த அலங்கோலத்தை எல்லாம் அறவே போக்கினான் சங்கரசிம்மன்.

மாளவ நாட்டின் மன்னவனும், டில்லியின் சுல்தானும் சும்மா இராமல் அடுத்தடுத்து சங்கரன்மீது போருக்கு எழுந்தனர். பதினெட்டுச் சண்டைகள் நடந்தன. இருமுறை டில்லி சுல்தான் தோற்றோடினான்; டில்லி வீரரில் பலர் ஆவி இழந்தனர். டில்லியரசின் குமாரனே சங்கரனிடம் சிறைப்பட்டான். மாளவ மன்னன் கொண்ட தோல்விக்கு ஒரு கணக்கில்லை. அவனும் சிறையுண்டு சங்கரன் தயவால் பின்னர் விடுதலை கொண்டான். உதயபுரி உயர்ந்தது. சங்கரசிம்மனும் சிறப்பு எய்தினான். மேவாரும் பரப்பில் பரந்தது. ராஜபுதன மக்கள் அனைவரும் சங்கரனையே குலத்தலைவன், ராஜபுதனக் காவலன், பாரத பூமியின் அதிபன் என்று கொண்டாடினர்.

இந்நிலையில், "தேசமெங்கும் சுயவரசே சிறக்க வேண்டும்; அன்னிய அரசுகளுக்கு இடந்தருதல் ஒண்ணாது; இதற்கேற்ற உபாயம் யாது?" என்று சங்கரசிம்மன் சிந்தனை செய்யலானான். அச்சிந்தனையின் இடைநடுவிலே இத்தேசத்தில் தோன்றினான் பாபர் என்பான். அப் பாபரின் மூலம் இங்கே தோன்றியது மொகலாய வல்லரசு.

பாபரின் வரலாறு சற்றே பார்ப்போம். பாரத பூமிக்கு மேற்கே பிரசித்திபெற்ற ஒரு தேசம் துருக்கிஸ்தானம். அது தார்த்தாரிய வகுப்பினரின் பூர்வீக வாசஸ்தலம். தார்த்தாரியரில் ஒரு சாரார் மொகலாயர். பாபரும் ஒரு மொகலாயன்; குறுநில மன்ன

வனது மைந்தன். தந்தை மரிக்கவே, பாபருக்குப் பட்டம் கிடைத்தது. அப்போது அவனுக்கு வயது பன்னிரண்டே. தாயாதியர் அந்நாட்டினைக் கவர முயன்றனர். தனது தோழரின் உதவியால் காத்துக் கொண்டான் பாபர்.

பதினைலு வயதுக்குள் பாபர் வீரக்கொடி தூக்கினன். பின்னர் அவனுக்கு வந்தது தாழ்வு. உயிருக்கு அஞ்சி அவன் ஓடவும் நேர்ந்தது. அப்பால் சில நாடுகளை அவன் பிடித்தான்; மீண்டும் இழந்தான். தெய்வத்தின் சித்தம் திரும்பிவிடின், மன்னர்தம் வாழ்வு மண்ணாகும்; மண்டலீகர் மேடையும் மறைந்து போம்; போக போக்கியங்களும் பகல் கனவாக முடியும். எனினும் முயற்சி யுடையார் இகழ்ச்சி அடையார் என்பது மூதுரை.

அப்பால் பாபர் தனது ஜன்ம தேசத்தை விடுத்தான்; கிழக்கு நோக்கி வந்து, காபூல் (காம்பிலி) நாட்டைப் பிடித்தான். பின்னர் டில்லியின் மீது அவனுக்கு ஆசை சென்றது. அதற்கு முதல் படியாக பஞ்சநதிப் பிரதேசத்தை வசஞ்செய்தான்; அதன்பின் உள்நாட்டினில் புகுந்தான்.

அப்போது டில்லியில் சுல்தானக விளங்கியவன் இப்ராஹிம் லோடி என்பவன். இவன் காலத்திலே டில்லி யரசில் உட்பகை மிகுந்திருந்தது; ராஜ்யமும் சின்னபின்னமாகக் கிடந்தது. 1526-ம் ஆண்டிலே பாணிபத (பானிபட்) நகரில் லோடிக்கும் பாபருக்கும் யுத்தம் மூண்டது. அதில், பாபரே வெற்றி யடைந்தான். டில்லி பாபரின் வசமாயது. ஆக்ரா நகரும் அப்படியே. டில்லி சுல்தானக அவன் சிம்மாசனம் ஏறினன் சிறப்பாக.

இவற்றை எல்லாம் பார்த்தான் சங்கரசிம்மன். புதியதாக அன்னிய அரசு முளைத்தல் கண்டு, அவன் மனம் பொறுக்கவில்லை. முன்னம் சமரசிம்மன்

டில்லியில் மாண்ட விவரம், அவன் பூண்ட சபதம், தான் கொண்ட கருத்து முதலிய அனைத்தும் சங்கரன் முன்னே நின்றன. உடனே அவன் போர் முரசு கொட்டினன். ராஜபுத்திர வீரர் திரண்டனர்.

திரண்ட அச்சேனையில் எண்பதினாயிரம் குதிரை வீரர், இருபதினாயிரம் வில் வீரர், ஐந்நூறு யானை வீரர். மேலும் அரசரெனப் பெயர் படைத்த எழுவரும், அரசருக்கு அடுத்தபடியான அதிபர் ஒன்பதின்மரும், குறுநில மன்னர் நூற்றுநால்வரும் பரிவாரமாயினர். முஸ்லீம்களில் ஆப்கானியரான சில அரசரும் சங்கரன் பக்கம் சேவகம் புரிந்தனர்.

பாபரின் சேனைகள் டில்லியிலிருந்தும் ஆக்ரா நகரிலிருந்தும் புறப்பட்டன. அவற்றின் தொகை ஒரு நூறாயிரம். விஜயா என்னும் இடம் சேர்ந்தனர் சங்கரன் வீரர். உடனே பாபரின் முன்னணிகள் வந்து தாக்கின. கடும்போர் தொடங்கியது. முன்னணி வீரர் அத்தனை பெயரும் மாண்டு மடிந்தனர். மீண்டுமொரு படையை அனுப்பினன் பாபர். இதற்கும் அதே கதி நேர்ந்தது. உயிர் தப்பிய சிலர் பாபரிடம் சென்று பிரலாபித்தனர். அப் பெருமானும் பிரமித்து நின்றான்.

படைத்தலைவரிலே சிலர் பாபரை விட்டகன்றனர். நட்டாற்றில் கைவிடுவதா என்று கலங்கினன் பாபர். போதாக்குறைக்கு மொகலாயரின் சோதிடனே, "சகுனம் தட்டுகிறது; வெற்றி கிட்டாது," என்று கூறினன். இதற்கு இடையில், நான்கு பக்கமும் பாபரின் சேனையை ராஜபுத்திரர் சூழ்ந்து கொண்டனர். கூண்டில் சிக்கிய புலிபோலாயினர் பாபரும் அவன் சேனைவீரரும். அந்நிலையில் பாபர் தனது தளகர்த்தரைத் தருவித்து, உள்ள நிலையை உணர்த்தி, மேலே யாது செய்வதென உசாவினன். புலி யடித்தது பாதி, கிலியடித்தது பாதி என்பர்.

தளகர்த்தரில் ஒருவராவது வீரதீரங் காட்டிப் பேச வில்லை; மதியமைச்சரும் வாய் திறக்கவில்லை. பிரபுக் களின் முகத்திலோ ஈயாடவில்லை. அது கண்டான் பாபர். தாழ்வில் தத்தளித்துத் தலைதூக்கியவன் அல்லவா? வைராக்கியம் பேசி, வீரதீரம் ஊட்டத் தலைப்பட்டான்.

பாபர் தன் வீரருக்கு உபதேசம் புரிந்ததின் சாரம் இது:—"உலகில் பிறக்கும் எவனும் ஒரு நாள் மாய்ந்தே தீரவேண்டும். ஆண்டவன் ஒருவனே என்றும் அழியாதிருப்பவன். வாழ்வென்னும் களியாட்டம் சாசுவதம் அன்று. நாம் சிரஞ்சீவிகள் அல்லர். மானம் இழந்து வாழ்தல் ஊனத்திற்கு இடமாம். மானத்துடன் மரிப்பதே மகிமையாம். பூதவுடம்பு பொன்றும், புகழுடம்போ நின்றுநில வும். ஊனமான ஊனிடை இருக்கும் உயிரினைத் துறந்து, மானமாம் பூஷணம் பூணுதலே பெருமை யாம். தண்டிலேபோனால் இரண்டில் ஒன்றுதானே, வெற்றிமாலை அல்லது வீரசுவர்க்கம். பின்வாங்கு வோன் பேடி; பேடியைப் பாரோர் பழிப்பர்."

இவ்விதம் பாபர் வீரவேதாந்தம் பேசினான்; வைராக்கியமும் புகட்டினான். மண்ணில் விழுந்த நீர் சுவரும், கல்மீது விழுந்த நீரோ தெறித்து ஓடும். அவன் துணைவர் செவி சாய்க்கவில்லை; திகைப்பி னின்றும் நீங்கவில்லை. அவர்களிடம் கோழைத் தனமே மிகக் குலவியது. "டில்லியரசு வேண்டாம், சிந்துநதியைத் தாண்டி, மேற்கே போய்விடலாம்" என்றனர் பாபரின் துணைவர் அனைவரும்.

பரம பக்தனான பாபர் அந்நிலையில் ஆண்ட வனே கதியெனக் கொண்டு, தெய்வத்தை நினைத் தான்; தன்னிடமுள்ள ஒழுங்கீனங்களை நோக்கி னான்; உடனே மனத்தோடு புலம்பலானான்:— "மனமே! மிகு பாவத்தில் பட்டுழன்றது போதும்.

மோகத்தில் மூழ்கிக் கிடந்ததும் சாலும். தீவினையில் சிக்கிச் சிதைந்து விட்டனையே! விகாரத்தினுக்கு ஆளாகி அழிகின்றனையே! இங்ஙனமா நைந்தழிவாய் நீ? பரிசுத்த மதத்தை நிலைநாட்டப் புறப்பட்டாய்! பண்ணிய பாவம் போதும். பரிசுத்தனை விளங்க வழி பார். பார்த்தால் பரமனருள் கிட்டும்."

உடனே பாபருக்கு மதுவின் ஆசை பறந்தது; வைராக்கியம் பிறந்தது. மதுபானக் கிண்ணிகளை அவன் வீசி எறிந்தான்; மதுக்குடங்களை எல்லாம் மேதினிக்குள் குழிவெட்டிப் புதைத்தான்; அந்த இடத்திலே ஓர் அன்னசாலை சமைத்தான். அது கண்டனர் அமைச்சரும் தளகர்த்தரும். அன்னாரும் மதுவிலக்குச் சபதம் கொண்டனர். பின்பு அனைவரையும் கூட்டி, மீண்டும் ஒருமுறை பாபர் போதம் புகன்றான். அனைவரும் திருக் குர்ஆனைக் கைதனில் தாங்கிச் சபதம் செய்தனர்; மதத்தினைக் காக்க உயிரையும் துறப்போம் என்றனர்.

இதற்கு இடையே ராணசங்கரசிம்மனுக்கு அப்பாபர் விடுத்த தூது இது:—"வீர வேந்தே! டில்லி நகரையும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசத்தையுமே அடியேன் ஆண்டுவருவேன்; அப்பால் நான் காலடி வைப்பதில்லை. இதோ போரை நிறுத்திப் போய்விடுகிறேன்; கப்பங்கட்டி வாழவும் ஒருப்படுகிறேன்; உள்ளமொத்து உரை தருதல் வேண்டும்; இணக்கமான பதில் தரின், நலமாயிருக்கும்."

இதற்கு அச் சங்கரன் ஒப்பவில்லை. ஆயினும் சுமார் ஒருமாத காலம் பாபரும் அவன் வீரரும் ஒடுங்கிக் கிடந்த சமயம் அச்சங்கரசிம்மன் சோம்பி நின்றனன். மொகலாயரின் முன்னணியை முறித்த பின்பும், மேலும் வந்த படையைப் பாழ்படுத்திய பின்பும், சங்கரசிம்மன் தொடர்ந்து போரை நடத்தாது போன காரணம் யாது? பகையரசன் பலங்

குன்றி மனங் கலங்கி நிற்கையில், அவனைத் தாக்கி வாகை சூடுதல் தகாது என்றே கருதினன்போலும்! அளவு கடந்த தயாள குணம் காட்டுதல் ராஜபுத்திரரின் குண விசேஷம் என்பர்.

சேனாவீரரும் படைத்தலைவரும் சபதம் செய்த பின்னர், பாபர் மிக்க தைரியம் பூண்டான்; உடனே இரண்டு மைல் தூரம் முன்னேறி வந்தான்; ராஜ புத்திர வீரரைக் கொன்று குவிக்க பீரங்கிகளை அமைத்தான். இராஜபுத்திரர் அது தெரிந்து சீறிக் கிளம்பி, அணிவரிசையின் மத்திய பாகத்திலும் பாபரின் வீரரைத் தாக்கினர். தாக்கிய ராஜபுத்திர வீரரை ஒருவர் தவறாமல் பீரங்கிப் படையோ உயிருண்டது. சங்கரன் வீரர் தளராமல் புற்றீசல்போல் கிளம்பி வந்து பாய்ந்தனர். அப்போது ராஜ பக்தியும் தேசபக்தியும் தலைதூக்கி நின்றன.

சங்கரசிம்மன்மீதும் ஒரு குண்டுவந்து தாக்கியது. உடனே உடம்பிலிருந்து இரத்தம் பெருகத் தலைப் பட்டது. காயமோ சொல்லி முடியாது. ஒன்றையும் சங்கரன் மதியாமல், முன்னணியிலேயே இருந்து, வீரரை நடத்திநின்றான். வேந்தனது பேராண்மை கண்டு, ராஜபுத்திரர் ஆவேசங்கொண்டு முன்னேறினர். முன்னேறுவோரில் பலரும் குண்டு மாரியினல் குப்புற விழுவதைக் கண்டும், சங்கரன் வீரர் சளைக்கவில்லை; அன்னிய அரசை அண்டவிடோம், வாகை சூடுவோம் என்றே கர்ஜனை புரிந்தனர்.

மொகலாய அணிவரிசைகள் முறியும் சமயம், பாபர் பதைக்கும் நேரம், அவன் தளகர்த்தர் தளரும் தருணம், படைவீரர் விழிக்கும் வேளை, உதயபுரியின் இறைவன் வாகை மாலை சூடவேண்டிய சந்தர்ப்பம், அந்தோ! ஒரு சதி நிகழலாயிற்று. சங்கரனது முன்னணியில் நின்ற தளபதி யொருவன் மண்ணாசை கொண்டு, தன் துணைவருடன் திடீரென மொகலா

யன் பக்கம் சேர்ந்துவிட்டான். கண்டான் சங்கரன் அத்துரோக சூழ்ச்சியை; கலங்கினனில்லை; கண்ணு யிருந்தான் கருமத்திலேயே!

பின்னிருந்த வீரர் முன்னேறுவதற்குள் அத் துரோகியும் மொகலாயரும் இராஜபுத்திரரின் மேல் விழுந்து தாக்கினர். பாபரின் பீரங்கிப் படையும் கோரம் விளைத்தது. இராஜபுத்திரரின் தேசாபி மானம், ராஜவிசுவாசம் இரண்டையும் விரித்துரைப் பது எங்ஙனம்? வீரசுவர்க்கம் புகுந்ததை மட்டும் விளக்குவோம்.

தங்கபுரத் தலைவன் உதய **சிம்மன்** என்பான் தனது துணைவருடன் ஆருயிர் துறந்தான். சாலம்பர நாட்டதிபன் இரத்தின சிம்மன் என்பான் தன் ஆருயிர்த் தோழருடன் பட்டு விழுந்தான். மார்வார் ராஜகுமாரன் **ரவிமல்லன்** என்பான் தனது படை வகுப்புடன் மாண்டுமடிந்தான். சுவர்ணகிரிக் காவ லன் **ராமதாஸன்** என்பான் தனது வீரருடன் உயிர் விடுத்தான். பௌர குலத் தலைவன் **கோகுலதாஸன்** என்பான் தனது மரபின் மானத்தை நிலைநிறுத்தி மடிந்துபோனன். சோனக மரபினன் **மாணிக்க சந்தன்** என்பான் தனது உயிரை வழங்கினன். சங் கரசிம்மனும் படுகாய மடைந்தான்.

உள்ள நிலையை உணர்ந்த சங்கரன் உடனே பின்வாங்கினன் வெகு மனவாட்டத்துடன். அவ னைத் தொடர்ந்து துரத்த பாபருக்குத் துணிவில்லை. உடும்பு கையைவிட்டால் போதும் என்றே அப்பாபர் எண்ணினன். பின்வாங்கிய சங்கரசிம்மன் தனது இராஜதானிக்குச் செல்லவில்லை; மேவத மலைச் சாரல் சேர்ந்தான்; மீண்டும் போரே புரிந்து, பாப ரைப் புறங்கண்டாலன்றித் தலைநகரை எட்டிப்பார்ப் பதில்லை என்று சபதம் பூண்டனன். அவ்விதம் பூண்ட அருஞ் சபதத்தை முடிக்குமுன் அவனுக்கு

உயிர் போய்விட்டது. மனம் வெடித்து அம்மன்னர் மன்னன் மாண்டு போயினன் என்பர் சிலர். வேறு சிலரோ, "அன்று; மொகலாயரின் சூழ்ச்சி. சதியின் விளைவு, உணவில் விஷம் ஊட்டினர். ஆதலின் மாண்டுபோனன்," என்பர்.

அச்சங்கரனது வீர தீரத்தையும் குண விசேஷத்தையும் பாபரே புகழ்ந்து, தன் கைப்பட எழுதியும் வைத்திருக்கிறன். சங்கரனது மறைவு கேட்டு வடஇந்தியா முழுதும் வாடிநின்றது.

ராணு சங்கரசிம்மன் மகா பலவான்; பேராற்றல் படைத்தவன்; கட்டழகனும் ஆவான். போரிலே அவன் பட்ட காயத்துக்கு ஓர் அளவில்லை. இளமையிலே தம்பியுடன் நேர்ந்த சண்டையில் நேத்திரமொன்று போயிற்று. டில்லி யரசுடன்—இப்ரஹிம் லோடியுடன்—சமர் செய்ததில் ஒரு கரம் அற்றது. மாளவ மன்னவனுடன் முறுக்கிய போரிலே, உடலில் ஓர் எலும்பு நொறுங்கியது. வேல்கம்பினுலும் உடைவாளினுலும் கொண்ட காயங்கள் ஓர் எண்பதாகும். வீரனைக் காயங்கொண்டு தானே மதிப்பர்!

மகா அலெக்சாந்தரின் காலம் முதல் இன்றளவும் சரி, இந்தியாவிலே அன்னிய அரசு தோன்றும் பொழுது, நாட்டுமக்கள் வாளா இருக்கவில்லை; வாள் வரிசையும் தோள் வரிசையும் காட்டினர்; துணைவலியும் பிறவலியுங் கொண்டு பெருமுயற்சி புரிந்தனர். ஆனல் துரோகமே தலை எடுத்தது. சுயநலம் விஞ்சியது. உளவனல் ஊர் அழிந்தது. ஈசன் சாபமா? மக்கள் பாபமா?

## 17. பிரதாப சிம்மன்

“அன்னிய அரசு ஆகாது; அதனை அண்ட விடேன்,” என்று சீறினன் சங்கரசிம்மன். “விரோதம் வேண்டாம்; கப்பம் கட்டி வாழ்கிறேன்; அரசாள அனுமதி தேவை,” என்று வேண்டினன் பாபர். இதற்கும் அச்சங்கரன் சம்மதி தாராமல், அரும்போர் தொடுத்தான்; பெருவீரங் காட்டினன்; அந்தோ! விளைந்தது துரோகம்; வெடித்தது மனம்; வீழ்ந்தது வேந்தன் உயிர்.

புலியின் வயிற்றில் எலியா பிறப்பது? ராணு சங்கரசிம்மன் வயிற்றில் வந்தான் உதயன் என்பான். சோற்றுக்குக் கேடு; நிலத்துக்குப் பாரம்; மேவாரின் துர்ப்பாக்கியம். உதயன் உதிக்க அப்பதியின் மேன்மை குன்றியது. காமமே கதியெனக் கிடந்தான் அக் கசடன்.

டில்லி நகரிலோ பாபரின் பேரன் அக்பர் சக்கரவர்த்தி தோன்றினன்; பாரதபூமியை ஒரு குடைக்கீழ் ஆள எண்ணினன்; வெகுதிறமும் மிகுவீரமும் கொண்டான். இராஜபுதன வேந்தரில பலரும் அக்பருக்குத் தலைவணங்கினர். பின்னரே மேவாரின் மீது பாயலானன் அக்பர். ஒன்றுக்கும் உதவாத உதயனே சோம்பிக் கிடந்தான். சித்தூர் (மேவாரின் அன்றைய தலைநகரம்) சீரழிந்தது; அக்பரின் வசமும் ஆயிற்று. உதயனும் தொலைந்தான்.

அப்பால், மேவார் நாட்டிலே பட்டம் ஏறினன் பிரதாப சிம்மன்; உடனே பார்த்தான் மேவாரின் நிலையை; பதைத்தான் சீரழிவு கண்டு; முனைந்தான் முன்னைய நிலை காண; எண்ணினன் பழைய சரிதத்தை. “நம் குலமுதல்வன் பூபசிம்மன் அம்மை பவானியின் ஆரருள் பெற்று, அரபியரைப் புறங்

கண்டான்; காந்தாரம், பாரசீகம், துருக்கிஸ்தானம் இவற்றிலும் வீரக்கொடி தூக்கினான். இன்றோ நமது சித்தூரில் பிறைக்கொடி பறக்கின்றது. மற்றொரு மூதாதையான சமரசிம்மனே பிருதிவிக்குத் துணை போய் இரணகளத்தில் உயிர் துறந்தான். அவன் வழித்தோன்றல் இப்பிரதாபன்! இப்பெயர் பொருந்த வேண்டும் அன்றோ? என் செய்வது?

"நமது பெண்கள்நாயகம் பத்மினியின் பேரழகு கேட்டான் அன்னிய அலாவுதீன்; அருஞ்சமர் செய் தும் அவன் எண்ணம் மண்ணைக் கவ்வியது; நமது முன்னோரின் வாளமர் விளங்கியது; கற்பரசியின் மானம் தக்கியது. இன்றோ, ஏனைய இராஜபுத்திர வேந்தர் தம் மகளிரைக் கொடுத்து, மொகலாய மன்னனது மந்தகாசத்தில் மூழ்கித்திளைக்கின்றனர். மானம் எங்கே? மகிமை எங்கே? ஈன வாழ்வினும் வீரச் சாவே விரும்பப் தருமன்றோ?

"அலாவுதீன் கைப்பிடித்த சித்தூரை அமர சிம்மன் மீட்டு, அமரத்தன்மை அடைந்தான். மகா ராணா கும்பன் நமது அயலக அரசரை - அன்னியரை - அச்சித்தூரில் சிறைவைத்து, வெற்றி மண்டபம் சமைத்தான். இந்தப் பிரதாபன் யாது செய்யப் போகின்றான்? இவன் ஆண்மகன்; இராஜபுத் திரன்; மரபின் மானங் காப்பான்; மாசு போக்கு வான்; முடியாதாயின், படுகளத்தில் படுவான்; பர லோகம் போவான். இரண்டில் ஒன்று திண்ணம்.

"மேவார்நாடு மங்கிக்கிடக்கின்றது. சித்தூரும் கைதவறியுளது. இந்நிலையில் இறைவனுக்கு ஆடம் பரம் ஏன்? அலங்காரமும் எதற்கு? தங்கத் தட்டும் வெள்ளிப் பாத்திரமும் வேண்டுமோ? இலைதனில் நல்லமுது கொண்டால் போதாதோ? அந்த இலையும் எதற்கு? வெறுந்தரையே போதுமே! மலரணையில் துயில, பஞ்சணையில் படுத்தயர, இதுவோ காலம்?

பூமாதேவியின் மடியே போதும். சித்தூரை மீட்டாலன்றி, இப்பிரதாபனும் சரி, இவன் சந்ததியாரும் சரி, ஆடம்பர அலங்காரங்களை எந்நாளும் மேற்கொள்ளுதல் ஒண்ணாது! ஒண்ணாது!"

இங்ஙனமெல்லாம் எண்ணினான் பிரதாபன்; ஏற்றான் சபதம்; பூண்டான் கங்கணம். உடனே அரசியலை அவன் ஒழுங்குபடுத்தினான்; மக்களைத் தட்டிக் கொடுத்தான்; கோட்டைகளை பலப்படுத்தினான்; குலத்தின் மானத்தை வளர்த்தான்; சுதந்திர தாகத்தை எழுப்பினான். உடனே மக்கள் அனைவரும் கச்சை கட்டினர். பாளையக்காரர் அனைவரும் தோள் தட்டினர். வீரர் எல்லாரும் வாள் தீட்டினர். மேவார் நாடு எழுச்சி கொண்டது.

அக்பரோ பெருஞ் சமர்த்தன்; சாமம், தானம், பேதம் மூன்றையும் கையாண்டான். இராஜபுதன நாடுகளெல்லாம் தலைவணங்கின; அவனைத் தழுவியும் நின்றன. கலப்பு மணமுங் கொண்டு, நேசம் பூண்டு, இந்துக்களையும் மொகலாயரையும் ஒருமைப் படுத்தி, தன் வம்சத்தை நிலைநாட்ட அவன் முயன்றான். பிறநாடுகளைபோல் மேவாரும் கலப்புமணங் கொண்டு, கன பரிசும் வெகு வரிசையும் பெறலாம் என்று பிரதாபனுக்கு அவன் ஓலை விடுத்தான் வெகு தந்திரமாக.

பிரதாபன் அம்மாற்றங் கேட்டதும் வேலெறி பட்ட வேங்கையேபோல் துடித்தான்; குலத்தை விற்று வாழ்வு கொள்வது என்று கொதித்தான்; அவ்வாழ்வினும் வீரவீழ்வே மேலென மதித்தான்; தன் ஆருயிர் போயினும் அக்கறையில்லை என்றான். 'மேவாரில் எஞ்சிய நகரங்களை இழப்பினும் இழப்பேன்; மானம் இழவேன்; மகிமை கைவிடேன்; வீரமே விளைப்பேன்; வீறே கொளுத்துவேன். என் உடைவாளின்மீது ஆணை! அம்மை பவானியே

சாட்சி!' என்று சூளுரை கூறிப் பதில் விடுத்தான். அப் பதில் கண்டான் அக்பர். அவன் ஆசைக் கனல் கோபக் கனலாக மாறியது. "மேவார் எம் மாத்திரம்? இராஜாளியின் முன்னே ஊர்க்குருவி உரம் பேசுவதோ? மேவாரை முறியடிப்போம்; பிரதாபனை வாட்டுவோம்; பேரரசை நிலைநாட்டுவோம்," என்று எடுத்தான் சபதம். முதல் மூன்று வழியும் பலிக்கவில்லை. கடைசி உபாயத்தையே விதியின்றி அக்பர் கடைப்பிடிக்கலானான்.

இராஜபுதன நாடுகளில் மேவார் தவிர மற்றெல்லாம் மொகலாயருடன் தொடர்பு கொண்டிருந்தன. ஆதலின் அவற்றுடன் பிரதாபன் விவாகசம்பந்தம் ஒழித்தான்; பந்தி போஜனமும் விடுத்தான். அவை அக்பரின் கோபக் கனலை இன்னும் வளர்த்தன. அக்பரின் ராஜதந்திரம் பிரதாபனிடம் பலிக்கவில்லை; பாளையக்காரரிடமும் செல்லவில்லை. பிரதாபனது சோதரரில் இருவர் அந்த மாய வலையில் ஈடுபட்டனர். அம் மேவாரை நோக்கி மொகலாயச் சேனை திரண்டது. எண்பதாயிரம் வீரர் எழுந்தனர்.

பிரதாபன் வீரர் இருபத்து ஈராயிரவரே. ராஜபுதன வேந்தர் ஒருவர்கூடப் பிரதாபனுக்குத் துணை வரவில்லை. எதிரியின் பெருஞ்சேனை கண்ட பிரதாபன் தன் மக்களுக்கு ஓலை விடுத்தான். "சமவெளியில் யாரும் வசித்தல் கூடாது. மலைப் பிரதேசம் சென்று குடியேறுதல் வேண்டும். எவரும் மாற்றான் கையில் சிக்குதல் ஆகாது," என்பதே அந்த ஓலையின் வாசகமாம்.

அந்நாளில் மொகலாய ராஜசபையிலே ஆடம்பரம் மிகுதி. பொருள்கள் பலவும் ஐரோப்பாவிலிருந்து வரும். சூரத் நகரமே பெரிய துறைமுகம். அப்பொருள்கள் பலவும் மேவார்வழியே டில்லிக்குச் செல்லும். அதுகண்ட மேவார் வீரர்கள் கிளம்பி

வழிமறித்தனர் அப்பொருள்களை ; பறித்துக்கொண்டனர் அனைத்தையும். முதல் போரின் அறிகுறி கண்டனர் மொகலாயர் ; முதல்கோணல் முற்றுங் கோணலாக முடியுமோ என்றும் அஞ்சினர்.

அக்பரின் சேனை மேவார் நாட்டில் புகுந்தது. சமவெளியிலே நகரங்கள் எல்லாம் நிர்மானுஷ்யமாகக் கிடந்தன. ஈ, குருவி, காக்கைகூட இல்லை. பயிர் பச்சைகளும் கிடையா. அத்தகைய சமவெளியைத் தாண்டியது அச்சேனை ; சேர்ந்தது மலைப்பிரதேசம். அதுவரையில் பிரதாபன் வாளா விருந்தான் ; அச்சேனையைத் தாக்கவில்லை. டில்லி வீரர் அப்பிரதேசத்திலே அணிவகுத்து நின்றனர். போர் முனையின் நீளம் எண்பது மைல். அங்கே எங்கும் அடர்ந்த காடுகள் ; மிக ஆழ்ந்த பள்ளத்தாக்குகள் ; மேகத்தை முட்டும் குன்றுகள்.

பிரதாபனது வீரர் அக்குன்றுகளின் சரிவிலே மறைந்து நின்றனர். மலைவாசிகளான வில்லரோ அம்பும் வில்லுந் தாங்கிப் பாறைகளை உருட்டி வைத்து, உச்சியிலே ஒதுங்கிநின்றனர். மிகப்பரந்த பள்ளத்தாக்கின் முகப்பிலே பிரதாபசிம்மன் நிலை கொண்டான். அவன் துணைவரும் பக்க பலமாக இருந்தனர். அப்பள்ளத்தாக்கைக் கடந்தால்தான் அக்பரின் சேனை மேவாரின் முக்கிய நகரங்களைத் தாக்க இயலும். அக்பரின் அருமந்த மகன் ஸலீம் என்பான் சேனைத் தலைமை பூண்டான். அவனே பிற்காலத்தில் ஜஹாங்கீர் என்று விளங்கியவன்.

முன்பின் அறியாத மலைப் பிரதேசங் கண்டு ஸலிம் திகைத்தான் ; சேனையும் பிரமிக்கலாயிற்று. ஜயபுரி யரசனான மானசிம்மன் மார்தட்டி ஸலிமுக்குத் துணையானான். ஆகவே மொகலாயரின் திகைப்பு நீங்கியது. உடனே முன்னேக்கிப் பாய்ந்தது அச்சேனை. கல்சுவர்போல், பள்ளத்தாக்கின் முகப்பைக்

காக்கலாயினர் மேவார் வீரர். பிரதாபன் தனது உடைவாளை உருவியதும், சண்டைமூண்டது சண்ட மாருதம் போல். இரு பக்கத்து வீரரும் ஒருவருக்கு ஒருவர் சிறிதும் சளைக்கவில்லை.

வாளாயுதங்கள் மின்னின; ஈட்டிகள் பாய்ந்தன; வேல் கம்புகள் மிளிர்ந்தன; குதிரைகள் கனைத்தன; வீரர் சிங்கநாதஞ் செய்தனர். அவ்வளவில் சிரம் இழந்தனர் சிலர்; இடுப்பு முறிந்தனர் சிலர்; குதிரைகள் குப்புற விழுந்தன; எங்கும் பிணக்காடு; ஒரே இரத்தக் களறி. மொகலாயர் புற்றீசல்போல் கிளம்பி வந்தும், மேவாரின் வீரக் கல்சுவரை அசைக்க முடியவில்லை.

"மொகலாயருக்கு மங்கையரைக் கொடுத்து மகிழ்ந்து நின்ற ஏனைய இராஜபுத்திரருடன் பந்தி போஜனம், விவாக சம்பந்தம் இரண்டையும் பகிஷ்கரித்த பிரதாபனைச் சும்மா விடுவதா? பழி வாங்கியே தீரவேண்டும்," என்று மானசிம்மன் முனைந்தான். "இராஜபுதன வேந்தரெல்லாம் அடி வணங்கினர். பிரதாபன் எந்த மூலை?" என்று ஸலிம் கறுவினான். குலத்தின் கோடரிக் காம்புகளைக் குலைக்க வேண்டும் என்று பிரதாபசிம்மன் சீறினான். மானசிம்மனுக்கு உடலெங்கும் எண்ணிறந்த காயங்கள் பட்டன. அது பார்த்த பிரதாபன், "அன்பனே! மானசிம்மா! உன் காயங்களைக் கட்டிக் கொண்டு அத்தான் அக்பரையும் கூட்டிவா," என்று கூறி விடுத்தான்.

பின்பு ஸலிமை நோக்கினான் மேவார் மன்னவன். மொகலாயர் அனைவரும் தம் இளவரசனைச் சூழ்ந்துகொண்டனர். உடனே அம்புகள் ஆகாயத்தில் பறந்தன; குத்தீட்டிகள் குலவின; சிரங்கள் சரிந்தன; கவந்தங்கள் நிறைந்தன. ஸலீமைச் சூழ்ந்து நின்ற பலரையும் வெட்டிச் சாய்த்தான் பிரதாபன்.

மேவார் வீரரும் வெட்டுண்டு வீழ்ந்தனர். மொகலாய இளவரசன் அதுசமயம் பட்டத்து யானையின் மீது அழகிய அம்பாரியில் வீற்றிருந்தான்.

பிரதாபனது நீலவேணிக் குதிரை அக்குஞ்சரத்தை அணுகியது. பரிமாவைத் தட்டிக் கொடுத்தான் தணியா வீரன்—மேவார் இறைவன். அது தனது முன்னங்கால் இரண்டையும் தூக்கி, யானையின் முன்னங்கால் மீது பொருத்தி, அப்பிரதாபனை உயர்த்திக் கொடுத்தது. உடனே பிரதாபன் தனது நீண்ட வேல்கம்பை எடுத்து வீசினன். அக்கம்பு ஸலீமின் சிரத்தைத் தாக்கும் சமயம். இளவரசன் தனது தலையை அம்பாரிக்குள் இழுத்துக் கொண்டான். வேகமாக வந்த வேல் கம்போ அம்பாரியின் சிகரத்தைத் தகர்த்தெறிந்தது.

தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென ஸலீம் களித்தான். இதற்கு இடையில், பிரதாபனது துணைவன் ஒருவன் அக்கரிமாவின் பாகனைப் பூமியில் வீழ்த்தினன்: மற்றொரு வீரத்துணைவனே அக் குஞ்சரத்தின் துதிக்கையை இரு துண்டாக்கினன். கரமிழந்த யானை கதறிக்கொண்டு காயம் தாங்காமல் ஓட்டம் எடுத்தது. இளவரசனுக்கு அனர்த்தம் நேர்வதை அறிந்த ராஜா மானசிம்மன் ஆண் சிங்கம் போலக் கிளம்பி வந்தான். பிரதாபனது வில்லரோ அம்புமழை பொழிந்து பாறைகளையும் உச்சியிலிருந்து உருட்டிவிட்டனர். இந்நிலையில் மொகலாயரின் சேனை மதிமயக்கங் கொண்டது.

அச்சேனையிலே பலர் அஞ்சியோடினர்; சிலர் ஆவி இழந்தனர்; மற்றும் சிலர் பாறையினல் தாக்குண்டு பதறி வீழ்ந்தனர். ராஜா மானசிம்மன்மீதும் பாறையொன்று வந்து விழலாயிற்று. அவ்வேளை தந்திரமாக ஒதுங்கிக் கொடுத்தது மானசிம்மனது அசுவம். இல்லையேல் அவனும் நசுங்கியிருப்பான்.

அத்தகைய பேராபத்தைக் கண்டும் மனம் பதறாமல், "பிரதாபன் எங்கே? பிரதாபன் எங்கே?" என்று கூறிக்கொண்டே முன்னேறி வந்தான் மான சிம்மன். தட்சணமே கைகலந்த போர் நிகழ்ந்தது.

இரணகளம் எங்கணும் வீரரின் துணிபட்ட தலைகள்; அறுபட்ட கைகள்; வெட்டுண்ட கால்கள்; சரிந்த குடல்கள்; சின்னபின்னமான உடல்கள். இந்நிலையிலும் அக்பரின் படைகள் சளைக்கவில்லை. மொகலாயரில் ஒருவர் இறந்தால், பதின்மர் வந்து குவிந்தனர். அப்படை நான்கு பக்கமும் பிரதாபனைச் சூழ்ந்து கொண்டது. அப்போது, பிரதாபனுக்கு வாள் வீச்சினால் மூன்று, ஈட்டிக் குத்தினால் மூன்று, துப்பாக்கி ரவையினால் ஒன்று, ஆக ஏழு காயங்கள் உண்டாயின. அவற்றிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொட்டியது. பிரதாபன் சிறிதும் தளர்ந்தானில்லை. மனவலி சொன்னபடி கேட்டது; தோள்வலி தலைதூக்கியது; வாள்வலியும் குற்றேவல் புரிந்தது; வங்க வேங்கையே போல் வீறுகாட்டி நின்றான் வீரப் பிரதாபன்.

மேவார் வேந்தரோ போர்முனையிலும் குடை, கொடி, சாமரம் முதலிய விருதுகளுடன் துலங்குவர். ஆதலின், பிரதாபனிருக்கும் இடம் தொலைவிலுள்ள மொகலாய வீரருக்குத் தென்படலாயிற்று. அதனால் பகைப் படையனைத்தும் அவனையே சூழ்ந்து கொண்டது. கணநேரத்தில் அக் காவலனை ஒன்று வதைக்கலாம், இன்றேல் சிறை செய்யலாம் என்று களிக்கலானான் மானசிம்மன். ஸலீமும் அக்கோலங் காணக் கடவுளைத் துதித்து நின்றான்.

அவ்வேளை பிரதாபசிம்மனது பாளையக்காரரில் ஒருவன்—மானவன் என்பவன்—இறைவனது நிலை கண்டு, அப் பிரதாபனது பின்பக்கம் போயினான்; குடையும் கொடியும் தனக்குப் பிடிக்கச் சொன்

ஞன். மானவனது மதிவன்மை கண்ட பணியாளர் அவ்விதம் செய்தனர். இராஜ சின்னங்களுடன் மானவன் மெதுவாகப் பிரதாபனை விட்டகன்றான். குடையும் கொடியும் செல்லுமிடமே மேவார் மன்னவன் நிற்கும் இடமெனக் கருதி, மொகலாய வீரர் தொடர்ந்து சென்றனர். மெய்ப் பிரதாபனைச் சூழ்ந்து நின்ற பகைப்படை குறைந்து, பொய்ப் பிரதாபன் பக்கமே பெருகி வந்தது.

சிறிது நேரத்தினுக் கெல்லாம் அம் மானவன் மாநிலத்தில் சாய்ந்தான். வீரப்பிரதாபன் மாய்ந்து விட்டானென மொகலாயர் பலரும் பூரித்தனர். தொலைவிலிருந்த பிரதாபனோ தனது உயிர் தப்பிய விதமும் வகையு முணர்ந்து, பகைவரின் பூரிப்புக் கண்டு நகைத்தான்; அம்மை பவானியை உடனே துதித்தான்; மானவனை வாழ்த்தினான். மேவார் வீரர் இருபத்தீராயிரவரில் பதினாலாயிரம் பேர் போர்க் களத்தில் பொன்றிவிட்டனர்.

இந்நிலையில் யுத்த தந்திரத்தை மதித்துப் பின் வாங்கினான் பிரதாபசிம்மன் தன்னந் தனியனாய். பிரதாபசிம்மன் பட்டழிந்தான் என்னும் செய்தி உண்மையை உணர முற்பட்டான் ராஜா மானசிம்மன். அத்தருணம் தன்னந்தனியே செல்லும் பிரதாபனை மொகலாய இளவரசன் காணலானான்; உடனே அவனைத் தொடர்ந்து மாய்த்து வருமாறு நால்வரை ஏவினான்.

உடலெங்கும் படுகாயம். இரத்தக் குமிழி. பிரதாபனுக்கு மட்டுமன்று, அவன் குதிரைக்கும். "இன்று அரசன் பிழைத்தான்" என்று குதிரை பறந்தது. நால்வர் அவனைத் துரத்திச் சென்றனர். நான்கு குதிரைகளும் நாலுகால் பாய்ச்சலாக ஓடலாயின. அப்போது பிரதாபன் செல்லும் பாதையில் குறுக்கிட்டது ஒரு காட்டாறு.

# 18. பிரதாபனும் அக்பரும்

அக்காட்டாற்றிலே கனத்த வெள்ளம். இறங்கி நீந்திப் போவதானால், தொடர்ந்து துரத்திவரும் நால்வரும் நெருங்கி விடுவர். கணமேனும் தாமதிப்பினும், வந்துவிடும் மோசம். ஆதலினால், தன் குதிரையைத் தட்டிவிட்டான் பிரதாபன். நீலவேணியும் நிலைமையை உணர்ந்து, இக்கரையின் ஓரத்தேயுள்ள பாறைக் குன்றின்மீது ஏறி, அக்கரையிலுள்ள ஒரு பாறையின்மீது குதித்தது. குதிரையின் சமர்த்துக் கண்டான் கொற்றவன்; கீழே இறங்கித் தடவிக் கொடுத்தான். தலைவனை ஏறிட்டுப் பார்த்தது அப் பரிமா; மறுகணமே தொப்பென்று கீழே விழுந்து உயிர் துறந்து விட்டது.

துரத்தி வந்த நால்வரில் ஒருவன் பிரதாபனை நெருங்கி விட்டான். என்ன செய்வான் பிரதாபன். அதுசமயம், "வீர! வந்தனம்! இதோ என் குதிரை. ஏறிக் கொள்!" என்று ஒரு குரல் எழுந்தது. திரும்பிப் பார்த்தனன் அத்தார் வேந்தன். சோதரன் சக்தன் வந்து, தம்பி பிரதாபனைத் தழுவிக்கொண்டு கண்ணீர் பெருக்கினன்; சிறிது நேரம் சென்றதும், "விடை தருக! வந்தனம்!" என்று போய்விட்டான். உடனே "அண்ணா, அண்ணா!" என்று அலறினன் பிரதாபன். சக்தனோ செவி சாய்க்கவில்லை.

"நால்வர் சென்றுளர், பிரதாபன் மாண்டு மடிவான்!" என்று அக்பர் மகன் ஸலீம் வழிமேல் விழி வைத்திருந்தான். அந் நால்வரில் திரும்பியது ஒருவனே. இவனும் தனது குதிரையில் வரவில்லை. "பிரதாபசிம்மன் என்னயினன்?" என்றான் ஸலீம். "அவனைக் காத்து வந்தேன்," என்றான் சக்தன். உடன் வந்த துணைவர் மூவரும் என்னயினர்?"

என்று கேட்டான் ஸலீம் படபடப்புடன். "மூவ ரையும் என் வாளுக்கு இரையாக்கினேன்," என்று சக்தன் மொழிந்தான். ஸலீமின் கண்கள் சிவந்தன; உதடுகளோ துடித்தன; புருவமோ நெறிந்தது.

சக்தன் சொல்வான் :—இளவரசே! தனியே செல்லும் ஒருவன்மீது நால்வரை ஏவுதல் வீரமோ? யுத்த தர்மம் என்னகும்? முன்னம் பிரதாபனுடன் நான் பகைமை பூண்டேன்; உன் பக்கம் வந்தேன்; இது உண்மையே. தானுடாவிடினும் தன் சதை ஆடு மன்றோ? சோதர வாஞ்சை போமோ?" இங்ஙனம் சொன்னதும் சக்த சிம்மனது கரம் உடைவாளின் அருகே சென்றது.

மீண்டும் சக்தன், "அக்பர் மைந்த! சௌரியம் இல்லாதாரிடம் சினேகம் செய்தல் சிறுமையேயாம். உண்மை உரைத்தேன். உடன்பிறப்பின் இலட் சணம் உணராய் நீ! விடைகொண்டு செல்கிறேன்," என்று கூறிப் புறப்பட்டான். வெறுங்கையுடன் தம்பியைக் காண அவனுக்கு விருப்பமில்லை. ஆத லின் மொகலாயரின் வசமிருந்த வைனசம் என்னும் நகரை மீட்டுக் காணிக்கையாக அதனைத் தம்பி பிரதாபனிடம் கொடுத்தான். பிரதாபனோ அதனை அவனுக்கே அளித்தனன். பின்பு தமையனும் தம்பியுமாகப் படைதிரட்டினர் பகைவரை வாட்ட.

அப்பால் 1577-ஆம் ஆண்டு ஒரு பெரும் படை யுடன் ஸலீம் வந்தான். பிரதாபனும் கிளம்பினன் போர்க் கோலத்துடன். உக்கிரமான போர் நடந் தது. இரு திறத்திலும் சேதமோ மிக மிக அதிகம். ஒருவரை ஒருவர் புறங்காண முடியவில்லை. கார் கால மேகம் போல் மொகலாயரின் சேனை பெருகி வந்தது. தேய்மதிபோல் பிரதாபன் சேனை குறைய லாயிற்று. கும்பமேரு எனும் கோட்டையில் தங்கிச் சமர் செய்தான் பிரதாபன். நான்கு திக்கிலும்

அப்பிரதாபனை நன்கு வளைந்துகொண்டான் ஸலீம். எனினும் பிரதாபன் சலியாது போர்தொடுத்தான். ஆனால் உணவுப்பொருள்கள் தட்டிவிட்டன. உளவனொருவன் நீர் நிலைக்கு விஷமூட்டினன். உடனே பிரதாபன் வேறொரு கற்கோட்டை சேர்ந்தான். அதனையும் மொகலாயர் வந்து சூழ்ந்துகொண்டனர். குண்டுமழையினால் கோட்டைச்சுவர்கள் தகர்ந்தன. பின்பு மற்றொருகோட்டை நோக்கினன் பிரதாபன். இதற்கு இடையிலே ராஜா மானசிம்மனே மேவாரின் நகரங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றிக் கொண்டே வந்தான்.

மற்றொரு மொகலாய தளகர்த்தன் மேவாரின் கோட்டைகளை எல்லாம் தகர்த்து நின்றான்; இன்னொருவன் வேறு பல நகரங்களை நிர்மூலமாக்கி வந்தான். தலை நகரான உதயபுரியை வேறொருவன் வசஞ் செய்தான். இங்ஙனம் மேவார் நாட்டின் நாலா பக்கத்திலும் மொகலாயச் சேனை பெருமிதங்கொண்டு பொங்கிப் பரந்து பாழ்படுத்தி வந்தது. ஒன்று பிரதாபனைச் சிறைசெய்ய, அல்லது அவனை மாய்த்துவிட மொகலாயவீரர் முனைந்து நின்றனர். ஒன்றும் அவர்களால் ஆகவில்லை.

பிரதாபசிம்மன் எங்கே போய்த் தங்கினாலும், அங்கே மொகலாயச் சேனை தோன்றித் தாக்கும். நகரை விட்டு மலைக்குப் போனால், அங்கும் மொகலாயர். மலையை விட்டுக் கோட்டை சென்றால், அங்கும் மொகலாயர். காடு சென்று மரத்தடியில் தங்கினால், அங்கும் மொகலாயர். நிழல் ஒருவனைத் தொடர்ந்து செல்வதேபோல், பிரதாபனை மொகலாயச் சேனைத் தொடர்ந்து துரத்தியது. எதற்கும் பிரதாபன் சளைக்காமல் எங்கும் போர் தொடுப்பான்; ஆபத்தில் அகப்படாமல் தப்புவான்; சமயம் பார்த்து அன்னாரைப் பழி வாங்குவான்.

மாரிகாலம் வந்தால் சண்டை ஓயும். வசந்தம் வரின், சண்டை மூளும். இவ்விதம் இருபத்தேழு வருடம் போர் நடந்துவந்தது. பிரதாபனது நாடு நகரம், வீடு வாசல் எல்லாம் போய்விட்டன. வன வாசந்தான் வேந்தனுக்கு. மனைவிமக்களும் உடன் இருப்பர். அன்னாருக்கு ஓர் ஊனமும் நேரக்கூடாது என்பதே அவன் கொண்ட கவலை. மனைவிமக்களின் மானமே இராஜபுத்திரருக்குப் பெரியது. மேவார் ராஜகுடும்பம் சில சமயம் சுரங்கங்களில் வசிக்க நேர்ந்தது. சிறுரும் சிறுமியருமோ கிளிப்பிள்ளைகள் போல் கூண்டிலே மரக்கிளைகளில் தொங்கி யிருக்க வும் நேர்ந்தது. அக்கூண்டே செல்வக் குழந்தை களுக்குப் பொன்னூசல்!

ஒரு தினம் பிரதாபசிம்மன் தனது மனைவி மக்க ளுடன் வனத்திலே மரத்தடியில் சாப்பிடப்போகும் சமயம். மொகலாயர் தோன்றிவிட்டனர். உடனே குடும்ப நலம் நாடி, வேற்றிடம் போனான் பிரதாபன். அங்கே ஒரு கவளம் அன்னம் எடுத்து, வாயில் இட் டுக்கொள்ளும் வேளை. மொகலாயர் வந்துவிட்டனர். மீண்டும் மற்றோர் இடம் சென்றான் குடும்பத்துடன். அங்கே சமையல் செய்து புசிக்கப்போகும் தருணம். மறுபடியும் மொகலாயர் வந்து விட்டனர். உடனே அவ்விடம் விட்டகன்றான் பிரதாபன். இவ்விதம் ஒருநாளிலே ஐந்துமுறை அடுத்தடுத்துக் கைக்கு எட்டிய சோறு வாய்க்கு எட்டவில்லை.

எல்லாம் இழந்து திரியும் சமயம். பசி நோயைத் தணிக்கப் புல்லரிசியே பிரதாபனுக்கும் அவன் செல்வக் குடும்பத்துக்கும் ஆகாரம். புல்லரிசியை அடையாகத் தட்டுவர். குடும்பத்தாரில் ஆளுக்கு ஒன்றே கிடைக்கும். அதில் ஒரு பாதியடை பகல் போஜனத்துக்கு; மற்றைப் பாதி இரவு போஜ னத்துக்கு. மனைவி மக்களும் அதனை மகிழ்வுடன்

உண்பர். இங்ஙனம் சின்னாள் நடந்துவந்தது. அப்போது ஒருதினம் பிரதாபன் படுத்திருந்தான். பசும் புல் தரையே பஞ்சணை. ஆகாயமே கூறை. கையே தலையணை. அதுசமயம் அம்மை பவானியை அவன் எண்ணினான். "என் தாயே! மேவாருக்கு எத்தனை நாள் இக்கோலம்? நாட்டு மக்கள் நலம் பெறுதல் எக்காலம்? பாவியேன் செய்த பிழைதான் என்ன? அன்னிய அக்பருக்குத் தலைவணங்காதது தானே? வேறுண்டோ? அன்னாருடன் கலப்புமணங் கொள்ள இசையவில்லை. மரபின் மானத்தைக்காக்க எனது ஆருயிரையும் துறக்கச் சம்மதமே. ஏனைய ராஜபுத்திர வேந்தர் மகளிரைத் தந்து, மொகலாய அரசவையில் மகிமை பூண்டு, மந்தகாசம் கொள்ளலாம். அன்னாரின் மகிழ்ச்சியினும், எனது துயரமே சால்புடைத்து. என் அன்னாய்! உன்தன் திருவிளையாடல் போதாதோ? எனக்கு இனி இனிய துணை யார்? தேவியே அருள்புரிவாய்!"

இவ்விதம் பிரதாபன் புலம்பிநின்ற வேளையில் மூன்றே வயதுள்ள குழந்தை வீறிட்டு ஓடிவந்து, தந்தையைக் கட்டிக்கொண்டு அலறியது. ஏன் என்று பிரதாபன் கேட்டும், அக்குழந்தை பதில் சொல்லவில்லை; தேம்பித் தவித்தது; பின்னர் "அப்பா! ஒரு பாதி யடையைப் புசித்தேன். மறு பாதியை மாலைக்கென வைத்திருந்தேன் காட்டுப் பூனை யொன்று வந்து அதனைக் கவ்விக்கொண்டு போய் விட்டதே; என்ன செய்வேன்?" என்று கண்ணீர் வடித்துக் கதறியது.

உடனே பிரதாபன் மனம் விண்டது; எரியுற்ற வெண்ணெய்க் குன்றுபோல் உருகியது. போரிலே மைந்தரும் தோழரும் அவனருகே வெட்டுண்டு வீழ்ந்தனர்; நாடுநகரம் எல்லாம் அவன் ஒருங்கே இழந்தான்; புல்லரிசியே புசித்தான்; நீலவேணிக்

குதிரையிலே தன்னந் தனியனாய் ஓடிவந்தான். அப்போதெல்லாம் இம்மியளவும் தளரவில்லை அத் தீரன். சமரில் சாதல் ராஜபுத்திரருக்கு ஸகஜம். மாலை உணவைப் பூனை கவர்ந்து சென்று விட்டதே என்ற குரலும் அவனை அசைக்கவில்லை. மற்று?

"மேவார் மக்களும் இவ்விதந்தானே பசியால் வாடுவர்? இதற்கு நாமன்றோ காரணம்? அக்பரை நாமும் ஜயிக்கவில்லை; அக்பரும் நம்மை ஜயிக்க வில்லை. மத்தியபதி மக்களின் கதி யாது? அன்னா ரது குழந்தை குட்டிகளின் கதியும் யாதாமோ?" என்ற நினைப்பு அவன் நெஞ்சை ஒடித்து விட்டது. அந்நிலையில், "எத்தனை நாளைக்கு இந்தத் தொல்லை?" என்று வினவி, அக்பருக்குத் தூது விடுத்தான் பிரதாபன்.

மூடவனுக்குக் கொம்புத் தேன் கிடைத்தது போல் அக்பர் ஆனந்தம் அடைந்தான் அத்தூது கண்டு. அக்பரின் ராஜதானியான ஆக்ரா நகரம் உடனே அளகாபுரி போலாயிற்று. சிற்றரசரெல் லாரும் சிறப்பாக வந்து சபை கூடினர். "முனைந்து நின்றால் முடியாத காரியமும் உளதோ? முப்ப தாண்டு கடும்போர் நடந்தபின்பு வழிக்கு வந்தான் பிரதாபன்! அவ்வீர வேந்தனது வாசகம் இது!" என்று கூறிக் களித்தான் அச்சக்கரவர்த்தி. முகம் மதிய சிற்றரசர் சிலர், "பிரதாபசிம்மனும் பணி வானோ?" என்று மனத் தகத்தே எண்ணினர். இராஜபுத்திர வேந்தரோ தம்மை யறியாமல் முடி சாய்த்து நின்றனர். மேவார் ராஜகுடும்ப மாதை மணந்து, அக்பரிடம் விதியின்றி வேலை பார்த்து வந்த **பிருதிவி ராய்** என்பான் மட்டும் கண் கலங்கி னான். அவன் வயிறு பற்றி எரிந்தது.

"பிரதாபன் வெற்றி வீரன். வாள் முனையில் அவனை வெல்லுதல் ஒண்ணாது. யாரோ பகைவர்

எழுத்து முனையில் அவனை வெல்லக் கருதிக் கள்ளக் கையெழுத்திட்டுக் கடிதம் அனுப்பியுள்ளர். மேவார் மன்னவன் மனமொப்பி இந்நிருபம் வரையான்; எனவே உண்மை யாதோ?" என்றான் பிருதிவி. அக்பர் பெருமானும் உண்மையை உணர ஒருப்பட்டான். உடனே ஒருவரும் அறியாவண்ணம் ஒரு நிருபம் வரைந்தான் பிருதிவிராய். அது இது:—

"மகாராணு வீரப் பிரதாபனுக்கு வணக்கம் பல. அம்மை பவானியின் அருள் நிரம்பி நிற்குமாக! இந்துஸ்தானத்தின் இணையிலா வேந்தே! இந்துக்களின் பதியே! இந்திய மாதாவுக்கு இனிமேல் யார் கதி? பிரதாபசிம்மன் அத்தேவியைக் கைவிடுவனே? கைவிடின், என்னுவது நம் பாரத தேசம்? பிரதாபசிம்மன் ஒருவன் இல்லையேல், இந்துக்களான அனைவரையும் ஒரேயடியாக எண்ணி விலைக்கே வாங்கிவிட எண்ணுவான் அக்பர். இராஜபுத்திர வேந்தர் பலரும் பரம்பரைப் பெருமை இழந்தனர். குலமாதரில் சிலரும் கற்பைப் பறிகொடுத்தனர். சந்தையிலே சரக்குக் கொள்வதுபோல் பெரும் பொருளும் அரும் பதவியும் கொடுத்து, ஆசை வலையில் அனைவரையும் பரவசப்படுத்தி, வீரரை விலைக்கு வாங்கி வருகின்றான் பாபரின் பேரன்.

"சங்கரன் பேரன்—வெற்றிப் பிரதாபன்—மட்டும் இன்னும் விலை கொள்ளப்படவில்லை. பிரதாப மாணிக்கத்தின் விலையை மதிப்பிட முடியுமோ! பிரதாபன் பதி யிழந்தான்; நிதி யிழந்தான்; பகரொணுப் பாடும்பட்டான். ஆயினும் குல தர்மத்தை இன்றளவும் காத்தே வந்தான். மரபின் மானமும் போற்றி வந்தான். மகிமையும் பூண்டு நின்றான். இங்ஙனமே அவன் என்றும் விளங்கானே?

"பூப சிம்மன் வழியில் வந்த பிரதாபனது மதி இன்று பிசகியதோ? விதிதான் விபரீதம் காண்

கிறதோ? தோள்வலி போயினதோ? தாள்வலி தளர்ந்ததோ? மானிடரை விலைகொள்ளும் மன்னர் மன்னவனும் ஒரு நாளில் மடிவான். அவன் பெருஞ் செல்வமும் ஒரு தினம் மறைந்தேபோம். அன்று நம்மவர் நலமும் பலமும் பெற, யாரை நோக்கி நிற்பது? பிரதாப சிம்மத்தை யன்றோ? இராஜபுத்திரர் பலரும் கோடரிக்காம்புகளாக ஆகி விட்டனர். குல விளக்கான பிரதாபன், குவலயம் மெச்சும் பிரதாபன் மனவலி குன்றுவனோ? பிரதாபன் சித்தம் நம்மவர் பாக்கியம்!''

பிருதிவியின் அக்கடிதம் கண்டான் பிரதாபன்; உடனே, "முப்பது ஆண்டுகளாக எனக்குக் குற்றேவல் புரிந்து நின்ற மனம், இன்று என்னைக் குற்றேவல் கொண்டு விட்டதே. இரும்பு மனம் இளகியதே!'' என்று எழுந்தான். மானமெனும் பெரு நெருப்பு அவனிடம் கொழுந்து விட்டது. அவ்வளவில் மேவார் மன்னவன் சிங்கநாதஞ் செய்தான். எஞ்சி நின்ற வீரரும் எழும்பினர் ஈட்டி தாங்கி. இதற்கிடையில் பிரதாபன் பணிந்து விட்டானென மொகலாய வீரர் பல போர்முனைகளிலே சோம்பிக் கிடந்தனர். அது கண்டதும் இழந்த நகரங்களை ஒவ்வொன்றாக மீட்டான் பிரதாபசிம்மன்; எங்கும் வெற்றிக்கொடி தூக்கினான். கனவோ அல்லது நினைவோ என அனைவரும் எண்ணினர்.

அக்பரோ அதுகேட்டு அதிசயமே பூத்தான். மீண்டும் போருக்கெழ அவன் ஒருப்படவில்லை. பிரதாபனது பெரு வீரம், இணையிலா மானபிமானம், மானசிம்மன் போன்ற துணைவரின் பான்மை, இவை எல்லாம் அக்பரின் மனக்கண் முன்னே நின்றன. மறுபடியும் மல்லுக்கு நிற்க வேண்டாமென மதியமைச்சனும் அக்பர் சக்கரவர்த்திக்கு ஓதினான்.

நகரங்களை மீட்டபின், ராஜா மானசிம்மனைப்

பிரதாபன் மறக்கவில்லை; அவன் நாடான ஜயபுரியில் புகுந்து, மாலபுர நகரை மண்ணாக்கித் திரும்பினான். பின்பு, பிரதாபனுக்கோ சித்தூரை மீட்கும் சிந்தனை மிகுந்தது. அடுத்த ஆண்டில் படை எடுத்துச் செல்ல ஆயத்தங்கள் ஆயின. அதற்குள் அவனுக்குக் கொடுநோய் கண்டது.

ஓயாமல் ஒழியாமல் முப்பதாண்டு போர் புரிந்ததென்ன! சொல்லொணாக் கஷ்டநஷ்ட மடைந்ததென்ன! படுகாயங்கள் கொண்டதென்ன! ஏனைய ராஜபுத்திரர் விலகி நின்றதென்ன! இவை எல்லாம் சேர்ந்து பிரதாபனை வாட்டின. மருத்துவ வல்லார் வந்து பார்த்தும் குணமில்லை. பிரதாபனது ஆவி அகல வேண்டிய தருணம் கிட்டிவிட்டது. ஆயினும் ஆவி பிரியவில்லை; உயிர் தத்தளித்து நின்றது. பாளையக்காரரில் முதல்வன் அது கண்டான்.

" அரசே! சிற்றுளி பெருமலையைப் பிளக்கும். அங்ஙனமே மொகலாய வல்லரசைப் பிளந்தோம்; பெருஞ்சமர் செய்தோம்; மேவாரில் முக்கால் வாசி மீட்டோம். சித்தூரை மட்டும் மீட்கவில்லை. உண்மைதான். எங்கள் உயிர்மேல் ஆணை! மீட்க முயலுவோம்! தாங்கள் சாந்தியுடன் அம்மையின் சீர்பாதம் சேரலாம். மலர்ந்த தாமரையே போல் துலங்கும் தங்கள் முகம், வாட்டங் கொள்வதேன்? உள்ளக் கிடக்கை யாது? அதனை நிறைவேற்றி வைப்போம்!" என்று கூறினான் அப்பாளையக்காரன்.

மரணப் படுக்கையிலிருந்து பிரதாபன் மொழிவான்:—" அருந் துணைவ! மனக்கோளை யாதென மொழிவேன்? மீண்டும் மேவார்நாடு மொகலாயரின் வசப்படுமோ என்பதே என் கவலை. ஏனெனில் அன்று நாம் அனைவரும் புஷ்கர ஏரிக்கரையிலே, குடிசையில் தங்கியிருந்தோம் அல்லவா? மிகத் தாழ்வான குடிசை அது. இளவரசன்—அமரன்—அக்

குடிசைக்குள் புக முயன்ருன். நீண்டுநின்ற கூறை யின் குச்சொன்று அவன் தலைப்பாகையில் பாய, அப்பாகை கிழிந்து போயிற்று. அமரன் என்ன செய்தான்? குடிசையிலா வசிப்பது என்று முணு முணுத்தான்; வானமளாவும் மாளிகையில் வசிக்க வில்லையே என்று வருந்தினன்.

"அக்பருடன் அரும்போர் நடப்பதை அவன் நினைக்க வில்லை; நமது ஆருயிர் ஆபத்துக்கு ஆளா யிருப்பதையும் எண்ணவில்லை. அத்தகைய மைந் தன்தானே எனக்குப் பின் மேவார் மன்னவனுக வருவான்? அவனு போகபோக்கியங்களை மறந்து சித்தூரை மீட்பான்? அக்பரின் வலியை யாரேஅறி வர்? காலங்கருதியே அவன் வாளா இருக்கின்ருன். அவன் தவறினும் அவன் சந்ததியார் சும்மா விடார் நமது மேவாரை. அரியணையில் அமர்ந்ததும் அம ரன் அழகிய மாட மாளிகை நிருமிப்பான்; ஆடம் பரம் கொள்வான். நண்ப! மேவாரின் மானத்தைக் காப்பார் யார்? இஃதே என் மனத்தை வாட்டுகின் றது. வேறெதுவு மில்லை."

பாளையக்காரன் அதுகேட்டு, "அரசே! கலக்க மேன்? எனது உயிரும் என் தோழரின் உயிரும் இருக்கும் வரையில், மேவாரின் மானத்தைக் காப் போம்!" என்று சபதம் பேசினன்.

பின்னரே பிரதாபனது இனிய ஆவி பிரிந் தது. கண்மூடும் வேளையிலும், அக் காவலன் கருத்து—தேச நலத்தில்! குலமானத்தில்! வீர நோக்கில்! சுதந்திர தாகத்தில்!

# 19. மேவார் மாதரசி

மொகலாய சக்கரவர்த்திகளில் ஒருவன் ஷாஜஹான். அவனே அழகிய மயிலாஸனம் கொண்டவன்; தாஜ்மகால் கட்டியவன்; மாளிகை மன்னவன் எனப்பெயர் வாங்கியவன்; அக்பர் சக்கரவர்த்தியின் பேரன்; அவன் உடம்பில் ராஜபுத்திர இரத்தமே அதிகம். எங்ஙனமெனில், அவன் தந்தை ஜிஹாங்கீர் ராஜபுத்திர மாதுக்குப் பிறந்தவன்; ஷாஜஹானும் அப்படியே. அவன் மறுபெயர் கூர்மன்.

ஷாஜஹானுக்கு மைந்தர் நால்வர். மூத்தவன் பெயர் தாரா. இவன் பாஞ்சால கவர்னர்; இளவரசனுமாம். இரண்டாமவன் ஷூஜா; இவன் வங்காள கவர்னர். மூன்றாவன் ஔரங்கசீப்; இவன் தக்காண கவர்னர். நாலாவன் மூரத்; இவன் கூர்ஜர கவர்னர். ஷாஜஹான் சக்கரவர்த்திக்கு வயதோ எழுபது நிரம்பியது. உடனே மைந்தர் நால்வருக்கும் ஆசை மூண்டது அரசுகட்டில் ஏற. அக்கணமே எழுந்தது போர் முரசின் ஒலியும்.

சக்கரவர்த்தியின் ஆருயிர்த் தோழர் இராஜபுத்திரரே. தாராவுக்கும் அப்படியே. அன்னவரை வேண்டிக் கொண்டான் ஷாஜஹான். தாராவும் கோரிக்கை விடுத்தான். இராஜபுத்திரர் அனைவரும் திரண்டு எழுந்து தலைநகரான ஆக்ராவைக் காத்து நின்றனர். தாராவும் தலைநகரிலேயே இருந்தான்.

ஔரங்கசீபோ மண்ணாசை பிடித்தவன்; நய வஞ்சகத்தில் நனி சிறந்தவன்; எனவே ஆசைவலை வீசினான். அதில் சிக்கிக்கொண்டான் மூரத். இருவரும் ஆக்ரா நகரை நோக்கிப் படையுடன் புறப்பட்டனர். ஷாஜஹானே மார்வார் மன்னன் யசோவந்தனை அனுப்பினான் அவ்விருவரையும் எதிர்க்க. யசோவந்தன் உடனே புறப்பட்டான் பதின

யிரம் இராஜபுத்திரருடன். அவனுக்கு உற்ற துணை யாகச் சென்றான் காசிம்கான். காசிம்கானிடம் முப்ப தாயிரம் முகம்மதிய வீரர் இருந்தனர். நருமதை நதிக்கரையில் இரு பக்கத்துச் சேனைகளும் சந்தித் தன. சந்தித்த சமயம் மாலைப்பொழுது. மறுதினம் போர்புரிவதென ஏற்பாடு. தனது முன்னணியிலே பீரங்கிப் படைகளை அமைத்தான் ஔரங்கசீப்.

மார்வார் மன்னவனது மதியமைச்சன் பெயர் கீர்த்திவந்தன். இவன் ஔரங்கசீபின் உட்கருத்தை உணர்ந்தான்; உடனே தனது இறைவனிடம் சென்று, "அரசே! மொகலாய இளவரசர் இருவரும் பீரங்கிப்படையை முன்னணியில் அமைக்கின்றனர். அப்படையினால் அனர்த்தம் விளையும். ஆணை தரின் இன்று நள்ளிரவிலேயே சென்று, அப்படையைக் குமைப்பேன். குமைப்பின் பீரங்கிப் படையை அன்னார் அமைக்கார். வைகறையில் நாம் வெகுண் டெழுந்து, வைரியை வதைத்தல் இலகுவாகும்."

அதற்கு அவ்வேந்தன் யசோவந்தன் சொல் வான்:—"அமைச்ச! உன் முன்யோசனை சரியே! ஆனால் ஒன்று. நாம் தர்மயுத்தமே புரிதல் வேண்டும். முன்னறிக்கை இல்லாமல், நள்ளிரவிலே பகை வனைத் தாக்குதல் நமது ஆண்மைக்கு ஒவ்வாது. பீரங்கிப்படை பயன்படாமல் போகும் வண்ணம் நமது சேனைகளை அணிவகுப்பதே என் உத்தேசம். கவலை வேண்டாம். மேலும் சக்கரவர்த்தியின் ஆணை யாது தெரியுமா? மைந்தர் இருவருக்கும் ஊறு நேராமல், ஓட்டிவிட வேண்டும் என்பதேயாம்." அது கேட்ட மதியமைச்சன் வாய்திறக்கவில்லை.

மறுதினம் பொழுது விடிந்தது. சண்டையும் மூண்டது. பீரங்கிப் படையைத் தாக்குவதுபோல் பாசாங்கு செய்தான் யசோவந்தன். அதே சமயம் அப்படையின் வலது பக்கம் தந்திரமாக ராஜ

புத்திரர் முன்னேறினர். இடது பக்கம் தந்திரமாக முன்னேறினர் வேறு ஒரு சிலர். அச்சந்தடியிலே, காசிம்கான் முன்னேறி, மொகலாய இளவரசு களைத் தாக்கினான். அங்ஙனம் இலகுவில் வெற்றி கொள்ளலாம் என்பதே யசோவந்தன் கருத்து.

போரோ மும்மரமாக நடந்தது. யசோவந்த னது போர்வீரர்மீது குண்டுமழை பெய்தது. எனி னும் பீரங்கிப் படையின் வலதுபக்கம், இடதுபக்கம் இரண்டிலும் ராஜபுத்திரர் முன்னேறினர். குண்டு மாரி சகிக்க முடியவில்லை. ஆயினும் யசோவந்தன் முனைந்து போர்தொடுத்தான். அதனால் பீரங்கிப் படை திணறியது. ராஜபுத்திரர் முன்னேறினர் பிணக்குவியலையும் சட்டை செய்யாமல். ஔரங்க சீபின் படையினர் ஓட்டம் எடுக்கும் சமயம்.

ஔரங்கசீபுக்கு அச்சம் பிடித்து விட்டது. வஞ்சனை வழியில் அவன் இறங்கலானான். அவ்வளவு தான் தாமதம். முப்பதாயிரம் முஸல்மான்களுடன் காசிம்கான் என்பான் ஔரங்கசீபுடன் கூடிக் கொண்டு விட்டான். முன்னேறிய ராஜபுத்திரரோ ஔரங்கனது சேனையின்மீது சீறிப் பாய்ந்தனர். கன உக்கிரமாகச் சண்டை நடந்தது. பார்த்தான் யசோவந்தன் அக்காசிம்கான் துரோகத்தை; அப் போதும் தளர்ந்தானில்லை.

முன்வைத்த காலைப் பின்வாங்கார் இராஜ புத்திரர். யசோவந்தனோ மகாசூரன், மிகுந்த மானி. ஔரங்கனது தளகர்த்தருள் ஒருவன் வெட்டுண்டு வீழ்ந்தான். மற்றொருவன் மார்பிலே அடியுண்டு மாநிலத்தில் சாய்ந்தான். அவ்விதம் தலைகால் தெரியாமல் கடுஞ்சமர் செய்தான் யசோவந்தன். உச்சிக்கு நேரே சூரியன் வந்த சமயம். சித்திரை மாதம். கனத்த வெய்யில். யசோவந்த னுக்கு மார்பிலே இரு பெரிய காயங்கள் பட்டன.

இரத்தம் குபு குபு என்று கிளம்பியது. அந்நிலையிலும் சிறிதும் சளைக்காத யசோவந்தனைக் கண்டு ராஜபுத்திரர் சிங்கநாதத்துடன் சமர் விளைத்தனர். ஒளரங்கன் சேனையில் எண்பதாயிரவர் இருந்தாலும் ராஜபுத்திர வீராவேசத்தின் முன்னே வேசாறிப் போயினர். முடிவு யாதாமோ என்று கலங்கினான் ஒளரங்கன். மூரதும் மனமழிந்தான்.

யசோவந்தனது பதினாயிரம் வீரரில் ஈராயிரவரே மிச்சம். அந்தி படும் வேளை. மண்டையின்மீது வேல்கம்பு வந்து தாக்கவே, யசோவந்தன் தனது அசுவத்தினின்று தரையில் வீழ்ந்தான். மரணாவஸ்தை போன்ற நிலையில் மன்னவனை வாரிக் கொண்டு துணைவர் பறந்தனர் ஜோதிபுரிக்கு.

மகாராஜன் யசோவந்தனது பட்டமகிஷி மேவார் ராஜகுமாரி. ஏனைய ராஜபுத்திர வேந்தர் பெண்ணைக் கொடுத்து, மண்ணை விரும்பி மொகலாயரின் நட்பைப் பெற்றோராவர். இதற்கு இசையாமலேயே இருபத்தேழாண்டு அக்பருடன் முன்னம் போர் தொடுத்தான் மேவார் வேந்தன் பிரதாப சிம்மன். இத்தகைய குலத்தினில் பிறந்த நங்கை, தன் நாயகன் வெற்றிசூடாமல் வருவதைக் கேள்வியுற்றாள்; கிலேசம் கொண்டாள்; வேடன் அம்புபட்ட மான் போல் துடித்தாள்.

"தோழியரே! பகைவனைப் புறங்காணாது வருகிறான் பார்த்திபன். அந்தப்புரத்துக்குள் அவர் நுழைய வேண்டாம். மதிள் கதவை உடனே மூடுங்கள்! தாளிடுங்கள்!" என்று கட்டளை இட்டாள். பின்பு, "என் சகிகாள்! அன்னியனை முதுகுகாணாமல் வருவோனும் ஆண்மையாளனோ? அன்னான் என் கணவனோ? மேவார் மங்கைக்கு மாலை சூட்டியவனோ? ஒன்று வெற்றி, இன்றேல் வீர சுவர்க்கம், இவ்விரண்டில் ஏதுமிலானுக்கு இங்கே இடமேது?"

என்றாள். அப்பால், "சேடியரே! நீவிரும் கொடியரோ? தாமதமேன்? அக்கினி குண்டம் அமையுங்கள். கணவன் பட்டாலென்ன? அவன் மானம் பட்டாலென்ன? இரண்டும் ஒன்றுதான். மாற்றானுக்கு முதுகு காட்டிவரும் மணாளன் முகத்தில் விழியேன். மாண்டு மடிவேன். மானமில்லா வாழ்வு வேண்டாம். மேலுலகு போகிறேன்!" என்று சீறினாள். பின்னர் அவள் ஒன்றும் உரையாடவில்லை. உயிர் உண்டோ இல்லையோ எனப் பலரும் ஐயுற்றனர். ஏழுநாள் பிரக்ஞையற்ற இந்நிலைதான்.

இதற்கு இடையிலே மேவாருக்கு ஓலை பறந்தது. அங்கிருந்து அம்மாதின் அன்னை வந்தாள்; "என் கண்ணே! உன் கணவன்—என் மருமகன்—இணையாருமிலா யசோவந்தன்—உயர் வீரன்—வெகு சூரன். முதுகுகாட்டியா அவன் வந்தான்? அன்று! அன்று! மொய்யமர் முறுக்கிய பின்பே வந்தான். மொகலாயரை வாட்டிய பின்பே வந்தான். தானாக வரவில்லை. துணைவரே தூக்கி வந்தனர். இதுவே உண்மை. கலங்காதே. கண்ணெடுத்துப் பார். கணவன் காயமெங்கும் கனகாயம். காயம் ஆறியதும் சமர்முனை செல்வான். வாள்வலி காட்டுவான். 'கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து, மற்று அதன் குத்து ஒக்க சீர்த்த இடத்து' இஃதே தந்திரம்! இஃதே போர் முறைமை!" என்றுகூறித் தேற்றினாள்.

பின்னரே அம்மாதரசிக்கு ஆறுதல் பிறந்தது. நாளடைவில் அவள் தன் காந்தனைக் கண்டாள்; கண்ணீர் வடித்தாள்; காலில் விழுந்து வணங்கினாள். கனிவுடன் காயங்களையும் கட்டியாற்றினாள். இதற்குள் ஔரங்கசீப் தனது சகோதரரை மாய்த்துத் தந்தையைச் சிறைசெய்து அரியணை ஏறினான்.

யசோ வந்தனது வீராவேசம் ஔரங்கசீபின் மனத்தைவிட்டு அகலவே யில்லை. அவனை வாள்

முனையில் மாய்க்கவும் ஔரங்கனுக்கு வகையில்லை; சூழ்ச்சி பல புரிந்தும் ஆவியைக் கவர ஆகவில்லை. முடிவிலே உறவாடிக் கெடுக்க எண்ணி அவனது நட்பை நாடினான். அவனையே சேனைத் தலைவனாக ஆக்கினான்; கலகமாய்க் கிளம்பிய காபூல் நாட்டினுக்கு அனுப்பினான். ஆங்குள்ளோர் பராக்கிரம சாலிகளான பட்டாணியர். யசோவந்தன் அக் காபூல் நாட்டின்மீது படைகொண்டு சென்றான்.

அது சமயம் அம்மாதரசியும் உடன் செல்ல ஆயத்தமானாள். “மாதே! அக்காபூல் தேசம் மலைப் பிரதேசம்! முரட்டு ஜாதியார் வசிக்கும் மலைபூமி! அல்லும் பகலும் அன்னாருடன் நான் மல்லுக்கு நிற்க நேரும். அங்கே உனக்கு இன்பமும் சுகமும் இரா. ஆபத்தும் துன்பமுமே கிட்டும். இளவரசன் பிருதிவியுடன் ஜோதி புரியிலிருந்து அரசை நடத்திவா,” என்று இதமாகப் பேசிப் பார்த்தான் வீரன்.

அரசி கூறுவாள்:—“அரசே! அத்தகையதா காபூல் நாடு? அங்ஙனமாயின், அவசியம் யானும் வருதல் வேண்டும். பதியின் சுகதுக்கங்களில் எனக்குப் பங்கு உண்டன்றோ! தங்கள் அங்கத்தில் பாதியன்றோ யான்? உடன் வருவேன்; உதவி புரிவேன்; உற்சாகம் ஊட்டுவேன். இஃதே எனது கடமை.”

பின்பு விதியின்றித் தேவியையும் அழைத்துச் சென்றான் யசோவந்தன். காந்தனுடன் கிளம்பினாள் அக்காரிகை. அவளை எவரும் அடையாளம் காண முடியவில்லை. ஆணுடையில் போர்க்கோலம் கொண்டிருப்பின் எங்ஙனம் காணமுடியும்? காபூல் நாட்டிலே அந்நங்கை காணாத போர்முனை கிடையாது; புரியாத சமரும் கிடையாது. பகைவனது பாசறை காணின் அவள் பரமானந்தம் அடைவாள். அன்னாரின் ஈட்டிக்குத்து கடுகிவரின் அவள் இம்மிகூட மனம் கூசாள்; வாள் வீச்சு விரைந்து

வரின், சட்டை செய்யாள்; மலைச்சாரலிலும் பள்ளத் தாக்கிலும் பதறாமல் பரிமீது செல்வாள்; நாளொன் றுக்கு நாற்பது மைல் பரிமீது செல்வதை ஒரு பாக் கியமெனவே எண்ணுவாள். போரின் மிடுக்கும் நாட்டின் நலக்கேடும் கண்டு நலியும் வீரர் அவ் வனிதையின் தீரங் கண்டு ஆண்மை கொள்வர். போரைத்தவிர வேறெதையும் அத்தம்பதிகள் காண வில்லை. சில்லாண்டுகள் அங்ஙனம் சென்றன.

காபூல் நாடு மொகலாயரின் கைவசம் ஆயிற்று. ஔரங்கசீப் ஆனந்தம் அடைந்தான். ஆனால் உடனே கவலையும் வந்து அவனை மூடிக்கொண்டது. காரணம் யசோவேந்தன் காபூல் நாட்டிலே மாளா மல் போயினதேயாம். அத்தகைய வீர தம்பதிகளின் வமிசம் வாழின், வல்லரசுக்கு ஆபத்து நேரும் என் பதே ஔரங்கசீப் கொண்ட கவலை. ஆனது பற்றி மார்வார் இளஅரசனை பிருதிவி சிம்மன் ஆக்ரா நகரினுக்கு அழைக்கப்பட்டான். வஞ்சனை வழியில் அவ்விளவலின் உயிர் ஓடிவிட்டது. சின் னாளைக்கெல்லாம் சதியின் விளைவால் யசோவந்த னும் காபூலிலே கண்மூடினன். அச்சமயம் அவன் தேவி பூரண கர்ப்பிணி.

நாயகன் மரித்ததும் அந்நாயகி உடன்கட்டை ஏற முயன்றனள். படைத் தலைவர் அதுகண்டு, "தாயே! நம் குலத்தை வேரறுக்கவே விரும்பி யுள்ளான் மொகலாயவேந்தன். பழிவாங்க நாங்கள் கங்கணம் பூண்டுள்ளோம். தங்களுக்கோ பூரண கருப்பம். கருவிலிருந்து காலசூரியன் போன்ற காளையே உதிப்பான். ஆதலின் குலக் குமரனை ஈன்றெடுத்து, எங்களை முன்னின்று நடத்திப் பகையை முடித்த பின்பே தாங்கள் பரலோகம் போக எண்ணலாம்!" என்று இரந்து நின்றனர். உடனே அனைவரும் காபூலிலிருந்து ஜோதிபுரி நோக்

கிப் பயணமாயினர். இடையிலே மொகலாயர் தோன்றி, அன்னவரைச் சிறைசெய்து ஆக்ரா நகரம் கொண்டுபோய்ச் சேர்த்தனர். ஔரங்க சீபோ அவர்களை அரிய விருந்தினர்போல் நடத்தி, வேண்டியமட்டும் அன்பு காட்டினுன். எல்லாம் வஞ் சனையே யெனவும் ராஜபுத்திரர் கண்டனர். பின் னுளில் அத்தேவி ஓர் ஆண் மகவை ஈன்றெடுத் தாள். உடனே ஔரங்கசீபின் காவல் பெருகியது.

கைக்குழந்தை அஜித்சிம்மனை வளர்த்துவர ஔரங்கன் விரும்பினுன். மான் கன்றை வேங்கை யின் கையில் ஒப்படைப்பரோ? வஞ்சனையை வஞ் சனையால் வெல்ல வகைதேடினர் இராஜபுத்திரர். முகம்மதிய னெருவன் வாய்த்தான். இவனிடம் இரவிலே கூடையில் குழந்தையை மூடிக்கொடுத்து மார்வாருக்கு அனுப்பினர். மறுதினம் நள்ளிரவிலே அம்மாதரசியும் வீரரும் பயணமாயினர்.

பத்தாயிரம் மொகலாயர் தோன்றி அம்மாதை யும் சிசுவையும் வழிமறித்தனர். இராஜபுத்திரர் முன்னூறு பேர்தான். கருவுயிர்த்த களைப்பு ஒரு புறம் இருந்தும், அத்தேவி தலைமை பூண்டாள்; வாளுருவிப் போர் தொடுத்தாள். முன்னூற்றுவரில் இருநூற்றுவர் வீர சுவர்க்கம் புகுந்தனர். எஞ்சி யுள்ளோர் தளரவில்லை. மொகலாயருக்கோ மனம் உடைந்து போயிற்று. அங்கிலையில் துணைவரும் தானுமாக ஜோதிபுரி சேர்ந்தாள் அம் மாதரசி.

கொண்ட கருமம் கைகூடாதது கண்டு ஔரங்க சீபின் ஆத்திரம் பொங்கியது. உடனே மொக லாயச் சேனை திரண்டது மேவாரை நோக்கி. அது கண்டு ராஜபுதனம் அனைத்தும் முனைந்து எழுந்தது. தமது குலத்தலைவன் மேவார் மன்னனும் ராஜசிம் மனைச் சரண் அடைந்தாள் அத்தேவி. முப்ப தாண்டு வரை ஓயாப் போர் நடந்தது.

# 20. ராஜசிம்மனும் ஔரங்கசீபும்

மலை மகா பெரியது; உளி மிகவும் சிறியது. எனினும் பெரியமலையும் தகர்ந்துபோம் சிற்றுளியினால்! ஆங்கிலேயருக்கு முன்பு, இந்தியாவிலே வல்லரசு கொண்டோர் மொகலாயர். இருநூறு ஆண்டளவு அவ் வல்லரசு ஓங்கிநின்றது; அப்பாலோ தகர்ந்து பொடியாகிவிட்டது. இந்நிலைக்கு ஔரங்கசீபின் மனப்போக்கே ஒரு மூலகாரணம். அவன் தாதையும் மூதாதையும் மதியூகிகள்; ஆதலின் இந்துக்கள் அனைவரையும் அணைத்து ஆதரவு அடைந்தனர்.

ஔரங்கசீப் பெருவீரன்; மகா வைராக்கியன்; பரம பக்தன்; விடாப் பிடியன்; வெகு சமர்த்தனுமாம். ஆயினும் அவனை ஆணவம் அடிமைகொண்டுவிட்டது. முயலுக்கு மூன்றே கால் என்றான் அம் மன்னவர் மன்னன்; வல்லரசை வளர்த்த இராஜபுத்திரரைப் பகைத்துக்கொண்டான்; சிவாஜியைச் சிறைசெய்து உதவிய ஜயசிம்மனுக்கு விஷமே ஊட்டினான்; காபூலை வசஞ்செய்து தந்த யசோதவந்தனையும் அப்படியே மாய்த்தான். யசோவந்தனது வமிசத்தையும் அவன் சும்மா விடவில்லை.

மார்வார்நாட்டு மன்னனையும் இளவரசனையும் அவன் மாய்த்தது கிடக்கட்டும்; பச்சைக் குழந்தையான அஜித்சிம்மனையும் கவரமுயன்றான். அஜித்தின் தாயார் மேவார் இராஜகுமாரி. அத்தேவி தனது தாயகம் சென்று, அங்கே சரண்புகுந்தாள். மேவார் மன்னவன் ராஜசிம்மன் உடனே அபயம் அளித்தான். இதனால் மேவாருக்கு அனர்த்தம் நேருமென ராஜசிம்மனுக்குத் தெரியும். எனினும் அடைக்கலங் காத்தலே ராஜபுத்திரரின் அருங்குணமாம். ஆருயிர் போயினும், தனியரசு தவறினும், அவர்களுக்கு அது ஒரு பொருட்டன்று.

மகா சமுத்திரமே போன்றது மொகலாயர் வல்லரசு. சிறிய குட்டையே போன்றது மேவார் நாடு. அஜித்சிம்மனுக்கு அபயமளிப்பதா என்று மேவாரின்மீது பாய்ந்தான் ஔரங்கசீப். உடனே மொகலாயரின் பெருஞ் சேனை திரண்டது. ஊர்க் குருவிமீதா இராமபாணம் என்பர். அங்ஙனமே மேவாரை மோத இத்துணை படையா என்றனர் பலரும். ஔரங்கசீபோ வங்காளத்திலிருந்து தனது அருமை மைந்தன் அக்பர் என்பானை அழைத்தான்; தக்காணத்திலிருந்து இளவரசன் முஅஸ்ஸம் என்பானை வருவித்தான்; காபூலிலிருந்து அஸம் என்பானையும் வருவித்தான்; அம்மூன்று மைந்தருடன் மேவாரில் புகுந்தான்.

புகுந்தவளவிலே மேவாரின் சமவெளிகளெல்லாம் அவன் வசமாயின; கோட்டை கொத்தளங்களும் அடிப்பட்டன. எதிர்ப்பார் எவருமில்லை. மானிடர் இருந்தாலல்லவா எதிர்ப்பதற்கு? சமவெளி மக்களோ முன்னதாகவே மலைப் பிரதேசங்களுக்குப் போய்விட்டனர். மன்னவன் ராஜசிம்மன் ஆணை இது. அரவலி மலைக்குள் ஔரங்கசீபை இழுத்துப் போர் தொடுப்பதே ராஜசிம்மனது நோக்கம். மலையின் உச்சிப் பக்கத்திலே ராஜசிம்மன் தனது மூத்த மைந்தனை நிறுத்தினன்; சமயம் வாய்ப்பின், இரு பக்கத்திலிருந்தும் பகைப்படையைத் தாக்குதல் அப்புதல்வன் பொறுப்பு. மற்றொரு புத்திரனை அம்மலைக்கு மேற்குப் புறத்திலே அமர்த்தினன். போக்குவரத்துக்கு அப்பக்கமே சிறந்த மார்க்கம். அதனைக் காத்துநிற்க வேண்டிய கடமை அந்த இரண்டாம் மைந்தனுக்கு. மலையின் நடுப்பக்கத்தில் ராஜசிம்மன் நின்றுகொண்டான்.

அரவலிமலைக்குத் தொலைவிலே ஔரங்கசீபின் பாசறை அமைந்தது. அவன் மைந்தன் அக்பர்

முன்னேறினன் ஐம்பதாயிரம் வீரருடன். தடுப்பார் யாருமிலர். ஆதலின், அக்பர் நேராக மேவாரின் தலைநகரில் புகுந்தான். மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், சிங்காரத் தோட்டங்கள், உல்லாஸ நீர் நிலைகள் எல்லாம் தென்பட்டன; கண்ணையும் கவர்ந்தன. மொகலாயர் மகிழ்ச்சியுடன் அங்குத் தங்கினர். தலைநகரம் கைவசமான சந்தோஷம் மொகலாயருக்குத் தலை கால் தெரியவில்லை.

அந்நிலையில், மேவாரின் இளவரசன் அம் மொகலாயரின்மீது பாய்ந்தான் திடீரென்று. அச் சமயம் மொகலாயரில் சிலர் களிப்பில் மூழ்கிக் கிடந்தனர்; சிலரோ உண்டிகொண்டு நின்றனர்; சிலர் சதுரங்கத்தில் மூழ்கியிருந்தனர். என் செய்வர் எல்லாரும்? உயிர் தப்பினல் போதுமென ஓட்டம் எடுத்தனர். திக்குத் திசை தெரியவில்லை. தடுமாற் றத்தினல் அக்பரும் எஞ்சிய படைஞருடன் தந்தை யிருக்குமிடஞ் சேர விரைந்தான். இதற்கிடையில், ராஜசிம்மனது முன்னணி வீரர் தோன்றி அவனை வழிமறித்தனர். மார்வார் நாட்டினுள் புகக் கருதி வேறு வழியே அவன் செல்லலானன்.

செல்லும் பாதையிலே மிகவும் குறுகலான நீண்ட பள்ளத்தாக்கு. இரு பக்கமும் செங்குத்தான பாறை வரிசை. அந்தவழியே சென்றான் அக்பர். மலைவாசிகளான புளிந்தர் என்போர் கூடி, அம்பும் வில்லும் தாங்கி, அவனை இரு பக்கத்திலும் மடக்கி, உச்சியிலிருந்து பாறைகளையும் உருட்டிவிட்டனர். அக்பரும் அவன் படைவீரரும் முன்னும் போக முடியவில்லை; பின்னும் போக முடியவில்லை. இந் நிலையில் அக்பருக்கு உணவுப் பொருள்கள் தட்டி விட்டன. பஞ்சமும் தோன்றிவிட்டது. பசிப்பிணி அகல வேண்டுமாயின், ராஜசிம்மனுக்குப் பணிய வேண்டும். வேறு வகையில்லை. இந்த நிலைமை ஒரு

நாளா, இரண்டு நாளா? எத்தனையோ நாள்! அதன் மேல் மேவாரின் இளவரசனுக்கு மொகலாய இளவரசன் தூது போக்கினன். அதன்சாரம் இது :—"அன்ப! அறியாமல் சிக்கிக்கொண்டு விட்டேன். தப்ப வழியில்லை. இந்த யுத்தத்திற்கு எனது தந்தையே பொறுப்பு. அடியேன் ஒரு பாவமும் அறியேன். உண்ண உணவில்லை. என் படைஞர் எல்லாரும் தவிக்கின்றனர். விடுதலை வேண்டும். ஊருக்குப் போய்விட உத்தேசம்."

மேவார் இளவரசனுக்கு அது கேட்டுக் கருணை பிறந்தது. உடனே வழிவிட ஆணையிட்டான் புளிந்தருக்கு; வழிகாட்டிகளையும் உதவி, வழியனுப்பினன். தன் தந்தையின் பாசறை சேரும் வரையில், அக்பர் திரும்பிப் பார்க்கவில்லை.

அக்பர் மாட்டிக் கொண்டதை அறிந்து, துணை புரிய வந்தது ஒரு படை. அப்படையின் தலைவன் டிலீர்கான் எனப் படுவான். மலைப்பிரதேசத்திலே பள்ளத்தாக்கில் புகும்வரை அவனை எதிர்க்காமல் ராஜபுத்திரர் வாளா இருந்தனர். பள்ளத்தாக்கிலே அப்படை சிக்கிக் கொண்டதும், மேல்விழுந்து தாக்கினர் மேவார் வீரர். கை கலந்த சண்டை நடந்தது. மொகலாயர் தப்பியோட முயன்றனர். எங்ஙனம் ஓடுவது? கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் அவ்வீரர் தவித்தனர். முடிவிலே அனைவரும் ராஜபுத்திரரின் வாளுக்கு இரையாயினர். துணைக்குவந்த படை அவ்விதம் அழிந்தொழிந்து விட்டது.

அக்பர் ஒருபுறம், டிலீர்கான் ஒருபுறம் அங்ஙனம் தவிக்கையில், ராஜசிம்மனே ஔரங்கசீபைத் தாக்க முற்பட்டான். மார்வார் வீரரும் ராஜசிம்மனுடன் சேர்ந்துகொண்டனர். பழி வாங்குவதே மார்வார் வீரரின் சபதம். இருநாட்டு வீரருக்கும்

போட்டி யாருடைய வீராவேசம் மேம்படுவது என்பதே. ஔரங்கனது பீரங்கிப்படை பெருமிதங் கொள்ள முயன்றும் பலிக்கவில்லை. மொகலாய வீரர் பலரும் முறிபட்டனர். பெரும்படை, மிகு பொருள் இரண்டையும் பாராமல் கைவிட்டு விரைந்து பின் வாங்கினன் ஔரங்கன்.

சிதறுண்ட மொகலாயப் படைகள் சித்தூர் சேர்ந்து, சற்றே ஆறுதல் அடைந்தன. தக்காணத்திலே சிவாஜியை மடக்கச் சென்றிருந்த சேனைகளையும் ஔரங்கசீப் வருவித்தான். வருவித்தும் என்ன? மேவாரின் வீர தளகர்த்த னொருவன் திடீரென்று சென்று, சித்தூரிலே ஔரங்கசீபைத் தாக்கினன். வல்லரசனது உயிருக்கே ஆபத்து நேரும்போலிருந்தது. உடனே போரை மற்றையோரிடம் ஒப்படைத்துவிட்டு, ஆஜ்மீர் நகர் சென்றான் ஔரங்கன். ஆஜ்மீர் நகரிலிருந்து மொகலாயப்படை யொன்று கிளம்பி வந்தும், ராஜபுத்திரரின் முன்னே நிற்க முடியாமல் திரும்பிவிட்டது வந்த விடத்துக்கே.

ராஜசிம்மனது இரண்டாவது மைந்தன் வாளா இருக்கவில்லை. அவன் மொகலாயருக்குச் சொந்தமான கூர்ஜரத்தில் புகுந்தான்; அதன் தலைநகரத்தைக் கைப்பற்றினன்; சில பட்டணங்களைச் சூறையாடினன்; அந்நாளில் அங்கே முக்கியதுறைமுகமாம் ஸூரத் நகரையும் கொள்ளையிடப் புறப்பட்டான்.

அம்மைந்தன் தனது படைகொண்டு சென்று பரிபவம் இழைத்த பற்பல நகரங்களின் மக்களும் ராஜசிம்மனிடம் வந்து, “அரசே! ஔரங்கன் பண்ணிய வினை எங்கள் தலையிலா விடிவது? எங்களால் தாங்கமுடியவில்லையே மேவார்நாட்டு வீரரின் கொதிப்பை! திக்கற்ற ஏழையரை காத்தருளல் வேண்டும்!” என்று இரந்தனர். கருணை வடிவான ராஜசிம்மன் மனங்கரைந்து மைந்தனை அழைத்துப்

படையெடுப்புப் போதுமென்ருன். நடுப் பாதியிலே திரும்பிவர அப்புத்திரனுக்கு மனமில்லை. ஆயினும் அரசன் ஆணையை மீறுவது எங்ஙனம்!

இதற்கு இடையில், மேவாரின் மற்றெரு தள கர்த்தன் சிங்கநாதத்துடன் கிளம்பி, வடக்கே மாளவ நாட்டினில் புகுந்து, பற்பல நகரங்களைக் கொள்ளை கொண்டான். அதனல் மாளவநாடு திணறியது. பின்பு அத்தளகர்த்தன் தனது இளவரசுடன் கூடி, அஸம் என்பானைப் போருக்கு அழைத்தான். சித்தூருக்கு அருகே கொடிய யுத்தம் மூண்டது. இரு தரப்பிலும் எண்ணிறந்தோர் மாண்டு மடிந்தனர். முடிவிலே உயிர் தப்பினல் போதுமென மொகலாய இளவரசன் ஓட்டம் பிடித்தான். அப்பொழுதும் மேவார் வீரர் விடவில்லை; நாட்டின் எல்லையை விட்டு ஓட்டியபின்னரே, ஆறுதல் அடைந்தனர்.

அப்பால் மொகலாயரின் படைகள் மார்வாரில் தங்கி அங்கே பல இடங்களைப் பாழ்படுத்தின; நகரங்களைத் தரையோடு தரையாக்கின. அஃதறிந்த ராஜசிம்மன் தனது சேனையுடன் அங்கே சென்று மொகலாயரைத் தாக்க வகைதேடினன். மொகலாயச் சேனை ஓரிடத்திலே குவிந்து கிடந்தது.

மேவார் வீரனெருவன் ஐந்நூறு ஒட்டகங்களைச் சேர்த்து, ஒவ்வொரு மிருகத்தின் மீதும் தீவட்டிகளைக் கட்டிக் கொளுத்தி, நள்ளிரவிலே மொகலாயச் சேனைவெள்ளத்தின்மீது வெருட்டினன். ஒட்டகங்கள் உன்மத்தங்கொண்டு அப்படைவெள்ளத்தில் மூலைக்கு ஒன்ருகப் புகுந்து, மூர்க்கம் விளைத்தன. மொகலாயர் அதுகண்டு திக்பிரமை கொண்டனர். அதுசமயம் மேவார் வீரர் அம் மொகலாயரின்மீது பாய்ந்தனர். அதனல் மொகலாயரில் பலரும் மூறிபட்டு மாளநேர்ந்தது. இங்ஙனம் நேர்ந்த பேராபத்தை யறிந்த அக்பர் ராஜபுத்திரரிடம்

சரண்புகுந்தான். உடனே ஔரங்கசீபுக்குப் பதிலாக அக்பரை அரியணையில் ஏற்றிவைக்க ஏற்பாடு செய்து நாளும் முகூர்த்தமும் குறித்தனர். மறுதினம் பொழுது விடிந்தால், அக்பருக்கு முடிசூட்ட வேண்டும். ஔரங்கசீப் அதுஅறிந்து, "அந்தோ! போர்முனையிலே பிளவுபட்டோம், பேதுற்றோம்; இனி சதிமுனையில் முனைவதைத் தவிர வேறு வகையில்லை," என்று ஒரு முடிவுகொண்டான். அவன் செய்த சூழ்ச்சி யாதெனில்:—


அக்பருக்கு ஒரு கடிதம் வரைந்தான். அதனை ராஜபுத்திரரின் மத்தியில் சேர்ப்பிக்கும்படி வகையும் செய்தான். அக்கடித சாரம் இது:—"மைந்த! உன் மதியே மதி! பட்டஞ்சூடிக் கொள்வதாகச் செய்துள்ள சதி வெகு நேர்த்தி. சண்டை ஓய்ந்தது என்று ராஜபுத்திரர் வாளா இருப்பர். அது சமயம் அன்னவர்மீது உன் படைஞருடன் நீ பாய்ந்து, அக்குலத்தை வேரறுத்தலே விழுமியது. வெகு நல்ல யோசனையே செய்தாய்! வாழ்க நீ நெடுநாள்!"

மேவார் வீரமக்கள் சூதுவாது அறியார்; கறந்த மேனிக்கு விளங்குவர். ஆதலின் மொகலாய வேந்தனும் மகனும் சதி செய்கின்றனர் என்று ராஜபுத்திரர் எண்ணிவிட்டனர். உடனே முடிசூட்டு விழா நின்றது. அக்பரைக் கைவிட்டகலவும் தொடங்கினர் இராஜபுத்திரர். ஒரு பாவமும் அறியாத அக்பர் என்ன உறுதி சொல்லியும் ராஜபுத்திரருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை.

அக்பரின் நிலைமை ஆபத்துக்கு இடமாயது. அப்பன் பக்கம் போகவும் முடியவில்லை. இராஜபுத்திரரின் பக்கமும் இருக்க முடியவில்லை. இதற்குள் அக்பரை எங்ஙனமேனும் சிறைசெய்ய வேண்டுமென ஔரங்கசீப் ஆணையிட்டான். இதன்பின்பே எலலாம் ஔரங்கசீபின் சூழ்ச்சியென்று ராஜபுத்தி

ரருக்குப் புலப்பட்டது. அப்பன் கையில் சிக்கினால், அக்பரின் ஆவி போய்விடும். ஆதலின் ராஜபுத்திரரிடம் சரண்புகுந்தான் அக்பர். அக்பருக்கு அவர்கள் அபயம் அளித்தனர். ஆயினும், இந்தியாவில் இருக்க அவனுக்கு மனமில்லை. அச்சப் பேய்க்கு ஆளாகிப் பாரசீகத்துக்குப் போய்விட்டான் அம்மகன்.

குறுநில மன்னனொருவனை வெற்றி கொள்ள ஔரங்கசீபினால் ஆகவில்லை. பற்பல வகையான பலமும் அபரிமிதமாகப் பெற்றிருந்தும் ஒன்றும் பயன்படாது போயிற்று. அளித்த அபயம் காக்க வேண்டி, அனைத்தையும் திரணமாக மதித்து, அரும் போர் புரிந்தான் ராஜசிம்மன்; படை முகத்திலும் பகைவனிடம் பெருந்தன்மை காட்டினான்; பகையைக் கசக்கிப் பிழிய வேண்டிய சமயத்திலும் கருணை பூத்தான். வீர ராஜபுத்திரர் திரண்டு நிற்கவே வல்லரசு எங்கும் தோல்வியே கொண்டது. அதர்மம் தலை சாய, தர்மம் தலை தூக்கியது. தர்மம் வாழ்க!



# மானங் காத்த தீர மைந்தன்

ஓராண்டா? இராண்டா? ஓர் ஆயிரம் ஆண்டு! இந்து சமூகம் இடிந்து கிடந்தது; தலை சாய்ந்து தவித்தது; தரணியிலே மங்கி நின்றது. இந்நிலையில் தீர மைந்தனொருவன் தோன்றினன்; இந்து சமூகத்தைத் தட்டி எழுப்பினன்; வல்லரசுடன் மல்லுக்கு நின்றான்; பேரரசுடன் போர் தொடுத்தான்; சாம்ராஜ்யமொன்று கண்டான்; இந்தியா தேசத்தின் மானங் காத்தான்!

நிலப்படை மட்டுமன்று, கடல் படையும் கட்டினன்; வர்த்தக கப்பல்கள் சமைத்தான்; வாணிபம் பெருக்கினன்; கலைகள் வளர்த்தான்; கண்ணியமே பூண்டான்; சத்திரபதி ஆனன்; அனைவரும் அதிசயிக்க அரசியல் வகுத்தான்; நேரிய ஆட்சியும் புரிந்தான். அம்மைந்தன் யார்?

அவன் சின்ன ஜாகீர்தாரின் மகன்; தந்தையின் உதவி கிடையாது; தன்னந்தனியனக இருந்தான்; தோள்வலியும் மனவலியுமே துணையாக நின்றன. ஊக்கம் ஊட்டுவார், உற்சாகம் கொடுப்பார் ஒருவரும் இல்லை. தேசப்பற்று, தெய்வப்பற்று, தர்மப்பற்று இவையே தூண்டின. மலைநாட்டினராம் மாவல மக்கள் பக்க பலம் தந்தனர். மங்காத கீர்த்தி கிட்டியது. அம்மைந்தன் மகாராஷ்டிர மரபில் வந்தவன். அவன் பெயர் சிவாஜி.

“நமதோ பெரிய வல்லரசு. நமக்குள்ள வலிகளோ அனந்தம். ஆயினும் என்ன? சிவாஜியை மடக்க முடியவில்லையே! என்ன செய்யலாம்? எந்தச் சேனபதியை அனுப்பலாம்? யாரை அனுப்பினலும் ஏமாற்றி விடுகிருனே! எல்லாச் சேனபதிகளும் தோல்வியுடன் திரும்புகின்றனரே!” என்று

கலங்கி நின்றான் மொகலாய சக்கரவர்த்தியான ஔரங்கசீப்.

அப்போது முகபத்கான் எனும் சேனாபதி பரிகாசமாகச் சொல்லுவான் :—"அரசர்க்கு அரசே! இதற்கோ கவலை? நமது அப்துல் வகாப் இருக்கிறார். வேறு எவரும் வேண்டாம். அவரிடமிருந்து ஒரு கிள்ளாக்கு வாங்கியனுப்பினாலும் போதுமே! சிவாஜியைக் கசக்கிப் பிழிந்து விடலாமே!"

அந்நாளில் பாரசீக வேந்தனாக விளங்கியவன் ஷா அப்பாஸ் என்பவன். மிக இளைஞன் இவன். ஔரங்கசீபுக்கு இவன் விடுத்த கடிதம் இது :—

"பாதுஷா பாதுஷா என்று பெருமை கொள்ளுகிறீர்! ஆயினும், ஜமீன்தார் போன்ற சிவாஜியை அடக்க முடியவில்லை. நான் படை கொண்டு வருகிறேன்."

ஔரங்கசீப் சாமானியமான புருஷனா? மகா பலவான்; பேரரசன்; டில்லி பாதுஷா; பாரத பூமியின் பெரும்பாகத்தில் பிறைக்கொடி தூக்கிய பெருமான்; ஒழுக்கத்தில் உயர்ந்தவன். ஆயினும் அவன் மதி பிசகியது; காலம் கோணியது.

சிவாஜியோ சீர்மிகப் படைத்தவன். அவன் சிறப்பெய்திய காரணங்கள் பல. சிவாஜியின் தாய் ஜீஜிபாய் என்பாள். இவள் பழங் குடும்பத்தில் பிறந்தவள். தெய்வ, தேச, மத பக்தை; வீராங்கனை; உயர் மைந்தன் வேண்டுமெனத் தவங்கிடந்தாள். கடவுளும் கருணை பூத்தார். கருத்தோன்றியது அவள் வயிற்றில். அது சமயம் கணவன் ஷாஜியோ மொகலாயருக்கு எதிராகப் போர் புரிந்து நின்றான். போரின் நிலையை நோக்கி அவன் பின்வாங்க நேர்ந்தது. ஆதலின் மனைவியுடன் மறுபுலம் போனான் ஷாஜி. ஜீஜிபாய் பூரண கர்ப்பம். பிரசவ வேதனை

தோன்றி விட்டது. மொகலாய வீரரோ துரத்தி வந்தனர். ஜீஜிபாய் பெரிதும் வருந்தினுள். மனை வியை ஓர் அன்பனிடம் அவன் ஒப்படைத்தான். ஷாஜிக்குச் சின்னுளிலே ஜீஜிபாயின் வயிற் றில் குழந்தையொன்று பிறந்தது. அச்செல்வக் குழந்தையே சிவாஜி. கருவில் இருந்த காலத்தி லேயே அவ்வல்லரசின்மீது சிவாஜிக்குச் சீற்றம் உதித்தது போலும்! சிவாஜிக்கு வயது நான்கு நிரம்பிய சமயம், தாயும் பிள்ளையும் மொகலாயரிடம் சிறையாயினர். சிவாஜியின் சீற்றம் வளரலாயிற்று.

பாலூட்டும் பொழுது சுதந்திர ஆர்வப்பாலும் ஊட்டி வந்தாள் ஜீஜிபாய்; புராண இதிகாச வீரரின் சரிதம் சொல்லி வந்தாள்; அடிமைக ளாக நாம் வாழ்வதோ என்று அலறினுள். தாய் முகம் பார்த்தது குழந்தை; வாய் பேசவில்லை; மனம் பதறியது. தாய் போல் பிள்ளை, நூல்போல் சீலை என்பர்.

பிறந்ததுமுதல் குழந்தையைப் பார்க்கவில்லை ஷாஜி. தாயும் பிள்ளையும் தனியே வசித்து வந்தனர். வாலிபப் பருவம் வந்தது சிவாஜிக்கு. அப்போது ஒரு தளபதியாக விஜயபுரி வேந்தனிடம் சேவகம் செய்து நின்றுன் ஷாஜி. பிள்ளை, மனைவி இருவரை யும் விஜயபுரிக்கு அவன் வரவழைத்தான். அப் பால் தந்தையும் மகனுமாக விஜயபுரி சுல்தான் சமுகம் சென்றனர். யாவரும் சுல்தானது சமுகத் தில் மண்டியிட்டுச் சலாம் செய்தல் வழக்கம்.

"குழந்தாய்! சுல்தானுக்கு வழக்கப்படி மரி யாதை செய்!" என்றுன் ஷாஜி. "மனிதனுக்கு மனிதன் தலை வணங்குவதா?" என்றுன் சிவாஜி. இத்தர்ம சங்கட நிலை கண்டு ஷாஜி தவித்தான். சிவாஜியோ சாதாரணமாகவே வந்தனம் செய்ய, சுல்தானுக்குக் கோபம் வந்துவிடுமோ என்ற

அச்சம் ஷாஜிக்கு. ஆதலின், ஷாஜி அஞ்சி, "பச்சைக் குழந்தை! பேரரசின் சம்பிரதாயம் அறியான்," என்று மழுப்பினன்.

மற்றொரு நாள் சிவாஜி, சுல்தான் சபைக்குச் சென்றான். அப்போதும் வெறும் வந்தனமே செய்தான் அவ்வாலிபன். அது கண்டு சுல்தானுக்குச் சமுசயம் உதித்தது. அம்மைந்தனை அருகே அழைத்து வினவினன் சுல்தான். பிள்ளை பேசலானன்:—"அரசே! சம்பிரதாயப்படிதான் சலாம் செய்யச் சொல்கிறார் என் தந்தை. என்னமோ அது அடிக்கடி மறந்து போகிறது. இது கிடக்கட்டும். ஒரு விஷயம். சுல்தானென்றும், தந்தையென்றும் நான் வித்தியாசம் கொள்ளவில்லை. வித்தியாசம் உதிக்கும் வரையில், வெறும் சலாம் போதாதா?" சிறுவனது சொல்வன்மை கண்டு சுல்தான் சொக்கிப் போனன்.

விஜயபுரியில் சிலநாள் வசித்தான் சிவாஜி. ஒருநாள் நகரைச் சுற்றிப் பார்க்கவே, எங்கும் அன்னியரின் எடுப்பு! நாட்டு மக்களின் தவிப்பு! சிவாஜிக்கு மனம் பொறுக்கவில்லை. அவன் குமுறிக் கிளம்பினன். "இளைஞ! இது விதியின் வினை! நாம் என்ன செய்யலாம்? அன்னிய ஆட்சிக்கு அடங்கியே நாம் வாழவேண்டும். அடங்கிச் சேவகம் செய்வதால்தான் அரும்பதவி பெறுகிறேன்யான். எண்ணிப்பார்," என்றான் ஷாஜி.

தந்தையின் மொழியைச் சிவாஜி தட்டிப் பேசவில்லை; நல்லது என்று தலையை மட்டும் அசைத்தான். "எத்தனை நாளைக்கு இந்த இழி நிலை?" என்று சிவாஜியின் மனம் துடித்தது. தலைக்குக் கொள்ளி வரும் என்று ஷாஜி தத்தளித்தான். தந்தையின் பரிபவங் காணச் சிவாஜிக்கு விருப்பமில்லை. ஆதலின், தாயுடன் அவன் பூன நகரம்

சென்று விட்டான். பூனாவே ஷாஜியின் ஜாகீர். அங்கே தாயும் பிள்ளையும் வசித்து வந்தனர். தாதாஜி காண்டவதேவன் எனும் வேதியன், கார்வாரியாக உடனிருந்து உதவி வந்தான். விளையும் பயிர் முளையிலே தெரியும் அல்லவா? சிவாஜி ஒரு நிமிஷமும் வாளா இருந்ததில்லை. தாதாஜியுடன் செல்வான்; ஜாகீரைச் சுற்றிப் பார்ப்பான்; பூமியின் இயற்கையை அறிவான்; மலை நாட்டு மாவல மக்களான குடிகளுடன் தாராளமாகப் பழகுவான்; இனிமையாகப் பேசுவான்; தனது நடை உடை பாவனையால் அவர்களின் உள்ளத்தைக் கவர்வான். "இக்குமரன் எமது இனிய தோழன்!" என்றே அக்குடிகள் கொண்டாடுவர்.

ஜாகீரின் நிர்வாகங் குறித்து சிக்கலான விஷயங்கள் உதிக்கும். அப்போது தனியே இருந்து காரியம் நடத்துவான் தாதாஜி. ஒருநாள் சிவாஜி, "ஐயா! பாலனும் இவனுக்கு என்ன தெரியும் என்று எண்ணுகிறீர்கள் போலும்! நான் பாலனே. ஆயினும் பாலப் பருவத்திலேயே எல்லாம் பழக வேண்டாமா? ஐந்தில் வளைந்தால் தானே ஐம்பதில் வளையும். தந்தை இல்லாத சமயத்தில், தாங்களே என் தந்தை. தங்கள் உதவியால் எனக்கு விவகார ஞானம், உலக விவேகம் எல்லாம் உதிக்க வேண்டாமோ?" என்றான். அன்று முதல் சிவாஜியை அறியாமல் தாதாஜி ஒன்றும் செய்வதில்லை.

குடி மக்களான மாவலருக்குள் சில சமயம் கட்சிப் பிரதிகட்சி நேரும். சிக்கலான வழக்குகளும் வரும். கணக்கு வழக்கில் தகராறும் உண்டாகும். அப்போதெல்லாம், சிவாஜியின் ஆலோசனை கேட்பான் தாதாஜி. பண்பட்ட நீதிபதி போல் தீர்ப்புக் கொடுப்பான் சிவாஜி. அது கண்டு

தாதாஜி மனத்தகத்தே மகிழ்வான். மாவல மக்களும் தம் இளவரசின் அறிவும் ஆற்றலும் நெறியும் நேர்மையும் கண்டு களிப்படைவர்.

சிவாஜிக்கு வயது பதினைந்து நிரம்பியது. விஜயபுரி சுல்தானிடம் ஒரு வேலையில் சிவாஜியை அமர்த்திவிட ஷாஜி கருதி, தாதாஜிக்குச் சொல்லியனுப்பினான். அஃதறிந்த சிவாஜி சொல்வான் :— “ ஐயனே ! தகப்பன் தேடி வைக்கும் தனம் எத்துணை நாளைக்கு வரும் ? நான் அன்னிய அரசில் சேவகம் செய்து காலந் தள்ள விரும்பவில்லை. ஆண்மையுடன் வாழவே ஆசை கொண்டுள்ளேன். அன்றியும் அன்னிய ஆட்சியின் விளைவாக நம் தெய்வம், தேசம், தர்மம் எல்லாம் சீரழிந்துள. இது கண்டு என் மனம் சகித்திருக்க மறுக்கின்றது. நான் என் செய்வேன் ? அனைவருக்கும் சுதந்திரம் தேடித் தரவே, நான் முயலுவேன். இந்நிலையில், பிறனுக்கு அடிமைப்படவா என்னைத் தூண்டுவது ? ”

அதுகேட்ட தாதாஜி திடுக்கிட்டு, “ அன்பனே ! இளம்பிள்ளை நீ; ஆதலின் பயம் அறியாய். ஆலோசித்துப் பார். தக்காணத்திலே எங்கும் விஜயபுரியின் ஆதிக்கம். வடக்கே மொகலாயரின் பிராபல்யம். இந்த இரண்டு அரசுகளுக்கும் இடையே சுதந்திரமாவது ! சுயவரசாவது ! என்ன கனவு இது ! நீ அதிகம் ஆசைப்பட்டால், உள்ளதும் போய்விடலாம் அன்றோ ? உனது செயலால் உன் தந்தைக்கும் அனர்த்தம் நேரும். உன் தந்தையினும் வீராதி வீரருண்டோ ? அவரோ காலமறிந்து, அடங்கி ஒடுங்கி, அன்னிய வரசில் சேவகம் புரிகிறார். கனதனவானாக விளங்குகிறார். அங்ஙனமே நீயும் விஜயபுரியில் அல்லது டில்லியில் வேலைக்கு அமர்தல் நன்றல்லவா ? ” என்று வாதாடினான்.

சிவாஜியின் செவியில் ஒன்றும் ஏறவில்லை. மக்களுக்குச் சுதந்திரம் தேடித் தரவும், சுயவரசு காணவும் அவன் முனையலானான். ஈசன் எழுதின படியே எல்லாம் முடிவில் நடக்கும் என்று இருந்து விட்டான் தாதாஜி.

அந்நாளில் தட்சிண முகம்மதிய அரசுகளிலே பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், பாளையக்காரர், ஜமீன்தார், ஜாகீர்தார், பெருமக்கள், தளகர்த்தர் முதலிய பெரும் பதவி வகித்தோரில் பலர் இந்துக்களும், மகாராஷ்டிர மரபினருமாவர். "அன்னியரிடம் கை யேந்தியா நிற்பது? உங்கள் பலங் கொண்டுதானே அன்னிய வரசு இங்கே வாழ்கிறது? சுயவரசில் நீங்கள் நாட்டம் கொள்ளல் ஆகாதா?" என்று பலருக்கும் தூது போக்கினான் சிவாஜி.

பின்பு மாவலர் அனைவரையும் சிவாஜி திரட்டினான்; அவர்களுக்குப் படைப் பயிற்சி ஊட்டினான்; படைக்கலங்கள் பலவும் சேகரித்துக் கொடுத்தான்; பின்பு பெருமிதங் கொள்ளவும் முற்பட்டான். படை சேர்த்தபின், விஜயபுரி அரசின் கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாக அவன் பிடித்து வரலானான். கல்யாணி என்ற ஒரு கோட்டை மகா வன்மை வாய்ந்தது. அதன் தலைவன் பெயர் முல்லனா. அக் கோட்டை மீது அப்பாஜி எனும் அன்பனை ஏவினான் சிவாஜி. திடீரென்று தாக்கவே, அக்கோட்டை எளிதில் விழுந்தது. முல்லனாவும் சிறைபட்டான்.

முல்லனாவுக்கு ஒரு மருமகள். அவள் அழகில் மிகச் சிறந்தவள்; வயது பதினெட்டிருக்கும். சிவாஜிக்குச் சமர்ப்பிப்போம் என்று அம் மாதை அழைத்து வந்தான் அப்பாஜி. அப் பெண்மணியைச் சபையின் முன்பு கொணர்ந்தனர்

வீரர். ரவை சல்லாச் சேலையும் முகமூடியும் தரித்து நின்ற அப்பெண்ணைக் கண்டதும், "இந்த அம்மணி என் சோதரி!" என்றான் சிவாஜி. அப்போது அவனுக்கு வயது பத்தொன்பதே. "பிற மாதரைத் தாய் அல்லது சோதரியாகவே மதித்தல் கடமை. பெண்ணாசையால் அழிந்தோர் அநந்தம். இதற்குப் புராண இதிகாசங்களே சாட்சி. அரசனானோன் அனைவரையும் தன் மக்களே போல் பாவித்தல் வேண்டும்," என்றான் சிவாஜி.

சிவாஜியின் அன்பரும் தோழரும் அம்மாற்றம் கேட்டு, அதிசயம் பூத்து, அறிவும் கொண்டனர். பின்பு சிவாஜி அம்மாதை மரியாதையுடன் அரண்மனையில் வைத்திருந்து, ஆடையும் அணியும் அளித்து, அப்பால் தக்க காவலுடன் மாமனாரிடம் சேர்ப்பித்தான். கோட்டையை வசஞ்செய்த அப்பாஜியையே அதன் தலைவன் ஆக்கினான்; கோட்டையைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் கிராம பஞ்சாயத்துச் சபைகளைப் புதுப்பித்தான்; அந்தணரின் மானியங்களையும் ஆலய சொத்துக்களையும் நிலைக்க வைத்தான். குடி மக்களின் நலத்துக்கான வகை துறைகளையும் வகுத்தான்.

பல கோட்டைகளையும் நகரங்களையும் சிவாஜி வசஞ்செய்த விவரம் வெகு விசித்திரம். எங்ஙனம் எனில், முன்னதாகவே கோட்டைக் காவலரிடம் தூதரை யனுப்பி, சாமோபாயத்தால் வசஞ் செய்வான். சுயவரசு காணும் நோக்கில் ஈடுபட்டுச் சில கோட்டைக் காவலர் அதற்கு இணங்கினர். இணங்காதாரிடமோ பேதோபாயத்தை மேற்கொள்வான். உளவாளிகள் முன்னதாகச் சென்று துப்பறிந்து, ஆங்காங்கே சிலரை வசப்படுத்தி வைப்பர். அப்பால் பிரபல வீரர் புல்சுமை விற்போராக அக்கோட்டைக்குள் புகுவர். ஒவ்வொரு புல் சுமையிலும்

ஓரொரு பட்டாக்கத்தி இருக்கும். வேண்டுமளவு வீரர் அக்கோட்டைக்குள் சேர்ந்ததும், புல் விற் போர் வாள் வரிசை காட்டுவோராகத் திரளுவர். பின்பு உளவாளிகளின் உதவிகொண்டு கோட்டை களை வசஞ்செய்வான். இவ்விதம் தந்திர வழியில் சிவாஜி பிடித்த கோட்டைகள் பலவாம்.

வீரவாடி என்று ஒரு நகரம். அந்நகரில் ஒரு பெருமகன். அவனிடம் ஒரு பெரிய பட்டாக்கத்தி உண்டு. அது அருமையும் பெருமையும் வாய்ந்தது. அதனைப் பலாத்காரமாகப் பறித்துவிட வேண்டும் என்று சிவாஜியின் அன்பர் சொல்லினர். அதற் குச் சிவாஜி, "தோழர்களே! அன்னியன் உடை மைக்கு ஆசைப் படுவோன் ஆண்மகன் ஆகான். சமந்தகமணி காரணமாக ஸ்ரீ கிருஷ்ணபகவான் பட்டது தெரியாதா? ஆகவே, அபகரித்தல் அழ கன்று! ஆண்மையும் அன்று!" என்றான்.

வீரவாடிப் பெருமகனுக்கு அவ்விஷயம் எட்டி யது. சிவாஜியின் குணத்தையும் வீரத்தையும் முன்பே அவன் அறிந்தவன். ஆதலின், அவ்வீர மகனது நட்பை நாட ஆவல் கொண்டனன். ஆத லின், வலுவில் அப்பெருமகன் வந்து, சிவாஜிக்கு அவ்வாளைக் காணிக்கையாகக் கொடுத்தான். சிவாஜி இனமாக அதைப் பெற்றுக்கொள்ள வில்லை; உரிய விலையும், அழகிய ஆடையும் அளித்தே வாங்கிக் கொண்டான்.

வாளின் வனப்பு சிவாஜியின் மனத்தைக் கவர்ந்தது. அவன் குல தெய்வத்தின் பெயர் அம்மை பவானி. அத்தேவியின் பெயரையே அந்த வாளுக்கும் இட்டான்; தெய்வத்தைப்போல் அதனை வணங்கினன். அப்பால் அவ்வாளின்றி அவன் வெளிக் கிளம்புவதில்லை. அவன் அடைந்த பெரு மித வெற்றிக்கு அவ்வாளே காரணம் போலும்!

# 22. வீர சிவாஜி

**சிவாஜியின் நாளில் இங்கே ஒரு பக்கம் மொகலாய** வல்லரசு; இன்னொரு பக்கம் விஜயபுரிப் பேரரசு; வேறொரு பக்கம் பராக்கிரமம் வாய்ந்த போர்த்துகேசியர்; மற்றொரு பக்கம் சூரத் நகரருகே கடல் படை கொண்டு சீறி நின்றனர் அபிஸீனியர்; போதாக் குறைக்கு வர்த்தகம் நாடி இங்கு வந்த ஆங்கில கூட்டத்தார் ஒருபுறம். இவர்கள் நடுவே ஒண்டியாக நின்று அனைவரையும் வாட்டி வாகை சூடினன் அவ்வீர சிவாஜி.

விஜயபுரி அரசின் கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சிவாஜி கைப்பற்றிவந்தபோது விஜயபுரியின் தலைசிறந்த தளகர்த்தன் ஷாஜியே. மகனது மிடுக்குக் கண்டு தந்தைக்குப் பிடிக்கவில்லை. தலைவிதிபோல் ஆகிறது எனறு விட்டு விட்டான் ஷாஜி. சிவாஜிக்கும் ஷாஜிக்கும் பேச்சு வார்த்தை கூட இல்லை என்றே இயம்பலாம். ஆயினும் விஜயபுரி சுல்தானுக்கோ ஷாஜியின் மீது பரம சந்தேகம். தனயன் செயலுக்குத் தந்தை உள்ளூர உடந்தை என்பதே சுல்தான் துணிபு.

சிவாஜியை மடக்க வீராதி வீரரை எல்லாம் அனுப்பினன் சுல்தான். ஆயினும் மடக்க முடியவில்லை. சுல்தானுக்கு எழுந்தது கோபம். அவன் ஷாஜியைக் கொண்டு சிவாஜிக்கு மதி புகட்டி, ஓலை ஒன்று எழுதச் சொன்னன். அதில் ஏதும் பலனில்லை. கோபம் கொழுந்து விட்டது. சுல்தானே ஷாஜியைச் சிறை செய்தான்; நடுவெயிலில் நிறுத்தினன்; சுற்றிலும் கல்சுவர் எழுப்பினன்; சிவாஜிக்குக் கடைசி ஓலையும் போக்கினன். "நீ பிடித்த கோட்டைகளை விட்டுவிட வேண்டும்; அப்பால்

வாலை மடக்கிக்கொண்டு கிடக்க வேண்டும். இல்லையானால் ஷாஜியைச்சுற்றி நாற்புறமும் சுவர் எழும்பிவிடும்; உயிருடன் ஷாஜி கல்லறைக்கு இரையாவான்," என்பதே அந்த ஓலையின் சாரம்.

சிவாஜியின் நிலையோ பரம சங்கடமாகியது. ஒன்று சுயவரசு காணும் ஆசையைக் கட்டி வைக்க வேண்டும். இன்றேல், பிதாவின் கோரக் கொலைக்கு ஆளாதல் வேண்டும். மதி மந்திரி போன்ற மனைவி சாயாதேவியை வினவினான் சிவாஜி. "சுயவரசு காணுதல் சும்மா கிட்டுமோ? தாரம், தந்தை, தன்னுயிர் என்று பார்க்க முடியுமோ? மிகவும் சிரமந்தான்! மக்கள் நலமும், தேச நலமும், தர்ம நலமும் கருதியே சுயராஜ்ய முயற்சியில் முனைந்துள்ளோம். வேறு என்ன சொல்வேன்!" என்றாள் அத்தேவி. பின்பு அவன் தன் தாயையும் துணைவரையும் உசாவினான். 'சாயாதேவி சொன்னதே சரி' என்றனர் அனைவரும்.

தந்தையையும் காக்க வேண்டும்; தன் குறியிலும் முனைய வேண்டும்; கோலும் முறியாமல் பாம்பும் சாகாமல் இருக்க வேண்டும் என்று அதற்குற்ற வழிகளை ஆராயலானான் அவ்வீரமகன். சிவாஜியின் மேன்மை முன்னதாகவே மொகலாய வல்லரசுக்குத் தெரியும்; ஷாஜியின் சூரத்தனமும் தெரியும். அப்போது மொகலாய சக்கரவர்த்தி ஷாஜஹான். தந்தை, தநயன் இருவரையும் அணைத்துக்கொள்ளவே அச்சக்ரவர்த்திக்கு ஆவல் அதிகம். இருவரையும் தன்பக்கம் இழுத்துக் கொண்டால் விஜயபுரியை வென்று விடலாம், தக்காணத்திலும் தாராளமாகத் தன் கொடி துக்கலாம் என்பதே டில்லி பாதுஷாவின் நினைப்பு. விஜயபுரிக்கோ மொகலாய வல்லரசு என்றால், உள்ளூர உள்ளத்தில் உதைப்புத்தான்.

இந்நிலையை உணர்ந்தான் சிவாஜி. பாதுஷாவின் மைந்தனும், தக்காண கவர்னருமான மௌஸத்துக்கு ஒரு தூது விடுத்தான். "ஆபத்தில் உதவினால், பின்னால் நான் தக்காணத்தில் பக்க பலமாக இருப்பேன்," என்றான். இது ராஜதந்திர வாசகம். "உடனே ஷாஜியை விடுவிக்க வேண்டும்," என்று டில்லியிலிருந்து விஜயபுரிக்கு ஆணை பறந்தது. விஜயபுரி சுல்தான் அதனை மீறி நடப்பதெங்ஙனம்? ஷாஜி இங்ஙனம் மகனது இராஜ தந்திரத்தால் விடுதலை அடைந்தான்.

நாளடைவில் ஷாஜஹானுக்குப்பின் ஔரங்கசீப் பாதுஷா ஆனான். உடனே மொகலாய வல்லரசின் முன்னே யாரும் தலை வணங்க வேண்டி வந்தது. அதற்குச் சிவாஜி சம்மதிக்க வில்லை. சிவாஜியைச் சிதைக்க மொகலாய சேனைத் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கிளம்பி வந்தனர். வந்தும் சிவாஜியைப் புறங்காண முடியவில்லை. ஔரங்கசீப்பினிடம் பிடிவாதம் மிகுதி. ஆறு நூறாயினும் சரி, நூறு ஆறாயினும் சரி, சிவாஜியை அடக்கியே தீரவேண்டு மென ஆர்ப்பரித்தான் அப்பார்த்திபன். இதை முடிக்க இந்து சேனாதிபதிகளிடம் அவன் நம்பிக்கை வைக்கவில்லை; ஆதலின் நெருங்கிய உறவினனான ஷீஸ்டாகான் என்பவனை அனுப்பினான் சிவாஜியின் மீது. ராவணனது மூலபலம் பிரளயம்போல திரண்டது என்று புராணங்கள் புகலும். பாதுஷாவின் படை பலம் அனைத்தும் அவ்விதமே திரண்டெழுந்தது.

சிவாஜியின் கோட்டைகள் ஒன்றன்பின் ஒன்றாக மொகலாயரின் வசமாயின. அப்பெரு வீரன் வளர்ந்த தலம், வாழ்ந்த தலம், பிதா தந்த தலம், பூனா நகரம், யாவும் ஷீஸ்டாகான் கையில் சிக்கின. பூனாவில் புகுந்து சிவாஜியின்

அரண்மனையிலேயே ஷீஸ்டாகான் தங்கினான். ஒன்று சிவாஜியைக் கொன்று, அல்லது அவனை வென்று திரும்புவதாக அத்தளகர்த்தன் கங்கணம் பூண்டான். பெரு வெள்ளத்தின் முன்னே நாணல் போல் வளைந்து கொடுத்தான் சிவாஜி. இந்த உண்மையை ஷீஸ்டாகான் உணரவில்லை.

பூனா நகரை மட்டும் காவல் புரிந்து நின்ற மொகலாய வீரர் பதினாயிரவராவர். அந்நகருக்கு அப்பாலோ எழுபதாயிரம் பேர். இமை கொட்டாமல் உருவின கத்தியும் கையுமாக ஷீஷ்டாகான் மாளிகையைக் காவல் புரிந்தோர் ஆயிரம் பேர். 'சிவாஜியின் தந்திரம் உலகப் பிரசித்தம்! ஆதலின் எப்படியோ அவன் நகரினுள்ளே வந்து விடுவான்!' என்பதே அச்சேனாதிபதியின் திகில். எனவே பூனா நகருக்குள்ளே யாவர் வரினும் சரி, அங்கிருந்து யாவர் போயினும் சரி, தக்க கண்காணிப்பு வேண்டும், சோதனையும் வேண்டும் என்பது தாக்கீது. கண்ணில் எண்ணெயை ஊற்றிக் கொண்டு காத்து நின்றனர் காவலாளர்.

"கொன்றோ வென்றோ திரும்புவதாக வந்துள்ள வைரியைக் குலைக்க வேண்டும். எங்ஙனம் பூனா நகரினுள் புகுவது? எவ்வளவு காவல்! எத்தனை காபந்து! என்றாலும் மதி வன்மையினால் முடியாத காரியமும் ஒன்று இருக்குமோ!" என்பதே சிவாஜியின் சிந்தை. அந்நகரிலே ஓர் இந்துவின் வீட்டில் ஒரு கல்யாணம் நடந்தது. அம் மணவினைக்குச் சீரும் சிறப்பும் கொண்டு வருவார்போல் சிவாஜியும் இருபது வீரரும் மாலையிலே நகரிலுள்ளே நுழைந்தனர். அதுகண்ட காவலாளர் வழி மறித்தனர்; கேள்வி கேட்டனர்; சோதனையும் போட்டனர். விருந்துக்கு வந்துள்ள மனிதர்கள் என்று காவலர் ஏமாந்து உள்ளே செல்ல விடுத்தனர்.

கலியாண ஊர்வலம் இரவிலே நடந்தது. சிவாஜியும் துணைவரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

நடுநிசியில் ஊர்வலம் தீர்ந்தது. எல்லாரும் உறங்கப் போயினர். பேயும் உறங்கும் நடு நிசி! காவலாளருக்குத் தூக்கக் கலக்கம்! தான் பிறந்து வளர்ந்த மாளிகையாதலின் ஷீஸ்டாகான் வீடு முழுதும் மூலை முடுக்கு விடாது சிவாஜிக்கு நன்கு தெரியும். அதன் பின்புறம் சென்றான் சிவாஜி; அங்கே சமயலறை. சுவரிலே பத்தடி உயரத்தில் ஒரு சாளரம். ஆள்மீது ஆள் நிற்க, உயர ஏறினன் சிவாஜி; சாளரத்தை மெதுவாகப் பெயர்த்தான்; உள்ளே குதிக்க வழி செய்தான். யார் முதலிலே உள்ளே குதிப்பது? சிங்கத்தின் குகைக்குள் புகுவதுபோன்ற நிலைமை!

முதன் முதலாக உள்ளே குதித்தவன் சிவாஜியே. பின்பு இருபது துணைவரும் பின்பற்றினர் அப்பெரு வீரனை. உள்ளே மினுக்கு மினுக்கு என்று விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உருவிய வாளுடன் முன்னதாகச் சென்றான் சிவாஜி; சேர்ந்தான் ஷீஸ்டாகானது படுக்கையறை. மஞ்சத்தில் கிடந்த ஒரு புருஷனை அவன் இரு துண்டாக்கினன். உடனே ஷீஷ்டாகான் மனைவி விழித்தெழுந்து உயிர்ப் பிச்சை கேட்டாள்; "என் மகனை வெட்டி விட்டாய்; மணாளர் அதோ உறங்குகிறார்— அவரை வெட்டாதே!" என்று காலைப் பிடித்துக் கொண்டாள். சிவாஜிக்கு இரக்கம் பிறந்தது.

இதற்குள் ஷீஸ்டாகான் விழித்தெழுந்து ஓட்டம் பிடிக்கவே சிவாஜியின் துணைவனொருவன் வாளை ஓச்சினன். மயிரிழை தப்பியது, கைவிரல் மட்டும் அறுப்புண்டு விழுந்தது. இதற்குள் அரவம் கேட்டு, அயலறையில் இருந்த மொகலாய வீரர் பதின்மர் விரைந்து வந்தனர். வந்தும் என்ன?

அத்தனை பெயரும் இரையாயினர் சிவாஜியின் வாளுக்கு. உடனே சந்தடி கிளம்பிவிட்டது. 'மாளிகைக்குள் யாரோ புகுந்துவிட்டனர்!' என்று காவல் துருப்புகள் கண் விழித்தனர். 'யார் நுழைந்தது? யார் நுழைந்தது?' என்று கூவிக்கொண்டே சிவாஜியும் துணைவரும் அரண்மனையை விட்டு வெளியே கிளம்பினர்.

மொகலாயப் படைஞர் திரளலாயினர். திக்குக்குச் சிலராக அத் துருப்புகள் ஓடினர். அங்கே பதுங்கி யிருந்த சிவாஜியின் படை வகுப்பொன்று பலரையும் வெட்டிக் குவித்தது. 'இதோ சிவாஜி! அதோ சிவாஜி!' என்று சிலர் கூவினர். சிவாஜியும் அவன் துணைவரும் மேற்கண்ட படை வகுப்புமாக ஒரு திக்கை நோக்கி இருளிலே மறைந்தனர்.

மற்றொரு திக்கிலே சிறிது தொலைவில் ஒரு மலை. அம்மலையின் அடிவாரத்திலிருந்து உச்சியை நோக்கித் தீவட்டிகளுடன் நூற்றுக்கணக்கான வீரர் ஓடுவதாக மொகலாயர் அறிந்தனர். சிவாஜிதான் அவ்வழி ஓடுகிறானென மொகலாயச் சேனை அம் மலை நோக்கிச் சென்றது.

வாயுவேகமாக ஓடிய சேனை, மலையை அணுகியது. மூலைக்கு ஒருவராக தீவட்டியுடன் பகைவர் ஓடுகின்றனர் என்பதே அச்சேனை வீரரின் கருத்து. ஆதலின் அவ்வீரர் சிறு சிறு கூட்டமாகப் பிரிந்து, தீவட்டி போகுமிடம் சேர்ந்தனர். கிட்டச் சென்று பார்க்கவே ஓர் ஆளைக்கூடக் காணோம். காட்டெருமையின் கொம்பிலே தீவட்டிகள் கட்டப்பட்டிருந்தன; அவை வெருண்டு ஓட்டம் பிடித்தன. இப்படி முந்நூறு தீவட்டிகளைத் தாங்கி நின்றன முந்நூறு காட்டெருமைகள் தமது கொம்பில். பின்புதான், "போக்குக் காட்டி மயக்கிவிட்டு அப்பெரு வீரன் மறைந்துவிட்டான்!" என்று மொகலாய வீரர்

அறிந்து கொண்டனர். இதற்குள் சிவாஜி வேறு திசை வழியே பத்திரமான இடமொன்று சேர்ந்து விட்டான்.

மறுதினம் பொழுது புலர்ந்தது. ஷீஸ்டாகான் பட்ட பரிபவம் பலரும் அறிந்தனர். இனிமேல் பூனுவில் தங்கினுல், உயிர் போய்விடும் என்று வந்த வழி நோக்கி விரைந்து சென்று விடுவதே மேலெனெ ஷீஸ்டாகான் துணிவு கொண்டான்.

அந்நாளிலே சூரத் நகரம் பிரபல துறை முகம்; இந்தியாவின் வியாபார பொக்கிஷம்; மொகலாய அரசவையின் ஒரு கஜானவு மாகும். அந் நகரைக் கருத்தில்கொண்ட சிவாஜி வேருரு நகரைத் தாக்குவதாகப் போக்குக் காட்டினன். அங்கே மொகலாயப் படைகள் குவிந்தன. இந் நிலையில் திடீரெனத் திரும்பி, சூரத் நகரின் கோட்டை வாயிலில் சிவாஜி தோன்றி, "மரியாதை யாக வந்து காணிக்கை செலுத்தின், நகரைத் தாக் குவதில்லை," என்று கவர்னருக்குச் சொன்னன். கவர்னரோ எடுத்துவிட்டான் ஓட்டம்.

மக்கள் என் செய்வர்? 'சிவாஜியின் நகரங் களை ஔரங்கசீப் தரைமட்டம் ஆக்கினனே! அனை வரையும் கொன்று குவித்தனனே! பழிக்குப் பழி யாக நம் நகரும் அக்கதிக்கு ஆளாகுமே! கவர் னரும் ஓடி ஒளியலாயிற்றே!' என்று நகர மாந்தர் நடு நடுங்கினர். சிவாஜி தன் படைத்தலை வர்களை நகரிலுள்ளே அனுப்பினன். மொகலாய அரசின் பண்டசாலைகளை மட்டும் அவர்கள் கொள்ளை யாடினர். அரேபியாவிலிருந்தும் பார சீகத்திலிருந்தும் மொகலாயருக்கு வந்திருந்த ஆயிரம் குதிரைகளையும் கைப்பற்றினர்; பணக் காரர்களிடமிருந்து தண்டத்தீர்வை வசூலித்தனர்; ஏழை மக்களை அவர்கள் தொந்தரை செய்யவில்லை.

ஓடிப்போன கவர்னர் இதற்கு இடையில் ஒரு சூழ்ச்சி புரிந்தான். பாசறையில் தனியே இருந்தான் வீர சிவாஜி. அப்போது ஓர் ஆள் வந்து சிவாஜியை வணங்கினான். வணங்கி எழுந்ததும், ஈட்டியை நீட்டிக்கொண்டு சிவாஜியின்மீது அவன் பாய்ந்தான். இருவருக்கும் மல் யுத்தம் நிகழ்ந்தது. சிவாஜியின் உடுப்பெல்லாம் இரத்தம். முடிவில் அக்கொலைகாரன் சிவாஜியின் கையில் சித்திர வதைக்கு ஆளானான். இத்தகைய சதி நிகழ்ந்தும், நகர மக்களின்மீது சிவாஜி உருத்து எழவில்லை.

சூரத் நகரிலிருந்து சிவாஜி திரும்பினான் கோடிக் கணக்கான பூவராகனுடன். உடனே அவன், ஔரங்கசீபுக்கு விடுத்த ஓலையின் சாரம் இது :—
"வல்லரசே! எத்தனையோ சேனாபதிகளை அனுப்பினீர் என்மீது. எல்லாரும் ஏங்கித் திரும்பினர். முடிவிலே உமது மாமன் ஷீஸ்டாகானை அனுப்பினீர். மாமனும் ஓட்டம்பிடிக்க நேர்ந்தது. உமது சூரத் நகரின் நிலை தெரியுமா? இந்துஸ்தானம் இந்துக்களுக்குச் சொந்தம். உமக்கென்ன வேலை இங்கே? தக்காணத்திலே இனி நீர் தலைகாட்ட முடியாது. அடியேன் அறிவிப்பது இதுவே!"

அந்த ஓலை கண்ட ஔரங்கசீப் நிலை, கண்ட கனவைக் கூறமுடியாத ஊமையன் நிலை போலாயிற்று.



# 23. சிவாஜியின் சீரிய நிருபம்

குணமே கொண்டார் ஏது? குற்றமே கொண்டாரும் ஏது? குணம், குற்றம் இரண்டும் இருக்கும் யாரிடமும். எனவே ஒருவரை மதிப்பிடுவது எப்படி? 'குணம் நாடு; குற்றமும் நாடு; அவற்றுள் மிகை நாடு; அம்மிகை கொண்டு மதிப்பிடு' என்பார் தமிழ்மறை பாடிய திருவள்ளுவர்.

ஒளரங்கசீபிடம் குணமும் பல; குற்றமும் பல. மதப்பற்று மிக அவசியமே. அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் விஷமாம். மதப்பற்று முற்றின் வைராக்கியம் பிறக்கும்; வைராக்கியம் முதிரின் அது வெறியில் முடியும். டில்லிப் பிரஜைகளில் பெரும்பாலார் இந்துக்கள். எம்மதமும் சம்மதமெனக் கொண்டான் அக்பர். "என் மதமே எல்லாருக்கும் சம்மதம் ஆகவேண்டும்," என்றான் ஒளரங்கசீப். இதுவே தீம்பாய் முடிந்தது. ஒளரங்கசீபுக்கு மட்டு மன்று; அவன் குடும்பத்துக்கும் அரசுக்குங் கூட!

ஒளரங்கசீபுக்கு அபார மூளை; அபரிமிதமான சேனை; இணையிலா ஆற்றல்; ஈடிலா ஊக்கம். இருபத்து நான்கு மணி நேரத்தில் இருபத்தோரு மணி நேரமும் உழைப்புத்தான். அவன் காலத்தில் இங்கிருந்த சிற்றரசரோ வீர சிங்கங்கள். இதனை அவ்வரசன் நன்கு உணர வில்லை.

மார்வார் மன்னவன் யசோவந்தன், மேவார் மன்னவன் ராஜசிம்மன், ஜயபுரி வேந்தன் ஜய சிம்மன் இவர்கள் மகா பராக்கிரமசாலிகள். மகாராஷ்டிர மன்னனே மாண்பு மிக்க சிவாஜி. இவர்களின் மனம் பதறவே மதப்பகை மூண்டுவிட்டது. அதனை ஒளரங்கசீப் சமாளிக்க முடியவில்லை. "எனக்குப் பின், பிரளயந்தான்!" என்று கடை

நாளில் மறுகினன் அம்மன்னர் மன்னன். பிரளயத்துக்கு மூல காரணம் அரசனது மனப்போக்கே.

சிவாஜியை ஆக்ராவுக்கு அழைத்தான் அப்பாதுஷா. யாதோர் இடையூறும் நேராது என்பதே சிவாஜிக்குக் கொடுத்த வாக்குறுதி. அவ்வாக்கை மீறி நடந்தான் ஔரங்கசீப். என் செய்வான் சிவாஜி! ராஜபுத்திர வேந்தரின் துணை கிட்டியது. சிறையினின்று சிவாஜி தப்பிவந்தான். இதற்கு இடையில் ஔரங்கசீபின் ஆட்சியிலே பிறருக்கு மதவரி தோன்றியது. முஸ்லீமல்லாதார் தலைவரி அல்லது ஆள்வரி கட்டவேண்டும். அது கண்டு இந்துக்கள் ஏங்கி நின்றனர். அது சமயம் ஔரங்கசீபுக்கு ஒரு நிருபம் விடுத்தான் சிவாஜி. அதன் விவரம் இது :—

"டில்லி பாதுஷாவின் சமூகம்! அன்பன் சிவாஜி சலாம்! ஆண்டவன் சகாயத்தால் ஆக்ராவிலிருந்து தப்பி வந்தேன். நேரில் விடைபெற்றுக் கொள்ள வசதியும் நேரமு மில்லை. உமது கோல் வளம், குடிநலம் இரண்டையும் கருதி இந்நிருபம் எழுதுகின்றேன். என்னுடன் நீர் புரிந்த போரோ எண்ணில. உமது பொக்கிஷம் வறண்டு விட்டது. உண்மைதான். அதனை நிரப்ப வேண்டும். எங்ஙனம் நிரப்புவது! ஜஸியா எனும் தலைவரி போட்டா? ஆள்வரி விதித்தா ? நல்லது !

"மொகலாயப் பேரரசின் விழுமிய மூலபுருஷர் அக்பர். அவர் ஐம்பத்திரண்டு ஆண்டு அரசாண்டார் ; அனைவரையும் மிக அணைத்து ஆதரித்தார். கிறிஸ்தவர், யூதர், இஸ்லாமியர், பௌத்தர், பிராமணர் என்று அவர் வேற்றுமை காட்டவில்லை. சகமெல்லாம் மெச்ச அவர் சமரஸமே பூண்டார் ; யாவருக்கும் நலம் புரியவே நாட்டம் கொண்டார். சிலர் அவரை ஜகத்குரு என்றும் சொல்லினர்.

அப் பெரும் பெயருக்கும் அரும் புகழுக்கும் பாத்திரமானர் பேத மனமற்ற அப் பெருமான்.

"அப்பால், ஜிஹாங்கீர் சக்கரவர்த்தி வந்தார்; இருபத்திரண்டு ஆண்டு தண்ணளி பரப்பினர்; யாவரிடமும் பாசம் வைத்தார்; நேசமே கொண்டார்; நிம்மதியாக வாழ்ந்தார்; இஷ்டசித்தி எய்தினர். பின்னர் வந்த ஷாஜஹான் முப்பத்திரண்டு வருஷம் அழகுற ஆண்டார்; இசையுடன் வாழ்ந்தார்; இனிமையே பூண்டார். வீரவர மொகலாயப் பேரரசு பெருகியது. முந்தையோர் கண்ட முறை இது. இந்நிலையில் உமது கதியை நினைக்க உள்ளங் குமுறும். தலைவரி விதிக்க அவர்கள் அறியாரோ? ஏன் விதிக்கவில்லை? என் சமயம், உன் சமயம் என அவர்கள் மதவெறி கொள்ளவில்லை.

"மேலோராயினும் சரி, கீழோராயினும் சரி, இம்மானிடர் அனைவரும் ஆண்டவனது மக்கள். இதனை அவர்கள் மறக்கவில்லை. மனிதரின் குணம் பலவிதம். அந்த உத்தம வேந்தர் போய் விட்டனர். அவர்களின் அன்பும் கருணையும் மறையவில்லை; இன்றும் நின்று நிலவுகின்றன. அவர்களைக் குடிமக்கள் என்றும் மறவார்; நெஞ்சார நினைப்பர்; வாயார வாழ்த்துவர். எண்ணத்திற்கு ஏற்றவாறே ஏற்றமும் உண்டாகும் அன்றோ?

"நல்லெண்ணம் கொள்ளின் நாடு செழிக்கும்; நலம் பெருகும். நாளுக்குநாள் இங்கே செல்வம் திரண்டது; சீர் பெருகியது; பாக்கியம் பரவியது; பிரஜைகள் கவலையின்றி வாழ்ந்தனர். அம்மன்னர் எண்ணியன எல்லாம் இனிது முடிந்தன. வெற்றியும் கீர்த்தியும் கிட்டின. உமது ஆட்சியிலே கோட்டைகளும் நகரங்களும் எப்படி கை நழுவுகின்றன! சின்னளில் எல்லாம் தவறிப்போம். ஏன்? நான் உமது பிரதேசங்களைத் தாக்கிப் பிடிப்பேன்.

"உமது நாட்டின் நிலைமை யாது? உழவரின் துயரம் தாங்குந் தரம் அன்று. கிராமங்களிலோ வரவர விளைவு குறைவு. நகரங்களிலோ கேட்க வேண்டியதில்லை. முன்னம் ஒரு லட்சம் கிடைத்த கிராமங்களில் இப்போது ஓராயிரம் கிடைப்பதும் அருமையாம். ஆயிரம் கிடைத்த இடத்தில், பத்துக் கிடைப்பதும் துர்லபம். பாதுஷாவின் மாளிகை யிலேயே பஞ்சம் பிணி என்றால், மற்றையோரின் நிலை கேட்க வேண்டுமோ? மகா மோசந்தான்!

"உமது அரசிலே படைகள் பதறுகின்றன. வணிகர் ஓல மிடுகின்றனர். இஸ்லாமியர் உளம் நைகின்றனர். பிரஜைகளிலே பலருக்கு இரவிலே உண்ண உணவும் கிடையாது. பகலிலும் பலர் கஞ்சிக்கு வாடுகின்றனர். உமது அரசின் நிலை இது. வெந்த புண்ணில் கோலிடுவதா? ஜஸியா எனும் தலைவரி விதிப்பதா? உமது மனம் எங்ஙனம் துணிந்தது? ஆண்டவனுக்கே வெளிச்சம்!

"செல்வம் மிகுந்த இந்துஸ்தானம் இது. இதன் சக்கரவர்த்தி ஒருவன், 'ஆண்டிகளின் ஓட்டிணையும் விட்டானில்லை; மகா வேதியரையும் யோகியரையும் வதைக்கிறான்; பஞ்சை பனாதியரையும் மிக வாட்டு கிறான்; நித்திய தரித்திரரையும் பிழிகின்றான்; பிச்சைக்காரரின் சொத்தைப் பிடுங்குவதில் பெரு வீரன்!' என்னும் அபகீர்த்தி எங்கும் பரவுமே! மொகலாய வல்லரசு குன்றின் மேலிட்ட விளக்கா யிருந்தது முன்னம்! இப்போதோ குடத்திலிட்ட விளக்காகி விட்டது. இதற்கு ஔரங்கசீபே காரணம் என்று பின்னாளில் சரித்திரம் பேசுமே!

"பேரரசே! பரிசுத்தமானது குர்ஆன் வேதம். அதன் வாக்கியம் திருவாக்காம்; இதனை நீர் நம்பு வது மெய்யா? அகிலம் வல்ல ஆண்டவன் அல்லா இஸ்லாமியருக்கு மட்டுமா ஆண்டவன்? மானிட

கோடிகளுக்கே ஆண்டவ னன்றோ? குர்ஆன் வேதம் என்ன சொல்லுகிறது? இஸ்லாமிய மதம் வேறு, இந்து மதம் வேறு என்று தோன்றலாம். ஆழ்ந்து பாருங்கள். எல்லா மதங்களின் முடிவும் ஒன்றே என்று புலப்படும். ஓவியம் ஒன்றுளது. அதனை நன்கு அழகுபடுத்த வெவ்வேறு வர்ணங்கள் தீட்டுவான் ஓவியக்காரன். உலகமே ஓர் ஓவியம். வெவ்வேறு சமயங்களை அமைத்துளர் பெரியோர்.

"பள்ளி வாசல்களில் பிரார்த்தனை நடக்கிறது. எல்லாம் ஒப்பற்ற ஒரு கடவுளையே சாரும். ஆலயங்களில் அபிஷேக ஆராதனை நடக்கிறது. அவையும் அக்கடவுளையே சேரும். கடவுளின் இன்னருளை நாடவே எல்லாம் நடக்கிறது. ஒருவர் மதத்தில் மற்றவர் தலையிடுவதேன்? தொந்தரவு பண்ணுவதேன்? பண்ணின், பரமனது மனம் நோகுமே! ஆண்டவன் படைத்த உலகம் இது. பல்வேறு மக்களும் அவன் படைப்பே. உலக சித்திரத்தில் பழுது செய்தல் பேதமையாம்.

"சத்தியமாகப் பார்த்தால், ஜஸியா வரி அநியாயம்; அதருமம். உமது காவலோ அபலம். பட்டாடையும் பொன்னாபரணமும் பூண்டு மாதொருத்தி வீதியில் செல்ல முடியுமா? செல்லின் நேரும் மானபங்கம் கிடக்கட்டும். அவள் வீடு திரும்புவதும் அரிது. என்னே உமது காவல்! இக்காவலுக்கா தலைவரி? கட்டுங் காவலும் பொருந்திய நகரங்களே கொள்ளைக்கு இரை! காவலற்ற இடங்களிலோ கேட்க வேண்டியதில்லை. என்று மில்லா வழக்கம் ஏன்? எத்தனையோ மன்னர் ஆண்டனர், மாண்டனர். யாரேனும் தலைவரி விதித்தனரோ?

"மக்களை வருத்தி, இந்துக்களை அச்சுறுத்தி தெய்வ பக்தியை வளர்ப்பதோ? நல்லது! அதுவே உமது நினைப்பாயின், பார்க்கலாம் உமது ஆண்மை

யை! இந்துக்களின் இறைவன், மேவார் மன்னவன், மகாராணு ராஜசிம்மனிடம் உம்மால் வரி வசூலிக்க முடியுமா? அவரிடம் வாங்கி விடும். அடியேன் சிவாஜியிடம் வாங்கவும் நீர் வழி பார்க்கலாம்!

"ஈயையும் எறும்பையுமா துன்புறுத்துவது? இதுவா ஆண்மை! இதுவா வீரம்! நாட்டின் நிலையையும், வருங்கால விளைவையும் விளக்க வல்ல உமது அமைச்சர் எங்கே!

"அந்த அமைச்சர் என்ன செய்கின்றனர்? இடித்துரைக்க அஞ்சுகின்றனர் போலும்! பெரு நெருப்பை வைக்கோல்கொண்டு மூடி யவித்து விட முடியுமோ?"


இந்நிருபத்தை வரைந்த புருஷன் பெயர் நீலப் பிரபு. இவன் பாரசீக பாஷையில் வல்லவன். சிவாஜி சத்திரபதியின் ராயஸக்காரரில் ஒருவன். சிவாஜி கைச்சாத்திட்டு விடுத்தான் இதனை அப் பாதுஷாவின் சமுகம்.

யதுநாத சர்க்கார் என்பார் பிரபல இந்திய சரித்திராசியர்; ஔரங்கசீபினிடம் பரிவு மிகக் கொண்டவர்; சிவாஜி, ஔரங்கசீப் இருவர் சரித்திரத்தையும் நடுநிலை கொண்டு நெடுநாள் நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளவர்; இருவரையும் குறித்து அவரது மதிப்பு இது :—

"ஔரங்கசீப் மத வைராக்கியம் மிகுந்தவன்; பரிசுத்த குடும்ப வாழ்க்கை கொண்டவன்; படாடோபம் என்பதை விரும்பாதவன்; துறவிபோல் வாழ்ந்தவன்; கணநேரமும் சோம்பியிரான்; நேரில் விசாரணை நடத்தி, தன் கைப்படத் தீர்ப்பு எழுதி, நீதி வழங்குவான்; யாரையும் நம்பான்; மலையே புரண்டு வரினும் மயங்கான்; பேராபத்தையும் பொருள் படுத்தான்; ராஜதந்திர அவதாரன்; சூழ்ச்சியிலும் இகலிலும் சதுரன்.

"சிவாஜியோ மகாபரிசுத்த புருஷன்; ஈசுவர பக்தன்; ஒழுக்கத்தில் உயர்ந்தவன்; சர்வமத சமரசன்; துறவிகள் பக்கிரிகள் என்று வேற்றுமை காட்டாதவன். எல்லாருக்கும் இனிமையே புரிவான்; பிற மாதரைத் தாயரெனவே மதிப்பான்; மலர்ந்த முகத்தான்; வசீகரத் தோற்றத்தான்; யாவராயினும் நடுக்கண்ட நியாயமே வழங்குவான்; ஒழுக்கந் தவறிய இளவரசனை தனது பிரிய மைந்தனும் சாம்பாஜியை ஒரு சமயம் சிறையில் போட்டு வைத்தான்; உழவரிடம் உள்ளன்பு காட்டுவான்; குடி உயரக் கோல் உயரும் என்றுரைக்கும் பெருமான்."

சிவாஜியின் பேருழியம் யாதெனில் மகாராஷ்டிரரைத் தட்டி எழுப்பியதாம். அவன் தோன்று முன்னம் மகாராஷ்டிரர் ஒருமையின்றிச் சிதறுண்டு, அன்னியரிடம் சேவகம் செய்து நின்றனர். அன்னவரைத் தட்டி எழுப்பி, ஒரு தலைப்பட்ட ஜன சமூகமாக ஆக்கின பெருமைக்குச் சிவாஜியே பாத்திரன்! மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காது என்றபடி, இந்து ஜாதியின் கௌரவத்தை உலகினுக்கு உணர்த்திய பெருமையும் சிவாஜி சத்திரபதிக்கே உரியது!



# 24. ராஜ சிங்கத்தின் சோதர வாஞ்சை

சிவாஜி ஒரு ராஜசிங்கம்; அவன் சின்ன ஜமீன்தாரின் மகனாகப் பிறந்து பெரிய சத்திரபதி ஆனான். அத்துடன் வட இந்தியாவையும் ஜயிக்கவே அவன் ஆசை கொண்டான். அக்கருத்து எங்ஙனமாயினும் சரி, அன்னிய அரசே கூடாது என்று அவன் பெரிதும் முயன்றான். "ஔரங்கசீபின் சமூகம் சென்றால், ராஜபுத்திர வேந்தர் பலரையும் பார்த்துப் பேசலாம்; அவர்தம் உள்ளக்கருத்தும் அறியலாம்; வட இந்தியாவில் கொடி தூக்கவும் வகை தேடலாம்," என்பதே அவன் கொண்ட கருத்து. அது பற்றியே, டில்லி பாதுஷாவைக் காண அவன் மனம் ஒப்பியது.

அப்போது, தென்னிந்தியாவிலோ தந்தலையாட்டம். எங்கும் பாளையக்காரர் அதிகம். அவர்களில் பலரும் தட்சண முகம்மதிய அரசுகளான விஜயபுரிக்கோ, கோல்குண்டாவுக்கோ அடக்கம். ஷாஜிக்குச் சொந்தமான ஜாகீர் தென்னிந்தியாவிலும் இருந்தது. இதில் சிவாஜியின் தம்பி வெங்காஜி இருந்து ஆண்டுவந்தான். தெற்கே ராமேசுவரம் வரையில் தனதாட்சி பரவவேண்டும் என்பது சிவாஜியின் கருத்து. எண்ணித் துணிவதே அவன் இயற்கை. ஆதலின் காலங் கருதி நின்றான் அந்த ராஜசிங்கம். இடையிலே பூதம் புறப்பட்டதுபோல் வெங்காஜியைத் தூண்டிவிட்டனர் விரோதியரும் துர்மந்திரிகளும் சேர்ந்து.

வெங்காஜிக்கு மதி பிசகியது. தமையனது வைரிகளுடன் இவன் கூடிக் கொண்டான்; முதல் மந்திரி இரகுநாதபந்தனை அவமதித்தான்; முகம்மதிய

அரசுகளுக்குத் தூது விடுத்துச் சதியும் செய்தான்; சிவாஜியின்மீது சீறிச் சண்டைக்கும் எழுந்தான்.

சிவாஜியின் படைகளோ திரண்டன. தென்னாட்டு விஜயங் கருதி அவ்வீரன் கிளம்பினான். சிவாஜிக்கு முன்னே நிற்பார் யார்? வேலூர், ஆரணி, மகாராஜகடை, செஞ்சி, பங்களூர் முதலிய பல இடங்களும் சிவாஜிக்குப் பணிந்தன. அங்குள்ள பாளையக்காரர் பலரும் முறிபட்டனர். வெங்காஜியின் சேனையும் சீரழிந்தது.

அப்போது சிவாஜி எழுதியது இது:—“தம்பி! துரோகிகளின் வலையில் சிக்குண்டாய்; என்மீது போருக்கும் எழுந்தாய். உன் நஷ்டத்தை எண்ணிப் பார். நீயோ என் சோதரன். உன் சேதம் என் சேதம். உனது மான அவமானம் எனது மான அவமானம். என்ன முட்டாள்தனம் உனக்கு! உன் மடமையை உலகு அறிந்துவிட்டது. உன்னைத் தூண்டி விட்டோரின் கதியைப் பார். என் கையில் சிக்குண்டு அன்னார் விழிக்கின்றனர். எல்லாம் நீ தேடிக் கொண்டது. என்மீது உனக்கு நம்பிக்கை இல்லை. அன்னியரை நீ நம்பிக் கிடக்கிறாய்.

“நல்லது. நீ இருப்பது தந்தை தேடிய ஜாகீர். நாம் இருவரும் சோதரர். அதில் எனக்கும் பங்கு உண்டு. சன்மார்க்கத்தைக் கைவிடாதே. வீண்பாபம் தேடிக் கொள்ளாதே. குடிமக்களின் நலத்தை நாடு. இன்றளவும் நான் பங்கு கேட்டேனில்லை. மரியாதையாகக் கொடுத்துவிடு. சாந்தியுடன் சுகமே வாழ். அன்னியருக்கா உன்மீது அக்கறை இருக்கும்? துரியோதனனைப் போல் நடவாதே. உன் தலையில் நீயே மண்ணைப் போட்டுக் கொள்ளாதே. குடும்பச் சேவகனும் இரகுநாதபந்தன் கையில் தோல்வி கொண்டாய். போனதெல்லாம் போகட்டும். கவலை சிறிதும் வேண்டாம். இனிமேலாவது சரி

வர நட. முதியோரின் வார்த்தையை மீறி நட வாதே. பழைய அன்பரை அலட்சியஞ் செய்யாதே. அதன் பலனையே அனுபவிக்கிருய்! இன்னும் அனு பவிக்க வேண்டுமோ? நன்மை சொன்னல் உனக்கு ஏறவில்லையே! கண்ணியமாக நட. உனக்கு இன் னும் ஜாகீர் வேண்டுமா? வடக்கே நான் தேடித் தரு வேன். குடும்பக் கலகம் வேண்டாம். இருவருக்குமே அது தீம்பாய் முடியும். இனியேனும் இருவரும் நேசமாக வாழ்வோம். தமையன் என்ற முறையில் இது பேசுகின்றேன்.''

தம்பியின் துரோகங் கண்டதும், தண்டுகொண் டெழுந்து, அவனுக்குத் தோல்வி கொடுத்து, துன் மந்திரிகளையும் சிறை செய்தபின், அங்ஙனம் வாஞ் சையுடன் எழுதினன் சிவாஜி. பின் ரகுநாதனுக்கு அச் சீரிய வேந்தன் எழுதியது இது:—''சோதர ருக்கிடையே பிணக்கு நேர்ந்தது போதும்! வெங் காஜியின் கௌரவத்தைக் குலைக்காதே. தந்தை சொத்து முழுவதையும் அவனே அனுபவிக்கட்டும். எனக்கு ஆட்சேபம் இல்லை. அவன் மதி பிசகி, மாற்ருருடன் கூடிச் சதிசெய்வதை யான் சகியேன். அவனுக்குப் புத்திமதி புகட்டி யுள்ளேன். இனி மேல் சமரஸத்துக்கு வழி பார். பிழை புரிந்தா னயினும் அவன் என் தம்பி யல்லவா?''

வெங்காஜியின் நிலை பார்ப்போம். அண்ணன் கடிதம் ஒரு புறம். அண்ணன் சேனையிடம் கடுந் தோல்வி கொண்டது ஒரு புறம். ஆஸ்தி போய் விட்டதே என்று மக்கள் அலறுவது ஒரு புறம். மந்திரி ரகுநாத பந்தன் பிணங்கி, சிவாஜியிடம் சென்றது ஒரு புறம். இவை எல்லாம் சேர்ந்து அவனை வாட்டுகின்றன. அண்ணன் பங்கு கேட் கிருனே என்றும் அவனுக்குக் கசப்பா யிருக்கிறது. சண்டை போடவோ சக்தி இல்லை. முதுகு காட்டி

வந்த வெட்கம் பிடுங்கித் தின்கிறது. அவன் மதி மோசம் போனதும் மனத்தைப் பிளக்கிறது. ஆதலினல் ஊண் உறக்கம் இல்லை. உன்மத்தனய் நிற்கிருன். மௌனமும் கொள்கிருன்!

வெங்காஜியின் மனைவி தீபாபாய் மகா மதியூகி. அவள் தன் மணளனை அணுகினள்; மதி மந்திரி போல் பேசுகின்ருள்:—“ நாதா! நம் மகாராஜா ஷாஜிக்குப் பின், சிவாஜியே நமக்குத் தந்தை. தாங்களோ துன்மந்திரிகளின் கெடுமதி கேட்டீர்கள். தங்களுக்குச் சுயபுத்தி இல்லை. சுமந்திரன்போன்ற ரகுநாத பந்தனையும் அவமதித்தீர்கள். சிவாஜியோ பெரு வீரன்; மகா புத்திமான்; கண்ணியவான்; புண்ணியன். இத்தகைய தமையனையா விரோதித்துக் கொள்வது? நமது அரசில் அவர் பங்கு கேட்பது நியாயந்தானே. நமது அரசு பிதுரார்ஜித சொத்தல்லவா? சுயவரசு கண்டார் அவர். தாங்கள் என்ன செய்தீர்கள்? தந்தை தந்ததையே அனுபவிக்கிறீர்கள். புதிதாக நாடு சேர்த்தீர்களா? தமையனது சோதர வாஞ்சையை மதியாமல், துரோகம் புரியவும் துணிந்தீர்களே? இச்சகம் பேசித் திரிவோர், நக்கிப் பொறுக்கிகள், இவர்களின் வலையில் பட்டு உழல்வது இனி வேண்டாம்; பகையை விடுங்கள்; தமையன் என்பதை நினையுங்கள். வீண் கர்வம் வேண்டாம். அண்ணனுக்குப் பணியுங்கள். கண்டிப்பாக அவர் காப்பாற்றுவார். அவரைவிட நமக்கு ஆப்தர் வேறு உண்டோ? நல்லதே சொல்லுகிறேன்!”

மனைவியின் வார்த்தை வெங்காஜியின் செவியில் ஏறியது. உடனே நல்ல புத்தியும் வந்தது. ரகுநாத பந்தனை அழைத்தான் வெங்காஜி; அண்ணனுடன் சமரஸம் பண்ணி வைக்கச் சொன்னன். பிறகு இருவருக்கும் சமரஸம் ஏற்பட்டது. அது

கண்டு அனைவருக்கும் ஆனந்தம் பிறந்தது. நாட்கள் சில சென்றன. வெங்காஜியோ மீண்டும் மனச் சோர்வு கொண்டான். அரசியலை அவன் கவனிக்க வில்லை; பித்தம் பிடித்தவன்போல் பேதுற்றுக் கிடந்தான். சிவாஜிக்கு இத் தகவல் எட்டியது. உடனே தம்பிக்கு விடுத்தார் ஒரு நிருபம். அதன் விவரம் இது :—

"பிரிய சோதர! அம்மை பவானி அருள் சுரப் பாளாக! உனக்குச் சர்வ மங்களமும் சித்திக்குமாக. நாட்கள் பல ஓடிவிட்டன. உன்னிடமிருந்து கடிதமே இல்லை. ஏன்? எனக்குக் கவலையா யிருக்கிறது. என் தம்பியாகிய நீ துயர்வும் அயர்வும் கொண்டு துஞ்சு வதோ? நாளும் நீ உடலுக்கு உறுதி தேடுவதில்லை யென உணர்கிறேன். சரீர சுகத்தை மறந்தனை யாம்; அரசியலையும் கைவிட்டனையாம்; நாளும் கிழமையும் துறந்தனையாம்; பண்டிகையும் பெரு நாளும் கொண்டாடுவ தில்லையாம். இங்ஙனம் ரகு நாத பந்தர் எழுதியுள்ளார்.

"இக்கோலம் ஏன்? உன் படைஞர் சோம்பிக் கிடப்பதேன்? நீ பைராகியாகிப் பேதுறுவதேன்? தூய தல மொன்று தேடுவதேன்? தவம் புரியவா? வெதும்பி மோன வாழ்வு கொண்டு கிடக்கவா நீ பிறந்தனை? உனது நிலை கேட்டுப் பெரிதும் கவல் கின்றேன். தந்தையின் அருகிருக்கும் பாக்கியம் நீயே படைத்தாய்; அவரது வீர தீர வாழ்வை நீ கூர்ந்து கவனித்தாய். அத்தகைய நீ, இப்போது சோம்பிக் கிடப்பது அழகு! அழகு!

"தந்தை ஷாஜி எத்துணையோ துன்பங்கள் அநுபவித்தார். ஆயினும் அருஞ் செயல்கள் பல விளைத்தார்; பேராபத்துக்களை யெல்லாம் போக்கிக் கொண்டார்; பேரையும் புகழையும் நிலை நிறுத் தினர். சதா அவருடன் இருந்தாய் நீ. எல்லாம்

அறிந்தாய் நீ. அவருக்கு உதவி புரிந்த ஆண்மை, திண்மை, ஆள்வினை, விடாப்பிடி, ஊக்கம், உழைப்பு, விவேகம், வீரம் இவை கண்டனையே! எல்லாம் காற்றில் விட்டனையோ? தந்தையின் வாழ்க்கையினும் சீரிய உபதேசம் உனக்கு வேறு ஒன்றும் வேண்டுமோ?

"யானோ காலம் இடம் கருதி இருந்தேன்; என்னைக் காத்துக் கொண்டேன்; பெரும் போர்கள் புரிந்தேன். தென்னாட்டிலே நீயும் தனியரசு காணலாம். நல்ல சமயம் இதுவே. இந்நிலையில் உலக விவகாரங்களைத் துறந்து, நீ வைராக்கியம் கொள்ளுதல் விதியோ? வாளா விருத்தல் விவேகமோ? உன்னையும் உன் அரசையும் விழுங்க நிற்கும் வஞ்சகரிடமா உன் வாழ்வை ஒப்படைப்பது? என்ன மதி இது! செல்வம் சிதற, சரீரம் குலைய, நற்காலம் நழுவ, நீ வீணே கிடத்தல் விதியுமன்று, மதியுமன்று.

"என்னே உன் மதி! என்னே உன் செயல்! யானோ உனக்குத் தமையன், தலைவன், துணைவனும் ஆவேன்! தோழமையே கொள்வேன்! துயரம் துடைப்பேன்! தலையும் கொடுப்பேன்! சத்தியம்! அச்சம் வேண்டாம்; அவநம்பிக்கையும் வேண்டாம். வைராக்கியத்தையும் சோம்பலையும் விட்டுவிடு. நாள் கிழமைகளைக் கொண்டாடு. உடலுக்கு உறுதி தேடு. குடிகளின் நலத்தை நாடு. அவர்களின் வாழ்வைப் பெருக்கு. சேனையைச் சீர்படுத்து.

"அரசனது கடமையைச் செய். படைவீரரையும் கடமை புரிய ஆணையிடு. படை வலி கொண்டு புகழ் தேடு. 'தம்பியுள்ளான், தகவுடையான், தலம் மெச்ச நடக்கின்றான்,' என்று கேட்டால் அண்ணனாகிய எனக்கு ஆனந்தம் பெருகும், தோள்கள் உயரும், துயரும் போகும். ரகுநாத பந்தர் நமது குடும்ப அன்பர்; தந்தையிடம் சேவித்தவர்; உன்

னிடம் அன்பே உள்ளவர். அவர் அன்னியர் அல்லர். அவரை நம்பு. அவரது ஆலோசனை கேள். அவரிடம் எனக்கு முழுநம்பிக்கை உண்டு. நீங்கள் இருவரும் இணைந்து வாழுங்கள்.

“உனக்கு நலம் உண்டாகும்; பெயரும் புகழும் வாய்க்கும். மீண்டும் மீண்டும் என்ன சொல்லு வேன்? சோம்பி யிராதே. நற்சமயத்தை நழுவ விடாதே. படைபலங் கொண்டு பலன் பெறு. அருஞ் செயல் ஆற்று. வைராக்கியம் கொள்ள விருத்தாப் பிய காலம் உளது.

“என்னிலும் இளைஞன் நீ. எவ்வளவோ சாதிக்க நான் எண்ணியுள்ளேன். தம்பீ! உள்ளத் தில் உரங்கொள். உனது ஆற்றலைக் கண்டு களிக்கத் தந்தை இல்லை. தமையனாகிய நான் இருக்கிறேன்; களிக்கவும் காத்திருக்கின்றேன். இப்பாக்கியம் எனக்குத் தா. நீ மகா விவேகி ஆயிற்றே! அதிகம் வரைய வேண்டுமோ?”

இராமபிரானைச் சுக்கிரீவன் அழைத்து வந் தான்; அண்ணன் வாலியின்மீது அம்புவிடச் சொன்னான். அம்பு மார்பிலே பாய்ந்தது. வாலி சாய்ந்தான் நிலத்திலே. அப்போது இரகுராமனை நோக்கி யாது சொன்னான் வாலி? “என்மீது விட்ட அம்பை என் தம்பி மீது விடாதே. அவன் சிறியன்; பிழை செய்வான். அவன் உன் அடைக் கலம்,” என்றான். இது புராணம். மேலே சரித்திரம் காட்டினோம். எங்கும் சுயவரசு காணவே சிவாஜி முனைந்தான். அதற்கு உலை வைத்தான் வெங் காஜி. ஆயினும் சிவாஜியின் சோதர வாஞ்சை யைப் பாருங்கள்.

ரகுநாத பந்தன் அவ்வெங்காஜிக்கு வரைந்தது இது:—“அரசே! உமக்கு ஊறு செய்யேன்; உம் பொருட்டு என் உயிரையும் விடுப்பேன். துஷ்டர்

சொல் கேட்டுச் சீரழிந்தீர். சிவாஜியோ சூராதி சூரன். தெய்வம், தேசம், தர்மம் இவற்றை நிலை நாட்ட, அன்னிய அரசை அகற்ற, சுயவரசு காண, அவன் முயலுகின்ருன்; இன்னம் உம்மிடம் பாசமே கொண்டுள்ளான். அவன் அன்புக்கு ஓர் அழிவு உண்டோ? அவன் திருவாசகம் பாரும்! இனியாவது நேசங் கொள்வீர். ராமனிடம் லட்சுமணன் எப்படி இருந்தான் தெரியாதா?

“இலட்சுமணனைப் பின்பற்றி நடவுங்கள். நடப்பின் நலம் பல பெறுவீர். என்ன நேர்ந்தாலும் சரி, தமையன் இருக்கிருன், நானும் இருக்கிறேன். அண்ணன் விரைந்து வருவான்; தலையும் கொடுப்பான். தமையன் கொண்ட போரில், ஒரு சிறிதாவது நீர் கொள்ள வேண்டாமோ? கவலை ஏன்? வைராக்கிய மேன்? எதற்கும் காலம் உண்டு. அரச வாழ்வில் அலட்சியம் வேண்டாம். ஸ்ரீதேவியைக் கட்டியணையும். காலால் தள்ள வேண்டாம். கனம் பெறுவீர்!”

தம்பியை வழிப்படுத்திய தீபாபாயை வீர சிவாஜி மறக்கவில்லை. அவளுக்கு மூன்று ஜில்லாக்களை மானியமாகக் கொடுத்தான். மூன்றிலுமாக வருஷ வருமானம் ஐந்து லட்சம் வராகன். தீபா பாய்க்குப் பின், அவளது பெண் சந்ததியார் ஆண்டு அநுபவிக்கவும் பட்டயம் அளித்தான். ஆரணிக் கோட்டையின் காவலனுக விளங்கிய வேத பாஸ்கரனது எட்டு மைந்தருக்கும் அந்தப் பிரதேசத்தைப் பரம்பரை மானியமாக வழங்கினன். இங்ஙனம் ராஜசிங்கத்தின் அற்புதச் செயல்கள் பல!

சுபம்!